
# பயணம்

## ගමන Journey



An Independent

தினக்குரல்

1997 20th 2016

Anniversary

Daily Voice in Tamil

**THINAKKURAL**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SIVANANTHA CAFE
No.648, Point Pedro Road,
Nallur - Jaffna

# பயணம்
# ගමන Journey

An Independent
THINAKKURAL
20th Anniversary
1997 2016
Daily Voice in Tamil

தினக்குரல்
දිනක්කුරල
THINAKKURAL

2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினக்குரலின் 20ஆவது அகவைப் பிரவேசத்தை முன்னிட்டு இந்த விசேட மலரை வெளியிட்டு இலங்கைத் தமிழ் ஊடகத்துறையில் புதியதொரு பண்பாட்டைத் தோற்றுவிக்கும் எமது முயற்சிக்கு ஊக்கமளிக்கும் வகையில் ஆக்கங்களைத் தந்து எம்மைப் பெருமைப்படுத்திய கல்விமான்கள், பத்திரிகை நிறுவனத் தலைவர்கள், கலை, இலக்கியவாதிகள் மற்றும் ஆர்வலர்கள் சகலருக்கும் எமது நெஞ்சம் நிறைந்த நன்றிகள். வருங்காலத்திலும் தினக்குரலின் மேம்பாட்டுக்கு உங்கள் எல்லோரதும் ஆதரவையும் ஒத்துழைப்பையும் நாடி நிற்கிறோம்.

ஏசியன் மீடியா பப்ளிகேஷன் (பிறைவேட்) லிமிட்டெட

## ACKNOWLEDGMENT

We express our heartful gratitute to al scholars, academics, journalists, heads of publishing houses, artists, creative writers and patrons who have honoured us by providing their contributions to this special issue marking the 20th anniversary of the founding the Thinakkural, in a way that encourages us in our endeavour to create a new culture in the field of journalism. We sincerely seek you continued support and cooperation for the advancementof Thinakkural.

**The Management,**
**Asian Media Publications(Pvt) Ltd.**

**No. 68 Ellie House Road,**
**Colombo 15, Sri Lanka.**
**Tel: 0117 778 778 / 0112 522 555**
**Email: daily@thinakkural.lk**

**September 2016**

'பயணம்' விசேட மலர் ஏசியன் மீடியா பப்ளிகேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டாரால் வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ශ්‍රී ලංකා ජනාධිපති
இலங்கை சனாதிபதி
**President of Sri Lanka**

## MESSAGE

I am pleased to send this message of felicitation on the occasion of the 20th Anniversary of the reputed Tamil newspaper *Thinakkural* published by the Asian Media Publications (Pvt) Ltd.

Sri Lanka sees the dawn of an era of information and the demand for news rises every day. Concurrently, the challenge to newspapers intensifies as competition for news supply increases. The possibility of transparency, which has been strengthened by the passing of the Right to Information Act, will strengthen the media industry and raise the industry norms. This will certainly bring the country's journalism to a new horizon.

The government is committed to a policy of maximum transparency to ensure that more winds of freedom is blown into the sails of democracy. I have fullest confidence in our professional media personnel to uphold media ethics and practices and to ensure that freedom is not abused to suit whims and fancies of individuals or groups with personal agendas. The media has an enormous responsibility in strengthening reconciliation by promoting amity and coexistence among all communities.

In the information age we live in today, I underscore the role of the media to ensure that the best of the local culture and heritage is shared with the world while the best the world has to offer is brought to the country.

I congratulate the media team, the management and the staff of the *Thinakkural* on this 20th Anniversary and wish the newspaper very best in the years to come.

**Maithripala Sirisena**

**August 24, 2016**

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு
Democratic Socialist Republic of Sri Lanka



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ශ්‍රී ලංකා අග්‍රාමාත්‍ය

இலங்கையின் பிரதம அமைச்சர்

**Prime Minister of Sri Lanka**

## MESSAGE FROM THE HON. PRIME MINISTER

I am pleased to send a message of goodwill for the Thinakkural newspaper's anniversary.

Over the years, this newspaper has served as a vehicle of opinion and information strategic to giving its readers a balanced view of Sri Lanka and the world.

Today, as it celebrates a significant occasion in its journey, it is worthy to note that it must continue to stay relevant and true to its objectives of reaching out to its readers in the true spirit of newspaper journalism.

I take this occasion to wish them all the very best.

**Ranil Wickremesinghe**
Prime Minister

12th August 2016



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தினக்குரலின் சேவை தொடர வாழ்த்துகிறோம்



**நல்லை ஆதீன குரு முதல்வர்**

ஈழ மக்களின் தனித்துவமான தனிக்குரலாக ஒலித்துக் கொண்டு தமிழ் நெஞ்சங்களின் உள்ளங் கவர்ந்த ஒரே நாளிதழான தினக்குரல் பத்திரிகை தனது இருபதாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடுவதையிட்டு நாம் பெரும் மகிழ்ச்சி அடைகின்றோம்.

பத்திரிகாதர்மத்தைக் கைக்கொண்டு மிகவும் அவதானத்துடன் செய்திகளை வெளியிடுவதில் தினக்குரலுக்கு நிகர் தினக்குரலே. இன்றைய இயந்திரமான காலகட்டத்தில் செய்திகளை உடனுக்குடன் தெரியப்படுத்தி வாசகர் மனதில் நீங்கா இடம்பெற்றுவிட்ட தினக்குரல் நாளிதழின் சேவை நல்லமுறையில் தொடரவேண்டுமென்று எல்லாம் வல்ல நல்லைக்கந்தன் திருவருள் துணைபுரிய உளமாரப் பிரார்த்தித்து அருளாசிகள் நல்கி வாழ்த்துகின்றோம்.

தினக்குரல் நாளிதழின் அளப்பெரிய சேவையைப் பாராட்டி மகிழ்வதோடு, அது உண்மை, நேர்மை, பக்கம்சாராமை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு இயங்குவதனால் யாழ். மக்கள் மட்டுமல்ல ஈழம் வாழ் மக்கள் அனைவருமே ஆதரவுக் கரம் நீட்டி பத்திரிகையைப் படித்து மகிழ்வது நாடறிந்த உண்மை.

ஆகவே, தினக்குரல் என்றும் இடையறாது தொடர்ந்து ஒலித்து தனது உண்மையான சேவையைச் செய்ய நல்லைக் குருமணியின் பாதம் பணிந்து வாழ்த்தி மகிழ்கின்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Secretary**
**Ven. Medagama Dhammananda**
Secretary Office
Asgiri Maha Viharaya
Kandy - Sri Lanka

ලේඛකාධිකාරී
පූජ්‍ය මැදගම ධම්මානන්ද නායක ස්ථවිර
ලේඛකාධිකාරී කාර්යාලය
අස්ගිරි මහා විහාරය
මහනුවර

මහාවිහාර වංශික ශ්‍යාමෝපාලි මහානිකායේ අස්ගිරි පාර්ශ්වයේ රාජ්‍යපස්ථානීය පරමධම්ම සභා නම් වූ විංශත් වර්ගික

කාරක මහා සංඝ සභාව

Supreme Sangha Council - Siam Sect, Asgiri Chapter

0812226080 , 071 8336611, 071 7298784 Email : asgiriviharaya@gmail.com asgiritemple@gmail.com

<u>තිනක්කුරල් පුවත්පතට පැවරුණ වගකීම විශාල යි.</u>

ශ්‍රී ලංකාවාසී දමිළ හා මුස්ලිම් ජනතාවගේ ප්‍රසාදය සහ විශ්වාසය දිනාගත් තිනක්කුරල් පුවත්පතට වසර විස්සක් සපිරෙන මොහොතේ එය මෙතෙක් පවත්වාගෙන ඒමට අතහිත දුන් සැමට ම මහා සංඝරත්නය වෙනුවෙන් අපගේ ආශිර්වාදය පළකර සිටිමු. මහජනතාවට දැනගැනීමට කාලීන තොරතුරු හා එදිනෙදා සිදුවීම් පිළිබඳව වාර්තාකරණය ජනමාධ්‍යයක කාර්ය භාරය යි. එය වඩාත් නිවැරැදිව, සත්‍යවාදීව සිදුකිරීම එහි පැවැත්මට හේතුවන ප්‍රධාන සාධකය යි. වසර විස්සක් පුරා මෙම පුවත්පත පවත්වාගෙන එන්නට හැකිවීමෙන් අපට පැහැදිලි වන්නේ තම වගකීම නිසි පරිදි හඳුනාගන්නට එහි කාර්ය මණ්ඩලය සමත් වූ බව යි.

එසේම ජනමාධ්‍යයක තවත් විශේෂ වගකීමක් වන්නේ තම දේශයේ ආරක්ෂාවටත්, ජනතාව අතර, සමගිය, සුහදත්වය හා රටක් වශයෙන් සංවර්ධනය සඳහා වන ක්‍රියාදාමයන්ටත් දායකත්වය ලබාදීම යි. පසුගිය දසක කීපයක් මුලුල්ලේ අපේ රට තුළ පැවැතුන ත්‍රස්තවාදී අර්බුද අවස්ථාවෙහි සියලු ජනවර්ගයන්ට පොදුවේ නොයෙකුත් දුක්ගැහැට සිදුවුන බව අපි දනිමු. සියලු මිනිසුන් තුළ පවතින සංවේදී කාරණාවක් වන ජාතිකත්වය පිළිබඳ සාධකය හමුවෙහි ඉතා බුද්ධිමත් සීමාවක සිට මාධ්‍යය හැසිරවීම මාධ්‍යයක වගකීමකි. සදාචාරවත් මාධ්‍යයක් වශයෙන් සමාජ අර්බුද තවදුරටත් ඉස්මතු වන ආකාරයට නොව සමථයට පත්වන පරිද්දෙන් සමබරතාවයෙන් යුක්තව වාර්තාකරණය හා විවිධ අදහස් සමාජ ගතකිරීම තිනක්කුරල් පුවත්පත සිදුකෙරෙන්නට ඇතැ යි අපි විශ්වාස කරමු. අපේ දේශයේ හා ජනතාවගේ යහපත ප්‍රාර්ථනා කරන පිරිසිදු සිතුවිලි ඇති යහපත් පිරිසකගේ දායකත්වයෙන් මතුවටත් තිනක්කුරල් පුවපත්පත ජනතාව අතට පත්කිරීමට ශක්තිය ලැබේවා ප්‍රාර්ථනා කරමු.

මෙයට,

පූජ්‍ය මැදගම ධම්මානන්ද නායක ස්වාමීන් වහන්සේ
2016 සැප්තැම්බර් 01 දින

# திணக்குரலின் வெற்றிக்காக கரம் கொடுத்த சகலருக்கும் மகா சங்கத்தினர் சார்பில் எமது ஆசீர்வாதம்

## தினக்குரலுக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்புகள் பரந்துபட்டவை

### வணக்கத்துக்குரிய மெதகம தம்மானந்த நாயக்க தேரர்
### அஸ்கிரிய மஹா விகாரை, கண்டி.

இலங்கை வாழ் தமிழ் , முஸ்லிம் மக்களின் அபிமானத்தையும் நம்பிக்கையையும் வென்ற தினக்குரல் பத்திரிகை 20 ஆவது ஆண்டை பூர்த்தி செய்யும் இந்த தருணத்தில் பத்திரிகையை வெற்றிகரமாக நடத்திச் செல்ல கைகொடுத்த சகலருக்கும் மகா சங்கத்தினர் சார்பாக எமது ஆசீர்வாதத்தை தெரிவித்துக்கொள்கின்றேன். மக்களுக்குத் தேவையான அன்றாட நிகழ்வுகள் மற்றும் சம்பவங்களை வழங்குவதே ஊடகத்தின் கடமையாகும். அதனை மிகவும் சரியான முறையிலும் மற்றும் உண்மைத் தன்மையுடனும் வழங்க வேண்டும். 20 வருட காலமாக இந்தப் பத்திரிகையை சிறப்பாக கொண்டு நடத்துவதற்கு மேற்குறித்த விடயத்தை சரியான முறையில் அதன் நிர்வாகத்தினர் சிறப்பாக கடைப்பிடித்தமையே காரணமாகும்.


அத்துடன் ஊடகத்தின் மற்றைய பொறுப்பான தமது நாட்டை பாதுகாக்கவும் , மக்கள் மத்தியில் ஒற்றுமை , நட்புறவு மற்றும் நாட்டின் அபிவிருத்திக்குத் தேவையான ஒத்துழைப்புகளை வழங்குவதாகும். கடந்த பல தசாப்தங்களாக நாட்டில் நிலவிய பயங்கரவாத நெருக்கடி நிலைமையின் போது நாட்டில் சகல இனத்தவர்களும் துன்பங்களுக்கு இலக்காகினர் என்பதனை அறிவோம். இந் நிலையில் மக்களிடையே காணப்படும் கவலைக்குரிய விடயமான இன ரீதியிலான விடயத்தின் போது மிகவும் அவதானமாக வரையறைக்குள் இருந்து செயற்பட வேண்டியதும் ஊடகத்தின் பொறுப்பாகும். ஒழுக்க விழுமியங்களுடனான ஊடகமென்ற ரீதியில் சமூகத்தில் மேலும் நெருக்கடி நிலைமையை தோற்றுவிக்கும் வகையில் அன்றி அதனை தீர்க்கும் வகையில் சமநிலையுடன் செய்திகளை வெளியிட்டும் மற்றும் பல்வேறு கருத்துகளை மக்களிடையே ஏற்படுத்தியும் தினக்குரல் செயற்பட்டுள்ளது என நம்பிக்கை கொள்கின்றோம்.

எமது நாட்டின் மற்றும் மக்களின் நலனுக்காக பிரார்த்திக்கும் தூய்மையான உள்ளத்தைக் கொண்டவர்களின் ஒத்துழைப்புடன் தினக்குரல் மக்களின் கைகளுக்கு கிடைக்க வேண்டுமென பிரார்த்திக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் உணர்வுடன் உறவாடும் 'குரல்' ஓங்கி ஒலித்திட வாழ்த்துகிறேன்



**பேரருட் திரு. யஸ்ரின் பி.ஞானப்பிரகாசம்,**
**யாழ். மறை மாவட்ட ஆயர்**

தமிழர்களின் தனித்துவமான தேடல்களுக்கு விடையகர்ந்த பல்வகைப் புலமைகளின் வெற்றிப்பாதையில் தினக்குரல் நாளிதழ் பெரும்பங்கு வகிக்கின்றது. ஈழத்தமிழர்களின் காலத்தேவைகளை நன்குணர்ந்து உண்மைக்கு உருகொடுத்து, உயிரேற்றி, மௌனத்துடன் மனச்சான்றை வெளிப்படுத்துகின்ற நல்லிதயமாக, அறியாதோர் அறிவதற்கும், நலிந்தவர்களை காக்க நல்லுறவுகளைத் தேடி அழைக்கும் அர்ப்பணிப்புமிக்க தியாகப் பணியின் இரு தசாப்த சேவையின் நிறைவிலே பெருமகிழ்வுடன் நல்லாசீர் வழங்குவதில் பெருமிதம் அடைகிறேன்.

சத்தியத்தை கையில் ஏந்தி, நேர்மையை மனதினில் ஏற்று, ஒடுக்கப்பட்டோரின் உரிமைக் குரலாக கம்பீரத்துடன் கனமறிந்து கருத்துக்களை களங்கமற எழுத்தியம்புவதுடன், புதியனவற்றை தினம் தினம் படைத்து சீர்மிகு சிந்தனைகளை சிறப்புடன் பகர்ந்து துடிப்புடன் செயற்படும் சமூக ஈடுபாடு கொண்ட ஒப்பற்ற பத்திரிகையாக விளங்குகின்றது.

எங்கெல்லாம் அவலக்குரல்களும், துயரங்களும் புதையுண்டு இருக்கின்றனவோ அங்கெல்லாம் வீரமுற துலங்கி அச்சமற அனைத்தையும் உலகிற்கு புகட்டிய புரட்சிப் பத்திரிகை இதுவாகும். உயிரின் ஆழம்வரை தொட்டுச் செல்கின்ற உலகறிந்த பத்திரிகைக் களஞ்சியமாக, ஆச்சரியங்கள் நிறைந்த அற்புத ஆவணமாகத் திகழ்கின்றது. கலை, கலாசார பண்புகளை ஒழுங்குற இணைத்து தமிழர்களின் உணர்வுகளோடு உலாவி, உறவாடி உலகத் தமிழர்களின் நிழல்களாக வியாபித்திருப்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இத்தகைய சிறப்பம்சங்களால் இப்பத்திரிகையை அலங்கரித்து, அணிசெய்து தம்முயிரையும் துச்சமென எண்ணி பணியாற்றும் எழுத்தாளர்கள், பத்திரிகை ஆசிரியர்கள், நிருபர்கள் ஒவ்வொருவரின் துணிந்த மனப்பாங்கும், தூண்டுதல்களும், ஊக்கத்துடனான உறுதிப்பாடும், ஆழ்ந்த அறிவும், உள்ளங்களை ஊடுருவிப்பாயும் வீறு கொண்ட எழுத்து வன்மையும், உலகெங்கும் விருட்சமாகி, உணர்வாக மலர்ந்து தமிழினத்தின் ஓங்கிய குரலாக ஒலித்திட எனது நல்லாசியுடன் நல்வாழ்த்துக்களையும் சமர்ப்பிக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசகர் குரலாக தினமும் ஒலிக்கட்டும்



**அஷ்ஷெய்க்**
**எம்.எம்.ஏ.முபாறக்,**
தேசிய பொதுச்செயலாளர்
அகில இலங்கை
ஜம் இய்யத்துல் உலமா

இருபதாவது ஆண்டை அடைந்துள்ள தினக்குரலின் விசேட மலருக்கு இச்செய்தியை விடுப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். மக்கள் குரல் தினக்குரல் என்ற கூற்றுக்கேற்ப தினமும் மக்களது குரலை எடுத்துச் சொல்லும் நாளிதழ் தினக்குரலின் பணி மகத்தானது.

இது சகல சமய, சமூக விடயங்களையும் கவர்ச்சிமிகு தலைப்புகளில் வெளியிடுவதன் மூலம் வாசகர் உள்ளத்தில் இடம் பெற்ற ஒரு சிறப்பான பத்திரிகையாகிவிட்டது.

வார நாட்களில் வரும் விடயங்கள், அரசியல் அலசல்கள், சாளரம் மற்றும் இணைப்புகள் போன்றன மிகவும் கவர்ச்சிகரமானவை. வாசகர் விருப்பத்தைத் தெரிந்து தினமும் ஒலிக்கும் குரலான தினக்குரல் இன்னும் பல்லாண்டுகள் ஊடகப் பணி செய்ய வாழ்த்துகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களின் அபிமானத்தை வென்ற தினக்குரலின் சேவை தொடர பிரார்த்திக்கிறேன்



**இரா. சம்பந்தன்**
**எதிர்க்கட்சித் தலைவர்**

இலங்கையின் தமிழ்த் தேசியப் பத்திரிகைப் பரப்பில் 1997ஆம் ஆண்டு புதிய வரவாக இணைந்து கொண்ட தினக்குரல் பத்திரிகை, தனது பயணத்தின் 20 ஆவது ஆண்டில் காலடி எடுத்துவைப்பதையிட்டு வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தியொன்றினை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

அன்றாட நிகழ்வுகளைச் செய்தியாக்கி மக்களிடையே கொண்டு சென்று அவர்களை அறிவூட்டும் பெரும்பணியை பத்திரிகைகள் செவ்வனே செய்து வருகின்றன. புதிது புதிதாகப் பத்திரிகைகள் வருவதை வரவேற்க வேண்டியதாயினும் அத்தகைய பத்திரிகைகள் நடுநிலை தவறாது தமது பணியை மேற்கொள்வதும் இன்றியமையாததாகும். அந்த வகையில் இப்பத்திரிகை கடந்த காலங்களில் அப்பணியைச் சிறப்புற மேற்கொண்டு வந்தமையை இவ்வேளையில் பாராட்டாமல் இருக்க முடியாது.

தினக்குரல் பத்திரிகையானது ஒரு தேசியப் பத்திரிகை என்ற வகையில் உள்நாட்டு செய்திகளுடன் சர்வதேச செய்திகளையும் காலப் பொருத்தம் கருதிய பல கட்டுரைகளையும் நேர்காணல்களையும் தாங்கி வெளிவருவதுடன், பாடசாலை மாணவர்கள் பயன்பெறும் வகையில் கல்விச் சிறப்பிதழ், சமுதாய நலனில் அக்கறை காட்டும் வகையிலான சுகாதாரம் தொடர்பான சிறப்பிதழ் மற்றும் அறிவியல் தொடர்பான சிறப்பிதழ் என்பனவற்றை இணைப்பிதழ்களாக வெளியிட்டு வருவதோடு, இடையிடையே கலாசாரம் தொடர்பான அனுபந்தங்களையும் வெளியிட்டு வருவது பாராட்டத் தகுந்த சேவைகளாகும்.

இத்தகு சிறப்பான சேவைகளை வழங்குவதன் மூலம் தமிழ் பேசும் மக்களின் அபிமானத்தை வென்று தனக்கென ஒரு பரந்த வாசகர் வட்டத்தை கொண்டுள்ள இப்பத்திரிகை மேலும் பல பயன்தரு சேவைகளை உள்ளடக்கிய பத்திரிகையாக வளர்ச்சி பெற்று பல்லாண்டு காலம் இடையறாது தனது சேவையைத் தொடர வேண்டுமென இறையருளை இறைஞ்சுவதுடன், எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தினக்குரலின் இரு தசாப்தங்கள்



**நீதியரசர்**
**சி.வி.விக்னேஸ்வரன்**
**வடமாகாண முதலமைச்சர்,**
**யாழ்ப்பாணம்**

தினக்குரல் பத்திரிகை 19 வருடங்களைப் பூர்த்தி செய்து, இருபதாவது ஆண்டில் காலடி வைக்கும் நிலையில் அதற்கு என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவிப்பதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

ஒரு பத்திரிகையை ஆரம்பிப்பது, அதனைக் கொண்டு நடத்துவது என்பது எத்தனை சிரமமானது என்பது அனைவருக்கும் தெரிந்ததுதான். அதிலும், போர் தீவிரமாக இடம் பெற்றுக்கொண்டிருந்த ஒரு கால கட்டத்தில் தமிழ் மக்களின் குரலாக ஒலிக்கக்கூடிய தமிழ்ப் பத்திரிகை ஒன்றை, கொழும்பிலிருந்து ஆரம்பிப்பதிலிருக்கக்கூடிய நெருக்கடிகள், அழுத்தங்கள் எவ்வாறிருந்திருக்கும் என்பதை நான் சொல்லவேண்டியதில்லை. இதற்கு அசாதாரண துணிச்சல் அவசியம்.

இந்தப் பணியை துணிச்சலுடன் முன்னெடுத்தவர் தினக்குரலின் நிறுவனரான எனது நண்பர் எஸ்.பி. சாமி அவர்கள். தரமான, மாற்றுக் கருத்துக்களையும் முன்வைக்கக்கூடிய, தமிழ் மக்களின் உரிமைகளுக்காக உரத்துக் குரல் கொடுக்கவல்ல பத்திரிகை ஒன்றை ஆரம்பித்தமைக்காக சாமி அவர்கள் தமிழ் மக்களால் போற்றப்பட வேண்டியவர். காலத்தின் தேவையாக, தமிழ் மக்களின் அவலங்களை வெளியுலகுக்குக் கொண்டு செல்வதில் தினக்குரல் முக்கிய பணியாற்றியது.

தினக்குரல் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்தே அதன் உரிமையாளர்களுடனும், ஆசிரியர் பீடத்தைச் சேர்ந்தவர்களுடனும் எனக்கு நெருக்கமான உறவு இருந்தது. தினக்குரலின் வெற்றிக்கு அதன் ஆசிரியர் பீட உறுப்பினர்கள் மட்டுமன்றி ஏனைய பணியாளர்களின் அர்ப்பணிப்பான சேவையும், இலட்சியப் பற்றும்தான் காரணம் என்பதை நான் உறுதியாகச் சொல்வேன். அவர்களுடைய அந்த உறுதியான செயற்பாட்டின் காரணமாகத்தான் குறுகிய காலத்துக்குள்ளேயே தினக்குரல் தமிழ் மக்களின் அபிமான பத்திரிகையாகியதுடன், இன்றும் அந்த நிலையைத் தக்கவைத்துக்கொண்டிருக்கின்றது.

தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளுக்காக குரல் கொடுப்பதிலும், அரசியல் சக்திகளை அணி திரட்டுவதிலும் காலத்தின் தேவைக்கு ஏற்ற வகையில் தினக்குரல் செயற்பட்டுவந்திருக்கின்றது. இப்போதும் செயற்பட்டுவருகின்றது. ஒரு ஊடகம் என்ற முறையில், மக்கள் கருத்துக்களைப் பிரதிபலிக்கும் செயற்பாட்டையும், கருத்துருவாக்கத்தை மேற்கொள்ளும் பணியையும் தினக்குரல் கடந்த காலங்களில் சிறப்பான முறையில் செய்துவந்திருக்கின்றது.

இப்போது இருபதாவது ஆண்டில் வீறுநடைபோடும் தினக்குரல், தொடர்ந்தும் அந்தப் பணியை வெற்றிகரமாக முன்னெடுத்துச்செல்ல என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன மகிழ்வைத் தரும் தருணம்



தினக்குரல் நிறுவுனர்
எஸ்.பி.சாமி

அகவை 20 இல் 'தினக்குரல்' பிரவேசித்திருக்கின்றதென்பது உணர்வுபூர்வமான தருணமாகவும் மன மகிழ்வைத் தரும் விடயமாகவும் அமைந்திருக்கிறது. உக்கிரமான போர் இடம்பெற்றுக் கொண்டிருந்த காலகட்டத்தில் தமிழ் மக்கள் குறிப்பாக வடக்கு, கிழக்கு மக்கள் இருப்பிடங்களை விட்டு மாறி மாறி இடம்பெயர்ந்து கொண்டிருந்த இடர்நிறைந்த வேளையில் மக்களின் அவலங்களை, துன்பங்களை வெளிக்கொணர்வதற்கு உரத்த குரலாக ஒலிக்க வேண்டுமென்ற உள் மனக் கிடக்கையினால் 'தினக்குரல்' பத்திரிகையை ஆரம்பிக்க வேண்டுமென்ற உந்துதல் எனக்கு ஏற்பட்டது. எனது எண்ணத்தை சமூகப் பெரியவர்கள், கல்விமான்கள், நண்பர்களிடம் எடுத்துரைத்த போது அவர்கள் உற்சாகத்துடன் ஊக்குவித்தனர்.

பொன். இராஜகோபால், பூ.சிவநேசச் செல்வன், வீ.தனபாலசிங்கம் போன்ற பத்திரிகைத்துறையில் நீண்டகால அனுபவம் பெற்றிருந்தவர்களின் தலைமையில் இளம் பத்திரிகையாளர்கள் குழுவொன்று எனது முயற்சிக்கு கால்கோளிட்டது. 1997 ஏப்ரல் 6ஆம் திகதி முதலாவது இதழ் மலர்ந்தது. இன்று அந்த மலர் காயாகி கனிந்திருக்கின்றது. உண்மையைக் கூறுவதாக, சுதந்திரமானதாக, நீதியாக, மனிதாபிமானமாக சமூக மேம்பாட்டுக்கு செய்திப் பத்திரிகை உதவ வேண்டுமென்ற விருப்பம் மற்றும் தேவைப்பாட்டிற்கு ஆசிரியர் குழாமும் ஏனைய பிரிவுகளைச் சேர்ந்த உறுப்பினர்களும் பெரு விருப்பத்துடன் மனப்பூர்வமாக ஒத்துழைத்ததை இத்தருணத்தில் நினைவுகூருகிறேன். காலச் சக்கர சுழற்சியில் இந்த 20 ஆண்டுகளில் எத்தனையோ மாற்றங்கள் நிகழ்ந்துவிட்டன, நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. தலைநகர் கொழும்பிலிருந்தும் யாழ்ப்பாணத்திலிருந்தும் வெளிவந்துகொண்டிருக்கும் தினக்குரல், இன்று பல்வேறு அம்சங்களைக் கொண்டதாக வாசகர் கரங்களில் தவழ்ந்து கொண்டிருக்கின்றது. அன்றாட செய்திகளை மட்டுமின்றி சுகாதாரம், மருத்துவம், வணிகம், அபிவிருத்தி நடவடிக்கைகளுடன் யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் பாதிக்கப்பட்ட குறிப்பாக இறுதிக்கட்ட யுத்தத்தில் குடும்பத் தலைவர்களையும் உறுப்பினர்களையும் பறிகொடுத்து நிராதரவாக, ஜீவனோபாயத்திற்கு அல்லல்படும் குடும்பங்கள், பெற்றோர், உற்றார், உறவினரை இழந்து அநாதைகளாக இருக்கும் பிள்ளைகள், உடல் அவயவங்களை இழந்து துன்பப்படுவோரென எமது, சமூகத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக 'கருணைப்பாலம்' என்ற அமைப்பினூடாக உதவி வழங்குதல், தமிழ் பேசும் மாணவரின் கல்வி மேம்பாட்டுக்காக கல்விக்குரல் போன்ற இணைப்பிதழ்களை வெளியிடுதல் போன்ற சமூக மேம்பாட்டுக்கான பணிகளையும் 'தினக்குரல்' உள்வாங்கிக் கொண்டிருப்பது பேருவகையையும் உளத்திருப்தியையும் தருகின்றதென்பதை இச்சந்தர்ப்பத்தில் நான் குறிப்பிட வேண்டும். எமது தமிழ் பேசும் சமுதாயம் பலமான சமூக - அரசியல் இயக்கமாக பரிணமிப்பதற்கும் நாட்டின் ஏனைய சமூகங்களுடன் சமத்துவமான சகவாழ்வை முன்னெடுப்பதற்கும் 'தினக்குரல்' வலுவான குரலாக தொடர்ந்தும் ஓங்கி ஒலிக்க வேண்டுமென வாழ்த்துவதுடன், ஆல்போல் தழைத்து அறுகு போல் வேரூன்றி தமிழ் பேசும் சமுதாயத்திற்கு பெரு விருட்சமாக நிழல் அளிக்க வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீன செல்நெறிகளுக்கு அமைவாக 'தினக்குரல்' தனது பணியை தொடரும்



**ஹரி செல்வநாதன்**
**தலைவர்,**
**ஏசியன் மீடியா பப்ளிகேஷன் (பிரைவேட்) லிமிட்டெட்**

'தினக்குரல்' பத்திரிகை தனது இருபதாவது அகவையில் தடம் பதித்திருப்பது மனநிறைவைத் தருகிறது. செய்திப் பத்திரிகையொன்றின் விதிமுறைகளுக்கமைய உண்மையைக் கூறுதல், சுயாதீனம், சுதந்திரம், நீதி, மனிதத்துவம், சமூக நலனுக்கான பங்களிப்பு என்ற அடிப்படைப் பெறுமானங்களைப் பேணி கைக்கொள்வதிலிருந்தும் தடம்புரளாமல் தனது பயணத்தை தினக்குரல் தொடர்கின்றது என்பது எமது நம்பிக்கை.

தனது தனித்துவத்தைப் பேணி உறவுப் பாலத்தினூடாக, சகோதரத்துவத்தையும் சமத்துவத்தையும் பேணுவதிலும் சகவாழ்வுக்கும் நல்லிணக்கத்துக்குமான பங்களிப்பை ஆக்கபூர்வமான விதத்தில் வழங்குவதிலும் தமிழ்பேசும் மக்கள் மத்தியில் தினக்குரல் தனது பணியை இயன்றளவு மேற்கொண்டுவருவது மனதிற்கு இதமான மகிழ்வைத் தருகின்றது.

கல்வி, சமூக ஒருங்கிணைப்பு, சமூக மேம்பாடு என்பவற்றை அடிப்படை இலக்காகக் கொண்டிருக்கும் தினக்குரல், சமூகத்தின் சமகாலத் தேவைகளை வெளிப்படுத்துவதிலும் கருத்துருவாக்கத்தை கட்டியெழுப்புவதிலும் விமர்சன ரீதியான பார்வையைத் தோற்றுவிப்பதிலும் அச்சு ஊடகமொன்றின் பணியை முன்னெடுத்துவருகிறது. அதேவேளை நவீன தொழில்நுட்ப வளர்ச்சியின் விளைவாக ஊடகத்துறையும் பல்வேறு மாற்றங்களை உள்ளீர்த்துக் கொண்டுவரும் நிலையிலும் இலத்திரனியல் ஊடகங்களின் அபார வளர்ச்சியும் நவீன செல்நெறிகளுக்கு அமைவாக செய்திப் பத்திரிகைகள் முகம்கொடுக்க வேண்டிய சவால்களை தோற்றுவித்துக் கொண்டிருக்கின்றன. இந்நிலையில் பொதுமக்களின் விருப்பு வெறுப்புகள், அபிலாஷைகளை பிரதிபலிப்பதாகவும் தேவைகளுக்கு நியாயபூர்வமான தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கு உதவிக்கரமாகத் திகழ்வதற்கும் 'தினக்குரல்' தனக்குரிய கடமையை நிறைவேற்றும் முன்முனைப்பில் தொடர்ந்து ஈடுபட வேண்டுமென்பதே ஆவலுடன் கூடிய எனது விருப்பம்.

இருபதாவது அகவையை பதிவு செய்துள்ள தினக்குரல், தனது பணியைத் தொடருவதற்கு பங்களிப்பும் ஒத்துழைப்பும் வழங்கிவரும் சகலருக்கும் மனமார்ந்த பாராட்டுகளையும் நன்றியையும் இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ளவிரும்புகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடுநிலை பிறழாது குரலின் ஓசை ஓங்கி ஒலிக்கட்டும்



**பொ.கேசவராஜா**
நிர்வாகப் பணிப்பாளர்
ஏசியன் மீடியா பப்ளிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்

'தினக்குரல்' தனது பயணப் பாதையில் இரு தசாப்தங்களை எட்டிப்பிடித்திருக்கின்றது. இந்தப் பயண காலம் கண்ணிமைப் பொழுது போன்று தோன்றுகிறது. கடந்த காலம் தொடர்பாக மீள்பார்வை செய்வதற்கும் பத்திரிகையை புதிய பரிமாணத்துடன் வாசகர் கரங்களில் தவழச் செய்வதற்கும் சம காலத்துக்கு பொருத்தமானதும் வளமான எதிர்காலத்துக்கு கொண்டு செல்லக்கூடியதுமான மூலோபாயங்களை உள்ளீர்த்துக் கொண்டு வீர நடைபோடுவதற்கு இது உகந்த தருணமாகத் தென்படுகிறது.

தினக்குரலை தமிழ் பேசும் நல்லுலகத்தின் மத்தியில் மேலும் பொறுப்புணர்வு கொண்டதாக மிளிரச் செய்வதற்கு தேவையானவற்றை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டியிருக்கும். அதேசமயம், கடந்த 20 ஆண்டுகளாக பத்திரிகையின் வளர்ச்சிக்கு தளராத ஆதரவையும் உற்சாகத்தையும் ஊக்குவிப்பையும் வழங்கிவரும் வாசகர்கள், நிறுவன ஊழியர்கள், விளம்பரதாரர்கள், பத்திரிகை முகவர்கள் உட்பட சகலரையும் இத்தருணத்தில் அன்புடனும் நன்றியுணர்வுடனும் நினைவு கூருகின்றேன்.

தமிழ் பேசும் மக்களின் அன்றாட பிரச்சினைகள், தேவைப்பாடுகள், அடிப்படை உரிமைகள், அரசியல் அபிலாஷைகள் போன்றவற்றுக்காக தொடர்ந்தும் குரல் கொடுக்கும் அதேவேளை, நம்பகரமான பத்திரிகைகள் ஏற்றுக் கொண்டிருக்கும் விழுமியங்களுக்கு அமைய நடுநிலை பிறழாது குரலின் ஓசை ஓங்கி ஒலிக்குமென உறுதிப்படுத்துகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தினக்குரலின் வளர்ச்சி பூரிப்பைத் தருகிறது



**எஸ்.அலெக்ஸாண்டர்**
பொது முகாமையாளர்
ஏசியன் மீடியா
பப்ளிகேஷன்ஸ்
(பிரைவேட்) லிமிட்டெட்

கொழும்பில் தனது தலைமைக் காரியாலயத்தையும் பத்திரிகை அச்சகத்தையும் கொண்டுள்ள தினக்குரல் ஸ்தாபனம், அதேசமயம் யாழ்ப்பாணத்திலும் இதேபோன்று ஒரு அச்சகத்தை வைத்திருப்பதுடன், இரு வேறு இடங்களில் இருந்து பத்திரிகையை அச்சடித்து இலங்கை முழுவதும் பத்திரிகை விநியோகத்தை மேற்கொள்ளும் ஒரே ஸ்தாபனமான தினக்குரலில் பொது முகாமையாளராக கடந்த 4 ஆண்டுகள் கடமையாற்றுவதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

பத்திரிகை ஸ்தாபனங்களில் நான் பெற்றுக்கொண்ட அனுபவங்களைக் கொண்டு இந்த ஸ்தாபனத்தில் ஆக்கபூர்வமாக செயலாற்றி இந்த ஸ்தாபனத்தை முன்னேற்றிச் செல்வதை எனது தலையாய கடமையாகக் கருதுகின்றேன்.

தினக்குரல் ஸ்தாபனம் இருபதாவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் இத்தருணத்தில், அதன் வளர்ச்சியைக் கண்டு பூரிப்படைகின்றேன்.

உள்நாட்டுப் போர் தீவிரமடைந்திருந்த ஒரு நடு காலகட்டத்தில் ஆரம்பித்து எமது மக்களின் அவலங்களை வெளிக்கொண்டு வருவதற்காக துணிச்சலுடன் செயற்பட்ட தினக்குரலுக்கு நாம் தலைவணங்கியே ஆக வேண்டும். அப்பணியை தினக்குரல் சீராகச் செய்ததில் எமக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி.

அதில் சமூக, அரசியல் , பொருளாதார, இலக்கிய செய்திகளை தினசரி செய்தியுடன் தரும் பாணியே தனி தான்.

வடக்கு, கிழக்கு, மலையக செய்திகளின் தனித்துவத்தைப் புரிந்து கொண்டு அதற்கு ஏற்றவாறு செயற்படுவதும் ஒரு தனிச் சிறப்பு.

'பத்திரிகா தர்மம்' ஒரு வாசகனை சரியாக வழிநடத்துவதாகும். அதனை தினக்குரல் செவ்வனே செய்கிறது.

தினக்குரலின் தொடர் வளர்ச்சிக்காக எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பிக்கையே மூச்சாக...



**பிரணதார்த்தி ஹரன்**
**பிரதம ஆசிரியர்**

பத்திரிகை உலகில் 19 ஆண்டுகளை நாம் பூர்த்தி செய்துவிட்டோம். ஆயினும் இந்தப் பயணத்தை சில நாட்களுக்கு முன்பாகவே நாங்கள் ஆரம்பித்திருப்பதாக தோன்றுகிறது. காலச்சக்கரம் வேகமாக சுழன்று கொண டிருப்பதை எம்மால் உணர்ந்துகொள்ள முடியாமல் உள்ளது. தமிழ்ப் பத்திரிகை உலகில் நாங்கள் பிரவேசித்த காலம் தொடக்கம் ஊடகத் துறையில் ஏற்பட்டுவரும் பல்வேறு மாற்றங்கள் தொடர்பாகவும் இதழியல் துறையை உயிரோட்டமுடையதாக வைத்திருப்பது குறித்தும் எப்போதுமே அனுபவங்களைப் பெற்று வருகிறோம். துணிச்சல், ஆற்றல், வலுவான எழுத்து என்பனவற்றுடன் கடும் உழைப்பும் இதய சுத்தியுடனான முயற்சிகளுமே பத்திரிகைத்துறைக்கு உயிர்நாடி என்பது பற்றிய தெளிவான பிரக்ஞையை கொண்டிருக்கும் எமது குழுவினரின் ஒத்துழைப்புக்கும் உற்சாகத்துக்கும் மாற்றீடாக எதுவும் இல்லையென்று உறுதியாகக் கூற முடியும். இந்தப் பயணம் எமக்கு மிக்க பயனைத்தருவதாகவும் தொடர்ந்து கற்றுக்கொள்ளும் செயற்பாடாகவும் அமைந்திருக்கின்றதென்பதை மனநிறைவுடன் கூறமுடியும்.

'தினக்குரல்' 20ஆவது அகவையில் இந்தவருடம் வீறுநடைபோடும் இந்தச் சந்தர்ப்பத்தில் முதலாவதாக எமது வாசகர்களுக்கு எமது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். அத்துடன் எம்மைப் படம்போடவைத்துக் கொண்டிருப்போரையும் உளமார நினைவு கூருகின்றோம்.

1997 ஏப்ரல் 6 இல் 'தினக்குரல்' வாசகர் கரங்களில் தவழ ஆரம்பித்த நாள் முதல் இன்று வரை அதன்பாரிய சொத்தாக விளங்குவது 'நம்பிக்கை'யே. அதேவேளை, வாசகப் பெருமக்களின் வாழ்த்துக்களும் ஆசிகளும் ஆக்கபூர்வமான விமர்சனங்களும் எமக்கு பெரும் மனோபலத்தையும் பேருவகையையும் உற்சாகத்தையும் அளித்துக் கொண்டிருக்கின்றன. அரசியல், சமூக, பொருளாதார ரீதியில் தமிழ் மக்கள் பெரும் நெருக்கடிகளையும் துன்பங்களையும் எதிர்கொண்டிருந்த காலகட்டத்தில் தினக்குரல் வெளிவர ஆரம்பித்தது. சமூகத்தின் சகல மட்டத்தில் உள்ளவர்களும் சுமுகமான இயல்பு வாழ்வை முன்னெடுக்க வேண்டுமென்ற அவாவுடன் 'நம்பிக்கை' என்ற காத்திரமான செய்தியை மட்டுமே 'தினக்குரல்' எமது மக்களுக்கு வழங்கிவந்ததுடன், தற்போதும் அந்த இலக்கை நோக்கியே நீண்ட பயணம் தொடர்கின்றது. உக்கிரமான யுத்த காலத்திலும் அதன் பின்னரும் தமிழ் பேசும் மக்களின் அவலங்களை, அபிலாஷைகளை, சந்தேகங்களை, குறைநிறைகளை வெளிக்கொணர்வதில் ஒருபோதும் பின்வாங்கிச் செல்லவில்லை. யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு 7 ஆண்டுகள் முழுமையாக கடந்துவிட்டபோதிலும் தமிழ் மக்கள் தமது இருப்பைத் தக்க வைக்க சாத்வீக வழியில் போராடிக் கொண்டிருக்கும் தற்போதைய காலகட்டத்தில் தான் சார்ந்த சமூகத்தின் அபிலாஷைகளை வெளிக்கொணர்வதும் அவர்களின் தேவைகளை, குறைநிறைகளை வெளிப்படுத்துவதும் தனது தார்மீகக் கடமையென்ற பொறுப்புணர்வுடன் தனது சக்திக்குட்பட்டதாக 'தினக்குரல்' தனது பணியை முன்னெடுத்துச் செல்கின்றதென்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது உறுதியான நம்பிக்கை. அதேவேளை மக்களின் உணர்வுகளை உசுப்பிவிட்டு அனுகூலத்தை பெறும் நடவடிக்கைகளுக்கு இடமளிக்காமல் பொதுநல மேம்பாட்டையே தாரகமந்திரமாகக் கொண்டு 'அறிவு ரீதியாக' பத்திரிகையின் தரத்தைப் பேண வேண்டும் என்பதில் இயன்றவரை தெளிவான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின்றோமென எண்ணுகிறோம்.

அன்றாட சம்பவங்கள், கருத்துருவாக்க கட்டுரைகள், விமர்சனங்கள், சிறுகதைகள், இலக்கியம், மத நம்பிக்கைகள், அறிவியல், சுகாதாரம், தகவல் தொழில்நுட்பம், மாணவர்கள், சிறாருக்கான விடயங்கள், விளையாட்டு போன்றவற்றுடன் வர்த்தகம், அபிவிருத்தி தொடர்பான செய்திகள், விமர்சனங்கள், ஊக்குவிப்புகளுக்கு எப்போதுமே முன்னுரிமை அளித்து வருவதுடன் எதிர்காலத்திலும் தனது அர்ப்பணிப்புடனான முயற்சியை பற்றுறுதியுடன் தொடர்ந்து முன்னெடுக்கும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் வாசகர்களுக்கு கூறிக்கொள்ள விரும்புகிறோம்.

பொதுவாக சமூகத்தின் முன்னால் பிரதிபலிக்கும் கடப்பாடு கொண்டவர்களாக பத்திரிகையாளர்கள் விளங்குகின்றனர். அத்துடன் நாட்டின் சட்டம் மற்றும் தொழில்சார் பண்புக்கமைவாகச் செயற்பட வேண்டிய கடப்பாட்டையும் அவர்கள் கொண்டிருக்கின்றனர். அத்துடன் பிரஜைகளின் உரிமைக்கான உத்தரவாதமும் தமது வாசகர்களுக்கு சரியானதும் முக்கியமானதுமான தகவல்களை வழங்குவதும் பத்திரிகையாளர்களின் பிரதான இலக்காகும். இதுவே சமூகரீதியான நடவடிக்கைகள் குறித்து போதியளவிலான மனப் பிரதிமையை வடிவமைக்க உதவுகின்றது.

எமது ஆசிரியர் பீட உறுப்பினர்களும், இதர அலுவலர்களும் வாசகர்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவதற்கு தங்களால் முடிந்த அளவுக்கு சிறப்பாக முயற்சித்துக் கொண்டிருக்கிறார்களென்பதை இச்சந்தர்ப்பத்தில் வெளிப்படுத்த விரும்புகிறோம். தவறுகளை தவிர்த்து வருகிறோம், தவறுகள் ஏற்பட்டால் உடனடியாகத் திருத்துவதற்கு தயங்குவதில்லை. அதேசமயம் உணர்வுகளின் வெளிப்பாடு எதிர்பார்க்கப்படுகின்றது. ஏமாற்றத்தை, விசனத்தை, பரிவிரக்கத்தை, மனிதர்களின் துன்பங்களை மூடி மறைப்பது நேர்மையற்றதாக அமையும். அதேவேளை, இலத்திரனியல் உலகம் கடுமையானதாகவும் பாரியதாகவும் வியாபகமடைந்து வருகிறமையும் பாரம்பரிய ஊடகங்கள் புதிய யதார்த்தத்துக்கு முகம் கொடுத்து தம்மை மறுசீரமைக்க வேண்டிய தேவைப்பாடு உள்ளதையும் உள்வாங்கிக்கொண்டதாக எமது முயற்சிகள் தொடர்கின்றது. அச்சு ஊடகங்களுடன் இலத்திரனியல் ஊடகங்கள் குறிப்பாக சமூக ஊடகங்கள் பல்கிப்பெருகியுள்ள தற்போதைய காலகட்டத்தில் தொழில்சார் நிபுணத்துவம் கொண்ட இதழியில் துறையின் பெறுமானத்தையும் தரத்தையும் செயற்பாட்டையும் பேணிப் பாதுகாப்பதும் அதற்கு உத்வேகம் அளிப்பதும் பொதுமக்களின் நலன்கள் பேணிப்பாதுகாக்கப்படுவதற்கும் பத்திரிகையொன்றின் சொந்த நலனுக்கும் மிகவும் அத்தியாவசியமான விடயம் என்பதில் எந்த ஐயுறவும் இருக்க முடியாது. அதேவேளை வளத்துடன் வாழக்கூடியதாகவும் வர்த்தக ரீதியில் வெற்றியாளராகவும் இருக்காவிடின் இதழியல்துறை சிறப்பானதாக ஜீவித்திருக்க முடியாதென்பது பற்றியும் மேம்படமுடியாதென்பது குறித்தும் எமது நிறுவனம் அதிகளவு புரிந்துணர்வுடன் செயற்படுகின்றதென்பதை இத்தருணத்தில் குறிப்பிடுவது முக்கியம்.

சமூகத்தின் குரலாக, நியாயத்தின் குரலாக, உண்மையின் குரலாக, மனிதத்துவத்தின் குரலாக 'தினக்குரல்' பரிமளிப்பதற்கு வாசகப் பெருமக்களின் அன்பும் ஆதரவும் அரவணைப்பும் ஆசியும் எமக்கு ஊக்குவிப்பையும் உற்சாகத்தையும் என்றும் அளிக்கும்.

# சவால்கள் நிறைந்த பயணமும் சமூகப்பொறுப்பும்



**பாரதி இராஜநாயகம்**
**ஆசிரியர்,**
**ஞாயிறு தினக்குரல்**

சவால்கள் நிறைந்த பத்தொன்பது வருடங்களைத் தாண்டி இருபதாவது ஆண்டில் மிகுந்த நம்பிக்கையுடன் 'தினக்குரல்' பிரவேசித்திருக்கின்றது. இந்த நிலையில், அதற்கான சமூகப் பொறுப்புக்களும் அதிகரித்திருப்பதாகவே நாம் உணர்கிறோம். அந்த சமூகப்பொறுப்பை நிதானமாகவும், அர்ப்பணிப்புடனும் முன்னெடுப்பதற்கான மனவுறுதியுடனேயே இருபதாவது ஆண்டுக்குள் நாம் பிரவேசித்திருக்கின்றோம்.

இலங்கைத் தமிழர்களின் வரலாற்றில் பெரும் திருப்பங்களையும், அலவலங்களையும் சந்தித்த இரண்டு தசாப்த காலத்தை தினக்குரல் பதிவு செய்திருக்கின்றது. வரலாற்றில் முக்கியமானதொரு காலகட்டத்தில் தினக்குரல் செய்திருக்கும் பங்களிப்பு ஆய்வுக்குட்படுத்தப்பட வேண்டிய ஒன்று. 1997 ஏப்ரல் 6ஆம் திகதி தினக்குரல் முதலாவது இதழ் ஒரு ஞாயிற்றுக்கிழமை வெளிவந்த போது, சவால்கள் நிறைந்த கரடுமுரடான ஒரு பாதையில் நாம் செல்லப்போகிறோம் என்பது எமக்குத் தெரிந்தேயிருந்தது. வரலாற்றில் ஒரு முக்கிய பணியைச் செய்ய வேண்டும் என்ற பற்றுறுதியுடன் இந்தப் பணியில் நாம் துணிச்சலுடன் இறங்கினோம்.

அப்போது, போர் உச்ச கட்டத்தில் நடைபெற்றுக்கொண்டிருந்தது. ஊடகங்கள் அச்சுறுத்தலுக்குள்ளாக்கப்பட்டுக் கொண்டிருந்தன. ஊடகவியலாளர்கள் குறிப்பாக தமிழ் ஊடகவியலாளர்கள் இலக்கு வைக்கப்பட்டுக்கொண்டிருந்தார்கள். செய்தித் தணிக்கை இல்லாத வேளைகளிலும் சுயதணிக்கையைக் கையாளவேண்டிய நிர்ப்பந்தம். இவற்றுக்கு மத்தியில் உண்மைகளை வெளிக்கொண்டுவர வேண்டும் என்பதில் நாம் உறுதியாகச் செயற்பட்டோம். அதற்காக சில உபாயங்களையும் கையாண்டோம். அதனால்தான் மிகவும் குறுகிய காலத்துக்குள்ளேயே தினக்குரல் தமிழ் பேசும் மக்களின் குரலாக அவர்களின் அபிமானப் பத்திரிகையாக வளர்ந்தது.

இப்போது, போர் முடிவுக்கு வந்திருந்தாலும், தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படாத நிலையில், அவற்றை வெளிக்கொண்டுவருவது, அம்பலப்படுத்துவது, அதற்கான தீர்வைத் தேடுவது என்பதிலும், தினக்குரல் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது. எமது அலுவலகச் செய்தியாளர்கள் மட்டுமன்றி பிராந்தியச் செய்தியாளர்களும் இதற்காக கடுமையாக உழைக்கின்றார்கள். இதன்போது பல நெருக்கடிகளையும் நாம் எதிர்கொண்டோம். தமிழ்ப் பத்திரிகை ஒன்றை நடத்துவது கத்தி முனையில் நடப்பதைப் போன்றது என்பது உங்களுக்குத் தெரியும். இருந்தாலும், சிக்கலான நிலைமைகளைக் கையாள்வதில் திறமையான ஆசிரியர் பீடம், அதற்குத் தேவையான ஒத்துழைப்புக்களை வழங்க என்றும் தயாராகவிருக்கும் நிர்வாகம். இந்த இரண்டும்தான் எமது வெற்றிக்கு அடிப்படை.

போட்டி நிறைந்த இலங்கைப் பத்திரிகைத் துறையில், பத்திரிகை ஆசிரியர் சங்கமும், இலங்கை ஊடக நிறுவனமும் இணைந்து வழங்கும் விருதுகளில் சிறந்த பத்திரிகை வடிவமைப்புக்கான கடந்த வருடத்துக்குரிய விருதை 'ஞாயிறு தினக்குரல்' பெற்றிருக்கின்றது. இது உள்ளடக்கத்தில் மட்டுமல்ல, வடிவமைப்பிலும் தினக்குரல் முன்னணியில் நிற்பதை வெளிப்படுத்தியிருக்கின்றது. ஊடகத்துறையின் அனைத்து அம்சங்களிலும் முன்னணியில் நிற்கவேண்டும் என்ற எமது இலக்கின் வெளிப்பாடுதான் இந்த விருது.

அச்சுத்துறை இப்போது 'டிஜிட்டல்' மயமாகி பெரும் முன்னேற்றத்தைக் கண்டிருந்தாலும், சமூக ஊடகங்களின் வளர்ச்சி அச்சு ஊடகத்துறைக்கு சவாலாக உருவாகியிருக்கின்றது என்பது உண்மை. இதற்கு மத்தியிலும், கருத்துருவாக்கத்தில் அச்சு ஊடகங்களின் பங்களிப்பே இலங்கையைப் பொறுத்தவரையில் பிரதானமாக இருக்கின்றது. அதனால், தமிழ் அரசியலின் அடுத்த கட்டத்தைத் தீர்மானிப்பதிலும் தமிழ் ஊடகத்துறை முக்கியமான இடத்தை வகிக்கப்போகின்றது. இந்த இடத்தில் தினக்குரலும் தன்னுடைய ஆக்கபூர்வமான பங்களிப்பைத் தொடர்ந்தும் வழங்கும். சவால்களுக்கு மத்தியிலும் சமூகப்பொறுப்புடன் தினக்குரல் தனது பணியைத் தொடரும் என்பதை வாசகர்கள் நிச்சயமாக எதிர்பார்க்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் பேசும் நல்லுலகின் குரலாக ஒலிக்கட்டும்



**குமார் நடேசன்**

முகாமைத்துவப் பணிப்பாளர்,
எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் சிலோன் லிமிட்டெட்

20ஆவது அகவையில் தடம் பதித்திருக்கும் தினக்குரல் பத்திரிகைக்கு எனது மனம் கனிந்த வாழ்த்துக்கள். எமது அன்றாட வாழ்வில் செய்திப் பத்திரிகையின் முக்கியத்துவத்தை நாம் புறந்தள்ளிவிட முடியாது. நவீன உலகில் அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களின் வகிபாகம் மேலோங்கி நிற்கிறதை எம்மால் அவதானிக்க முடியும். தகவல் தொடர்பாடல் வியாபித்திருக்கும் தற்காலத்தில் கருத்துக்களை வெளியிடுவதற்குரிய மிக வலுவான கருவியாக பத்திரிகைகள் விளங்குகின்றன.


வாழ்க்கையின் அங்கமாகத் திகழும் பத்திரிகைகள், பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதிலும் தகவல்களை வழங்குவதிலும் முக்கியமான வகிபாகத்தைக் கொண்டிருக்கின்றன. உலகின் நடைமுறை விடயங்களை விரிவாகவும் விளக்கமாகவும் எம்மத்தியில் கொண்டுவந்து சேர்ப்பது பத்திரிகைகளே. செய்திப் பத்திரிகைகள் இல்லாவிடில் எமது சுற்றுச்சூழல் பற்றிய உண்மையான பிரதிமைகளை நாம் கொண்டிருக்க முடியாது. எமது அறிவை விசாலமாக்க உதவுவதுடன், தொலைநோக்கைக் கொண்டிருப்பதற்கும் இவை துணை நிற்கின்றன. அறிவு, தேடல் கொண்ட உலக இயக்கத்துடன் நாங்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறோமென்ற உணர்வை எம்மிடையே தோற்றுவிப்பவையும் பத்திரிகைகளே. விளையாட்டுக்கள், களியாட்டங்கள், கலை, கலாசார நிகழ்வுகள் உட்பட பல்வேறு விடயங்களின் மூலம் மகிழ்வையும் ஆறுதலையும் உணரவைப்பதற்கு கருவியாக விளங்கும் பத்திரிகைகள், பொருளாதார, வர்த்தக நடவடிக்கைகளையும் மேம்படுத்துகின்றன. இதன் மூலம் தகவல் மற்றும் பொழுதுபோக்கு விடயங்களில் மாத்திரமின்றி பொருளாதாரம் சார்ந்த சூழலைத் தோற்றுவிப்பதற்கும் இவற்றின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாக அமைந்திருக்கின்றது. பக்கச்சார்பின்மை, சமூகப் பொறுப்புணர்வு என்பவற்றைக் கொண்டதாக பத்திரிகைகள் விளங்கவேண்டுமென்ற நியதிக்கமைய தமிழ்பேசும் நல்லுலகத்தில் தினக்குரல் தனது பணியை மேலும் சிறப்புடன் முன்னெடுக்க வேண்டும்.

'ஆயிரம் ஈட்டி முனைகளிலும் பார்க்க நான்கு எதிர்ப்புணர்வு கொண்ட பத்திரிகைகள் அஞ்சவைப்பவை'யென பிரெஞ்சு சக்கரவர்த்தியும் மாவீரனுமான நெப்போலியன் போனேபாட் ஒரு தடவை மாற்றுக் கருத்துக்களை வெளிப்படுத்தும் பத்திரிகைகளின் வலிமை குறித்து தெரிவித்திருந்தார். தினக்குரலும் பத்திரிகைதர்மம் பிறழாமல் எதிர்வினைக் கருத்துக்களை வெளிப்படுத்தி சமூகத்தின் கண்ணாடியாகத் திகழ வாழ்த்துகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களின் உயிர்நாடியாக தினக்குரலை ஆரம்பித்து வைத்த தீர்க்கதரிசி



**சிரேஷ்ட சட்டத்தரணி**
**கந்தையா நீலகண்டன்**
**தலைவர்,**
அகில இலங்கை
இந்து மாமன்றம்

தினக்குரலை ஆரம்பம் முதல் நாளாந்தம் வாசித்துவரும் வாசகன் என்ற உரிமையில் தினக்குரலின் சேவையை, வளர்ச்சியை மெச்சுவதில் மனநிறைவு காண்கின்றேன். இந்த வளர்ச்சிக்கு வித்திட்ட பெருமகனை இத்தருணத்தில் நினைவு கூர்வது எமது கடமை.

தினக்குரல் தமிழ் ஊடகத்துறையில் ஒரு புதிய சகாப்தத்தையே நிறுவியிருக்கிறது. அந்த நிலையை உருவாக்கிய சகலரையும் போற்றும் அதேவேளை, அதற்கு வழிவகுத்த அதன் ஆரம்பகர்த்தாவை முக்கியமாக போற்றுதல் எமது கடமை.

தினக்குரல் பத்திரிகையை ஆரம்பிக்க முன் தினக்குரல் நிறுவனர் எஸ். பி. சாமி தனது வாசஸ்தலமான வெள்ளவத்தை அமர் மன்னிங் பிளேஸ் இல. 105 இல் ஒருநாள் என்னையும் வேறு சிலரையும் அழைத்து இரவு போசன உபசாரம் செய்து இன்னுமொரு தமிழ்ப் பத்திரிகையின் சேவையை உணர்ந்து தினக்குரலை ஆரம்பிக்கும் உத்தேசத்தை எடுத்துரைத்தார். அதனை மனதார வரவேற்றோம். ஆனால் அங்கிருந்த வர்த்தகர்களிடம் இம்முயற்சிக்கு மூலதனப் பங்களிப்பு வழங்குமாறு அவர் விடுத்த அன்பு வேண்டுகோளுக்கு எவரும் சாதகமான பதில் தரவில்லை என்ற ஆதங்கத்துடன் தான் அந்த நிகழ்விலிருந்து புறப்பட்டேன்.

வேறு எந்தவொரு வர்த்தகரும் தன்செல்வத்தைப் பகிர்ந்து தமிழினத்தின் நன்மை கருதி சாமி ஐயா ஆரம்பிக்கும் அந்த முயற்சிக்கு ஆதரவுதராவிட்டாலும் துணிச்சலுடன் அவர் செயலில் இறங்கினார். அவர் தீர்க்கதரிசனத்துடன் தான் அச்செயலை ஆரம்பித்தார் என்றால் மிகையாகாது.

வேதனைகளும் சோதனைகளும் மிக்க ஒரு காலகட்டத்தில் அவர் காட்டிய துணிவு மகத்தானது. எமது இனம் பல வழிகளிலும் இன்னும் பின்னடைந்துகொண்டு போவதற்கு எம்மிடையே சிந்தித்துச் செயற்படும் சிற்பிகள் அருகிவருவது ஒரு முக்கிய காரணம். அதற்கும் மேலாக தன்னலம் மறந்து தன்னினநலம் கருதிச் சேவையாற்ற வருபவர்களை விரல்விட்டு எண்ணலாம். இவ்வாறாக அருகிவரும் சிந்தனைச் சிற்பிகளில் தன்னலமற்ற சேவையாற்றும் உன்னத மனிதர்களில் எஸ். பி. சாமி இன்றும் முன்வரிசையில் வைத்துப் போற்றப்பட வேண்டியவர்.

அவரை கடந்த இரு தசாப்தங்களாக நன்கு அறிந்து பழகும் வாய்ப்பை சிறியேனுக்கு ஆண்டவன் தந்திருந்தான்.

நான் யாழ்ப்பாணம் செல்லும் வேளையில் ஐயாவின் தினக்குரல் ரெஸ்டில் தங்குவது வழக்கம். அதிகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லையில் எழுந்து அவர் ஒரு நடை போடுவதைக் காண லாம். அது அவரின் காலைப் பயிற்சி. அவசர அவசரமாக வேலைக்குப் புறப்படுவார், கடிகாரத்தைப் பாராமல் (அவரின் கையில் கடிகாரம் கட்டப்பட்டிருப்பதில்லை என்றே நினைக்கிறேன்) இரவு வரை பம்பரமாகச் சுழன்று வேலை செய்வார். இச்சுழல் வேலையின் மத்தியிலும் அவரின் சிந்தனை என்றும் வேகமாகச் செயற்படும்.

யாழ்ப்பாணத்தில் ஒரு நவீன வைத்தியசாலை கட்டும் கனவை திடசங்கற்பத்துடன் அவர் நிறைவேற்றியதை நன்கறிவேன். பழுத்த நிதிச்சுமையின் மத்தியிலும் தயங்காது முன்னேறினார். அவருடன் வங்கிகளின் கூட்டங்களுக்குச் சென்றிருக்கிறேன். ஐயாவை ஒரு தங்க நாணயமாகவே மதித்து அதன் காரணமாக தயங்காது வங்கிகள் அவரின் வர்த்தக முயற்சிகளுக்கு கைகொடுத்தன.

அவரின் அபரிமிதமான சிந்தனை முத்துகள் பல கட்டங்களில் உதிர்ந்ததை அவரின் சட்ட ஆலோசகராக - அவரின் வைத்தியசாலைக் கம்பனிச் செயலாளராக நன்றாக அறிந்தவன் யான். அவர் ஒரு மகத்தான வர்த்தக நிபுணர் என்றால் மிகையாகாது.

அகில இலங்கை இந்து மாமன்றத்தில் பல வருடங்களாக உபதலைவராக இருந்த சாமி ஐயா இப்போது மாமன்ற அறங்காவலர் உறுப்பினராக இருக்கிறார். பல இக்கட்டான கட்டங்களில் துணிவுடன் தீர்க்கமான ஆலோசனைகளைத் தருவார். குறிப்பாக அவரின் வழிகாட்டல்களின் சிறப்புகளில் உதாரணமாக இரண்டைக் குறிப்பிட விரும்புகின்றேன். 2009ஆம் ஆண்டில் போராளிகளென அடையாளம் காட்டப்பட்ட சுமார் 275 மாணவர்கள் இரத்மலானை கொழும்பு இந்துக் கல்லூரியில் வைத்து படிப்பிக்கவேண்டிய பொறுப்பு மாமன்றத்திற்கு ஏற்பட்டது. அந்த மாணவர்களை கொண்டுவந்து வைத்திருப்பதில் ஏற்படும் சிக்கல்கள் பற்றி ஆராயப்பட்ட ஆலோசனைக் கூட்டம் முடிவு எடுக்கப்படாமல் மறுநாள் ஒத்திவைக்கப்பட்டது. மறுநாள் வந்த அன்றைய ஓர் உபதலைவராக இருந்த சாமி ஐயா ஒரேயொரு கேள்வி கேட்டார். நாங்கள் இந்தப் பொறுப்பை ஏற்காவிட்டால் யார் ஏற்பார்கள்? துணிந்து செயலில் ஈடுபடுங்கள் அவ்வளவுதான். உடனே ஏகமனதாகத் தீர்மானம் எடுக்கப்பட்டது. அடுத்த சமயம் நம்பிக்கை பொறுப்பாளர் சபையில் மாமன்ற நிதியை எந்த வைப்புகளில் வைப்பது என ஆராயப்பட்டபோது அவர் தந்த கருத்துப் பங்களிப்பும் துணிவுடன் கூடிய வழிகாட்டலும் ஒரு முடிவுக்கு வழிவகுத்தது.

இப்படியாகச் சிந்தித்து தீர்க்கதரிசனத்துடன் சாமி ஐயா ஆரம்பித்த தினக்குரல் கடந்த பல வருடங்களாக குறிப்பாக ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தசாப்தத்தில், தமிழ் மக்களின் வேதனைகளையும் சோதனைகளையும் உலகிற்கு எடுத்துக்காட்டி தமிழ் மக்களின் உயிர் நாடியாகத் திகழவைத்த பெருமையும் அவருக்கு உண்டு. சிவநேசச்செல்வன் முதல் தனபாலசிங்கம் வரை தரமான உயர் கருத்துகளை ஆணித்தரமாக எழுதிய ஆசிரியர்களையும் தேடி அமர்த்தி தினக்குரலை ஒலிக்கவைத்தது மட்டுமல்லாமல், தினக்குரல் எனும் தளத்தில் உயிர்த்துடிப்பு மிக்க ஓர் ஊடக எழுத்தாளர் பரம்பரையே உருவாக வழிவகுத்திருக்கின்றார்.

மேலும் வளர்ந்து தினக்குரல் தமிழ் மக்களின் குரலாக ஓங்கி ஒலிக்க ஆண்டவனைப் பிரார்த்தித்து நிறைவு செய்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவு சார்ந்த அம்சங்களை பிரசுரிப்பதில் தினக்குரலின் பங்களிப்பு மகத்தானது



**ரஊப் ஹக்கீம்**
நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு
ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்

தமிழ் பேசும் மக்களின் அபிமானத்திற்குரிய 'தினக்குரல்' பத்திரிகை 19 ஆண்டுகளை வெற்றிகரமாகக் கடந்து 20 ஆவது ஆண்டில் தடம் பதிக்கும் சந்தர்ப்பத்தில் அதற்கு மனப் பூர்வமான வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

எல்லாத் துறைகளிலும் போட்டி மனப்பான்மை மலிந்துள்ள காலகட்டத்தில் குறிப் பாக, அச்சு ஊடகத் துறையில் பத்திரிகையொன்றை இடையறாது வெளியிடுவது என்பது விதிவிலக்கு அல்ல.

மதிப்பிற்குரிய திருவாளர் சாமி அவர்களின் முன்னெடுப்புடன் 'தினக்குரல்' ஆரம்பிக் கப்பட்ட நாளிலிருந்தே அதனை வாசித்து வருபவன் என்ற வகையில், அதைப் பற்றிய எனது மதிப்பீடு உச்ச நிலையில் இருந்து வருகின்றது. பக்கச்சார்பின்றியும், கட்சி வேறுபா டின்றியும், நடுநிலை தவறாதும், உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் அன்றாடம் நிகழ்வன வற்றை வாசகர்கள் இலகுவாகப் புரிந்துகொள்ளும் வகையில் வழங்குவது மட்டுமல்லாது, அறிவு சார்ந்த பயனுள்ள ஏனைய பல்வேறு அம்சங்களையும் பிரசுரிப்பதில் தினக்குரலின் பங்களிப்பு மகத்தானது.

'தினக்குரல்' பத்திரிகையின் வெற்றியின் பின்னணியில் அதில் கடமையாற்றிய, மற் றும் கடமையாற்றிவரும் ஆசிரியர் பீடத்தினரினதும், ஏனைய ஊழியர்களினதும் அர்ப் பணிப்புடன் கூடிய ஒத்துழைப்பு பெரிதும் பாராட்டத்தக்கதாகும்.

நவீன யுக்திகளைக் கையாண்டு, தமிழ் பேசும் நல்லுலகில் புதுப்பொலிவுடன் வெளி வரும் 'தினக்குரல்' நாளிதழ் மற்றும் வார இதழ் ஆகியவற்றின் எதிர்காலம் மேலும் சிறந்து விளங்க எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியேயும் உள்ளேயும் நிறைய சுழியோடியிருக்கும் தினக்குரல்



அமைச்சர்
மனோ கணேசன்

1997ஆம் ஆண்டையும் சேர்த்து பார்க்கும் போது இந்த 2016ஆம் ஆண்டுடன் 20 ஆம் ஆண்டு நிறைவை தினக்குரல் எட்டுகிறது. இது கொழும்பில் ஆசிரிய பீடத்தை கொண்டு பிரசுரமாகும் நாளேடு, வார ஏடு, இணைய ஏடு, அப்புறம் மலையகத்துக்கான உதயசூரியன் என்றும் அப்புறம் யாழில் ஆசிரியர் பீடத்தை கொண்டு பிரசுரிக்கப்படும் பிராந்திய யாழ். தினக்குரல் என்றும் இந்த இருபது ஆண்டுகளில் வளர்ந்துதான்விட்டது.

தினக்குரலின் அவசியத்தை, 1997 ஆம் வருடம், அன்றொரு நாள் முன்மொழிந்திருந்த ஆசிரியர் குழுவினர், இன்றைய வளர்ச்சியை அன்றே முன்னறிந்து எதிர்நோக்கி இருந்தார்களா என எனக்குத் தெரியவில்லை. ஆனால், இந்த வளர்ச்சி காத்திரமானது. அபாரமானது.

அரசியல் சிறுவனாக அன்று இருந்த எனது ஒரு செய்தி தினக்குரல் முதல் இதழில் பிரசுரமானதாக எனக்கு சாடையாக ஞாபகம் இருக்கிறது. ஆனால், அழுத்தமாக ஞாபகம் இருக்கும் பல விடயங்கள், தினக்குரல் தொடர்பில் என் மனதில் நிழலாடுகின்றன.

புரட்சி என்றால் என்ன? அது நல்ல மாற்றத்தை நோக்கிய முன்நோக்கிய நகர்வு என்பதுவே புரட்சி என்பதன் எளிமையான அர்த்தம் ஆகும். அப்படியானால் தினக்குரலின் பிறப்பும் ஒரு புரட்சி. இதில் நல்ல விடயம் என்னவென்றால் இன்று அதன் நடப்பும் புரட்சியாகத்தான் இருக்கிறது.

ஒரு வர்த்தகராக மட்டும் அன்றுவரை அறியப்பட்டிருந்த எஸ்.பி.சாமியின் அன்றைய ஒரு இந்த நகர்வு, சந்தேகமில்லாமல் ஒரு துணிச்சல் மிக்க புரட்சி நகர்வுதான். தனபாலசிங்கம், ராஜகோபால், சிவநேசச்செல்வன் ஆகியோர் இந்த புரட்சி முன்னகர்வின் முன்னோடி பங்காளர்கள். இன்று இந்தக் கொடியை ஹரன், பாரதி, சிவகணேசன், ஜெயந்திரன், கிருபாகரன் உள்ளிட்ட இன்னும் பல செய்தியாளர்களான இளம் புரட்சியாளர்கள் முன்கொண்டு செல்கிறார்கள். யாழில் பொறுப்பாசிரியராக நண்பர் அற்புதானந்தன் முன்கொண்டு செல்கிறார்.

இந்த பெயர்களை குறிப்பிட்ட காரணம் ஒன்றும் இரகசியமல்ல. தினக்குரலின் பிறப்பும் இருப்பும் ஒரு கூட்டு முயற்சி என்பது வரலாற்றில் பதிவு செய்யப்பட வேண்டும் என்பது என் அவா. தினக்குரல் உள்ளிட்ட ஊடகங்களுக்கு என் கருத்துகளை தெரிவிக்கும் போது சொந்தமாக நானே ஆய்வு செய்து, நானேதான் எழுதுகிறேன். அதேபோல் இந்த வாழ்த்துச் செய்தியை எழுதும் போது தினக்குரல் தொடர்பான ஒரு குட்டி ஆய்வை செய்தேன். எழுதுகிறேன்.

தினக்குரல், வெளியேயும் உள்ளேயும் நிறைய சுழியோடி இருக்கிறது. எதிர்நீச்சல் நிகழ்ந்து இருக்கிறது. ஒரு கால கட்டத்தில் ஒரு அமைப்பால், கிழக்கு மாகாண பிரதேசங்களில் தினக்குரல் தடை செய்யப்பட்டிருந்தது. இப்படி நிறைய புறத்தடைகள். மக்கள் குரலுக்கு இவை பரிசுகள்.

இலங்கையின் தமிழ் பேசும் அரசியல் பரப்புகளை தினக்குரல் எடை போட்டு பகிர்ந்து தன் பரப்பில் இடம்கொடுப்பது இதன் ஆசிரியர் பீடத்தின் இன்னுமொரு சிறப்பு. வடக்கு, கிழக்கு, மலையகம், மேலகம் என்றும் அப்புறம் ஈழ தமிழ் தேசியம், மலையகத் தமிழ் தேசியம், முஸ்லிம் தேசியம், அகில இலங்கை தேசியம் என்றும் பகிர்ந்து தன் பரப்பை விரித்து இருப்பதைதான் இங்கே பாராட்டுகின்றேன். செய்தி அறிவிப்பு, ஆய்வு முன்மொழிவு ஆகிய இரண்டு பிரதான அம்சங்களிலும் இந்த ஊடகப் பண்பை நான் காண்கின்றேன். இது தினக்குரலின் சிறப்பு.

தினக்குரலின் இருப்பு எனக்கும் ஒரு சிறப்பைத் தருகிறது. வேறு எந்த அரசியல் நண்பர்களுக்கும் இல்லாத சிறப்பு அது. தினக்குரலின் தலைமையகம் அமைந்திருப்பது எலிஹவுஸ் வீதி, கொழும்பு என்ற முகவரியில் ஆகும். இது நான் சுவீகரித்துக்கொண்ட வட கொழும்பு தொகுதியில் ஆகும். தலைநகரில் தமிழர் அதிகம் வாழும் என் தொகுதி.


வாழ்க, இன்னும் பல இருபதாண்டுகள் என வாழ்த்துகிறேன்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றுப் பின்புலத்தில் தினக்குரல்



பேராசிரியர்
சபா. ஜெயராசா

உளநெருக்கீடும் உளப் பதகளிப்பும் நிலவிய போர்ச் சூழலிலே செய்தி மற்றும் தகவல் கையளிப்புக்கும் மேலான ஆக்கப்பணியை மேற்கொண்டமை இலங்கையின் தமிழ் நாளிதழ்களுக்குரிய சமூகப் பரிமாணம்.

செய்தித் தணிக்கை என்பது இயல்பாகவே மக்கள் மனங்களிலே பதகளிப்பை (Anxiety) ஏற்படுத்தக்கூடிய அரசியற் கவிநிலையில், மிகவும் சாதுரியமாகச் செயற்படும் இதழியல் நுட்பங்களை இலங்கையின் நாள் இதழ்கள் முன்னெடுத்தன. சமூக நீதியின் எழுத்துவழி முன்னெடுப்பில் உயிர் பறிக்கப்பட்ட இதழியலாளர்கள் பலர். அத்தகைய ஒரு சமூக இதழியற் பின்புலத்தில் தோற்றம் பெற்றதே 'தினக்குரல்'.

எழுத்தறிவு விரிவாக்கமும் மக்களாட்சியின் நீட்சியாக நிகழ்ந்த அரசியற்பங்கு பற்றலும் 'நாளிதழ் வாசிப்பு' என்ற தோற்றப்பாட்டை மேலெழச் செய்தன. இந்தத் தோற்றப்பாடு பத்தொன்பதாம் நூற்றாண்டிலிருந்தே முகிழ்த்தெழத் தொடங்கியது.

இலங்கைத் தமிழ்ச் சூழலிலே முதலில் தோற்றம் பெற்ற இதழாக 'உதயதாரகை' [1841] குறிப்பிடப்பட்டாலும் அது முதலில் மாத இதழாகவும் பின்னர் வார இதழாகவுமே வெளிவந்தது. நாள் இதழ் என்ற வடிவம் அக்காலத்தில் உருவாக்கம் பெறவில்லை.

**இலங்கையின் சமூக நிலவரங்களை கதிகலங்கவைத்த செயற்பாடுகள் 1956ஆம் ஆண்டைத் தொடர்ந்து நிகழலாயின. நிகழ்த்தவும்பட்டன என்றும் குறிப்பிடலாம். அத்தகைய சூழலில் தோற்றம் பெற்ற சமூகப் பதகளத்தை அணுகிய தமிழ் நாளிதழ்களின் செயற்பாடுகள் உளவியல் நிலையிலும் வரலாற்று நிலையிலும் செய்தி வழியான ஆற்றுப்படுத்தல்களாக அமைந்து வரலாற்றை உருவாக்கும் செயல்முறையாயிற்று**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயக் கருத்தியலோடு தொடர்புடையதாகவே உதயதாரகை அமைந்திருந்தாலும், கல்வி, வரலாறு, ஆட்சி மாற்றங்கள், பயிர்ச் செய்கை முதலான அறிவூட்டல்களையும் அந்த இதழ் மேற்கொள்ளத் தொடங்கியது. அதாவது, இதழின் உள்ளடக்கத்தில் விரிவு ஏற்படலாயிற்று.

சமய விரிவாக்கம், கல்வி விரிவாக்கம், கருத்துப் பகிர்வில் நிகழ்ந்த விரிவாக்கம் முதலியவற்றின் பின்புலத்தில் பல்வேறு இதழ்கள் உருவாக்கம் பெறத் தொடங்கின. அவை தமிழ் இதழியலின் ஆரம்பகாலத்துப் பரிமாணங்களாக அமைந்தன.

தொடர்ந்து சைமன் காசிச்செட்டியவர்கள் 'உதயாதித்தன்' [1944] என்ற இதழை உருவாக்கினார். 1845 ஆம் ஆண்டில் 'உரைக்கல்' என்ற இதழ் வெளிவந்தது. கல்வி நோக்கில் 'வித்தியா தர்ப்பணம்' என்ற இதழை வைமன் கதிரவேற்பிள்ளை வெளியிட்டார். சி.வை. கதிர்வேற்பிள்ளை இலங்காபிமானி என்ற இதழை 1863 ஆம் ஆண்டிலே பிரசுரித்தார். 1864 ஆம் ஆண்டில் சி.முத்தையாபிள்ளை என்பவர் கொழும்பிலிருந்து 'இலங்கைப் பாதுகாவலன்' என்ற இதழை வெளியிட்டார்.

காலனித்துவ சூழலில் சமயமே முதன்மைப் பேசுபொருளாயிற்று. சமயக்கருத்தாடல்களுக்கு இதழ்கள் களம் அமைத்தன. 1877 ஆம் ஆண்டில் இந்து சமய மேலெழுச்சியை முன்னெடுத்து சின்னத்தம்பி என்பவர் 'இலங்கை நேசன்' என்ற இதழை வெளியிட்டார். தொடர்ந்து 1889 ஆம் ஆண்டிலிருந்து இந்து சாதனம் இதழ் வெளிவரத் தொடங்கியது.

சமயநிலைப்பட்ட தேசியத்தின் வளர்ச்சி முஸ்லிம் மக்களிடத்தும் இதழ்களைத் தோற்றுவித்தது. 1873 ஆம் ஆண்டில் வாப்புமரைக்கார் என்பவர் 'புதினா லக்கரி' என்ற இதழை கொழும்பிலிருந்து வெளியிட்டார். தொடர்ந்து அறிஞர் சித்திலெப்பை 'முஸ்லிம் நேசன்' என்ற இதழை 1882 ஆம் ஆண்டில் வெளியிட்டார்.

கல்வி விரிவாக்கம், சமய நிலைப்பட்ட பள்ளிக் கூடங்களின் பெருக்கம், வாசிப்புப் பண்பாட்டின் முகிழ்ப்பு முதலானவை இதழ்களின் பெருக்கத்தை ஏற்படுத்தத் தொடங்கின. 'இலங்கை நேசன்', 'பாலியர் நேசன்', 'உதய தாரகை', 'கத்தோலிக்க பாதுகாவலன்', 'உதயபானு' முதலாம் இதழ்கள் வெளிவரத் தொடங்கின.

**ஆசிரியர் பீடத்தின் எழுத்தாளுமை கொண்டவர்களின் கூட்டு முயற்சி தினக்குரலை வளமான இதழாக முன்னெடுப்பதற்கு வலுவூட்டியது. வினைத்திறன் மிக்க செய்திக்கையளிப்பும் அறிவுக்கையளிப்பும் தினக்குரலால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன**

இருபதாம் நூற்றாண்டில் நிகழ்ந்த எழு குழாத்தினரது (ELITE) வளர்ச்சியும் கல்விச் செயல்முறையால் நிகழ்த்தப்பட்ட மேல் நோக்கிய சமூக அசைவியமும் (SOCIAL MOBILITY) அரசியல் விடுதலையை நோக்கிய விழிப்புணர்வும் நாள் இதழ்களின் தேவையைத் தோற்றுவித்தன. 'நாளாந்த செய்தி வாசிப்பு' என்ற புதிய பண்பாடு வளர்ச்சிபெறலாயிற்று. அவற்றின் பின்புலத்தில் 'வீரகேசரி', 'தினகரன்' முதலாம் தமிழ் நாளிதழ்கள் வளர்ச்சி பெறத் தொடங்கின.

இலவசக் கல்விச் செயற்பாடு, தாய்மொழிக் கல்வி வளர்ச்சி, தமிழ்த் தேசிய சிந்தனைகளும் இயக்கங்களும் வலிமை பெற்று மேற்கிளம்பியமை முதலிய விசைகளுடன் நாள் இதழ் வாசிப்பு மேலும் பெருக்கமடையத் தொடங்கியது. தேசிய நாள் இதழ்களுடன் பிரதேச நாள் இதழ்களும் வெளிவரத் தொடங்கின. யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரத் தொடங்கிய 'ஈழ நாடு' முதலில் பருவ இதழாகி பின்னர் 'நாள் இதழ்' என்ற ஏற்றம் பெற்றது. 'ஈழ நாடு' என்ற பெயர்க் கருத்தாக்கமே முழு இலங்கையையும் நோக்குவதாக இருந்தது. ஆயினும் அதன் விநியோக எல்லை வடபுலத்தோடு மட்டும் கட்டுப்பட்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் சமூக நிலவரங்களை கதிகலங்க வைத்த செயற்பாடுகள் 1956ஆம் ஆண்டைத் தொடர்ந்து நிகழலாயின. நிகழ்த்தவும்பட்டன என்றும் குறிப்பிடலாம். அத்தகைய சூழலில் தோற்றம் பெற்ற சமூகப் பதகளத்தை அனுகிய தமிழ் நாளிதழ்களின் செயற்பாடுகள் உளவியல் நிலையிலும் வரலாற்று நிலையிலும் செய்தி வழியான ஆற்றுப் படுத்தல்களாக அமைந்து வரலாற்றை உருவாக்கும் செயல்முறையாயிற்று.

பதற்றம் நிறைந்த காலகட்டத்தின் சமூகத் தருக்கத்தை எதிர்கொண்டு 'தினக்குரல்' மேலெழுந்தது. நாள் இதழை ஆரம்பித்தலும் அதற்குரிய முதலீடுகளைச் செய்தலும் ஆபத்து விளிம்பிலுள்ள தொழில்

**அமரர் நடராசா முன்னெடுத்த 'கருணைப் பாலம்' செயற்பாடு தினக்குரலின் நடைமுறைச் சமூகப் பணிக்கு வலுவூட்டியது. போரினால் பாதிப்புக்குள்ளாகிய மக்களுக்கு உதவும் கரமாக அது நீட்சி கொண்டது**

எழுகையாக இருந்த பொழுதும், அவற்றை ஓர் அறைகூவலாக ஏற்று தினக்குரல் இதழைத் தொடக்கிய தொழில் அதிபர் எஸ்.பி.சாமியினதும் கேசவ ராஜாவினதும் அபார துணிச்சல் செய்திக் கையளிப்பில் புதுவரவைத் தோற்றுவித்தது.

தமிழ்ச் சூழலிலே தோற்றம் பெற்ற இதழ் நிறுவன முகாமைத்துவத்தின் தனித்துவத்தை இச்சந்தர்ப்பத்திலே சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. தினக்குரலின் தொடக்ககால முகாமைத்துவமும் வீரகேசரி நிறுவனத்தால் உள்ளீர்க்கப்பட்ட பின் நிகழ்ந்துவரும் முகாமைத்துவமும் இதழாசிரியர்களின் மாண்புக்கும் புலமைச் சுதந்திரத்துக்கும் மதிப்பளித்து வருதல், தமிழ் நாளிதழ் வரலாற்றிலே சிறப்பாக சுட்டிக்காட்டப் பட வேண்டிய நடப்பியற் பதிவாகும். இந்நிலையில் முகாமைத்துவ மேலாளர் குமாரநடேசனின் இதழியல் முகாமைத்துவம் பாராட்டுதற்குரியது. தமிழில் புதிய புதிய இதழ்களைத் தோற்றுவித்து வாசிப்பு நிலையில் புத்தாக்கங்களை ஏற்படுத்துதல் அவர் மேற்கொள்ளும் பிறிதோர் ஆக்க நடவடிக்கை. செய்திக் கையளிப்பில் ஆற்றலும் அனுபவமும் நடைமுறைப் பிரச்சினைகளுடன் ஊடாட்டம் கொண்டவர்களும் உணர்ச்சிக் கோலால்களோடு இழுபட்டுச் செல்லும் அறிகைத் தளம்பல்களுக்கு உட்படாதவர்களுமான இதழியற் புலமையாளரின் அணி தினக்குரலின் செய்தி வளத்துக்கும் ஆக்க வளத்துக்கும் அடிப்படையாயிற்று.

ஆசிரியர் பீடத்தின் எழுத்தாளுமை கொண்டவர்களின் கூட்டு முயற்சி தினக்குரலை வளமான இதழாக முன்னெடுப்பதற்கு வலுவூட்டியது. வினைத்திறன் மிக்க செய்திக்கையளிப்பும் அறிவுக்கையளிப்பும் தினக்குரலால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இருபது ஆண்டுகால வளர்ச்சியில் தினக்குரல் ஈட்டிய வெற்றியில் ஆசிரிய பீடத்தினரதும் நிர்வாகக் கட்டமைப்பைச் சேர்ந்தோரதும் கூட்டுமுயற்சி விதந்து குறிப்பிடப்பட வேண்டியுள்ளது. அளிக்கை நிலையில் தினக்குரல் தனக்கே உரிய தனித்துவமான தளக்கோலத்தை (LAYOUT) அமைத்துக்கொண்டமை கூட்டுழைப்பின் வழியாக மேலெழுந்த ஆக்கமலர்ச்சியாகும்.

தலைநகரில் இருந்து வெளிவந்த தினக்குரல், யாழ்ப்பாணத்திலும் யாழ். தினக்குரலை வெளியிடத் தொடங்கியமை இருபது ஆண்டுகாலத்தில் நிகழ்ந்த பிறிதொரு நிகழ்ச்சியாகும். அந்த இதழின் வெற்றியில் இதழியல் நோக்கும் சமூகநோக்கும் ஒன்றிணைந்து மேலெழுந்த ஊக்கவிசை தனித்துக் குறிப்பிடப்பட வேண்டியுள்ளது.

அமரர் நடராசா முன்னெடுத்த 'கருணைப் பாலம்' செயற்பாடு தினக்குரலின் நடைமுறைச் சமூகப் பணிக்கு வலுவூட்டியது. போரினால் பாதிப்புக்கு உள்ளாகிய மக்களுக்கு உதவும் கரமாக அது நீட்சி கொண்டது.

நவீன எண்ணிமப் புரட்சி செய்திகளை உடனுக்குடன் கைபேசிக்குள் கொண்டுவந்துவிட்டது. அந்நிலையில் செய்தி இதழ்கள் செய்திகளோடு மட்டும் கட்டுப்பட்டிருக்காது, அறிவின் விரிவாக்கல் செயற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடுகளை முன்னெடுக்க வேண்டிய நிலைக்கு உந்தப்பட்டுள்ளன. அவ்வகையில் நவீன கட்டுரை இலக்கியத்தில் தினக்குரலின் ஈடுபாடு நிகழத் தொடங்கியமை விதந்து குறிப்பிடப்பட வேண்டிய இதழியல் பதிவாகும்.

இன்று உலகம் முழுவதும் எல்லா மொழிகளிலும் புனைகதை சாரா (NON FICTION) எழுத்தாக்கங்களின் வாசிப்பே பிரவாகமெடுக்கத் தொடங்கியுள்ளது. அத்தகைய நடப்பியலைக் கருத்திற் கொண்டு அரசியற் கட்டுரை, பொருளாதாரக் கட்டுரை, சமூகப் பிரச்சினைகளை அடியொற்றிய கட்டுரை, இலக்கியக்கட்டுரை, பெண்ணியக் கட்டுரை, இளைஞர் இயல் தொடர்பான கட்டுரை, அறிவியற் கட்டுரை, உலகில் மேற்கிளம்பும் புதிய சிந்தனைகள் தொடர்பான கட்டுரை முதலியவற்றை தினக்குரல் வெளியிடத் தொடங்கியது.

நவீன உலகம் பண்பு நிலை ஏற்றத்தை அனைத்துத் துறைகளிலும் வலியுறுத்தத் தொடங்கியுள்ளது. கல்வியிலே தரம், நுகர்ச்சிப் பொருள்களிலே தரம், எங்கும் தரம், எதிலும் தரம் என்பது பேசுபொருளாகவும் நடைமுறைப் பொருளாகவும் நீட்சிகொண்டுவருகின்றது.

செய்தியிலே தரம், வெளியிடப்படும் கட்டுரைகளிலே தரம், ஆசிரியர் எடுத்துரைப்பிலே தரம் முதலியவற்றில் கவனம் செலுத்துதல் தினக்குரலின் இதழியல் நோக்கு.

தமிழ் இதழியல் பாரம்பரியம் ஆசிரியர் தலையங்கத் தரச்சிறப்பில் கவனம் செலுத்திவருதல் சிறப்பான பரிமாணமாகின்றது. ஆசிரியர் தலையங்கங்களின் தொகுப்பு நூலுருப்பெற்று அறிவுக் கையளிப்பை மேலோங்கச் செய்தமை பிறிதொரு முக்கியமான நிகழ்ச்சியாகும். அவ்வகையில் சபாரத்தினம் (ஈழநாடு), வீ.தனபாலசிங்கம் (தினக்குரல்), ஆர். பிரபாகரன் (வீரகேசரி) ஆகியோரின் ஆசிரியர் தலையங்க

நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு
தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை


ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்,
அமைச்சர் ரவூப் ஹக்கீம்.

20ஆவது ஆண்டில் தடம்பதிக்கும் "தினக்குரல்" பத்திரிகைக்கு நல்வாழ்த்துக்கள்.

நாட்டின் ஜனாதிபதி அதிமேதகு மைத்திரிபால சிறிசேனவின் சித்தாந்தத்திற்கு அமைவாக,
மாண்புமிகு பிரதமர் கௌரவ ரணில் விக்கிரமசிங்கவினதும்,
நல்லாட்சி அரசாங்கத்தினதும் வழிகாட்டலின் கீழ்
இலங்கையிலிருந்து இனங்காணப்படாத சிறுநீரக நோயை (CKDu) முற்றாக ஒழிப்போம்!
சுத்திகரிக்கப்பட்ட தூய நீரைப் பருகுவோம்!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கங்கள் நூலுருப்பெற்றன.

நூல்களின் பெருக்கமும் இதழ்களின் பெருக்கமும் சமகாலத்திலே பிரவாகமெடுக்கத் தொடங்கியுள்ளன. அந்நிலையில் பண்புநிலை (QUALITY) ஏற்றமே நீடித்தவாழ் வாழ்வுக்கும் பயனுக்கும் இட்டுச் செல்லும். அத்தகைய பிரக்ஞையோடு தினக்குரல் இயங்கிவருதல் குறிப்பிடத்தக்கது.

நாள் இதழ்களுக்கு ஆக்கவலுவூட்டுவது அவற்றில் வெளிவரும் நிழற்படங்களும் கேலிச் சித்திரங்களுமாகும். நிழற்பட இதழியல் (PHOTO JOURNALISM) என்ற துறை மேலெழுச்சி கொள்ளத் தொடங்கியுள்ளது. நிழற்படக்கலைஞரது செய்தி அளிக்கைப் புலக்காட்சியும் இதழாசிரியரின் செய்தி வழங்கல் புலக்காட்சியும் ஒன்றெனக் கலந்து நிழற்பட இதழியல் எழுச்சி கொள்கின்றது. இத்துறையிலும் தினக்குரல் தனக்கென உரிய தனித்துவத்தை நிலைநிறுத்தி வருகின்றது.

தினக்குரல் ஓர் இதழ் என்ற நிலையையும் கடந்து 'தெளிவான வரலாற்றுப் பதிவு' என்ற நிலை மாற்றத்தையும் பெற்றுள்ளது. நேர்காணல், இதழ்க் கீலழங்கள் (COLUMN), நேரடி அறிவிப்புகள், கள நிலவரங்களுடன் உறவாடியும் இடைவினைக் கொண்டும், புதைந்துள்ள தகவல்களை வெளிக்கொண்டுவருதல், புலனாய்வுத் தகவல்களைத் தருதல், விளையாட்டு எழுவினாக்களை முன்வைத்தல், ஆய்வு நிலைபட்ட கருத்துக்களைத் தொகுத்துத் தருதல், பேசப்படா பொருளைப் பேசுதல் முதலான எழுத்துப் பணிகளினூடே 'தினக்குரல்' மேற்கொள்ளும் வரலாற்றுப் பதிவுகள் நீட்சி கொள்கின்றன.



# ஈழத்து சிறுகதைகளின் வாழ்வும் தினசரிகளும்



வசந்தி
தயாபரன்

சமூகத்துக்கு என்ன சொல்ல வேண்டும்? எப்படிச் சொல்ல வேண்டும்? அதை, சுவை குன்றாது சொல்ல வேண்டும். இவற்றைத் தான் யான் கதை இலக்கணமாகக் கையாளுகின்றேன். அது சமூகத் தைச் சென்றடைவதைக் கண்டு ஆனந்தம் அடைகிறேன்.

இது, 1.8.1999 திகதிய தினக்குரலில் பிரசுரமான, 'குறமகள்' திருமதி வள்ளிநாயகி இராமலிங்கத்தினது செவ்வியின் ஒரு பகுதி. ஓர் புனை வின் குறியிலக்கை மிக எளிமையாக அதேசமயம் வலிமையாக முன் வைக்கின்ற கூற்றாக இதனை நோக்கலாம். சிறுகதையின் இலக்கணம் குறித்த சில அடிப்படைக் கருத்துகளையும் நாம் அங்கு காணலாம். சமூகத்தைச் சென்றடைதல் என்கின்ற கட்டுமானத்திலே எழுதப்படு கின்ற சிறுகதைகளை, அங்ஙனம் எடுத்துச் செல்வதற்கான மிக இல குவானதும் பொருத்தமானதுமான கருவியாக இன்னமும் திகழ்பவை, தினசரிகள் அவ்வாறு அச்சிறுகதைகள் மக்களை அடைந்து தீவிரமான வாசிப்புக்கு உட்படும்போது, கருத்துப் பரிமாற்றங்கள், விமர்சனங்கள் என்பவற்றுக்கு வழிவிடுகின்றவையாகவும் அவை மாறுகின்றன.

ஒரு பத்திரிகையானது, வரலாற்றின் முக்கியமான காலகட்டங் களை அதன் பல்பரிமாணங்களுடனும் பதிவு செய்கின்றது. அப்ப திவுகளே ஆவணத்தொடர்ச்சிகளாக மீண்டும் வரலாற்றில் இடம் பெறுகின்றன. வெறுமனே, தமது நாட்டு நடப்புக்களையும் உலக விவகாரங்களையும் எடுத்துச்செல்வதோடு, தேசியத் தினசரியின் கடமை முற்றுப்பெறுவதில்லை என்பது தெளிவு. அதற்கும் அப்பால், அவை தேசிய இலக்கியத்துக்கான தமது பங்களிப்பு குறித்த தெளிவான பார்வையையும் கொண்டிருத்தல் வேண்டும். அத்தகைய புரிதல் நமது நாட்டில் மிக நீண்ட காலமாக இருந்தது என்பதன் சுட்டியாக, ஈழத்துப் புனைகதைத்துறை இன்று எட்டியுள்ள உச்சத்தைக் குறிப்பிடலாம்.

அந்த வகையில் இலங்கையின் முதலாவது தமிழ்ப் பத்திரிகையாக 1841இலே உதயதாரகை பத்திரிகையும் 1889 இல் இந்துசாதனம் பத்திரி கையும்தொடக்கப்பட்டு,சமயப்பணிக்குஒப்பஇலக்கியப்பணியும்செய்து வந்தன. பிற்பாடு, 1930 ஆம் ஆண்டில் ஈழகேசரியும், வீரகேசரியும் கவனிப்புக்குரிய பத்திரிகைகளாக வெளிவரத் தொடங்கின. 1932இல் தினகரன் பத்திரிகையும் நாற்பதுகளில் மலையகத்திலிருந்து சுதந்திரப் போர் பத்திரிகையும் 1947இல் சுதந்திரன் பத்திரிகையும் வெளிவந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1966இல் தினபதியும் 1997இல் தினக்குரல் பத்திரிகையும் தோற்றம் பெற்றன.

யாழ்ப்பாணத்தை மையமாகக்கொண்டு 1930 இல் ஆரம்பிக்கப்பட்ட ஈழகேசரி பத்திரிகையானது, ஈழத்து இலக்கியத்தின் ஒரு காலகட்டத்து இலக்கியச் சக்தியாக தன்னைத் தாபித்ததனால், ஈழத்துப் பத்திரிகை வரலாறு, ஈழத்து இலக்கியம் எனும் சொற்றொடர்களுடன் நெருங்கிய பிணைப்பைக் கொண்டுள்ளது. அத்துடன், பிற்பாடு தோற்றம்பெற்ற பல காத்திரமான இலக்கியப் பத்திரிகைகளின் தாய்வீடாகவும் நிலைபெற்றுள்ளது. அது, தனது வாரிசாக 1959இல் ஈழநாடு பத்திரிகையையும் பெற்றுப் பூரித்தது. முப்பத்தாறு நீண்ட ஆண்டுகள் வெளிவந்த ஈழநாடு பத்திரிகையில், 799 சிறுகதைகள் வெளிவந்துள்ளன.

அதே காலப்பகுதியில் கொழும்பிலிருந்து வெளியாகிக்கொண்டிருந்த வீரகேசரியின் இலக்கியப் பணிகளும் ஈழத்து இலக்கியத்திற்கு வளம் சேர்ப்பனவாய் அமைந்தன. மலையகத்தில் சிறுகதை குறித்த அருட்டுணர்வு நீறுபூத்த நெருப்பாக இருந்த நிலையை மேம்படுத்தி, அதனை எழுத்தாளர் மன்றம், சிறுகதைப் போட்டிகள் என்ற அடுத்த செயற்பாடுகளுக்கு இட்டுச் சென்றதில், வீரகேசரியின் பங்கு அளப்பரியது. அதன் தோட்ட மஞ்சரி எவ்வாறு ஒரு பயிற்சிக் களமாகத் தொழிற்பட்டது என்பதையும், அதனைத் தொடர்ந்து 1960களில் மலையகத்தில் எழுத்து வேட்கை புதுவேகத்துடன் பீறிட்டுக் கிளம்பியதையும் மூத்த எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப், மலையகச் சிறுகதை வரலாறு எனும் நூலில் பதிவு செய்துள்ளார்.

தினகரன் பத்திரிகை, லேக்ஹவுஸ் நிறுவனத்தின் தமிழ்ப் பத்திரிகையாக வெளிவரத் தொடங்கியது. தினகரனில் 1957இல் உதவி ஆசிரியராக இணைந்துகொண்ட பேராசிரியர் கைலாசபதியின் காலம், தேசிய இலக்கிய எழுச்சி தொடங்கிய காலமெனப் பதிவாகின்றது. இலங்கை எழுத்தாளர்களில் படைப்பாளுமை மிக்கவர்களை இனங்கண்டு அவர்களை எழுதுமாறு தூண்டியதில் கைலாசபதிக்கு முக்கிய இடமுண்டு என, லெனின் மதிவானம் ஓரிடத்தில் பதிவுசெய்கின்றார். 1947இல் தொடங்கப்பெற்ற சுதந்திரன், பல எழுத்தாளர்களை வளர்த்தெடுத்த இலக்கியப் பண்ணையென எஸ். பொ. குறிப்பிடுகின்றார். தினபதி பத்திரிகை ஆசிரியராகப் பணியாற்றிய எஸ்.டி.சிவநாயகம் சிறுகதைகளைப் பிரசுரிப்பதன் முன்பு எவ்வாறெல்லாம் அவற்றைச் செதுக்குவித்தார், எழுத்தாளர்களையும் பயிற்றுவித்தார் என, இன்றைய முன்னணிப் படைப்பாளிகள் நிறையவே சொல்வதுண்டு.

**சிறுகதையின் வாழ்வுக்குப் பத்திரிகைகள் வழங்கும் பங்களிப்பை நாம் பல கோணங்களில் நோக்கலாம். வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவித்தல் அவற்றில் முதன்மையானதாகும். அடிப்படையில் வாசிப்பின் மீதான ஈடுபாடே, நாளடைவில் புனைவிற்கான உந்துதலைத் தோற்றுவிக்கின்றது**

ஈழத்துச் சிறுகதை மூலவர்கள் என அடையாளப் படுத்தப்படும் மூவருடன், அவர்களுக்கு முன்னும் பின்னுமாக மேலும் பலர், அன்று பிறந்த குழந்தையாக இருந்த ஈழத்துச் சிறுகதைக்குப் பாலூட்டி வளர்த்து, வடிவச்செழுமை தந்திருந்தனர். இந்நிலையில், இப்பத்திரிகைகள் கண்டெடுத்த முத்துக்களாக மிக இளம்வயதினரான எழுத்தாளர் பலர், சிறுகதைத் துறைக்குள் உத்வேகத்துடன் நுழைந்தனர். பத்திரிகைகளின் வருகைக்கும், சிறுகதைகளின் பெருக்கத்திற்கும் நேரடித்தொடர்பு உண்டாயிற்று என்பது மிகைப்படுத்தப்பட்ட கூற்றன்று.

எழுத்தாளன் என்பவன், சமூகத்தின் மூலை முடுக்குகளில் நுழைந்தும் தேடியும் பார்த்தும், பல்வேறு உணர்வுநிலைகளுக்கு ஆட்பட்டும், ஒரு படைப்பைப் பிரசவிக்கின்றான். அக்குழந்தையை இடுவதற்கான தொட்டிலாக அவன் உடனடியாக நாடுவது, அச்சு ஊடகம். அவற்றிலும் குறிப்பாக, பத்திரிகைகள்தான் படைப்பின் செவிலித்தாய் எனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியமான வகிபாகத்திற்குரியன. இந்த அடிப்படையில், புனைகதையின் ஒரு வீரியமிக்க வடிவமான சிறுகதையின் வளர்ச்சியில் அவற்றின் பங்கு மிகப் பெரியது என்ற உண்மை பெறப்படுகின்றது. மூத்த எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப், தமிழ்ச் சிறுகதை வளர்ச்சிக்கும் பத்திரிகைகளுக்கும் எப்போதுமே ஒரு நெருங்கிய தொடர்பு உண்டு என்பார். எனவேதான் திறமையிருந்தும் வாய்ப்பில்லாத எழுத்தாளனுக்கும், தரமான சிறுகதைகளை அவாவும் வாசகனுக்கும் இடையேயான இணைப்புப்பாலமாக விளங்குகின்ற சிறப்பும் பத்திரிகைகளையே சாருகின்றது.

'சிறுகதை, ஒரு சமூகத்தை அடையாளம் காட்டுவது' என்றொரு கூற்றுண்டு. சிறுகதைகள் பெருகுவதற்கான காரணங்கள் பலவாயிருப்பினும், பத்திரிகைகளின் வரவிலான அதிகரிப்பு என்பது, அவற்றுள் புறந்தள்ள முடியாததொரு காரணியாகும். பிரசுரத்திற்காக இலகுவில் நாடக்கூடிய களங்களாகக் கைகொடுத்த பத்திரிகைகளில், சிறுகதையின் சுருங்கிய வடிவம் சுலபமாக இசைந்துகொண்டதும் இன்னுமொரு வலுவான காரணம்.

சிறுகதையின் வாழ்வுக்குப் பத்திரிகைகள் வழங்கும் பங்களிப்பை நாம் பல கோணங்களில் நோக்கலாம். வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவித்தல் அவற்றில் முதன்மையானதாகும். அடிப்படையில் வாசிப்பின் மீதான ஈடுபாடே, நாளடைவில் புனைவிற்கான உந்துதலைத் தோற்றுவிக்கின்றது. எனவே, சிறுகதைகளைப் பிரசுரித்தலின் மூலம் இரு நேரடிப்பயன்கள் எய்தப்பெறுகின்றன. பத்திரிகைவழியாக வாசிப்புத் திறனை வளர்த்துக்கொள்ளும் வாய்ப்பினைப் பெற்றுக்கொள்கின்ற ஒரு படிப்பாளி, பின்னாளில் ஒரு படைப்பாளியாக அவதாரம் எடுக்கின்றான்.

களம் அமைத்துத் தரல் என்பதை அச்சு ஊடகங்களின் இன்னுமொரு காத்திரமான செயற்பாடு எனக் குறிப்பிடலாம். பிரசுரக்களம் தேடி எழுத்துப்பிரதியும் கையுமாக எழுத்தாளர் அலைந்து திரிந்த சந்தர்ப்பங்கள் பெருமளவில் குறைய, இவை வலுவான காரணங்களாகின்றன.

பத்திரிகைகள் சிறுகதைப் போட்டிகளை நடத்துகையில், அவை எழுத்தாளர்களுக்கு ஓர் பயிலரங்காகவும் மாறிவிடுகின்றன. அங்கு அறிவிக்கப்படும் பரிசுத்தொகைகள், சிறுகதை எழுதுதலுக்கான உற்சாகத்தை ஏற்படுத்துகின்றன. வீரகேசரி, சுதந்திரன், தினக்குரல் என்பன நடத்திய சிறுகதைப் போட்டிகள், துரைவி–தினகரன் சிறுகதைப் போட்டி என்பன அதிசயிக்கத்தக்க வரவேற்பையும், ஆரோக்கியமான பெறுபேறுகளையும் பெற்றுத்தந்தன.

மல்லிகைச் சிறுகதைகள் – தொகுப்பு நூலின் முன்னுரையில் செங்கை ஆழியான், கலைத்துவமும் முழுமையும், மனதில் ஓர் உணர்ச்சியை எஞ்சவிடுதல், ஒடுக்கப்பட்டோரின் விடிவுக்கான வழி, உருவம் உத்தி உள்ளிட்ட கட்டமைப்பு, மண்வாசனையும் யதார்த்தமும், சிறந்த படைப்பாளிகளுடையவை எனச் சிலவற்றை, சிறுகதைத் தேர்வுக்கான தனது அளவுகோல்கள் என்கின்றார். எனவே, இத் தேர்வுகளின்போதும் தொகுப்பின்போதும் இயல்பாகவே தரநிர்ணயமும் நடந்தேறுகின்றன. அவற்றுள் தக்க எழுத்துகள் தழைக்கின்றன.

இலக்கியத்துக்கான மற்றுமொரு சிறந்த பங்களிப்பு, தொகுப்பு முயற்சியாகும். சிற்பி சரவணபவனது முயற்சியின் பயனாக 1958இல் ஈழத்துச் சிறுகதைகள் ஈழத்தின் முதல் சிறுகதைத்தொகுப்பாக வெளிவந்தது. பின்னர், தகவம், யாழ். இலக்கிய வட்டம், துரைவி முதலிய இலக்கிய அமைப்புகளின் முயற்சி, தனிமனிதர்களின் ஆர்வம், தனிமனிதரும் பத்திரிகை நிறுவனங்களும் இணைந்து கூட்டாக முன்னெடுத்த செயற்பாடுகள் என, பல தளங்களிலும் களங்களிலுமிருந்து தொகுப்புக்கள் உதித்தன. இவை, ஈழத்துச் சிறுகதை வளர்ச்சியை அளவிடுவதற்கு தக்க அளவுகோலாக உள்ளன. எனவே, பத்திரிகைகளும் தமது நிறுவனங்கள் மூலம் போட்டிகள் நடத்துவதும், பரிசு வழங்குவதும், பரிசுபெற்ற கதைகளைத் தொகுப்பதும் என்ற காத்திரமான பங்களிப்புக்களை வழங்கி, ஈழத்துச் சிறுகதையை உச்சங்களுக்கு இட்டுச்செல்லவும் எமது இருப்பை சிறப்பாக ஆவணப்படுத்தவும் முடியும். அத்துடன் புதிய படைப்பாளிகளை இலக்கிய உலகிற்குப் பெற்றுத்தரவும் முடியும்.

சிறுகதை விமர்சனங்களுக்காகவும் பத்திரிகை தனது பக்கங்களை ஒதுக்கிவைக்க வேண்டும். சிறுகதை இரசனை என்பது, அடிப்படையில் கிரமமானதோர் வாசிப்பின் மூலமும் திறனாய்வு மரபின் மூலமும் வளர்த்தெடுக்கப்படுவது. அதற்குத் தேவையான பயிற்சியையும் விருப்பையும் விமர்சனங்கள் பெற்



20 Anniversary

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிரசுரத்திற்கான சிறுகதைகளை அடையாளம் காண்பதில் பத்திரிகை ஆசிரியர்களது சிந்தனைச்செழுமை, தூரநோக்கு, இற்றைப்படுத்தப்பட்ட இலக்கிய அறிவு, தொடர்ச்சியான தேடல் என்பன பெரும் செல்வாக்கைச் செலுத்துகின்றன**

றுத்தருகின்றன.

படைப்பாற்றலை அடையாளம் காணல் எனும் நுண்ணுணர்வு கொண்ட பத்திரிகை ஆசிரியர்கள், இலக்கிய வளர்ச்சிக்கான ஓசையற்ற தூண்டிகளாகின்றனர். தமிழ்நாட்டில் கோவிந்தன் என்ற அச்சுக்கோர்ப்பாளர் ஒருவர், பிற்பாடு பாலும் பாவையும் நாவலைத் தந்த விந்தன் எனும் புகழ்பெற்ற எழுத்தாளரானதும் இத்தகையதோர் தூண்டலின் பயனே என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

பிரசுரத்திற்கான சிறுகதைகளை அடையாளம் காண்பதில் பத்திரிகை ஆசிரியர்களது சிந்தனைச் செழுமை, தூரநோக்கு, இற்றைப்படுத்தப்பட்ட இலக்கிய அறிவு, தொடர்ச்சியான தேடல் என்பன பெரும் செல்வாக்கைச் செலுத்துகின்றன. அதற்கும் மேலாக, இலக்கிய நேர்மை, துணிவு என்பனவும் பங்களிக்கின்றன. பத்திரிகை ஆசிரியர் என்பவர், நொதுமல் நிலையில் நின்று நிர்ப்பந்தங்களுக்கு அடிபணியாமல் பணியாற்றுதல் மிகவும் சவாலானதே. ஆயினும் ஈழத்துப் பத்திரிகையுலகம், அவ்வாறு பணியாற்றிய ஆற்றல் மிக்க ஆசிரியர்களின் கரங்களால் செதுக்கப்பட்ட பெருமைக்குரியது. அம்மரபு காத்து வளர்க்கப்படல் வேண்டும்.

பேராசிரியர் கா. சிவத்தம்பி, பத்திரிகைச் சிறுகதைகளின் தரவீழ்ச்சிக்கு ஒரு காரணமாக சனரஞ்சகச் சஞ்சிகைகளின் நிறுவன அமைப்பு முறையைச் சுட்டுகின்றார். வெகுசனப் பண்பாட்டுடன் ஒத்ததான கண்ணோட்டத்தை வளர்க்க வேண்டிய வர்த்தகத் தேவையையும் அவர் குறிப்பிடத் தவறவில்லை. இன்றைய பத்திரிகை ஆசிரியர்களோ, அத்தேவையை நிறைவு செய்வதுடன், சனரஞ்சக ஊடகங்களின் அசுரப்பாய்ச்சலின் நடுவே காத்திரமான இலக்கியத்தை மக்களிடையே எடுத்துச்செல்வது, குறுகிய நுகர்ச்சிவட்டங்களின் போதையிலிருந்தும் மின்திரையின் மேய்ச்சல் பழக்கத்திலிருந்தும் அவர்களை மீட்பது முதலிய மேலதிகப் பளுக்களைச் சுமக்கின்றனர். அவர்கள் தமது செயற்பாடுகளால், ஈழத்துச் சிறுகதை மூலவருள் ஒருவரான சம்பந்தனின் சமுதாயத்தின் உயிர்நிலையைக் காத்து வளர்ப்பதே இலக்கியம் என்ற கூற்றை மெய்ப்பிக்கின்றனர்.

சிறுகதைக்கான பக்கங்களை ஒதுக்குதல், பத்திரிகைகள் எதிர்நோக்கும் சவால்களில் முக்கியமானது. தனிப்பக்கம் ஒதுக்கித்தர வேண்டியிருத்தல், பக்க நிரப்பிகளுக்கன்றி தரமான ஆக்கங்களுக்கு இடமளித்தல், அதேசமயம் புதியவர்களின் பரிசோதனை முயற்சிகளையும் அரவணைத்து ஊக்குவித்தல் என்பவை அவற்றில் சில. பத்திரிகைகள், பலதரங்களிலும் வெவ்வேறு மட்டங்களிலும் உள்ள மக்களைச் சென்றடைவன என்ற வகையில், வாசகர்களது சராசரி இரசனை குறித்த விழிப்புடனும் எச்சரிக்கையுடனும் கத்திமுனைச் சாகசங்களை ஆசிரிய பீடத்தில் உள்ளோர் நிகழ்த்திக் காட்ட வேண்டியுள்ளது.

இந்தப் பின்னணியில் தினக்குரலின் பங்களிப்பு பற்றிய சிந்தனை எழுச்சி பெறுகின்றது. ஏற்கனவே நோக்கப்பட்ட அம்சங்களில் கணிசமானவை கருத்திற் கொள்ளப்பட்டுள்ளமைக்கு, அதன் இலக்கியப் பக்கங்கள் சான்று பகர்கின்றன. மஞ்சரி, இலக்கியத்துக்கான பிரத்தியேகமான பகுதி. இலக்கிய ஆளுமைகளது செவ்வி, சிறுகதை, கவிதை, கட்டுரை என்பனவும் பனுவல் என்ற மகுடத்தின் கீழுள்ள திறனாய்வு, ஆய்வு முதலியனவும் அதனை அணிசெய்கின்றன. அங்கு தொடர்கதைகளுக்கும் இடமுண்டு. ஆக்கங்கள், மிகுந்த பொறுப்புணர்வுடன் தெரிவுசெய்யப்படுகின்றன என்பதற்கு அவற்றின் தரமே உரைகல். அதனால்தான், தகவம் அமைப்பின் மதிப்பீட்டிலும் அவை முதற்பரிசு உள்ளிட்ட பரிசுகளைப் பல வருடங்கள் பெற்றுக் கொள்ள முடிந்துள்ளது.



20 Anniversary

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செவ்விதாக்கம் குறித்து தினக்குரலின் ஆசிரிய பீடத்தினரின் கரிசனை, மஞ்சரியின் நேர்த்தியில் பளிச்சிடுகின்றது. முன்பே பேசப்பட்டதுபோல, இலக்கியத்தின் தரமேம்பாடு காக்கப்படல் என்ற கொள்கைப் பற்று, அங்கு அடிநாதமாக ஒலிக்கின்றது.

தினக்குரல் சிறுகதைப்போட்டிகளையும் நடத்தியுள்ளது. கொம்மாந்துறை கம்பர்மலை பாடசாலையின் பழைய மாணவர் சங்க இலண்டன் கிளையுடன் கைகோர்த்து அது நடத்திய போட்டிகள், ஈழத்துச் சிறுகதை உலகிற்கு மிகச்சிறந்த எழுத்தாளர்களைப் பெற்றுத்தந்துள்ளன. உலகளாவிய ரீதியில் நான்கு வருடங்கள் நடத்தப்பட்ட போட்டிகளில், பெரும்பாலான சந்தர்ப்பங்களில் ஈழத்து எழுத்தாளர்களே முதலிடம் பெற்றனர். அவர்கள் தமது படைப்பாளுமையை வளர்த்துக்கொண்டு இன்று முன்னணி எழுத்தாளர்களாக இருப்பது மனநிறைவைத் தருகின்ற விடயமாகும். இரண்டு வருடங்களின் முன்பு, வடலி இலக்கிய வட்டத்துடன் இணைந்து தினக்குரல் நடத்திய போட்டியும் குறிப்பிடத்தக்கது. இந்த எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பரிசுக்கதைகளின் தொகுப்புக்கள் வெளிவந்தமை ஒரு சிறப்பம்சமாகும். அவை, எமது எழுத்தாளருக்கு ஊக்கமூட்டும் அதே சமயம் ஈழத்துச் சிறுகதை உலகின் வரலாற்றுச் சாதனைகளாகவும் நிலைபெறவுள்ளன.

வாசகரது தேடலுக்கு விருந்தாக இலக்கியச்செய்திகளை வாரநாட்களில் வழங்கிவருவது, தினக்குரலின் பாராட்டத்தக்கதொரு பண்பாக உள்ளது. நமது நாட்டின், அதுவும் குறிப்பாக தலைநகரின் முக்கியமான இலக்கிய நிகழ்வுகளின் சுருக்கக் குறிப்பாகவும், வரலாற்று ஆவணமாகவும் அது அமைந்து விடுகின்றது. ஒருசேர நோக்கும்போது, தினக்குரல் தனது இலக்கிய நோக்குப் பற்றிய தெளிவோடும், நிதானத்தோடும்தான் பயணிக்கின்றது என்ற மகிழ்வும் நிம்மதியும் நம்மிடம் ஒட்டிக்கொள்கின்றது.

**படைப்பாளிகளே, பத்திரிகை ஆசிரியர்களாக, பத்திரிகை வெளியீட்டாளர்களாக, பத்திரிகைகளுடன் நெருங்கிய தொடர்புடையவர்களாக இருக்கும் நிலைமைகள் எழுத்தாளருக்கு மிகவும் வாய்ப்பானவை. எழுத்தாளனின் நாடித்துடிப்பை நன்கறிந்து செயற்படுவதற்கான அபூர்வமான - அற்புதமான சந்தர்ப்பங்களை அவை உருவாக்கித்தருகின்றன. தினக்குரல் நிறுவனமும் அத்தகைய சிறப்புக்கு உரியது**

### முடிவுரை

ஊடகம் ஒன்றின் செல்நெறியைக் கட்டமைப்பதும், சமூகத்துடனான அதன் உறவைத் தீர்மானிப்பதும், குறித்த ஊடகம் வரித்துக்கொண்டுள்ள அடிப்படை நோக்கமேயாகும். அதை அடியொற்றியதாக வேறு சில உபநோக்கங்கள்கூட அதற்கு இருக்கலாம். மறுபுறம், அவ்வூடகத்தின் பயன்பாடு பற்றிய சமூகத்தின் எதிர்பார்ப்புக்கள் பிறிதொரு வகையினவாகவும் இருக்கலாம்.

சிறுகதை பற்றிய உரையாடல்களின்போது தமிழ் இலக்கியச் சூழலில் சிறுகதைக்கெனவே சஞ்சிகைகள் வெளிவந்ததும் இன்றும் வெளிவந்துகொண்டிருப்பதும் நினைத்துப் பார்க்கத்தக்கது. அவை, ஈழத்துச் சிறுகதை வரலாற்றின் பிரிக்கமுடியாத - பிரிக்கக்கூடாத அம்சமாகின்றன. அவற்றின் வீரியமிக்க வினைத்திறனான செயற்பாடுகள், தனித்து ஆராயப்பட வேண்டியன. 1966 முதல் 2000 வரையிலான காலப்பகுதியில், ஏறத்தாழ 700 சிறுகதைகளைப் பிரசுரித்த பெருமை படைத்த மல்லிகை சஞ்சிகையை அவற்றுக்கு ஓர் உதாரணமாகக் கூறலாம்.

இன்று இணையத்தில் கொட்டிக் கிடக்கின்ற எழுத்துக்களும், மூளைக்கிளர்ச்சி தரும் ஊடகங்களின் அசுரவளர்ச்சியும், இலத்திரனியல் தொழில்




**வர்தன செலரி பூஸ்டர் கணக்கு உங்களுக்கு அதிகபட்சமாக இரண்டு மாத சம்பளத்தின் பெறுமதியில் 90% வரை மேலதிகப்பற்றாக பெறும் அரிய வாய்ப்பை வழங்குகின்றது.**

- 'வர்தன நெனச' கல்விக் கடன்களுக்கு 0.5% வட்டிச் சலுகை.
- 'வர்தன சந்தெல்ல' வீட்டுக் கடன்களுக்கு 0.25% வட்டிச் சலுகை.
- வர்தன ஜுனியர் சேமிப்புக் கணக்கின் ஆரம்ப வைப்பிற்கு அன்பளிப்பாக ரூ.1000. விருப்பமான பிள்ளைக்கு வழங்க முடியும்.
- வர்தன ஜுனியர் சேமிப்புக் கணக்கிற்கு பணம் அனுப்புவதற்கான நிரந்தரக் கட்டளைகள் இலவசம்.
- கிறடிட் கார்ட்டிற்கு ஆரம்பக் கட்டணம் இல்லை.
- இலவச டெபிட் கார்ட்.
- இணைய வங்கி வசதி.
- வர்தன வேர்ச்சுவல் வொலற்.

**அண்மையிலுள்ள DFCC வங்கிக் கிளைக்கு வாருங்கள். வர்தன செலரி பூஸ்டர் கணக்கொன்றை இன்றே ஆரம்பியுங்கள்.**

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

**அழைப்பு மையம்: 011 2350000 வெப்: www.dfcc.lk**

DFCC வங்கி பிச் ரேட்டிங் லங்கா லிமிட்டெட்டின் AA- (lka) தரப்படுத்தலைப் பெற்றுள்ளது.
DFCC வங்கி இலங்கை மத்திய வங்கியினால் மேற்பார்வை செய்யப்படும் உரிமம் பெற்ற ஒரு வர்த்தக வங்கியாகும்.

DFCC வங்கி
உங்கள் வளர்ச்சிக்கு

நுட்பம் நெய்துதருகின்ற பரந்த படைப்புவெளியும் அதன் வாசகர்தொகையும் மலைப்பை ஊட்டுவன. மின்னணுப் பிரதியில் பார்ப்பது வாசிப்பாகின்றதும், மின்திரையில் வாசித்த இன்றைய பத்திரிகைகள் நாளை குப்பைக்குள் தள்ளப்படுவதும் இன்றைய நடப்புக்கள். இவை அனைத்துக்கும் நடுவேதான் எழுதுகோல் ஏந்தும் படைப்பாளி தளராமல் எழுதுகின்றான், புதிய எழுத்து வடிவங்களைத் தோற்றுவிக்கின்றான். அவை, அச்சு எழுத்துக்களாக, கல்மேல் எழுத்துக்களாக பத்திரிகைகளில் வாழ்கின்றன. அவனது படைப்புக்கள் வாசகரின் கரங்களில் தவழ்கையில் அவன் தொட்டுணரப்படுகின்றான். தான் வார்த்த கதாபாத்திரங்களின் மொழிதல்களிலே அவன் வாசகருடன் பேசிக்கொண்டு இருக்கின்றான். மனிதர்களைத் துண்டாடுகின்ற இலத்திரனியல் ஊடகங்களின் மத்தியில், சமூகப் பிரக்ஞையுடன் எழுதுகோலை எடுக்கும் அப்படைப்பாளி, சிரஞ்சீவியாக நிலைபெறுகின்றான்.




படைப்பாளிகளே, பத்திரிகை ஆசிரியர்களாக, பத்திரிகை வெளியீட்டாளர்களாக, பத்திரிகைகளுடன் நெருங்கிய தொடர்புடையவர்களாக இருக்கும் நிலைமைகள் எழுத்தாளருக்கு மிகவும் வாய்ப்பானவை. எழுத்தாளனின் நாடித் துடிப்பை நன்கறிந்து செயற்படுவதற்கான அபூர்வமான – அற்புதமான சந்தர்ப்பங்களை அவை உருவாக்கித்தருகின்றன. தினக்குரல் நிறுவனமும் அத்தகைய சிறப்புக்கு உரியது.

தினக்குரல், இன்று இருபது வயதில் காலடி வைக்கும் இளம்பெண். அவளின் நீடித்த ஆயுளுக்கும் ஈழத்துச் சிறுகதையின் ஆயுளுக்கும்கூட தொப்புள்கொடி உறவை ஒத்ததான மிக நெருங்கிய பிணைப்புள்ளது எனக்கூறின் அது தவறாகாது. ஏனெனில், ஈழத்துச் சிறுகதையின் ஆரம்பகாலத்துடன் இணைத்துப் பேசப்படுகின்ற – எமக்கான பாதையைச் செப்பனிட்டுத் தந்த, பெருமைக்குரிய எழுத்தாளர்களின் வாரிசுகள், எழுத்தாளர்கள் எனப் பலர் அங்கு அமர்ந்திருக்கின்றனர். அவர்களின் சிந்தனைக்குள் உள்வார்ந்த ஊற்றுக்கண்களாக இந்த மண்ணின் எழுத்துக்கள் அமைதியாக ஆற்றலுடன் ஓடிக்கொண்டேயிருக்கும்.

**உசாத்துணை நூல்கள்:**

தமிழில் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும் – பேரா. கா.சிவத்தம்பி

மலையகச் சிறுகதை வரலாறு – தெளிவத்தை ஜோசப்

ஈழத்து முன்னோடிச் சிறுகதைகள் – பூபாலசிங்கம் பதிப்பக வெளியீடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ச்சி நிலையை அடைய
சில வருடங்கள் காத்திருக்க
வேண்டும் என்கிறார்
NDB முகாமைத்துவப்
பணிப்பாளர்
இராஜேந்திரா தியாகராஜா



# பல்வேறு சவால்களை எதிர்நோக்கிய நிலையில் இலங்கையின் தற்போதைய பொருளாதாரம்

மீரா கணேசமூர்த்தி

"இலங்கையின் தற்போதைய பொருளாதாரமானது பல்வேறு சவால்களை எதிர்நோக்கியுள்ள போதிலும் நாட்டின் அபிவிருத்தியும் முன்னேற்றமும் சாத்தியமாவது நிச்சயம். ஆனால் புதிய அரசாங்கம் அமைக்கப்பட்டு சுமார் 1 1/2 வருடங்துதிவிட முடியாது. சிறிது காலம் காத்திருக்க வேண்டும்'' என்று தேசிய அபிவிருத்தி வங்கியின் (NDB) முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான இராஜேந்திரா தியாகராஜா தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதார மற்றும் அபிவிருத்தி நிலை தொடர்பாக தினக்குரலின் 20ஆவது ஆண்டு சிறப்பு மலருக்கு வழங்கிய செவ்வி யின்போதே அவர் இவ்வாறு கூறினார். அவர் இந்த செவ்வியின் போது தெரிவித்த கருத்துகள் வருமாறு;

"புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்து சிறிது காலமே கடந்துள்ள நிலையில், நாட்டின் பொருளாதாரம் தொடர்பாக அதிக எதிர்பார்ப்பு நிலவுகின்ற போதிலும் பல்வேறு சவால்களை எதிர்நோக்க வேண்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுள்ளது. இந்த சவால்களைச் சமாளித்து நாடானது குறிப்பிட்ட அபிவிருத்தியின் இலக்கு நோக்கி பயணிப்பதற்கு சரியான முறையிலான அத்திவாரங் கள் இடப்படுவது அவசியம்'' என்றார்.

அவர் இங்கு மேலும் தெரிவிக்கையில்; 2009 ஆம் ஆண்டு வடக்கு, கிழக்கு யுத்தம் முடிவுற்றதை யடுத்து அபிவிருத்தியில் புதியதோர் எழுச்சியை நாம் அவதானிக்கக்கூடியதாக இருந்தது. சமூக அபிவி ருத்தி ரீதியில் நோக்கும் போது வடக்குக்கும் தெற் குக்கும் இடையே தொடர்புகளைக் கட்டியெழுப்பும் முகமாக கோடிக்கணக்கான ரூபா செலவில் வீதிகள் செப்பனிடப்பட்டதுடன், புனரமைப்புப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு போக்குவரத்துக்கான வழி ஏற் படுத்தப்பட்டது. அதாவது இந்த அபிவிருத்திக்கான இலக்கில் அதிகளவு பணம் செலவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இதனை வர்த்தக ரீதியில் நோக் கும் போது முன்னர் எதிர்நோக்கிய சிரம நிலைகள் இல்லை. அவசர சந்தைகள் திறக்கப்பட்டுள்ளன. வெளிநாடுகளிலிருந்து பண அனுப்புதல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. வர்த்தக அபிவிருத்தி நட வடிக்கைகள் வெற்றி இலக்கினை அடைவதற்கு சிறந்த தலைமைத்துவம் அவசியம். அத்துடன் திறமை மிகுந்த தொழில் முயற்சியாளர்கள் அடங் கிய சிறந்த குழுவினர் வர்த்தக செயல்களை முன் னெடுக்க வேண்டும். விசேடமாக இந்த நோக்கினை சரியான முறையில் அடைவதற்கு ஆற்றலும் திற மையும் வாய்ந்த ஊழியர்கள் நமக்குத் தேவை.

கடந்த 1 1/2 வருட காலமாக எமது ஏற்றுமதிச் செயற்பாடுகளில் சிறிது மந்தநிலையை நாம் அவ தானிக்கக்கூடியதாக உள்ளது. விசேடமாக எமக்கு அதிகளவு ஏற்றுமதி வருமானத்தைப் பெற்றுத் தரும் தைத்த ஆடைகள் துறை மற்றும் விவசாயத் துறை ஆகியவற்றில் தற்போது சிறிது சரிவு நிலையை நாம் எதிர்நோக்கியுள்ளோம். ஆயினும் GSP+ வரிச் சலுகையை நாம் மீளப்பெறவுள்ள நிலையில், முன்னோக்கி நகர முடியும் எனக் கூறலாம். ஐரோப் பிய நாடுகளில் தடை அகற்றப்படும் போது நிச்சயம் எமது ஏற்றுமதிகளுக்கு சிறந்த விளைவினை நாம் எதிர்பார்க்கலாம். ஐரோப்பிய ஒன்றியமானது GSP+ வரிச் சலுகையை மீள வழங்குவதற்கு சம்மதம் தெரிவித்துள்ளமை இலங்கைக்கு சாதகமான நிலை மையையே ஏற்படுத்தும் என்றார்.

இராஜேந்திரா தியாகராஜா மேலும் தெரிவிக்கை யில்; ''இந்தியாவுடனும் பாகிஸ்தானுடனும் சுதந் திர வர்த்தக உடன்படிக்கைகள் ஏற்கனவே கைச் சாத்திடப்பட்டுள்ள நிலையில், இரு தரப்பு நாடுகளும் பரஸ்பர பொருளாதார அனுகூலங்களை இவற்றின் மூலம் பெற்று வருகின்றன. தற்போது சீனாவுடனும் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை மேற்கொள்ளப்பட வுள்ளது. எனவே இந்தியா, பாகிஸ்தான், பங்களா தேஷ், சீனா போன்ற நாடுகளின் மூலம் இலங்கை

**இலங்கையானது தெற்காசியாவில் தேயிலை, இரத்தினக்கல் மற்றும் கறுவா ஆகியவற்றுக்கான பாரிய சந்தைகளை கொண்டுள்ள நிலையில் சீனாவில் இவற்றுக்குப் பாரிய கேள்வி நிலவும் இவ்வேளையில் இலங்கை இந்த வாய்ப்பினை பயன்படுத்திக்கொள்ள முடியும்**

மிகச் சிறந்த வாய்ப்புக்களை பெற்றுக்கொள்ள முடி யும். இலங்கையில் சிறிய சந்தைகள் காணப்படு கின்ற போதிலும் பாரிய வாய்ப்புகள் காணப்படுவதால் இந்நாடுகள் பரஸ்பர பயன்களை பெற்றுக் கொள்ள முடியும். இலங்கையின் பூகோள அமைவிடமானது பல்வேறு பொருளாதார அனுகூலங்களை தரக்கூடிய வகையில் அமைந்துள்ளமையும் சாதகமானதொன் றாகும்'' என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் மேலும் தெரிவிக்கையில்; 30 ஆண்டு கால உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு வந்ததையடுத்து 2009ஆம் ஆண்டு தொடக்கம் அபிவிருத்தி நடவடிக்கைகளில் நாம் மீள் எழுச்சியை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. வடக்கு, கிழக்கு மற்றும் தெற்கு வரையில் இணைக்கப்பட்டதையடுத்து பரஸ்பர உள்நாட்டு வர்த்தகச் செயற்பாடுகளில் முன்னேற்றத்தை எம்மால் காணக்கூடியதாக உள்ளது.

இலங்கையானது தெற்காசியாவில் தேயிலை, இரத்தினக்கல் மற்றும் கறுவா ஆகியவற்றுக்கான பாரிய சந்தைகளைக் கொண்டுள்ள நிலையில், சீனாவில் இவற்றுக்குப் பாரிய கேள்வி நிலவும் இவ்வேளையில் இலங்கை இந்த வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ள முடியும். இவற்றை அதிகளவில் ஏற்றுமதி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இந்நிலையில் இலங்கையானது மீள் ஏற்றுமதிச் செயற்பாடுகளில் அதிகளவில் ஈடுபட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். அதாவது மூலப் பொருட்களை இறக்குமதி செய்து மெருகேற்றி உற்பத்தி செய்வதன் மூலம் மீள் ஏற்றுமதித் துறையில் புதிய மைல்கல்லை அடைய முடியும் என்றார்.

அடுத்து வங்கித் துறையின் முன்னேற்றம் தொடர்பாக தெரிவிக்கையில், 2009ஆம் ஆண்டு யுத்தத்தின் பின்னர் வங்கித் துறையானது குறிப்பிடத்தக்க முன்னேற்ற நிலையை அடைந்துள்ளதாக கூறினார். வடக்கிலும் கிழக்கிலும் யுத்தம் முடிவுற்றதையடுத்து அரசாங்க வங்கிகளும் வர்த்தக வங்கிகளும் இப்பிராந்தியங்களில் பெரும் எண்ணிக்கையான கிளைகளைத் திறந்தன. இப்பிராந்தியங்களைச் சேர்ந்த மக்கள் வங்கிகளில் பணத்தை சேமிப்பதில் ஆர்வம் காண்பித்ததுடன், பல்வேறு வங்கிச் செயற்பாடுகளிலும் தம்மை இணைத்துக் கொண்டனர்.

மேலும் வங்கித் துறையானது தற்போது நவீன மயமாக்கப்பட்டு வருகிறது. வாடிக்கையாளர் சேவைகளில் தொழில்நுட்ப உத்திகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. எமது தேசிய அபிவிருத்தி வங்கியும் (NDB) இதற்கு விதிவிலக்கல்ல. வங்கிச் சேவைகளில் பல தொழில்நுட்ப உற்பத்திகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மொபைல் வங்கிச் சேவை குறிப்பிடக்கூடிய ஒன்று. வங்கிகளில் இன்று மொபைல் சேவையானது பெரும் அபிவிருத்தியடைந்துள்ளது. வெளிநாடுகளுக்கு உடனடியாக பணம் அனுப்புவது, வெளிநாடுகளிலிருந்து உடனடியாக பணத்தைப் பெற்றுக் கொள்வது போன்ற செயற்பாடுகள் முன்னேற்றகரமாக உள்ளன என்றார்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் முக்கியத்துவம் பெற்று விளங்கும் காப்புறுதித்துறை



**ஜனசக்தி காப்புறுதி நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் பிரகாஷ் ஷாப்டர்**

இன்று சமூக ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் காப்புறுதித்துறையானது முக்கியத்துவம் பெற்றதாக விளங்குகிறது. உண்மையில் காப்புறுதிச் சேவையானது மக்கள் பெற்றுக்கொள்ளும் அரிய சேவை என்றே கூறவேண்டும். காப்புறுதிச் சேவையின் முக்கியத்துவம் தொடர்பாக ஜனசக்தி காப்புறுதி நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரான பிரகாஷ் ஷாப்டருடனான செவ்வி வருமாறு:

**கேள்வி: காப்புறுதிச் சேவையின் நோக்கம் என்ன?**

**பதில்:** ஒருவருக்கு பொருள் இழப்புகளோ சொத்து இழப்புகளோ அல்லது குடும்பத்தில் உயிரிழப்புகளோ ஏற்படும் போது அவற்றால் ஏற்படும் நஷ்டங்களும் மனரீதியான பாதிப்புகளும் அளவிட முடியாதவை. இந்நிலையில் ஒருவர் காப்புறுதி செய்திருப்பின், அவருக்கு ஏற்பட்ட நஷ்டத்தை வழங்குவதே இக்காப்புறுதி சேவையின் தாற்பரியமாக உள்ளது.

**கேள்வி: நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) காப்புறுதித்துறை வகிக்கும் பங்கு என்ன என்று கூறுவீர்களா?**

**பதில்:** எமது நாட்டின் GDPயில் காப்புறுதித்துறை 1.5% பங்கினையே வகிக்கிறது. இது மிகவும் குறைவானதாகும். இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் காப்புறுதித்துறையானது 8% பங்கினையும் இந்தியா மற்றும் தென்கிழக்காசிய நாடுகளில் 4% பங்கினையும் வகிக்கிறது.

**கேள்வி: எமது நாட்டில் இவ்வாறு காப்புறுதித்துறையானது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் குறைந்த சதவீத பங்கினை வகிப்பதற்கு காரணம் என்ன?**

**பதில்:** எமது நாடு தீவு என்ற படியினாலோ என்னவோ மக்கள் எல்லோருமே காப்புறுதி செய்ய வேண்டும் என்பதில் தீவிர அக்கறை காண்பிப்பதில்லை. எளிதான வாழ்க்கை முறைக்கு ஆட்பட்டுள்ளனர். அத்துடன், காப்புறுதி பற்றி தெளிவான அறிவு காணப்படாமையும் ஒரு காரணம் ஆகும்.

**கேள்வி: காப்புறுதி ஒருவருக்கு அத்தியாவசியம் என்று கருதுகிறீர்களா?**

**பதில்:** ஆம். காப்புறுதி தேவையான ஒன்று. ஆங்கிலத்தில் Need Want ஆகிய பதங்கள் உள்ளன. காப்புறுதிக்கு NEED என்பதே பொருந்தும். காப்புறுதி இல்லாமல் வாழ்க்கையைக் கொண்டு செல்ல முடியாது. இது நிச்சயம் தேவை.

**கேள்வி: புதிய காப்புறுதி நிறுவனங்கள் உருவாகக் கூடிய வாய்ப்புகள் உள்ளனவா?**

**பதில்:** அது மிகவும் கடினம். புதிதாக காப்புறுதி நிறுவனங்கள் உருவாக்கப்பட்டு அவை சேவையை மேற்கொள்வது மிகவும் கடினம் எனலாம். ஆனால், தற்போதுள்ள காப்புறுதி நிறுவனங்களைக் கொள்வனவு செய்து சேவையைத் தொடர முடியும்.

**கேள்வி: அரசாங்க மாற்றம் வர்த்தக செயற்பாடுகளில் ஏதாவது முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளதா? அடிக்கடி கொள்கைகளை மாற்றிக் கொண்டிருப்பது சரிதானா?**

**பதில்:** அரசாங்கத்தின் கைகளில் எதுவும் இல்லை. 95% எமது வர்த்தகச் செயற்பாடுகளை நாமே மேற்கொள்ள வேண்டும். 5% உதவியை அரசிடம் பெறலாம். அரசாங்கத்தின் ஆட்சி மாறி சிறிது காலத்தில் நாம் எவ்வித மாற்றத்தையும் எதிர்பார்க்க முடியாது.

**-எம்.ஜி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் மனதில் நிலைத்துவிட்ட தினக்குரல்



கிழக்கு முதலமைச்சர்
நசீர் அகமட்

பத்திரிகை என்பது காலத்தின் கண்ணாடியாகும் சமுதாயத்தை வழிநடாத்தக்கூடிய பத்திரிகைகள் தமது விருப்பு, வெறுப்புகளுக்கு அப்பால் நடுநிலையாகச் செயற்பட்டு வாசகர்களின் மனதிலே இடம் பிடிக்க வேண்டும். அத்துடன் சமுதாயத்தில் மலிந்துள்ள சீர்கேடுகளையும், குறைகளையும் எடுத்துக்கூறி நற்பணியாற்றவேண்டும். அந்த வகையில் தினக்குரல் பத்திரிகையானது தனது பணியை திறம்படச் செய்து வருகின்றது என்பதே எனது கருத்தாகும்.

இருபதாண்டுகால நிறைவு ஒரு பத்திரிகையைப் பொறுத்தவரையில் குறுகிய காலமாக இருந்த போதும் தினக்குரல் பத்திரிகையானது நீண்ட பணியை மேற்கொண்டுள்ளது என்பதை நாம் அவதானிக்க முடிகிறது. வெறுமனே நாளாந்தம் இடம்பெறும் செய்திகளை மாத்திரமன்றி பல்வேறுபட்ட அம்சங்களை குறிப்பாக விஞ்ஞானம், மருத்துவம், உடல்நலம், மற்றும் சினிமா ஆகியவற்றை இந்தப் பத்திரிகை தாங்கி வெளிவருவதோடு, பலரச திரட்டுக்களையும் வாசகர்களுக்குத் தந்து மகிழ்விக்கின்றது.

இதேபோன்று மாணவர்களுக்கு கல்வியரங்கு என்ற பகுதியை ஆரம்பித்து அவர்களின் கல்வி மேம்பாட்டுக்கு பலவகைகளிலும் உதவுகின்றது. எழுத்தாளர்களின் ஆக்கங்களுக்கு முன்னுரிமையளித்து இளம் எழுத்தாளர்களை எழுதத் தூண்டுவதில் தினக்குரல் முன்னணி வகிக்கின்றது. செய்திகளை சுடச்சுடத் தருவதோடு மட்டும் நின்றுவிடாது மிகவும் நம்பகமான, விறுவிறுப்பான அம்சங்களையும் இந்தப்பத்திரிகை தாங்கி வருவதால் மக்கள் மனதில் நிலைத்து நிற்கின்றது. இருபதாண்டுகால பத்திரிகைப் பணியில் எத்தனையோ தடைகளைத் தாண்டி வந்தபோதும் சளைக்காது தனது பணியை தினக்குரல் பத்திரிகை மேற்கொண்டு வருகின்றது என்பதை நினைக்கும்போது மனமாற மகிழ்ச்சியடைகின்றேன். இனிவரும் காலங்களிலும் எந்தத் தடைகள் வந்தாலும் பக்கச்சார்பின்றி தனது பணிகளைத் தொடர்வதற்கு நான் வாழ்த்துகிறேன். இந்தச் சந்தர்ப்பத்தில் இப்பத்திரிகையின் பிரதம ஆசிரியர் மற்றும் ஆசிரியர் பீட உறுப்பினர்களுக்கு எனது மனமார்ந்த பாராட்டுகளையும் நன்றிகளையும் தெரிவிக்கின்றேன்.

011 5 411 411
ஆண்டு நிறைவுச் சலுகை
ஆறு மாத நிலையான வைப்புக்களுக்கு
12%
(வ.தே.வ. 12.36%)
விஷேட வட்டி
ஏனைய வைப்பக்களுக்கும் கவர்ச்சிகரமான வட்டி
Anniversary Plus வட்டி
SDBL சணச அபிவிருத்தி வங்கி பிஎல்சி
தேசத்தின் முன்னோடி
* நிபந்தனைகளுக்குட்பட்டது
art sense
சணச அபிவிருத்தி வங்கி இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையினால் விஷேடமாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. Fitch Rating BB+ (stable), Reg. No: PB62PQ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் இளைஞர்கள் சர்வதேச ரீதியில் கல்வி மற்றும் தொழில்நுட்ப தரத்தை அடைவது அவசியம்



அங்கஜன் இராமநாதனின் இளைஞர் அணித் தலைவர்
**ஆர்.அங்கஜன்**

'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவன்று காலநியதியே' என பழந்தமிழ் இலக்கணம் சுறுகின்றது. அதை யாராலும் நிராகரித்துவிட முடியாது. ஆனால் அதன் பொருளினை நன்கு ஆழமாக நோக்க வேண்டும். 'பழையன' வேறு பழமைகள் வேறு. இதன் வேறுபாட்டை நாம் உணர வேண்டும். ஒரு நாகரிக அடிப்படையில் பழையன போய் புதியன புகலாம். ஆனால் பண்பாட்டு கலாசார ரீதியில் பழையன கிடையாது. அவையாவும் பழமைகளே ஆகும். இதை எம் இளம் சந்ததி உணர்ந்தால் போதும். நாம் நாமாக வாழலாம்.

நீண்டகாலமாக நாம் எம் பின்னடைவுகள், முயற்சியின்மை போன்ற பல நிகழ்வுகளை யுத்தம் என்ற சாட்டுப்போக்கினைச் சொல்லி சமாளித்திருக்கின்றோம். ஆனால் காலம் யாருக்கும் காத்திராமல் கழிந்து கொண்டிருந்ததை நாம் உணரவில்லை. இறப்புக்கும் பிறப்புக்கும் இடையிலான இந்த குறுகிய வாழ்க்கை என்னும் காலப்பகுதியை நாம் சோம்பேறிகளாக நிரந்தரமற்ற களியாட்டங்களிலும் இன்பங்களிலும் கழித்துவிட்டு நிரந்தர நிகழ்வுகளை நிராகரித்துவிடுகிறோம்.

ஈழத்தமிழனுடைய கல்வி, தொழில்நுட்ப அறிவு, பொருளாதாரச் சிந்தனை, திட்டமிடல் என்பன இன்று நேற்று உருவாக்கப்பட்டதல்ல. அது கல்விக் கூடங்களோ கற்பிக்க ஆசிரியர், விரிவுரையாளர்கள் என எதுவுமில்லாக் காலத்தில் இயற்கையோடு மனிதன் ஒன்றி வாழ்ந்த காலத்தில் எமது முன்னோர்களினால் உருவாக்கப்பட்டவை. தமிழகத்திலிருந்து வெள்ளையன் வெளியேறிய போது அரும் பெரும் நூல்களை யாருக்கும் தெரியாமல் எடுத்துச் சென்றான் என்றும் அவற்றை வைத்தே தனது ஆய்வுகளையும் கண்டுபிடிப்புகளையும் செய்தான், செய்கிறான் என்பது இன்னும் தமிழர் மத்தியில் வாழும் கதையாகி உள்ளது.

உலகில் சாதித்தவர்களை எடுத்துப் பார்த்தால் மக்கள் மத்தியில் ஏதோ ஒரு விதத்தில் இன்னமும் வாழ்கின்றவர்களின் வரலாறுகளை நீங்கள் எடுத்துப் பார்த்தால் அவர்கள் யாவரும் தமது இளமைக்காலத்தில் அந்த சாதிப்பிற்குரிய பக்குவத்தை அடைந்தவர்களாகவும் அந்த இளமை தந்த மனோபலத்தால் வந்த சவால்களை, சோதனைகளை எதிர்த்து நின்று போராடி வரலாறுகளிலும் மக்களின் வாழ்க்கையிலும் நீங்கா இடம் பிடித்தவர்களாகவும் இருக்கிறயர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகத்தின் வியத்தகு கண்டுபிடிப்புகள் யாவற்றையும் வேற்று நாட்டவன், வேற்று இனத்தவன் கண்டுபிடித்திருந்தாலும் அவை வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலும் பின்னரும் எமது தமிழிலக்கிய கர்த்தாக்களால் எப்போதோ இலக்கியங்களில் கூறப்பட்டவைதான். திருக்குறலில் இல்லாத அரசியலா? பொருளாதாரமா? அறமா? மறமா? அவ்வை சொல்லாத அணுகுண்டா? வான்மீகி சொல்லா விமானமா? திருமூலர் சொல்லாத எயிட்ஸா? இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம். இதன் மூலம் எமக்கு என்ன தெரிகிறது? தமிழன் அதுவும் இளைஞன் இயல்பாகவே அறிவும் கல்வியும் தொழில்நுட்பமும் பொருளாதாரச் சிந்தனையும் உடையவன்.

கிட்டத்தட்ட 2,500 க்கும் அதிகமான இளைஞர்களை நாம் வழிநடத்தியிருக்கின்றோம். இன்னமும் வழிநடத்துகின்றோம். அவர்கள் சாதிக்கப் பிறந்தவர்கள் என்பதை உணர்ந்திருக்கிறார்கள். இன்று தம் முன்னேற்றத்தில் தன்னலத்தில் மட்டுமல்லாமல் பிறர் நலனிலும் அவர்கள் முன்னின்று முன்வந்து செயற்படுகிறார்கள். எந்த நேரத்தில் கேட்டாலும் என்ன வகை குருதியைக் கேட்டாலும் உடனடியாக ஒழுங்கு செய்து உரியவருக்கு கொடுக்கும் செயலை மிக மிக ஆரோக்கியமாக, ஆர்வமாக செய்து வருகிறார்கள்.

இயற்கை அனர்த்தம் வந்தால் உடனடியாக உரிய இடத்திற்கு நேரடியாகச் சென்று பார்த்து சரீர உதவியையும் தம்மாலான நிதியுதவியையும் செய்கிறார்கள். உண்மையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு என்ன வேண்டும் என்பதை துல்லியமாக கணிக்கிறார்கள். என்னை அதை செய்யும் வண்ணம் பணிக்கிறார்கள். தம்மாலான வரை உயர்கல்வியைக் கற்கிறார்கள். பலர் வேலை செய்து கொண்டே கல்வி கற்கிறார்கள். நாளை இந்த சமூகத்தில் நாலும் தெரிந்த ஒரு மனிதனாக தம்மைத் தாமே தயார் செய்த இந்த இளைஞர்கள் தொழில்நுட்பத்தை அதிக நாட்டம் கொண்டு படிப்பதால் அதில் சிறப்புத் தேர்ச்சி அடைவதனால் கைநிறைய சம்பாதிக்கும் வாய்ப்பினையும் இலகுவாகப் பெறுகிறார்கள்.

எந்த ஒரு நாட்டிலாகட்டும், எந்த ஒரு யுகத்திலாகட்டும், அரசியலாகட்டும், மதமாகட்டும் இளைஞர்களின் தலையீடு இல்லாமல் சாத்தியமாகாது என்பதற்கு ஏராளமான உதாரணங்களை எம்மால் காண்பிக்க முடியும். வேகம் மிக்க இளைஞர்களுக்கு விவேகம்மிக்க, அனுபவம்மிக்க முதியவர்கள் வழிகாட்டினால் நிச்சயமாக குறித்த இலக்கை ஒரு சமூகத்தால் இலகுவாகவும் விரைவாகவும் அடைய முடியும். பொதுவாகவே தமிழன் வரலாற்றுக் கதைகளில் கூட அபார சக்தி படைத்தவனாகத்தான் காட்டப்படுகிறான். தமிழனால் தான் பல விடயங்கள் சாத்தியம் என சாதித்துக் காட்டப்பட்டது. பொதுவாகவே உலக மனிதர்களில் தமிழனுக்கு என்று ஒரு தனியிடம் எப்பொழுதுமே உண்டு.

நாம் வாழ்ந்த, வாழ்கின்ற காலத்தில் கூட உலகம் பிரமிக்கும், அச்சம் கொள்ளும், பொறாமை அடையும் வண்ணம் தமிழ் இளைஞர்களின் சாதனைகள் சொல்லில் அடங்காதவை. நான் எமது இளைஞர்களின் திறமை மீது, செயல் திறன் மீது, ஆரோக்கியம் மீது, தொழில்நுட்ப அறிவு மீது, அதிக நம்பிக்கை வைத்திருக்கிறேன். அதை தான் ஒவ்வொரு இளைஞனும் தன்னைச் சுற்றி இருப்பவர்களிடம் எதிர்பார்க்கிறான்.

குறிப்பாக இரண்டாவது இனமாக இருந்த எம்மினம் இப்போது குறுகிய காலத்தில் வீழ்ச்சியடைந்து போவதை புள்ளிவிபரங்கள் துல்லியமாகச் சொல்கின்றன. இது எதிர்கால அரசியல் நடவடிக்கைகளில் தமிழனின் இருப்பில் பூர்வீகத்தில் அதிக தாக்கம் செலுத்தும். ஆதலால் நான் எம்மினம் அளவில் குறைவடைந்து போக காரணங்களைத்தேட நேரிட்டது. கொடிய யுத்தம் தமிழினத்தின் எண்ணிக்கையை பெருமளவில் குறைத்தது. திருமண வயதை எட்டியும், ஏராளமான இளைஞர், யுவதிகள் திருமணம் செய்யாமல், உயர் கல்வியையும் தொடராமல் அதற்கு போதிய வாய்ப்புகள் இன்றி இருந்தார்கள். இவர்களது திருமணத் தடைக்கு பெரிதும் பொருளாதார பின்னடைவும் பாரிய செல்வாக்கைச் செலுத்தியது. அதனால் தான் இளைஞர், யுவதிகளை பெரிதும் கவனத்தில் எடுத்து வேலை வாய்ப்புகள் ஊடாக அவர்களின் பொருளாதாரச் சிக்கல்களை தீர்த்துவைத்தோம். இதனால் யாழ்ப்பாணம், கிளிநொச்சி தேர்தல் தொகுதிக்கு அப்பாலும் இளைஞர்கள், யுவதிகள் எமது சேவையை நாடினர்.

என்னைப் பொறுத்தவரையில் இளைஞர், யுவதிகளின் தொழில் கல்வி, தொழில்நுட்பம் என்பன சர்வதேச ரீதியில் சமனாக வளர்த்து எடுக்கப்பட வேண்டும். அப்போதுதான் ஆரோக்கியமான, சிந்தனைத் தெளிவுடைய ஒரு இளம் சமூகத்தை உருவாக்க எம்மின பிரச்சினைகளில் முழுமையாக உள்வாங்க முடியும். இளைஞர்களை விடுத்து ஆற்றப்படுகின்ற எந்தச் செயலும் முழுமை பெறாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நாம் எதிர்பார்ப்பதை விடவும் விரைவாக வயதுமுதிர்வு வந்தடைந்துவிடும். நிஜ வாழ்வும் அதுவே! நீங்கள் உங்களின் அன்பிற்குரியவர்களுடன் ஓய்வின் பின்னரான வாழ்வினை முழுமையாக அனுபவிப்பதற்கு நிதிரீதியாக ஆயத்தமாக உள்ளீர்களா? உலகின் இரண்டாவது மிகப் பெரியதும், 90 வருடங்களுக்கு அதிகமான வரலாற்றினையும் கொண்ட ஆசியாவின் முன்னணி ஆயுள் காப்புறுதியாளரான **AIA**, பல ஓய்வூதிய தீர்வுகளை வழங்குகிறது. **AIA** வழங்கும் ஓய்வூதிய சேமிப்புத் திட்டங்கள் உங்கள் வசம் உள்ள ஓய்வூதிய சேமிப்புத் தொகைக்கும், நீங்கள் பெற விரும்பும் தொகைக்குமிடையிலான இடைவெளியை நிரப்பும். ஆகவே, தேவையான சந்தர்ப்பத்தில் நீங்கள் எதிர்பார்க்கும் வருமானம் மற்றும் வாழ்க்கை முறையை நெருங்கிட முடியும்.

எம்முடன் நெருக்கமாக, **aialife.com.lk** இற்கு பிரவேசியுங்கள்

AIA சந்தை மூலதனத்தின் அடிப்படையில் உலகின் இரண்டாவது மிகப் பெரிய ஆயுள் காப்புறுதியாளர் (2015 டிசம்பர் 31ல் உள்ளவாறு)

AIA

THE REAL LIFE COMPANY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக சிந்தனையாளர்களை உருவாக்குவது இன்றைய தேவை



**டாக்டர் இ.சுரேந்திரகுமாரன்**

சிரேஷ்ட விரிவுரையாளர்,
சமூக மருத்துவ நிபுணர்,
சமூகம் மற்றும்
குடும்ப மருத்துவத்துறை,
மருத்துவ பீடம்,
யாழ். பல்கலைக்கழகம்

ஒரு சமூகத்தின் முன்னேற்றத்தில் பல்வேறு காரணிகள் பங்கு வகிக்கின்றன. இக்காரணிகளை ஒருங்கமைத்து அவற்றை சரியான முறையில் நெறிப்படுத்தி சிறந்த முறையில் முகாமைத் துவப்படுத்துவதன் மூலம், அதி உன்னத பயன்பாட்டை பெறுவ தன் மூலம் இச்சமூக அல்லது பிரதேச அபிவிருத்தியை திறம்படச் செய்து கொள்ள முடியும் என்பது உலகளாவிய பட்டறிவாகும்.

இச்செயற்பாட்டை செய்வதற்குரிய அறிவு, திறன் என்பன சரி யான முறையில் தேவையானவர்களுக்கு வழங்கப்படுதல் மிகவும் அவசியமானது. இத்தேவையையும் வளங்களையும் வழங்குவதில் பல்கலைக்கழகங்களும் உயர் கல்வி நிறுவனங்களும் முக்கிய பங்கு ஆற்றுவதுடன், இச்செயற்பாடுகளை செயற்படுத்தும் அரசி யல் மற்றும் சமூகத் தலைவர்களுக்கும் திட்டமிடலாளர்களுக்கும் அதிகாரிகளுக்கும் தேவையான தொழில்நுட்ப அறிவை வழங்குவ தில் இந்நிறுவனங்களின் பங்கு அளப்பரியது.

நீண்டகாலமாக போரினால் பாதிக்கப்பட்டு பல வளங்க ளையும் இழந்து சின்னாபின்னமாகிப் போயுள்ள எமது சமூகத் திற்கு பிரதேச அபிவிருத்தியில் ஈடுபடுவதற்குத் தேவையான வளங்களும் தொழில்நுட்ப அறிவும் மிகக் கூடிய அளவில் தேவைப்படும் என்பது எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடியது. இவ்வாறு செயற்படாதுவிடின் நாம் எதிர்பார்த்த அபிவிருத்தி யினை அடைவது மிகவும் கடினமானது.

ஒருவரின் உடலை எடுத்துக் கொள்வோமாயின் உடலின் பல உறுப்புகள் பல்வேறு தொழில்களை ஆற்றக்கூடியவாறு வடிவமைக்கப்பட்டுள்ளன. இதனூடாக பல்வேறு தொழில்களை நாம் செய்யக்கூடியதாகவுள்ளது. ஆனால் இச் செயற்பாடுகளை செய்யும் போது அதனை ஒருங்கமைத்து சீரிய முறையில் செயற் வதற்கும் செயற்பாட்டின் ஊடாக எதிர்பார்க்கப்பட்ட பயனை திறம்பட பெற்றுக்கொள்வதற்கும் சிறந்த சிந்தனையும் ஒருங்கி ணைப்பும் அவசியமாகும்.

இதனை உடலிலுள்ள நரம்புத் தொகுதியானது திறம்பட தசை மற்றும் எலும்புத் தொகுதி ஊடாக செயற்படுத்துகின்றது. இந்நரம்புத் தொகுதியானது இரண்டு பிரதான பகுதிகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. அதாவது மத்திய நரம்புத் தொகுதி மற்றும் சுற்றயல் நரம்புத் தொகுதி என்பன அவையாகும்.

ஒரு வேலையை செய்வதற்குரிய தேவை ஏற்படும் போது அவ் வேலையை எவ்வாறு செய்யவேண்டும் என்ற தகவலானது மத் திய நரம்புத் தொர்குதியினால் சுற்றயல் நரம்புத் தொகுதிகளுக்கு வழங்கப்பட்டு சுற்றயல் நரம்புத் தொகுதியானது சரியான தூண் டல்களை தேவையான தசைகளுக்கும் எலும்புகளுக்கும் வழங்கி அவ்வேலை திறம்பட செய்து முடிக்கப்படுகின்றது.

இதேபோன்று ஒரு பிரதேச அபிவிருத்திக்குரிய நடவடிக்கை களை சரியான மத்திய நிலையத்தினால் வடிவமைக்கப்பட்டு செயற் படுத்துவதனூடாக அதி உச்ச பயனை பெறக்கூடியதாக இருக்கும். ஒரு பிரதேசத்தின் மத்திய நிலையம் எதுவென்ற கேள்விக்கு இன்று உலகளாவிய ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட முடிவானது அது பல்க லைக்கழகங்களும் உயர் கல்வி நிறுவனங்களுமாகும்.

அண்மைக்காலங்களாக பல்கலைக்கழகங்களினதும் உயர் கல்வி நிறுவனங்களினதும் வகிபாகமானது உலகளாவிய ரீதி



20 Anniversary

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் மாறிவருவதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. முன்னர் இந்நிறுவனங்கள் வெறுமனே பட்டதாரிகளை உருவாக்குகின்ற நிறுவனங்களாகச் செயற்பட்டன. ஆனால் இந்நிறுவனங்களின் வகிபாகமானது விரிவாக்கப்பட்டு சமூகத்திற்கும் இந் நிறுவனங் களுக்குமான உறவானது ஆணித்தரமாக கட்டியெழுப்பப்படு வதன் முக்கியத்துவம் உணரப்படுகின்றது. இதனால் சமூகம் மட்டுமல்லாது நிறுவனங்களும் பயனைப் பெறுகின்றன. இந்நி றுவனங்கள் சமூகத்துடன் இணைந்து செயற்படுவதன் ஊடாக இந்நிறுவனங்களில் கல்வி கற்கும் மாணவர்களும் கற்பிக்கும் ஆசிரியர்களும் பெரும் பயனைப் பெறுகின்றனர். இவர்கள் ஏடு களில் உள்ள கல்வியை மட்டுமல்லாது சமூகத்தை, அதிலுள்ள பிரச்சினைகளை, அவற்றை அவை கையாளும் விதம் என்பன வற்றை கற்பதன் ஊடாக அவை பற்றிய தத்துவார்த்த அறிவை மட்டுமல்லாது செயற்பாட்டு அறிவையும் பெறக்கூடியதாக உள்ள து. இது பொதுவாக இந் நிறுவனங்களில் இருந்து வெளிவரும் மாணவர்கள் சமூக பிரச்சினைகளை, திறம்பட கையாளக்கூடிய திறனுடன் பட்டத்தைப் பெறுவதற்கு வழி சமைக்கின்றது.

அதேநேரம் இப்பட்டதாரிகள் சமூகத்துடன் சேர்ந்து சேவை செய் யும் போது சமூகத்தின் வேதனை, வருத்தங்கள், எதிர்பார்ப்புகள் என் பவற்றை அறியக்கூடியதாக இருப்பதுடன், அவர்கள் தொடர்ந்து இரு சமூகத்துடன் இணைந்து வேலை செய்வதை தூண்டுகின்றது.

இவ்வாறு சமூகத்துடன் சேர்ந்து வேலை செய்யும் போது அவர்களால் சமூக மட்டத்தில் செய்யப்படுகின்ற ஆய்வுகள் சரி யான முறையில் செயல்படுத்தப்படும் போது அவ் ஆய்வுகள் சரி யான முறையில் சரியானவர்களுடன் பகிரப்படும் போது ஏற் கனவே குறிப்பிட்டது போன்று வினைத்திறனுள்ள சமூக அல்லது பிரதேச அபிவிருத்தியினை அடையக்கூடியதாகவுள்ளது.

இதனை நன்கு உணர்ந்த, வளர்ந்த நாடுகளில் உள்ள முன் னணி பல்கலைக்கழகங்களும் சமூக மட்டத்துடன் தமது தொடர் புகளை ஏற்படுத்தி அவற்றின் செயற்பாடுகளை விருத்தி செய்வ தில் பல்வேறு வழிகளிலும் செயற்பட்டு வருகின்றன.

இலங்கை பல்கலைக்கழகங்களிலும் இக் கொள்கையா னது 2012ஆம் ஆண்டில் பெரியளவில் அறிமுகப்படுத்தப்பட் டது. இத்னை அறிமுகப்படுத்தும் செயற்றிட்டமானது (University Township Project) பல்கலைக்கழக நகரத் திட்டம். இதில் முதலில் தென்பகுதியிலுள்ள பல்கலைக்கழகங்கள் இணைக்கப்பட்டன. பின்னர் பல்வேறு கோரிக்கைகளின் பின்னர் யாழ்ப்பாண பல்கலைக்கழகமும் இத்திட்டத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டது. இத்திட்டத்தின் முக்கிய குறிக் கோளானது பல்கலைக்கழகங்கள் அவற்றின் அபிவிருத்தித் திட் டங்களை அப்பிரதேசத்தில் ஏற்படும் அபிவிருத்திகளுடன் தொடர்பு படுத்தி செயற்படுகிறது. இதனூடாக இரு தரப்பினரும் அதி உச்ச பயனை பெறுவதற்கும் இத்திட்டமானது அறிமுகப்படுத்தப்பட்ட போதிலும் இன்றும் அதன் செயற்படு நிலை மிகவும் மெதுவான தாகவே காணப்படுகின்றது. இலங்கையை பொறுத்தவரை அரச பல்கலைக்கழகங்களில் போதிக்கும் போதனாசிரியர்களும் சரி, மாணவர்களும் சரி மக்களிடம் அறவிடப்படும் வரிப் பணத்தினூ டாக வழங்கப்படுகின்ற நிதியினைக் கொண்டே அவர்களுக்குரிய சம்பளத்திலிருந்து கல்விச் செலவு அனைத்தும் மேற்கொள்ளப்படு கின்றன. எனவே போதனாசிரியர்களும் மாணவர்களும் சமூகத் திற்கு தம்மால் ஆன சேவையினை வழங்கவேண்டுமென்பது சமூகத்தினது எதிர்பார்ப்பும் அவர்களது கடமையும் ஆகும். வெறு மனே தமது உயர்வினை மாத்திரம் கருதாது சமூகத்திற்கு தமது பணியை விஸ்தரிப்பது முக்கியமானது.

இதேபோன்று சட்டம் அல்லது திட்டம் நிறைவேற்றும் சபைகளும் அவற்றை நிர்வகிப்பவர்களும் இந்நிறுவனங்களில் காணப்படும் நிபுணத்துவத்தை சரியான முறையில் பயன்படுத் துவதன் ஊடாக இருக்கும் வளங்களைக் கொண்டு அதி உச்ச பயனைப் பெற முடியும். இவ்வாறான நிறுவனங்களில் பணியாற் றுபவர்களும் அவர்களுடைய மாணவர்களும் இவ்வாறான பணிகளில் தம்மை இணைத்துக் கொள்ளும் போது அவர்களின் திறமையை வளர்த்துக் கொள்ளக்கூடியதாக உள்ளது. இவ்வா றான நடவடிக்கையானது அப்பிரதேசத்தில் அபிவிருத்தியை இன் னொரு படி நிலைக்கு எடுத்துச் செல்ல முடியும்.

எனவே பல்கலைக்கழக நகல் திட்டத்தினூடாக பரிந்துரைக் கப்பட்டதை அத்திட்டத்தினூடாக மட்டுமல்லாது அல்லது உயர் கல்வி நிலையத்தால் ஒதுக்கப்படும் நிதிகளை எதிர்பார்த்து இதனைச் செயற்படுத்துவது மட்டுமல்லாது இரு பகுதியினதும் அதாவது திட்டமிடுதலையும் திட்டங்களையும் நடைமுறைப் படுத்துபவர்களும் கல்வியாளர்களும் இணைந்து பல ஆரோக்கி யமான கலந்துரையாடல்களை ஏற்படுத்தி நடைமுறைச் சாத்தி யமான செயற்படுத்தக்கூடிய செயற்திட்டத்தினூடாக சமூகத்தில் வேலை செய்ய விழையும் போது இருக்கும் குறைந்தளவு வளங்க ளைக் கொண்டு எம்மால் மிகப்பெரியளவு சாதனைகளை மிகவும் சுலபமாக செய்து முடிக்க முடியும்.

இதனை செய்வதற்கு இரு தரப்பினரும் தமக்கிடையில் சிறப்பான புரிந்துணர்வை வளர்த்துக் கொள்தல் மிகவும் அவசி யம். இதனை வளர்த்துக் கொள்வதன் ஊடாக நாம் இணைந்து செயற்படும் போது அதன் பலன்களை உணர முடியும். எனவே எதிர்காலத்தில் நாம் ஒருவரை ஒருவர் குற்றம் சுமத்துவதை விடுத்து எங்களுடைய பிரதேச அபிவிருத்திக்குரிய தேவைகளை ஆராய்வதுடன், அவற்றுக்குத் தேவையான வளங்களை மதிப்பீடு செய்து அவற்றைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வழிவகைகளை தேடிப் பெற்றுக் கொண்டு செயற்பட முற்படுதல் அவசியமானது.

இதனை ஒரு தனி நபரோ, சிறு குழுவோ செய்து முடிக்க முடியாது. இதற்காக ஒட்டுமொத்த சமூகத்தைச் சேர்த்து பயணிக்க வைத்தல் அவசியமானது. இதனைக் கட்டி எழுப்புவதற்குரிய தலைமைத்துவம் சமூகத்தில் கட்டியெழுப்பப்படுதல் மிகவும் அவசி யமானது. அரசியல் தலைமைத்துவம் மட்டுமல்லாது சமூகத் தலை மைத்துவம் கட்டியெழுப்பப்படுதல் மிகவும் அவசியம்.

எனவே கல்வியாளர்களும் திட்டமிடலாளர்களும் இணைந்து செயற்படுவதன் ஊடாக சமூக சிந்தனை உடைய அறிஞர்கள் (Scholars) மட்டுமல்லாது அறிவாளர்களையும் (Irterllectuals) உருவாக்க முடியும். அதுவே இன்றைய தேவையும் ஆகும்.



20 Anniversary

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுகர்வோர் மத்தியில் பிரதான செல்வாக்குச் செலுத்தும் விளம்பரத்துறை



Holmes Pollard & Stott
தலைவர்
**பிரதீப் அமிர்தநாயகம்**

பொருட்கள் மற்றும் சேவைகளைச் சந்தைப்படுத்துவதில் விளம் பரத் துறையின் பங்களிப்பு அளப்பரியது. நுகர்வோருக்கு தேவையான நுகர்வுசார் அறிவினை வழங்குவதில் விளம்பரப்படுத்தல் துறை முக்கிய இடம்பெற்றுள்ளது. தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகை போன்ற ஊடகங்களும் சமூக வலைத்தளங்களும் நிறுவனங்களிடமிருந்து நுகர்வோருக்கு விபரங்களைக் கொண்டு செல்லும் இடைத்தரகர்களாக தொழிற்படுகின்றன. மற்றும் விளம்பரப்படுத்தல் தொடர்பாக மேலதிக தகவல்களை அறிந்து கொள்வதற்காக Holmes Pollard & Stott (Pvt) Ltdஇன் தலைவர் பிரதீப் அமிர்தநாயகத்தை அவரது அலுவலகத்தில் சந்தித்தபோது விளம்பரப்படுத்தல் துறை மற்றும் இலங்கை விளம்பரப்ப டுத்தல் துறையின் தற்போதைய நிலை பற்றி அவர் விபரித்தார்.

தகவல் தொடர்பாடல் இல்லாத ஒரு வாழ்வை எண்ணிக்கூட பார்க்க முடியாத அளவுக்கு அதன் வளர்ச்சி இன்று உச்சத்தைத் தொட் டுள்ளது. இத்தகைய தகவல் தொடர்பாடல்களுக்கு ஊடகங்கள், சமூக வலைத்தளங்கள் பெரும் பங்களிப்பு வழங்குவதுடன் சந்தைப்படுத்தல், விளம்பரப்படுத்தல் துறையின் அச்சாணியாகவும் உள்ளன.

இலத்திரனியல் ஊடகங்கள் மற்றும் அச்சு ஊடகங்கள் மூலம் நுகர்வு தொடர்பான அறிவை ஊடகங்கள் மக்களுக்கு விளம்பரப்படுத் துகின்றன. இருப்பினும் இலத்திரனியல் ஊடகங்களைப் பார்க்கினும் அச்சு ஊடகங்கள் விரைவானதும் மலிவானதும் குறுகிய காலத்தில் வடிவமைக்கக் கூடியதும் மற்றும் இலகுவானதுமானவொரு முறை யாகும். மற்றும் அச்சு ஊடகங்களில் பிரசுரமாகும் விளம்பரங்களின் வாழ்க்கைக் காலம் சற்று நீடித்து நிற்கக்கூடியது.

மாறாக இலத்திரனியல் ஊடகங்களில் வெளியிடப்படும் விளம்ப ரங்களின் மூலம் நுகர்வோருக்கு எந்த அளவுக்கு தகவல்கள் போய்ச் சேருகின்றன என்பது சந்தேகத்துக்குரியதே.

நிறுவனங்கள் விளம்பரமொன்றை உருவாக்க ஏற்படும் செலவு மற்றும் மக்களிடம் தகவல்களைக் கொண்டு செல்லக்கூடிய தன்மை என்ற இரு அடிப்படையிலேயே விளம்பரப்படுத்தல்களுக்கான ஊட கங்களைத் தெரிவு செய்கின்றன. விளம்பரமொன்றை வடிவமைக்கும்

**மோஹனஷாந்தி இராமையா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது பார்ப்பவர்களைக் கவரக்கூடிய தலைப்பு, வாசகங்கள், கவர்ச்சியான நிறம், போதியளவான தகவல்களை உள்ளடக்கியிருத்தல் என்பன முக்கியமானவை.


குறித்த ஒரு பொருளை பல நிறுவனங்கள் உற்பத்தி செய்கின்றன. இருப்பினும் நுகர்வோர் அவற்றில் ஒரு நிறுவனத்தின் உற்பத்தியையே கொள்வனவு செய்கின்றனர் என்றால் அங்கு எமது சந்தைப்படுத்தல் உத்திகளில் ஒன்றான விளம்பரப் படுத்தல் செல்வாக்குச் செலுத்துகின்றது.


விளம்பரம் மூலம் கிடைத்த தகவல்களின் அடிப்படையிலேயே நுகர்வோர் பொருளை தெரிவு செய்கின்றனர். மற்றும் பொருளின் வடிவமைப்பு, பொதியிடல், விலை நிர்ணயம், நிறை, Lable என்பனவும் முக்கியமானவை.

விளம்பரத் துறையில் தொழில் பார்க்கும் ஒருவர் நல்ல திறன் கொண்டவராகவும் புத்தாக்க அறிவுடையவராகவும் இருக்க வேண்டியது முக்கியமாகும். விளம்பரத் துறையில் பணியாற்றும் போது அவர் நிறைய அறிவைப் பெற்றுக் கொள்வதுடன் கடந்த காலம், நிகழ்காலம் மற்றும் எதிர்காலத்தில் என்ன நடக்கப் போகிறது என்று பூரண அறிவினைப் பெற்றிருப்பார். தொழிலில் ஈடுபடும் போது அவருக்கு எப்போதும் அலுப்பு தோன்றுவதில்லை. குறிப்பிட்ட பொருளின் விற்பனையை எவ்வாறு உயர்த்துவது என்பதனை அவர் நன்றாக அறிந்திருப்பார். மற்றும் விளம்பரத்துறையில் பணியாற்றுபவர்கள் எப்போதும் இளமையாகவும் புத்துணர்ச்சியோடும் ஆர்வத்தோடும் தொழிலில் ஈடுபடுவார்கள்.

ஆரம்ப காலத்தில் விளம்பரப்படுத்தல் துறையில் வந்து சேர்பவர்கள் தொழிலில் இணையும்போதே பூரண அறிவுடன் வருவதில்லை. அதற்குப் பின்னரான அனுபவத்தின் மூலமே துறையைப் பற்றி கற்றுக் கொண்டனர். ஆனால், இன்று அந்நிலை மாறி நிறைய விளம்பரப்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்தல் சார் Diploma, Degree கற்கை நெறிகளைக் கற்று விளம்பரப்படுத்தல் துறைசார் அறிவினை நன்கு அறிந்தவர்கள் பலர் உள்ளனர். எனவே, எதிர்காலத்தில் சந்தைப்படுத்தல் மற்றும் விளம்பரப்படுத்தல் துறையைத் தெரிவு செய்பவர்களுக்கு நல்லதொரு வாய்ப்புக் கிட்டும் என்பதில் எதுவித ஐயமுமில்லை.

இலங்கை விளம்பரத் துறையின் தரம் நாளுக்கு நாள் மெருகேறிய வண்ணம் உள்ளது. நல்ல சிறந்த திறமை கொண்டவர்கள் துறையில் பணியாற்றுவதுடன் மக்களுக்கு எதனை வழங்க வேண்டும் என்பதில் தெளிவாக உள்ளனர். காலப்போக்கில் இன்னும் பல நவீன தொழில்நுட்ப முறையிலான சிறந்த விளம்பரங்கள் சந்தையை வந்தடையவிருக்கின்றன என்றார்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டார் கலைகள் தடையற்ற உணர்வுகளின் வெளிப்பாடு



கலாபூஷணம்
சைவப்புலவர்
ஆர்.கோபாலபிள்ளை
(ஜே.பி.)

**நாட்டார் கதைகள் பொழுதுபோக்குக்காக மட்டும் கூறப்படாது பல அரிய கருத்துகளை வெளிப்படுத்துபவைகளாகவும் உள்ளன. அவை எழுதப்படாதவையாக காலச் சூழலுக்கு ஏற்ப குறைந்தும் விரிந்தும் வந்தவைகளாக நிலையற்ற தன்மை கொண்டவைகளாக உள்ளன.**

நாட்டார் கலை பற்றி பலர் பலவிதமான கருத்துகளைத் தெரிவித்துள்ளனர். நாட்டார் கலை நாட்டுப்புற மக்களின் நம்பிக்கைகள், மூட நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள், நடனங்கள், கூத்துகள் போன்றவைகளைக் கொண்டிருக்கின்றன என்று 'ஜொனஸ்பால்ஸ்' கூற, வில்லியம் ஆர்பாஸ்கம் என்பவரோ மானிடவியல் முறையில் நாட்டார் கலைக்கு புராணக் கதைகள், கட்டுக்கதைகள், பழமொழிகள், விடுகதைகள், கலையின்பாற்பட்ட கணக்கற்ற கூறுகள் போன்றவைகளைப் பற்றிய அறிவு எனப் பொருள் கொள்ளலாம் என்கிறார். இத்தகைய நாட்டார் கலைகள் எவை எனக் கூறுவதிலும் பல கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. நாட்டார் கலைகளுள் பாடல்கள், கதைகள், ஆடல்கள், கூத்துகள், கதைப் பாடல்கள், விளையாட்டுகள், பழக்க வழக்கங்கள், கைவினைப் பொருட்கள், மாந்திரீகம், சோதிடம், நடை உடை பாவனைகள், சடங்குகள் ஆகியனவும் அடங்குமென்றும் கூறப்படுகின்றது. இதனடிப்படையிலேயே மட்டக்களப்பு நாட்டார் கலைகள் பற்றிய கருத்தும் எம்மால் அணுகப்படுகின்றது.

கலைகள் எனும்போது அவை மனிதனுடைய உள்ளத்துணர்வின் வெளிப்பாடுகள் என்றே நேரடியாக பொருள் கூறலாம். இத்தகைய கலைகளை,

1. நுண்கலை சார்ந்தவை

2. நுண்கலை சாராதவை என இரு வகைப்படுத்தவும் முடிகின்றது. எம்மிடையே காணப்படுகின்ற கட்டிடம், விக்கிரகம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிற்பம், ஓவியம், இசை, நடனம், நாடகம் ஆகியவை நுண்கலை சார்ந்தவைகளாகவும் மருந்து, மாந்திரீகம், விளையாட்டு, கைவினைப் பொருட்கள், சோதிடம், உவமைகள், நொடிகள், பழமொழிகள் போன்றவை நுண்கலை சாராதவைகளாகவும் காணப்படுகின்றன.

மட்டக்களப்பு நாட்டார் கலைகளிலும் இவ்விரு வகையான கலைகளையும் காணமுடிகின்றன. குறிப்பாக நுண்கலைகள் சாராதவைகளான கூத்துகள், வசந்தம், கோலாட்டம், கரகம், காவடி, கிராமிய இசை போன்றவைகளுடன் கிராமிய நடனங்கள், மருத்துவம், சோதிடம், மாந்திரீகம், கிராமியப் பாடல்கள், கதைகள், உவமைகள், பழமொழிகள், விளையாட்டுகள், கொம்புமுறி, மருடி, நொடிகள், சிறு கைவினைப் பொருட்கள் போன்ற பல கலைகள் நிலைபெற்றிருந்தன. இவை அனைத்தும் மக்களின் வாழ்வியலுடன் இணைந்த வகையிலே பல நன்மைகளை வழங்குபவைகளாகவே அமைந்துள்ளன. உடல் நலம், உளநலம், கற்பனைத்திறன், மனவளர்ச்சி, சிறந்த பொழுதுபோக்கு, நம்பிக்கை, மகிழ்ச்சியுடன் தமது தொழிலைச் செய்யும் நிலை போன்றவற்றை ஏற்படுத்துவனவாகவே அமைந்திருந்தன. இதனால் மனிதன் பழி பாவமற்ற ஒரு வாழ்க்கையை வாழக்கூடியதாக இருந்தது.

இத்தகைய கலைகளை இன்று நாம் கற்று எமது வாழ்வையும் ஒளிமயமாக்க வேண்டியது அவசியமாகிறது. எனினும் மட்டக்களப்பு மக்களிடையே நிலவிய நாட்டார் கலைகள் அனைத்தையும் இக்கட்டுரையினுள் உள்ளடக்காது பின்வரும் கலைகளை மட்டுமே சுருக்கமாகக் குறிப்பிட முன்வருகின்றேன்.

1. நாட்டார் கதைகள்
2. நாட்டார் பாடல்கள்
3. மாந்திரீக செயல்முறைகள்
4. நாட்டார் விளையாட்டுகள்
5. கைவினைப் பொருட்கள்
6. நாட்டார் வைத்தியம்
7. சோதிடம்
8. உவமைகள்
9. பழமொழிகள்
10. நொடிகள்

## நாட்டார் கதைகள்

ஆதிகால மனிதன் வேட்டையாடச் சென்று திரும்பியவுடன் தனது அனுபவங்களை மற்றவர்களுக்குச் சொன்னதிலேயே கதைகள் ஆரம்பமானதாக கதைகள் பற்றிய ஆய்வாளர் பாலசுப்பிரமணியம் கூறுகின்றார். ஆனால் நாட்டார் கதைகள் பொழுது போக்குக்காக மட்டும் கூறப்படாது பல அரிய கருத்துகளை வெளிப்படுத்துபவைகளாகவும் உள்ளன. அவை எழுதப்படாதவையாக காலச் சூழலுக்கு ஏற்ப குறைந்தும் விரிந்தும் வந்தவைகளாக நிலையற்ற தன்மை கொண்டவைகளாக உள்ளன. இவை மனித குலத்தின் நனவிலி மனக் கனவுகளைக் காட்டும் என யுங் என்பவர் கூற, இயற்கையின் வளம், பிறப்பு, இறப்பு போன்றவைகளையும் கூறுவன என்று பிரேச்சர் என்பவர் கூறுகின்றார். எப்படிக் கூறப்பட்டாலும் இக்கதைகள் இலக்கிய வளர்ச்சிக்குத் துணை புரிவதாகவும் மக்கள் இனிமையாக பொழுதைப் போக்குவதற்கும் நீதி நெறிகளை மக்களுக்கு இலகுவாக புகுத்துவதற்கும் பயன்பட்டன என்பதை எம்மால் உணர்ந்துகொள்ள முடிகின்றது. நாட்டார் கதைகள் எமது மக்களின் படைப்பு, அவர்களின் கற்பனை, நியாய உணர்வு, அறிவு நுணுக்கம் ஆகியவற்றை வெளிப்படுத்துகின்றன. அனைத்தும் கற்பனையாக இருந்தாலும் ஒரு உண்மையை உணர்த்துபவை. மனிதன் எழுதப், படிக்கத் தெரியாத காலத்தில் நயத்துடன் ஒரு விடயத்தை வெளிப்படுத்த உதவின. இவை இன்று அருகி வந்தாலும் அன்றைய சூழலில் மனிதனுக்கு அறிவினை ஊட்டின.

நாட்டார் கதைகளையும் மனிதக் கதைகள், தெய்வக் கதைகள், மந்திரக் கதைகள் என வகைப்படுத்த முடிகின்றது. இவைகளை விட நீதிக் கதைகள், நகைச்சுவைக் கதைகள் போன்றவைகளும் காணப்படுகின்றன. இத்தகைய கதைகளை மக்கள் தேடியறிந்து சிந்திப்பதன் மூலமே இவைகளின் சிறப்பினை அறிய முடியும்.

## நாட்டார் பாடல்கள்

பாமர மக்களின் உணர்ச்சிப் பிரவாகங்களின் படைப்புகளே நாட்டார் பாடல்கள். இன்பத்திலும் துன்பத்திலும் நெஞ்சத்திலிருந்து வெளிக்கிளம்பும் தங்குதடையற்ற உணர்வுகளின் வெளிப்பாடு. இலக்கணம் அறியாத மக்களின் இதயங்களில் இருந்து வந்த இலக்கியங்கள். இவை அக்கால மக்களின்



20 Anniversary

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவு நிலையையும் பண்பாட்டம்சங்களையும் வெளிக்கொணர்வனவாகும். இவைகளுள் எமது மட்டக்களப்புவாழ் மக்களிடையே காணப்பட்ட பாடல்களில் ஓரிரண்டை மட்டும் உதாரணத்திற் குக் குறிப்பிடுகின்றேன். கருத்தொருமித்து காதலர் இருவர் தங்களது மனநிலைகளை வெளிப்படுத்தும் முறை பின்வருமாறு அமைந்திருந்தது. ஆற்றங் கரைக்குத் தண்ணீர் எடுக்கச் சென்ற காதலி தன் காத லன் நீர் ஓடையில் நீர் அருந்துவதைக் கண்டவுடன்

'ஓடையில போற தண்ணி தும்பி விழும் தூசி விழும், வீட்டுக்கு வாங்க மச்சான் வெந்த தண்ணி நான் தாரேன்' – என்று பாடுகின்றாள். அப்போது காதலனோ,

'சுற்றிவரக் கம்பி வேலி சுழல வர முள்ளுவேலி எங் கும் வேலி எண்டா எங்கால வந்திடட்டும்?' என்று கேட் கின்றான். அதற்கு காதலி வழி சொல்வது போல்,

'வெத்திலய கைப்பிடித்து வெறும் பிளவை வாயில் போட்டு சுண்ணாம்பு தேடி நீங்க சுற்றியே வந்திடுங்க' என்று பாடுகின்றாள். இப்பாடல் இலக்கண வரம்பெல் லைக்குள் இல்லாவிட்டாலும் அக்கால மக்களுடைய காதல் உணர்வையும் அறிவு வளர்ச்சிக்கு ஏற்ற வகை யிலான மொழிநடையையும் உள்ளடக்கியுள்ளதல்ல வா? இதுபோல பல பாடல்களைக் குறிப்பிட முடிந் தாலும் விரிவஞ்சி சுருக்கமாகக் கூறியுள்ளேன்.

**விளையாட்டுகள் மன வளர்ச்சிக்கும் உடல் வளர்ச்சிக்கும் உதவுவதோடு, மனிதனது பொழுதுபோக்குக்கும் உதவுகின்றன. மிருகம், பறவைகள்கூட இயற்கையில் விளையாடிக்கொண்டிருக்கின்றன. வெற்றி, தோல்விகளை ஏற்று நடந்துகொள்ளும் மனோநிலையையும் மகிழ்ச்சியையும் ஏற்படுத்துவன விளையாட்டுகளே.**

## மாந்திரீகச் செயல்முறைகள்

மந்திரம் என்பது நிறை மொழி மாந்தர் கூறிய வார்த்தைகள் என்பது தொல்காப்பியரின் விளக்கம். இக்கூற்றைத் திருவள்ளுவரும்

'நிறை மொழி மாந்தர் பெருமை நிலத்து
முறைமொழி காட்டி விடும்' எனும் குறள் மூலம் உணர்த்தியுள்ளார். இத்தகைய மாந்திரீகங்கள் நிறை மொழியாளர்களாகிய ரிஷிகள், ஞானிகள், சித்தர் கள், யோகிகள் என்போரால் ஆணையிட்டுக் கூறப் பட்டவை. இவ்வார்த்தைகள் பொருள் மறைந்தி ருப்பினும் சக்தி வாய்ந்தவை என்பது நம்பிக்கை. அதர்வண வேதமும் அதர்வர், அங்கிரசர் ஆகிய இரு ரிஷிகளினால் உருவாக்கப்பட்டவையே என மந்திரங்கள் கூறுகின்றன.

இதனால் எமது மட்டக்களப்பில் கண்ணூறு கழித் தல், பேய் ஓட்டல், சுளுக்குப் பார்த்தல், சுகமான பிர சவத்தை ஏற்படுத்தல், விஷம் இறக்குதல், தொண் டையில் முள் பொறுத்தால் அதை இறக்குதல் என்ப வைகளுக்கெல்லாம் மந்திரங்களே பாவிக்கப்பட்டன. இவை மனிதனுக்கு நன்மை பயப்பனவாக இருப் பினும் தீமை செய்யும் நோக்கில் சூனியம் வைத்தல், பில்லி ஏவுதல், பேய்களை ஏவித் துன்புறுத்தல் என் பவைகளுக்கும் மந்திரங்கள் பயன்படுத்தப்பட்டன. நம்பிக்கையுடன் மனம் ஒருமைப்பட்டு உச்சாடனம் பண்ணும்போதே அது பலிக்கும் என்ற நம்பிக்கையும் காணப்பட்டது. உதாரண மந்திரங்கள் தேவைப்படின் வேறு ஓர் சந்தர்ப்பத்தில் வழங்க முடியும்.

## நாட்டார் விளையாட்டுகள்

விளையாட்டுகள் மன வளர்ச்சிக்கும் உடல் வளர்ச்சிக்கும் உதவுவதோடு, மனிதனது பொழுது போக்குக்கும் உதவுகின்றன. மிருகம், பறவைகள் கூட இயற்கையில் விளையாடிக்கொண்டிருக் கின்றன. வெற்றி, தோல்விகளை ஏற்று நடந்து கொள்ளும் மனோநிலையையும் மகிழ்ச்சியையும் ஏற்படுத்துவன விளையாட்டுகளே.

இத்தகைய விளையாட்டுகளை குழந்தைகள் விளையாட்டு, இளைஞர்கள் விளையாட்டு எனப் பிரிக்கலாம். வீட்டிற்குள்ளும் வீட்டிற்கு வெளியி லும் விளையாடும் விளையாட்டுகள் என்றும் பிரிக் கலாம். கிராமிய விளையாட்டுகள் இயற்கையோடு இணைந்தவை. அதனின்றும் பண்பட்டவைகளே இன்றைய நாகரிக விளையாட்டுகள். இன்று பெரும்



20 Anniversary

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலும் நாட்டார் விளையாட்டுகள் மறைந்துவிட்டாலும் சில நிலைத்துள்ளன.

கிட்டிப்புள் அடித்தல், வார் விளையாடுதல், காய் அடித்தல், சில்லுக்கலைத்தல், றவுண்ட் அடித்தல், எட்டுக் கோடடித்தல், நொண்டியடித்தல், மாங் கொத்து விளையாட்டு, தாயக்கட்டை, குண்டு விளையாட்டு, கிளித் தட்டடித்தல் போன்றவை பழைய காலங்களில் நாட்டாரிடையே நிலவின. இவைகளில் ஒரு சில இன்று வேறு பெயர்களுடன் பின்பற்றப்பட்டு வருகின்றன.

**கைவினைக் கலைகள்**

மரபு வழிபட்ட தொழில்களில் கலை அம்சத்துடன் விளங்குவன கைவினைப் பொருட்களாகும். இவை தேவைக்கேற்ப தொழிலாகவும் மேற்கொள்ளப்பட்டன. வருமானம் குறைவாக இருந்தாலும் மக்களின் ஆசைகளையும் உணர்வுகளையும் வெளிப்படுத்துகின்றன. இவைகளுள் ஓவியம், சிற்பம் போன்றவைகளை முக்கியமாகக் குறிப்பிடலாம். இக் கலை பற்றிய விளக்கமான தன்மைகளும் வரிவிரி வஞ்சி சுருக்கப்படுகின்றன. உதாரணமாக மட்பாண்ட சித்திரங்கள்.

**நாட்டார் வைத்தியம்**

மக்கள் அன்றாடம் தம் வாழ்வில் கையாளும் மருத்துவ முறைகளை நாட்டார் வைத்தியம் எனக் கூறுவர். எமது ஆதிகால பிரதேச மக்கள் தமக்குரிய நோய்களைத் தீர்க்க நாட்டுப்புற வைத்தியத்தையே பின்பற்றினர். செவிமுறை வழியாகவே இவ்வைத்தியத்தையும் அறிந்திருந்தனர். பழக்கமும் முயற்சியினாலும் சிறந்த பலனையும் பெற்று வந்தனர். இதற்குப் பலவகையான வைத்திய உதாரணங்களைக் குறிப்பிடலாம்.

**சோதிடம்**

அறுபத்து நான்கு கலைகளுள் ஏழாவது கலையாக அமைந்துள்ள இச்சோதிடக் கலை நாட்டார் கலைகளுள் மிக முக்கியமானது. கடலை விட ஆழம் கொண்ட இக்கலையின் ஆழம் கண்டவர்கள் உலகில் எவரும் இல்லை. சோதிடம் என்பது ஜோதியாய் இருந்து வழிகாட்டுதலாகும். இதில் ஜாதகம் பார்த்து பலன் சொல்லுதல், ஆரூட சாஸ்திரம் என இரு முறைகள் உள்ளன. இக்கலையில் இன்றும் மக்கள் கூடிய நம்பிக்கையுடன் இருப்பதை அவதானிக்க முடிகின்றது.


**உவமைகள்**

நன்கு தெரிந்த ஒரு பொருளின் இயல்பை நினைவுறுத்தி, தெரியாத ஒரு பொருளின் இயல்பை விளக்குவதே உவமை. இந்த வகையில் வாழ்வியலில் சகல சம்பவங்களின்போதும் பல உவமைகள் மக்களிடையே காணப்பட்டுள்ளன. உதாரணமாக, அணை கடந்த வெள்ளம் போல , அத்தி பூத்தாற் போல, ஆப்பிழுத்த குரங்கு போல, இலவு காத்த கிளி போல, உடுக்கை இழந்தவன் கை போல என்பவைகளைக் குறிப்பிடலாம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பழமொழிகள்

பழமொழி என்பது பல சுவைகளை பல விதமாகத் தரு கின்ற வாக்கியங்கள் எனவும் பொருள் கொள்ளலாம். இத்தகைய பழமொழிகள் எமது பிரதேச மக்களிடையே இன்றும் நிலவுகின்றன. உதாரணமாக, அவதந்திரம் தனக்கந்திரம், அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு, அடியாத மாடு படியாது, ஆடு நனைகிறதென்று ஓநாய் அழுதது போல என்பவைகளைக் குறிப்பிடலாம்.

### நொடிகள்

மக்கள் சில நேரங்களில் தமது புத்திசாலித் தனத்தைக் காட்ட விரும்பி சில புதிர்களைப் போட்டு அதை அவிழ்க்கும்படி வேண்டுகின்றனர். இப் புதிர்க ளையே அன்று நொடிகள் எனக் கூறினர். இதேபோல் சில விடுகதைகளும் தோன்றியுள்ளன. இதற்கு பல உதாரணங்களைக் குறிப்பிடலாம்.

இத்தகைய மட்டக்களப்பு நாட்டார் கலைகளைக் குறிப்பிட்டதன் நோக்கம் இன்றைய இளைஞர்களுக்கு எமது பிரதேசத்தில் நிலவிய நாட்டார் கலைகள் எவை எவை என்பதை வெளிப்படுத்துவதும் அக்கலைகளுக் கும் மக்கள் வாழ்க்கைக்கும் இடையிலான தொடர்பு கள் எவ்வாறு காணப்பட்டன என்பதை அறிந்துகொள் வதற்கும் அவை தொடர்ந்தும் எம்மால் பேணப்பட வேண்டியவை என்பதை உணர்த்துவதற்குமாகும். நாட்டார் கலைகளின் மகிமையை உணர்ந்து அவை களைப் போற்றுவோமாக. இவற்றிற்கு ஊடக நிறுவ னங்களும் பக்கபலமாக இருந்து மட்டக்களப்பு பிரதேச மக்களின் பண்பாட்டுச் சுவடுகளில், மறைந்து போகும் நாட்டார் கலைகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுப் பது சிறந்தது எனவும் கோரி நிற்கின்றேன்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மு.நித்தியானந்தனின் 'கூலித்தமிழ்' தேடல்களும் சில கேள்விகளும்



**மலையகத் தமிழர்கள் ஒரு ஜீவ மரணப் போராட்டத்தின் ஊடாகவே தம் வாழ்வை - இருப்பை நிலைநிறுத்திக்கொள்ள முயன்றுள்ளார்கள். தம்மை ஒரு தேசிய இனமாக அங்கீகரிப்பதற்காக அவர்கள் நடத்திய போராட்டங்கள் விலை மதிப்பற்றவை**

**லெனின் மதிவானம்**

மலையக கலை இலக்கியம் பண்பாட்டு அமைப்புகள் பற்றி சமூக பொறுப்புணர்வுடன் தேடலை, ஆய்வுகளை மேற்கொண்டு வருபவர் மு.நித்தியானந்தன். அண்மையில் அவரால் வெளியிடப்பட்ட நூலே 'கூலித்தமிழ்'. மலையக தமிழ் மக்களின் மத்தியில் தோற்றம் பெற்ற ஆரம்பகால எழுத்து முயற்சிகளைப் பற்றிய தேடலையும் பதிவையும் அது குறித்த மதிப்பீடுகளையும் விமர்சனங்களையும் முன்வைக்கின்றது இந்நூல். இலங்கையில் மலையகத் தமிழர்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் காலூன்றத் தொடங்கி இன்று ஒன்றே முக்கால் நூற்றாண்டுக்கு மேலான வரலாற்றைக் கண்டுள்ளனர். தென்னிந்திய தமிழ்க் கிராமங்களில் பிரித்தானியர்களால் செயற்கையாக உருவாக்கப்பட்ட வறுமை இம்மக்களின் வாழ்வை பல்வேறுவிதமான இன்னல்களுக்கும் துன்பங்களுக்கும் உள்ளாக்கி புலம்பெயர்வுக்கு நிர்ப்பந்தித்தது. அதன் நெருக்கடியில் தற்காலிகமான தீர்வை நாடி இலங்கை மத்திய பிரதேசத்தின் பெருந்தோட்ட உருவாக்கத்தில் உழைப்பதற்காக வந்தனர். இங்கு தயார்நிலையில் இருந்த உற்பத்தியில் அவர்கள் பங்கெடுக்கவில்லை. அவர்களே பெரும்பாலான மலையகப் பகுதிகளில் காடழித்து தோட்டங்களை உருவாக்கினர். ஓரளவு பணத்தைப் பெற்றுக்கொண்டு ஊர்திரும்ப வேண்டும் என்ற அவர்களது விருப்பம் நிராசையாகி, இங்கேயே வாழ்ந்தாக வேண்டும் என ஆன பின்னர் மலையகத்தை மனிதவாழிடமாக ஆக்குவதற்காக உயி



20 Anniversary

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரைக்கொடுத்து உழைத்தனர். அந்தவகையில் மலையகத் தமிழர்கள் ஒரு ஜீவ மரணப் போராட்டத்தின் ஊடாகவே தம் வாழ்வை – இருப்பை நிலைநிறுத்திக் கொள்ள முயன்றுள்ளார்கள். தம்மை ஒரு தேசிய இனமாக அங்கீகரிப்பதற்காக அவர்கள் நடத்திய போராட்டங்கள் விலை மதிப்பற்றவை. இந்நிலையில் அவர்களிடையே தோன்றிய ஆளுமைகள், அரசியல் பண்பாட்டு இயக்கங்கள் பற்றிய ஆய்வுகளும் அது குறித்த தேடல்களும் அவ்வப்போது வெளிவந்த போதிலும் அவை முழுமை பெற்றதாக அமைந்திருக்காமை துரதிர்ஷ்டவசமானதொன்றாகும். இவ்வாறான சூழலில் இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட சிறு சிறு முயற்சிகள் கூட மொத்தப் பெரும் சாதனையாகவே அமைந்திருக்கின்றன. இவை எதிர்காலத் தேடலுக்கான அடிப்படையை வழங்கியிருக்கின்றன எனலாம்.

இந்நிலையில் மலையக சமூகத்தின் அடிப்படை அந்த மக்கள் குழுமத்தின் வாழ்க்கையமைப்பே ஆகும். இத்தகைய அமைப்புருவாக்கத் தனித்துவத்துக்கு அடிப்படையாகவுள்ள விசேடித்த வரலாற்றுக் காரணி, மொழி வேறுபாடுகள், மத – பண்பாட்டு வேறுபாடுகள் ஆகியனகொண்டு நோக்குகின்ற போது மலையக மக்கள் இலங்கை தமிழ்த் தேசிய இனத்திலிருந்து வேறுபட்ட நலன்களையும் பண்புகளையும் உடைய தனித்தேசிய இனத்தவராக உள்ளனர் என்பது தெளிவு. 1930களுக்கு முன் உள்ள மலையக வரலாறு குறித்து நோக்குவதற்கு மலையக நாட்டாரிலக்கியத்தைத் தவிர உதிரியான சான்றுகளே கிடைக்கின்றன. அவற்றுள் முக்கியமானவை மு.நித்தியானந்தன் இந்நூலில் தமது ஆய்வுக்காக எடுத்துக்காட்டுகின்ற சான்றுகளாகும். இந்நூலில் முக்கியமாய் இடம்பெறுவனவாக அமைவன, மலையக வரலாறு குறித்த தேடலுக்கு அவசியமான நூல்களாகும். குறித்த சமூகத்தினர் தமது உற்பத்தித் திறன், உற்பத்தி உறவுகள், அதனடியாக தோன்றும் சமூகநிலைப்பாடுகள் பற்றியும் சிந்திக்கத் தொடங்குகின்ற போது வரலாற்றுணர்வு ஏற்படுகின்றது. அதாவது தம்மைத் தாமே ஒரு சமூக குழுவினராக – நிலையான குழுவினராக உணர்கின்ற போது தான் ஒரு வரலாறு தோன்றுகின்றது. மலையக சமூகம் இந்நியதிக்கு அந்நியப்பட்டதொன்றல்ல. இந்தப் பின்னணியில் மலையகத்திலிருந்து முகிழ்த்த நூல்கள் –

**மலையகம் குறித்து எழுந்த எழுத்துக்கள் சுவாரஸ்யமான பல உண்மைகளை வெளிப்படுத்தக் கூடியன. இலட்சிய நோக்குடைய ஒரு சிலரது விடாமுயற்சிகளையும் மௌனப் போராட்டங்களையும் எத்தனிப்புகளையும் அவர்கள் எதிர்கொண்ட முரண்பாடுகளையும் எடுத்துக்காட்டுகின்றன.**

ஆளுமைகள் – பங்களிப்புகள் குறித்தே இந்நூல் கவனம் செலுத்துகின்றது. அவற்றில் முக்கியமான சில விடயங்கள் குறித்து இங்கு உரையாடுவோம்.

மலையகத்தின் முதல் நூல் என அடையாளம் காட்டப்படுகின்ற கோப்பிக் கிருஷிக் கும்மி, ஆபிரஹாம் ஜோசப் எழுதிய 'தமிழ் வழிகாட்டி', 'துரைத்தன அடக்குமுறையும் சுலித்தமிழும்', ஆகிய நூல்கள் பற்றியும் மலையகத் தொழிலாளர்களின் அடக்குமுறைகளுக்கு எதிராக முதல் குரல் கொடுத்த பத்திரிகையாளர் கருதமுத்து தியாகராசர், மலையகத்தின் ஆரம்பகால நாவல்களான சுந்தரமீனாள் அல்லது காதலின் வெற்றி, கண்ணனின் காதலி ஆகியன பற்றியும் மலையக இலக்கியத்தில் முகிழ்த்த பெண் படைப்பாளிகளில் ஒருவரான அஞ்சுகம் பற்றியும் இந்நூல் கவனம் செலுத்தியுள்ளது. கோப்பிக் கிருஷிக் கும்மி, ஆபிரஹாம் ஜோசப் எழுதிய ''தமிழ் வழிகாட்டி'', ''துரைத்தன அடக்குமுறையும் சுலித்தமிழும்'' ஆகிய நூல்கள் பிரித்தானிய காலனித்துவம் தோற்றுவித்த அடக்குமுறைகளை நியாயப்படுத்தி தொழிலாளர்களை அடக்கியாள்வதற்காக ஒரு அடிவருடி மனோபாவத்துடன் வெளிவந்த நூல்களாகும். இந்நூல்களில் தொழிலாளர்கள் இழிநிலையில் காட்டப்படுகின்ற அதேசமயம் அவர்க



20 Anniversary

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NOLIMIT

Sri Lanka's biggest fashion chain

# 'TOP 25 BEST COMPANIES TO WORK FOR IN SRI LANKA 2016'











*Category award for*

## 'EXCELLENCE IN DIVERSE WORKFORCE'

Equal opportunity employer from diverse religions and ethnicity, financial & social backgrounds and differently abled candidates

GREAT PLACE TO WORK® Best companies to work for 2016 Sri Lanka

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளுக்கு எதிராக துரைமார் மேற்கொண்ட கொடூர மான அடக்கு முறைகளையும் சுரண்டல்களையும் நியாயப்படுத்துகின்ற போக்கு வெளிப்பட்டுள்ளது. அந்நூல்கள் துரைமார்கள் தொழிலாளர்களை பற்றி அறிந்து கொள்ள உதவுவதுடன், அவர்களோடு உரையாடுவதற்கு அவசியப்பட்ட தமிழ்மொழிப் பிரயோகத்தை இலகுவாக வழங்குவதற்காகவுமே எழுதப்பட்டுள்ளன. அந்நூல்களை ஆய்வுக்குட்படுத் துகின்ற நூலாசிரியர் மலையக மக்களுக்கு எதிரான சுரண்டலையும் அடக்குமுறைகளையும் அவ்வக் காலத்தில் மலையக மக்கள் தொடர்பில் வெளிவந்த நூல்களின் துணையோடும் யதார்த்த சூழ்நிலை சார்ந்தும் வெளிப்படுத்துகின்றார்.

மலையகம் குறித்து எழுந்த எழுத்துக்கள் சுவாரஸ் யமான பல உண்மைகளை வெளிப்படுத்தக் கூடியன. இலட்சிய நோக்குடைய ஒரு சிலரது விடாமுயற்சிக ளையும் மௌனப் போராட்டங்களையும் எத்தனிப் புகளையும் அவர்கள் எதிர்கொண்ட முரண்பாடுக ளையும் எடுத்துக்காட்டுகின்றன. சமூகத்திற்காக தன்னம்பிக்கையோடும் உற்சாகத்தோடும் உழைக்க முனைந்தவர்களின் செயற்பாடுகள் பலவும் மறதிப்பா ழில் அழிந்து போகின்றன. சமூக உத்வேகத்தில் பணி புரியத் துணிந்தவர்களின் சாதனைகள் மற்றும் சோத னைகள் குறித்து, அவர்களுக்குப் பின்வருகின்றவர் கள்- அவர்களின் பாதையில் நடைபோட வேண்டும் என்று விரும்புபவர்கள், தெரிந்துகொள்ள வேண்டி யது காலத்தின் தேவையாகும். அத்தகைய சிலரின் முயற்சிகளை பதிவு செய்ய வேண்டிய அவசியத்தை

**தோட்டத் துறைசார்ந்து மலையகத் தொழிலாளர்களின் மீதான அடக்குமுறைகள், அவற்றை நியாயப்படுத்தும் வகையில் எழுந்த சட்டங்கள் தொடர்பிலான கலகக்குரலை பத்திரிகையின் ஊடாக வெளிக்கொணர்ந்ததில் கருதமுத்து தியாகராசருக்கு முக்கிய இடமுண்டு**




உணர்ந்தே பத்திரிகையாளர் கருதமுத்து தியாகராசர் பற்றிய கருத்துக்கள் அமைந்திருக்கின்றன. தோட் டத் துறைசார்ந்து மலையகத் தொழிலாளர்களின் மீதான அடக்குமுறைகள், அவற்றை நியாயப்ப டுத்தும் வகையில் எழுந்த சட்டங்கள் தொடர்பிலான கலகக்குரலை பத்திரிகையின் ஊடாக வெளிக் கொணர்ந்ததில் கருத முத்து தியாகராசருக்கு முக் கிய இடமுண்டு.

இந்நூல் பால் எழுதிய 'சுந்தரமீனாள்' அல்லது காதலின் வெற்றி என்ற நாவலை அறிமுகம் செய் கின்ற அதேவேளை, மலையகத்திலே மகத்தான மாறுதல்களும் போராட்டங்களும் உருப்பெற்று வரு கின்ற ஒரு காலகட்டத்தை வெளிப்படுத்திக் காட்ட வும் முயல்கிறது. இத்தகைய பொதுப்போக்கிலிருந்து விலகி மலையக வாழ்விலிருந்து அந்நியப்பட்ட பண்புகளுடன் ஊடாடியவர்களும் காட்டப்படுகின் றார். அதே காலச் சூழலில் தோன்றிய கண்ணனின் காதலி என்ற நாவல் மலையக வாழ்வின் தாக்கத்தை எவ்வாறு உள்வாங்கியிருக்கின்றது என்பது கவனிப் புக்குரியது. அரசியல், பொருளாதார, பண்பாட்டுச் சூழலில் தமது கடந்தகால மரபுகளை வளர்த்தெடுப் பதில் சமகால வாழ்க்கைச் சூழல், வர்க்க நலன்கள் முக்கியத்துவம் பெற்றவையாக காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்தகாலச் சான்றுகள் நிகழ்காலப் பயன்பாடுகள் கருதி பயன்படுத்தப்படுகின்றன. இத்தகைய பயன் மதிப்பு ஓர் இலக்கியப் படைப்புக்கோ அல்லது ஒரு நூலுக்கோ இல்லாது போகின்ற போது அத்தகைய சான்று சமூகத்தின் வரலாற்று நினைவுகளில் மீள முடியாத ஆழத்துக்குப் புதையுண்டு போய்விடும். சுந்தரமீனாள் அல்லது காதலின் வெற்றி என்ற நாவல் இவ்வாறுதான் புதையுண்டு போயிருக்கும். அந்த நாவலைத் தொடர்ந்து அடுத்த இரண்டாண்டு இடைவெளிக்குள் வெளிவந்த நாவலான கண்ணனின் காதலி தென்னிந்தியத் தமிழ்க் கிராமப் பின்னணியையும் இலங்கை மலையகத்தின் பின்னணியையும் காட்டிநிற்கின்றது. தென்னிந்தியக் கிராமச் சூழலில் கண்ணன் என்கின்ற தலித் இளைஞனுக்கும் கண்ணம்மா என்ற உயர் சாதிப் பெண்ணுக்கும் இடையிலான காதலைச் சித்திரிக்கின்றது நாவல். தென்னிந்தியக் கிராமச் சூழல் என்பதே சாதியக் கட்டிறுக்கத்தின் வலுவை வெளிப்படுத்தும் வாழ் முறையுடையது என்பதை அறிவோம். மாறாக, இலங்கை மலையகத்தில் தென்னிந்திய சாதியக் கொடூரம் சற்றுத் தளர்ந்த நிலையில், வேறுபட்ட வாழ்முறைக்கான அமைப்பாக்கத்தைப் பெற்றுள்ளமை தெளிவு. தென்னிந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட தொழிலாளர்கள் தமது உத்தியோகத்தர்களாலும் இதர வர்க்கத்தினராலும் இழிவாக நோக்கப்பட்டதாலும் இம்மக்கள் மீதான பொருளாதாரச் சுரண்டலும் அடக்குமுறைகளும் சமஅளவில் காணப்பட்டமையினாலும் தென்னிந்தியாவில் காணப்பட்டது போன்றதொரு சாதிய இறுக்கம் மலையகத்தில் காணப்படவில்லை. இந்தப் போக்கு நாவலில் சிறப்பாகவே காட்டப்படுகின்றது. மலையகச் சூழலில் நடைபெறும் கண்ணனுக்கும் கண்ணம்மாவின் அக்காவுக்கும் இடையிலான திருமணம், அவள் இறந்த பின் கண்ணம்மாவுடன் தமிழ்நாடு செல்கின்ற போது கண்ணம்மாவின் உறவினர்களுடன் ஏற்படுகின்ற முரண்கள், பின் கண்ணனின் சாதிப்பிரிவினரான தலித் மக்களின் வீடுகளுக்கு உயர்சாதியினர் தீ வைத்தல் முதலிய அம்சங்கள் இதற்குத் தக்க எடுத்துக்காட்டுகளாகும்.

மேலும் நாவலில் வருகின்ற காந்திய இயக்கம் – மக்களின் பங்கேற்பு என்பவற்றோடு மலையகத்தில் ஏற்பட்டுவந்த அரசியல் மாற்றங்கள் பற்றிய பகுதிகளையும் நூலாசிரியர் நித்தியானந்தன் சுட்டிக்காட்டத் தவறவில்லை.

இவ்விடத்தில் மிக முக்கியமானதொரு விடயம் குறித்து கவனம் செலுத்தவேண்டியுள்ளது. மலையகத் தொழிலாளர்கள் தென்னிந்திய கிராமச் சூழலிலும் சரி, மலையகச் சூழலிலும் சரி அவர்கள் தாங்கவொண்ணாத் துயரங்களை அனுபவித்துள்ளார்கள் என்பது உண்மைதான். ஆனால் அத்துன்ப துயரங்களுக்கு மத்தியிலும் அவர்கள் போர்க்குணம் மிக்கவர்களாக இருந்து வந்துள்ளனர் என்பதை வரலாறு புதிய படிப்பினையாக எமக்குத் தருகின்றது. இந்நாவல் தோன்றிய காலத்தில் தான் கோ. நடேசய்யர் –மீனாட்சியம்மாள் தம்பதிகளின் அரசியல் பிரவேசமும் ஸ்தாபன ரீதியான முன்னெடுப்புகளும் இடம்பெறுகின்றன.

கோ.நடேசய்யர் தம்பதிகளின் சிந்தனைகள், செயற்பாடுகள் பற்றி மலையக ஆய்வாளர்களால் பலவாறாக விளக்கப்படுகின்றது. சிலர் அவரை இலக்கிய முன்னோடியாக மட்டுமே நிறுத்துகின்றனர். வேறு சிலர் சமூகம், அரசியல், பொருளாதாரம் சார்ந்த சிந்தனையாளராகக் கருதுகின்றனர். மற்றொரு பிரிவினர் வாழ்க்கை வரலாற்றுக்குள் அடக்கிவிடுகின்றனர். முந்திய அவரது சிந்தனைகளின் அடிப்படையைக் காணாமல்– அதன் தொடர்ச்சியைக் காணாமல் விடுவது பல்வேறு அறிவுத் துறைகளில் செயற்கையான பிரிவுகளை ஏற்படுத்துவதாகும். பிந்தையதோ குறுகிய நோக்குடையது. புகழ்ச்சி சார்ந்தது. முழுமைக் கோட்பாட்டுக்குள் கோ.நடேசய்யர் – மீனாட்சியம்மாள் தம்பதிகளின் பார்வையையும், எதிர் காலத்துக்குத் தேவையாக அவர்கள் சுஹியிருப்பதையும் இரு சாராருமே விட்டுவிடுகின்ற தவறு இன்றுவரை தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றது.

கோ.நடேசய்யர் தம்பதிகள் அரசியல் அரங்கில் காலடி வைத்த காலத்தில் இலங்கையில் காணப்பட்ட அரசியல் போக்கை அடையாளம் காண்பது அவசியமாகும். ‘சுதந்திரத்திற்குப் பிந்திய இலங்கையில் வடக்கு–கிழக்கு சார்ந்த இலங்கை’ தமிழ்த் தேசியமானது ஏகாதிபத்திய சார்புடன் முகிழ்த்து வந்தது. தனிநபர் தவறுகளுக்கும் அப்பால் அதன் ஏகாதிபத்திய காட்டிக் கொடுப்பு குணாதிசயம் எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தியிருந்தது என்பதை வர




20 Anniversary

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாறு எண்பித்திருக்கின்றது. அதேசமயம் வடக்கு – கிழக்கில் வீறுடன் செயற்பட்ட கம்யூனிஸ்ட்டுகள் சாதிய ரீதியாக ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்கான மார்க்கத்தை வர்க்கப் போராட்ட நோக்கில் முன்னெடுத்திருந்தனர். அதேவேளை வளர்ந்து வந்துகொண்டிருந்த சிங்களப் பேரினவாதத்திற்கு எதிரான போராட்டத்தையும் முன்னெடுத்திருக்க வேண்டும். இடதுசாரிகள் சிங்கள மக்களுடன் ஐக்கியப்படுதல் என்பதன் மறுபுறத்தில் பேரினவாதத்திற்கு எதிரான போராட்டம் என்ற அம்சத்தையும் முன்னெடுத்திருப்பார்களாயின் தமிழ் ஜனநாயக சக்திகளை வென்றெடுத்திருக்க முடியும். இந்த வரலாற்று இடைவெளியை இடதுசாரிகளும் விட்டிருந்தார்கள் என்பதை நேர்மை மிக்க இடதுசாரிகள் சுயவிமர்சனம் செய்கின்றனர். அதேசமயம் தமிழ்த் தேசியவாதிகள் சிலர் தமிழின ஒடுக்குமுறைக்கு எதிரான பார்வையைக் கொண்டிருந்தனர். தமிழரசுக் கட்சியின் நோக்கும் செயற்பாடுகளும் இவ்விடத்தில் நினைவு கூர வேண்டியவையாகும். அதேசமயம் ஒடுக்கப்பட்ட தலித் மக்களின் சமூக மாற்றத்திற்கான போராட்டத்தை இவர்கள் நிராகரித்தனர். காலப்போக்கில் இவ்வமைப்பு பிற்போக்குவாதிகளின் கூடாரமாக மாறியதுடன், தன்போக்கிலிருந்து சிதைந்து சின்னாபின்னமாகியது.

இது இவ்வாறிருக்க, சிங்கள இடதுசாரிகள் ஏகாதிபத்திய எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்த அதே சமயம், தமிழ்த் தேசியத்தின் ஏகாதிபத்திய சார்பை உதாரணம் காட்டி தமிழின ஒடுக்குமுறைக்கு எதிரான பார்வையை, செயற்பாடுகளை முன்வைக்கத் தவறினர். இவ்வாறு சிங்கள முற்போக்குச் சக்திகள் ஏகாதிபத்திய எதிர்ப்பில் வலுப்பெறும்போதே சிறு தேசிய இனங்களுக்கு எதிராகச் சிங்களப் பேரினவாத ஒடுக்குமுறை வளர்ந்து வருவதனைக் கண்டு கொள்ளாதிருப்பது அல்லது தம்மிடமே பேரினவாத நிலைப்பாட்டைக் கொண்டிருப்பது எனும் இரண்டக நிலை அதன் தொடக்கம் முதலாகவே இருந்து வந்த வரலாற்று நிர்ப்பந்தமாய் இருந்துவிட்டது. சிங்கள ஆதிக்க – பிரபுத்துவ சக்தி ஏகாதிபத்திய நலனோடு கூட்டுச் சேர்ந்திருந்தபோது, அதற்கு எதிராகப் போராட வேண்டியிருந்த சிங்களத் தேசிய முதலாளி வர்க்கம் 1915 இல் முஸ்லிம் மக்களுக்கு எதிரான இனக்கலவரத்தை ஏற்படுத்தியிருந்தது, புதிதாக வரலாற்று அரங்கில் தோற்றம் பெற்ற சிங்கள வணிகர்கள் தமக்கான போட்டியாளர்களாக வரலாற்றுப் பாரம்பரியமிக்க முஸ்லிம் வணிகர்களை முகங்கொள்ள வேண்டியிருந்தது. அவ்வாறே முப்பதுகளில் சிங்களத் தொழிலாளர்கள் துறைமுகத் தொழி



லாளர்களாய் நிறைந்திருந்த மலையாளிகளுக்கு எதிராக இனவாத உணர்வூட்டப்படும் நிலை இருந்தது. சுதந்திரம் சாத்தியமான கையோடு மலையகத் தொழிலாளர்களது குடியுரிமை பறிக்கப்பட்டபோது சிங்கள இடதுசாரிகள் உருப்படியாக எந்தப் போராட்டத்தையும் பேரினவாத அரசுக்கு எதிராக மேற்கொள்ளவில்லை [ந.இரவீந்திரன்–2012].

இவ்வாறானதோர் சூழலில் பேரினவாதத்தை அரசியல் தளத்தில் சரியாக அடையாளம் கண்டு அதற்கு எதிரான மலையக தொழிலாளர்களை அமைப்பாக்கம் செய்தவர் நடேசய்யர் – மீனாட்சியம்மாள் தம்பதிகளாவர். அத்தகைய போராட்டத்திற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கள முற்போக்குச் சக்திகளையும் அணிதிரட்டுவதற்கான மிகத் தெளிவான பார்வையை முன்வைத்தவர்கள் இவர்கள். இந்த வரலாற்று முக்கியத்துவம் தான் மலையக மக்களிடையே ஒரு உத்வேகத்தை ஊட்டியதுடன், அவர்களின் சமூக உருவாக்கத்திற்கான அடிப்படையை வழங்கியிருந்தது. நடேசய்யர் தம்பதிகள் தொடக்கி வைத்த இந்த செல்நெறியை பின் வந்த காலங்களில் வெளிப்பட்ட இளஞ்செழியன் போன்றவர்கள் பண்பாட்டுத் தளத்திலும் இடதுசாரிகள் அரசியல் தளத்திலும் பிரயோகித்தனர் என்ற போதிலும் அது முழுமையடைந்ததாக இல்லை.

நடேசய்யர் தம்பதிகளின் இந்த வீச்சு மலையகத்தில் மண்ணை நேசித்து சமூகமாற்றத்திற்காக நம்பிக்கையை தோற்றுவிக்கக்கூடிய ஒரு போக்கை தோற்றுவித்தது எனலாம். அவ்வாறே, இந்நிலைப்பாட்டிற்கு எதிராக தோன்றிய அரசியல், கலை, இலக்கிய போக்குகள் இலங்கை மலையகத்தை இந்திய மாநிலத்தின் ஒரு பகுதியாக்கும் முனைப்பில் தோன்றிய இந்திய விஸ்தரிப்புவாதமாகும். இந்நிலையில் மலையகம் குறித்து வெளிவருகின்ற ஆய்வுகள் மலையகத்தின் வளமான திசையை நோக்கி நகர்த்தக் கூடியதாக அமைந்திருக்க வேண்டியது காலத்தின் தேவையாகும். மேற்குறிப்பிட்ட 'கண்ணனின் காதலி' என்ற நாவலிலும் இந்த அம்சம் குறிப்பிடப்படவில்லை என்றாலும் இக்காலம் பற்றிய ஆய்வுகளில் இவ்விடயம் முனைப்பாக கவனத்தில் கொள்ள வேண்டும்.

இந்நூலின் இறுதிக் கட்டுரையாக அஞ்சுகம் என்ற கணிகையர் பற்றிய வரலாறு. இந்துசமய வழக்கின் படி, தேவதாசி முறை என்ற வழக்கம் பன்நெ






20 Anniversary

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Ranjanas
(PVT) LTD




**No: 127, Main Street, Colombo-11. Tel: 2320824, 2320900, 2320834**
**Fax: 2335294 Web:www.ranjanas.lk, E-mail: info@ranjanas.lk**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மலையக வரலாற்றில் நித்தியானந்தனுடைய மறக்க முடியாத பங்களிப்பு, மலையகத்தின் ஆரம்பகால நூல்கள் சிலவற்றினை மீள் கண்டுபிடிப்பு செய்வதற்கு தளமாகவும் களமாகவும் அமைந்தவையாகும். மலையகத்தில் தோன்றியுள்ள சமகால நூல்கள் பலவற்றையே மறந்துவிடும் சாத்தியக்கூறுகள் மேலோங்கிய நிலையில், நித்தியானந்தன் மலையகத்தின் ஆரம்பகால நூல்கள் சிலவற்றைத் தேடி அவற்றை பதிவாக்கியுள்ளமை புதிய தலைமுறையினர் மட்டுமல்லாது மூத்த தலைமுறையினர் கூட மலையக வரலாற்றை முழுமையாக கற்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்தியிருக்கின்றது.**

டும் காலமாக இருந்து வந்திருக்கின்றது. தேவதாசி முறை, குறிப்பிட்ட சாதிப் பெண்கள். பாலியல் ரீதியான - உழைப்பு ரீதியான சுரண்டலுக்கும் ஒடுக்கு முறைகளுக்கும் உட்படுவதற்கு ஏதுவாக அமைந்தது. இந்த வாழ்க்கை முறைக்குள் தோன்றியவர்களில் ஓரளவு வசதி படைத்த பெண்கள் சிலர் கல்வியறிவும் எழுத்தாற்றல் மிக்கவர்களாகவும் இருந்துள்ளனர். அந்தவகையில் ஓரளவு வசதியும் வாய்ப்பும் பெற்ற வாழ்க்கைச் சூழலிலிருந்து வந்தவர்தான் அஞ்சுகம் என்ற கணிகை. உருத்திர கணிகையர் மரபினை முற்று முழுதாக ஏற்றுக் கொண்ட அஞ்சுகம், 'உருத்திர கணிகையர் கலாசாரத் திரட்டு' என்ற நூலை எழுதியுள்ளார். பொதுவாகவே தேவதாசியர்களால் எழுதப்பட்ட எழுத்துக்களை நோக்குகின்ற போது தேவதாசி வாழ்க்கை முறையை அழகுபடுத்தியும் - சமரசப்படுத்தியும் காட்டுபவையாகவே அமைந்திருக்கின்றன. தம்மை ஆசைநாயகிகளாக வைத்திருந்த ஆடவர்களை புனிதப்படுத்திக் காட்டுகின்ற போக்கே இப்படைப்புகளில் முனைப்புப் பெற்று காணப்படுகின்றது. அவ்வாறானவர்களில் தங்கி வாழ்கின்ற நிலையும் சமூக பாதுகாப்பற்ற நிலையும் இவர்களின் எழுத்துகளில் இந்த சமரசப்போக்கு முனைப்பு பெறுவதற்கு ஏதுவான காரணிகளாக அமைந்திருக்கலாம்.

இதற்கு மாறாக, பெண் விடுதலை சார்ந்த கருத்துகளின் வளர்ச்சி, இயக்கங்களின் தோற்றம் - குறிப்பாக பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தின் தோற்றம் என்பன கொண்டு வந்து சேர்த்த தாக்கங்கள் காரணமாக தேவதாசிகளின் வாழ்க்கை போக்குகளிலும் மாற்றங்கள் தோன்றத் தொடங்கின. இந்தப் பின்னணியில் கணிகையர் குலத்தில் தோன்றிய மூவாலூர் இராஜாமிர்தம்மையார், மணியம்மையார் முதலானோர் ஆளுமைமிக்க எழுத்தாளர்களாகவும் சமூக செயற்பாட்டாளர்களாகவும் திகழ்ந்துள்ளனர். இவர்களின் சிந்தனையிலும் எழுத்திலும் தேவதாசி முறையினடியாக தோன்றிய சுரண்டலை, ஒடுக்கு முறைகளை வெளிப்படுத்தியுள்ளனர். பெண்ணிய இயக்கங்கள் சில இவ்வெழுத்துகளை பதிவாக்க முனைந்திருப்பதும் குறிப்பிடத்தக்கதொன்றாகும். அவ்வாறே பிற்காலங்களில் வெளிவந்த எழுத்துக்களிலும் இவ்வாழ்வியல் அம்சங்கள் பதிவாக்கப்பட்டிருக்கின்றன. எடுத்துக்காட்டாக, டானியலின் 'இருளின் கதிர்கள்' என்ற குறுநாவல் சமுதாயத்தில் ஓரங்கட்டப்பட்டு ஒதுக்கி வைத்திருந்த பாலியல் தொழிலாளர்கள் பற்றி சிறப்பாகச் சித்திரிக்கின்றது.

அந்தவகையில் அஞ்சுகம் பற்றிய பதிவுகளை இந் நூல் வெளிக்கொணர்வது முக்கியமான அம்சமாகும். ஆனால் அஞ்சுகத்தை மலையகத்தின் முதல் பெண் ஆளுமையாக முன்னிறுத்துகின்ற போது அதன் பலவீனமான பக்கமே வெளிப்படுவதாகத் தோன்றுகின்றது. இந்திய வம்சாவளியைச் சேர்ந்த அஞ்சுகம் அம்மாள் சிறிது காலம் கைதடியிலும் பின் கொழும்பிலும் வாழ்ந்தவர். இவரை மலையக தேசியத்துடன் இணைத்துப் பார்ப்பதே எந்தளவு பொருத்தப்பாடுடையது என்பதும் சுவாரஸ்யமான விடயம் தான். பெண் கவிஞர், கணிகையர் குல வாழ்க்கையை வெளிப்படுத்தியவர் என்றவகையில் அஞ்சுகம் பற்றிய பதிவுகள் கவனத்திலெடுக்கப்பட வேண்டியது அவசியமானதொன்றாகும். அதே சமயம் சமூக முரண்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரியான திசையில் அடையாளம் கண்டு, அதற்கு எதிராக உழைக்கும் மக்களை ஸ்தாபனமயப்படுத்தியதில் மீனாட்சியம்மாள் முக்கியமானவர். அவர் தேசபக்தன் [08.02.1929] பத்திரிகையில் 'ஸ்திரிகள் பக்கம்' என்ற பகுதியில் டாக்டர் முத்துலட்சுமி அம்மாள் பற்றி எழுதிய கட்டுரையில் அம்மையாரின் ஆளுமை குறித்தும் தேவதாசி ஒழிப்பு முறையின் அவசியம் குறித்தும் எழுதியிருக்கின்றார். அதே பத்திரிகையில் பெண்ணுரிமை தொடர்பிலான கட்டுரைகளையும் ஒரு அநாதை பெண்ணின் உண்மைக் கதை [எழுத்தாளர் பெயர் குறிப்பிடப்படவில்லை] என்ற விவரணத்தையும் தொடராக வெளியிட்டிருக்கின்றார். அந்தவகையில் மலையகத்தில் மாத்திரமன்று முழு இலங்கையிலும் தோன்றிய சமூகமாற்றத்திற்கான முதல் பெண் குரலாக – ஆளுமையாக நாம் மீனாட்சியம்மாளையே கொள்ள வேண்டியிருக்கின்றது. இந்நிலையில் இவ்வகையான ஆளுமைகளை மறைக்கும் வகையில் அஞ்சுகம் அம்மாள் போன்றோரை முன்னிறுத்துவது தவறானதொன்றாகவே படுகின்றது.

இந்நூலில் காணப்படுகின்ற பிறிதொரு முக்கிய அம்சம், மலையக இலக்கியத்தில் இன்று முளைவிட்டுள்ள மத்தியதர வர்க்க நலன்கள், அதனடியாகத் தோன்றும் சிந்தனைகள் யாவும் தனிநபர் வாதத்தை-கதாநாயக வாதத்தை உருவாக்கியிருக்கின்றது. இந்தப் பின்னணியில் யார் பெரியவர் என்ற போட்டியில் எழுகின்ற முரண்பாடுகள் காரணமாக எழுத்தாளர்களையும் படைப்புகளையும் இருட்டடிப்பு செய்கின்ற அல்லது பிழையாகக் காட்ட முனைகின்ற குழுவாத இழுபறிநிலையும் தோன்றியிருக்கின்றன. ஒருவரின் மீது அனுதாபப்படுவது போலக் காட்டிக்கொண்டு குறித்த படைப்புகள் பற்றிய சந்தேகங்களை எழுப்பி விடுவதும் [சமுதாயம் சார்ந்த படைப்புகளை இல்லாதொழிப்பதற்காக என்.ஜி.ஓ.க்கள் கையாளும் உபாயமார்க்கமும் இதுவேயாகும்] இவர்களது முக்கிய தந்திரோபாயங்களில் ஒன்றாகும். சில தசாப்தங்களுக்கு முன்னர் புதுமைப்பித்தனின் படைப்புகள் பற்றியும் இத்தகைய சில்லறைத்தனமான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. அவற்றில் புதுமைப்பித்தனின் கதைகள் யாவும் மாப்பஸானின் பிரதி என்ற குற்றச்சாட்டு முக்கியமானது. சிதம்பர ரகுநாதனின் ''புதுமைப்பித்தன் விமர்சனமும் விசமத்தனங்களும்'' என்ற வரலாற்று நூல் வெளிவந்த பின்னர் புதுமைப்பித்தன் படைப்புகள் குறித்து தெளிவான பார்வை ஏற்படக்கூடியதாக இருந்தது.

இவ்வகையில் நோக்குகின்ற போது, மலையக வரலாற்றில் நித்தியானந்தனுடைய மறக்க முடியாத பங்களிப்பு, மலையகத்தின் ஆரம்பகால நூல்கள் சிலவற்றினை மீள் கண்டுபிடிப்பு செய்வதற்கு தளமாகவும் களமாகவும் அமைந்தவையாகும். மலை

**20 ஆவது அகவையில் காலடி வைக்கும் தினக்குரலுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன் !**

"நிலையான கிராமிய பொருளாதாரத்தினூடாக சுபீட்சமான நாடு" என்பதனை நோக்காகக் கொண்டு "கிராமங்கள் தோறும் தன்னிறைவான சமூக கட்டமைப்பை உருவாக்குதலும், பொருளாதார அபிவிருத்திக்கான புதிய தொழில்நுட்பத்தினூடாக உச்சபட்சமான அனுசரணையும்,பங்களிப்பையும் வழங்குதலும், சுயதொழில் வாய்ப்பினை அதிகரித்தலும், கிராமிய விவசாயிகளின் அடிப்படை வசதிகளின் மேம்பாட்டிற்காக உறுதியுடன் செயலாற்றுதலுமே எமது நோக்கமாகும்".




**கிராமிய பொருளாதார அலுவல்கள் பிரதி அமைச்சர் – எம். எஸ். எஸ். அமீர் அலி (பாராளுமன்ற உறுப்பினர்)**

# இந்து சமய அறநெறிக் கல்வி

## அறநெறிக்கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்திடுவீர்!

இளம் இந்துசமயச்சிறார் மனதில் ஒழுக்க விழுமியங்கள். மற்றும் நற்பண்புகளை வளர்த்து. கடவுள் நம்பிக்கையுடன் பிரார்த்தனை மேற்கொள்ள வழிகாட்டி ஒழுக்க நெறிமுறை சார்ந்த சமூகத்தை உருவாக்குதலே இந்து சமய அறநெறிக் கல்வியின் குறிக்கோளாகும்.

இந்து சமய அறநெறிக்கல்வி மனிதனைப் பண்புள்ளவனாக மனிதநேயத்தை காப்பவனாக வாழ வழி செய்கின்றது. அன்பு, அறம், கருணை, கட்டுப்பாடு, கடமை இவற்றையெல்லாம் தெளிவுபடுத்துகின்றது. மனதை ஒரு நிலைப்படுத்தி வாழ்க்கையில் நல்லவற்றையெல்லாம் செய்து நல்லதோர் சமுதாயச் சூழலை ஏற்படுத்த வழி செய்கின்றது.



"இளம் இந்துச்சிறார்களின் முன்னேற்றத்திற்கு கைகொடுப்போம்"

இந்துப் பண்பாட்டு நிதியம்
இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்
சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சு
248 - 1/1 காலி வீதி, கொழும்பு - 04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யகத்தில் தோன்றியுள்ள சமகால நூல்கள் பலவற்றையே மறந்துவிடும் சாத்தியக்கூறுகள் மேலோங்கிய நிலையில், நித்தியானந்தன் மலையகத்தின் ஆரம்ப கால நூல்கள் சிலவற்றைத் தேடி அவற்றை பதிவாக்கியுள்ளமை புதிய தலைமுறையினர் மட்டுமல்லாது மூத்த தலைமுறையினர் கூட மலையக வரலாற்றை முழுமையாக கற்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்தியிருக்கின்றது. அவ்வாறு மலையகத்தின் ஆரம்பகால எழுத்துக்களை மீட்டுருவாக்கம் செய்கின்ற போது, விமர்சன அபிப்பிராயங்களுக்கு அப்பால் போய், கருத்து நிலைப்பட அமைய வேண்டும் என்பதிலும், தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கு இடங்கொடுக்காமல் அமைய வேண்டும் என்பதிலும் ஆர்வம் காட்டியுள்ளமை இந்நூலாசிரியரின் தனிச் சிறப்புகளில் ஒன்றாகும். மலையக பண்பாட்டுத் துறையில் இத்தகைய பங்களிப்புகளை வழங்கியவர்களில் தெளிவத்தை ஜோசப், சாரல் நாடன் முதலானோரின் பங்களிப்புகள் [தேசிய சுவடிகள் திணைக்களத்தை பயன்படுத்தி மலையகம் சார்ந்த ஆவணங்களை பதிவாக்கியதில் சாரல் நாடன் முக்கியமானவர். இலங்கையைப் பொறுத்தமட்டில் தே.சு.தி. பயன்படுத்தியதில் முதன்மையானவர் சாரல் நாடன் என்பதில் இருநிலைப்பட்ட கருத்துக்களுக்கு இடமில்லை] குறிப்பிடத்தக்கதாகும்.

மலையக வரலாற்றை ஆய்வு செய்வதற்கான தேவை முன்னிலும் பார்க்க இன்று அதிகரித்தே வந்துள்ளது. வரலாறு எழுதும் முறையியலை இவ்வம்சம் பெரிதும் மாற்றியிருக்கின்றது. இதன் காரணமாக மலையக வரலாற்றியலில் பல புதிய கேள்விகளும் தேடல்களும் வளர்ந்து வருகின்றன. இந்தச் சூழலில் மலையக மக்களின் வரலாறு குறித்த பன்முக உரையாடலை மேற்கொள்ள வேண்டியிருக்கின்றது. வர்க்கப் போராட்டத்துடன் தான் வரலாறு எழுதப்படுகின்றது என்பது மார்க்சிய அடிப்படைகளில் ஒன்றாகும்.

மார்க்சிய ஆய்வு முறை ஒரு சமூகத்தின் வரலாற்றை அந்த சமூகத்தின் 'உண்மையான வாழ்வை' மறு உற்பத்தி செய்வது பற்றியதாகவே அணுகுகின்றது. அதிலிருந்து அதன் பண்பாட்டு வரலாறும் அமைகின்றது. ஒரு சமூகத்தின் உண்மையான வரலாறு அதன் பொருளுற்பத்தி மற்றும் பண்பாட்டு வரலாறு என இரண்டையும் கொண்டதுதான். பொருளுற்பத்தி வரலாற்றை அடிப்படையாகக் கொண்டே பண்பாட்டு வரலாறு வளர்ச்சியடைகிறது. என்றாலும், பண்பாட்டு வரலாற்றுக்கான தனித்த சிறப்புகளும் செயல்பாடும் ஒரு சமூகத்தை இயக்குவதில் முக்கிய பங்காற்றுகின்றன. சமூகத்தில் அவ்வப்போது மேலெழும் வேற்றுமைகள் துண்டுதுண்டானவையல்ல. அவற்றுக்கிடையே ஊடாடிவரும் 'கருத்தியல் உண்மையை' அறிதல் ஒரு வரலாற்றாசிரியரின் கடமையாகும். இந்த கருத்தியல் உண்மை பொருளுற்பத்தி சார்ந்த பொருளாதார வாழ்விலிருந்தே பெறப்படுகிறது. அது உழைக்கும் வர்க்கங்களின் வாழ்நிலை பற்றியதாகும் [தேவ. பேரின்பன்.2011].


மலையக தமிழர் வரலாற்றை அறிவியல் பூர்வமாக சமூகவியல் நோக்கில் ஆராய்கின்ற இந்நூல் மார்க்சியம் சாராத அதேசமயம், மார்க்சியத்தை நிராகரிக்காத நிலையில் அதன் பார்வையை முன்வைக்கின்றது. மலையக மக்களின் வரலாற்றின் பெருமிதங்களை புனரமைத்துக் கொள்ளாமல் மக்களின் வரலாறாகவும் நீதிக்கான மனித குலத்தின் நெடும் பயணத்தை முன்னெடுத்துச் செல்வதற்கான ஆய்வுகளை மேற்கொள்வதற்கும் கடந்தகால ஆய்வுகளை புனரமைத்துக் கொள்வதற்கான தொடக்கப் புள்ளியாக இந்நூல் அமைந்திருக்கின்றது. ஒருவகையில் வரலாறு குறித்த வளர்ச்சிக்கு இது ஓர் ஆரோக்கியமான பங்களிப்பாகும். தற்காலத்தை புரிந்து கொள்ளும் திறவுகோலாக கடந்த காலத்தை அறிந்துகொள்ள வேண்டும். தற்காலப் பிரச்சினைகளின் வெளிச்சத்தில் கடந்த காலம் விளக்கப்படுகின்றபோது மகத்தான வரலாறு எழுதப்படுகின்றது என்பார் ஈ.எச்.கார்.

தற்காலச் சூழலில், அறிவியல் துறையின் வளர்ச்சி காரணமாகவும் கருத்தியல்களின் வளர்ச்சி காரணமாகவும் மலையக வரலாறு குறித்த தேடுதல்களினால் புதிய அத்தியாயம் தோன்றியுள்ளது. மலையக தமிழர் வரலாற்றை பிரதேசவாதத்துக்குள் அடக்காமல் சர்வதேச வரலாற்றோடு இணைத்து பார்க்கும் புதிய பார்வை உருவாகி வருகிறது. அது எழுப்பும் கேள்விகளுக்கும் தேடல்களுக்கும் மார்க்சிய அணுகுமுறையே ஆதாரமாக அமைகின்றது. இந்நூல் அத்தகைய பின்னணியில் – அணுகுமுறையில் மலையக வரலாறு எழுதப்படுவதற்கு துணையாக அமையும் என எதிர்பார்க்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறுவனமொன்றின் வருமானத்தில் முதுகெலும்பாகத் திகழும் சந்தைப்படுத்தல்



இலங்கை சந்தைப்படுத்தல் கல்வி நிறுவனத்தின் தலைவர்
**உபுல் அதிகாரி**

நுகர்வோருக்கு பொருட்கள், சேவைகள் தொடர்பாக தெரியப்படுத்துவதுடன், அவற்றை நுகர்வோரிடையே ஊக்குவிப்பதே சந்தைப்படுத்தல் எனலாம். சந்தைப்படுத்தல் என்பது நுகர்வோரின் தேவைகளை நிறைவேற்றுவதுடன் ஒரு நிறுவனத்தின் பொருட்கள், சேவைகளை காட்சிப்படுத்துகின்றது. ஒரு நிறுவனத்தில் சந்தைப்படுத்தல் பிரிவானது வருமானத்தைப் பெற்றுக் கொடுப்பதில் முக்கிய பங்கினை வகிக்கின்றது. ஒரு நிறுவனத்தில் சந்தைப்படுத்தல் பிரிவானது தமது உற்பத்திகளை சிறப்பாக ஊக்குவித்து விற்பனையை அதிகரிக்கும் போது இந்நிறுவனத்தின் வருமானமானது அதிகரிக்கப்படுகின்றது.

இவற்றின் அடிப்படையில் பார்க்கும் போது ஒரு நிறுவனத்திற்கு சந்தைப்படுத்தல் என்பது முக்கியமானதாகும். இது தொடர்பாக இலங்கை சந்தைப்படுத்தல் கல்வி நிறுவனத்தின் தலைவரான உபுல் அதிகாரி தெரிவிக்கையில் ;

''ஒரு நிறுவனத்தை அடையாளப்படுத்துபவராக விற்பனைப் பிரதிநிதிகள் உள்ளதுடன் நுகர்வோருக்கும் நிறுவனத்துக்குமிடையே விற்பனைப் பிரதிநிதிகள் இடைத் தரகர்களாகச் செயற்படுகின்றனர். இதற்கமைய நிறுவனங்களானது தமது விற்பனைகளை ஊக்குவிக்கும் வகையில் பெருந்தொகையான பணத்தை சந்தைப்படுத்தல் பிரிவில் செலவிடுகின்றன. அதாவது விற்பனைப் பிரதிநிதிகளுக்கான பயிற்சிப் பட்டறைகள், கருத்தரங்குகள், ஆளுமையை விருத்தி செய்யக்கூடிய திறன்கள், அபிவிருத்தி செயற்பாடுகள், வெளிக்கள பயிற்சிகள், வெளிநாடுகளுக்கு சென்று சந்தைப்படுத்தல் தொடர்பான கற்கைகளை மேற்கொள்ளல் என தமது முதலீடுகளை விற்பனைப் பிரதிநிதிகளுக்காக செலவிடுகின்றது.

ஒரு விற்பனைப் பிரதிநிதி என்ற ரீதியில் தனிநபர் ஆளுமை விருத்தி தொடர்பாக அவர் தெரிவிக்கையில்; அதாவது விற்பனைப் பிரதிநிதியானவர் கல்வி சார் தகைமையைக் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன், தமது துறை சார்ந்த விடயங்களில் அனுபவம் வாய்ந்தவராக இருக்க வேண்டும். ஆளுமையுடன் பேசும் திறன், நேர்த்தியான உடையமைப்பு, இலகுவாக எதனையும் கையாளக்கூடிய திறன், வாடிக்கையாளர்களை கையாளும் முறை, சந்தைப்படுத்தலை அதிகரிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




www.gokulam.com

கருணை இல்லமாக இயங்கும் பக்திவேதாந்த சிறுவர் இல்லம்

# கோகுலம்

வத்தளை, மாபோல, இல. 607A, நீர்கொழும்பு வீதியில் இயங்கும் பக்திவேதாந்த சிறுவர் இல்லம் "கோகுலம்" சிறுவர்களுக்கு அன்பும், அரவணைப்பும் நல்வாழ்வும் அளிக்கும் கருணை இல்லமாக இயங்கி வருகின்றது. இவர்களுக்கு சிறந்த கல்வியையும், நற்பழக்க வழக்கங்களையும் கற்பிக்கக்கூடிய வகையில் இந்த இல்லத்துடன் இணைந்த பாடசாலையும் இங்கு உண்டு. இவர்களின் நல்வாழ்வுக்கான சேவையில் தாங்களும் இணைந்துக் கொண்டு தங்களால் இயன்ற உதவிகளை வழங்கி இறைவன் அருளைப் பெற வேண்டுகின்றோம்.

**தற்போதைய சூழ்நிலையில் அவர்களைப் பராமரிக்க ஒரு நாளைக்கு ரு. 25,000/- செலவாகின்றது.**

தங்களின் அல்லது தங்கள் பிள்ளைச் செல்வங்களின் பிறந்த தினம், தங்களின் திருமண நாள், உறவினர்களின் ஞாபகார்த்தம் போன்ற எந்த தினங்களிலும் நன்கொடைகளை வழங்கி இச் சிறார்களுக்கு உதவலாம்.

**HELP them for their Better Life**

BHAKTIVEDANTA CHILDREN'S HOME **GOKULAM** No. 607A, Negombo Road, Mabola, Wattala. Tel: 011 2948398



## இஸ்கோன் கோசலா பசுக்கள் காப்பகம்

ஐயாயிரம் வருடங்களுக்கு முன்னர் பகவான் கிருஷ்ணா இப்புவியில் அவதரித்து மாடு மேய்க்கும் சிறுவனாகவே வாழ்ந்தார். மனிதர் மீது அன்பு காட்டுவது பசுக்களின் இயல்பு. பகவான் கிருஷ்ணாவும் அவற்றின் மீது அன்பு காட்டி அவற்றை பாதுகாத்தார். அதனை பின்பற்றியே கிருஷ்ண பக்திக் கழகம் உலகின் பல நாடுகளிலும் பசுக்களுக்கான காப்பகங்களை நடத்தி அவற்றை பாதுகாத்து பராமரித்து வருகின்றது.

கிருஷ்ண பக்தி கழக இலங்கைக் கிளையும் வத்தளை மாபோலை இல. 44/88, கிறிஸ்து ராஜ மாவத்தையில் பசுக்கள் காப்பகமொன்றை நடாத்தி வருகின்றது. 1999 ஆம் ஆண்டு ஆலயத்துக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட ஒரு பசுவுடன் ஆரம்பிக்கப்பட்ட இக் காப்பகத்தில் தற்போது பசுக்கள் மற்றும் காளைகள், கன்றுகள் என 40க்கு மேல் உள்ளன.



Founder : His Divine Grace A.C. Bhaktivedanta Swami Prabhupada



ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே

ISKCON

தற்போது நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் ஆலயத்தின் தோற்றம்



ஆலயம் அமைப்பதற்காக நிதி உதவிகள் செய்ய விரும்புவோர் பணமாகவோ, காசோலையாகவோ ஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ண ஆலயத்திற் செலுத்தி, அதற்கான பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளவும். வங்கிக் கணக்கில் நேரடியாகச் செலுத்த விரும்புவோர் பின்வரும் வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.

**Commercial Bank, Colombo 13.**
A/c Name : ISKCON Temple Fund,
A/c No: 1120017042
**Hatton National Bank- Jampettah Street, Colombo-13.**
A/c Name: ISKCON Temple Fund,
A/c No: 207010000891

**ஸ்ரீஸ்ரீ ராதா கிருஷ்ண ஆலயம்,**
188, புதுச் செட்டித் தெரு,
கொழும்பு – 13.
தொ.பே: 011 2433325,
பக்ஸ்: 2471099
E-mail:- iskcon@slt.lk Web:- www.iskcon.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையில் நுட்பமான சந்தைப்படுத்தல் உத்திகளை கையாளும் திறன் என்பவற்றை வளர்ப்பதே தனிநபர் ஆளுமை விருத்தியாகும்'' என தெரிவித்தார்.

இலங்கை சந்தைப்படுத்தல் கல்வி நிறுவனத்தின் தலைவர் என்ற ரீதியில் சந்தைப்படுத்தல் துறையானது எதிர்காலத்திற்கு வழிவகுப்பதுடன் தமது வருமானத்தை அதிகளவு பெற்றுக்கொள்வதற்கு சந்தைப்படுத்தல் துறையை தாம் அங்கீகரிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

சந்தைப்படுத்தல் பிரதிநிதி என்ற ரீதியில் வாடிக்கையாளர்களின் மனோ நிலை, விற்பனை, விளம்பரத்துறை, சந்தைப்படுத்தல் என அனைத்தையும் அறிந்து கொள்ள முடியும் என்பதுடன் வாடிக்கையாளர்களின் தேவைகளை உணர்ந்து புதியவைகளை உருவாக்கும் திறனை விற்பனைப் பிரதிநிதிகள் வளர்த்துக் கொள்வதற்கு வழிவகுக்கின்றது.

இலங்கையில் சந்தைப்படுத்தல் தொழில்சார் கல்வித் தகைமையை வழங்கும் இலங்கை சந்தைப் படுத்தல் கல்வி நிறுவனமானது (SLIM) பாடசாலை கல்வித் திட்டத்தில் சந்தைப்படுத்தல் துறையை உள் வாங்கவுள்ளதுடன் சந்தைப்படுத்தல் துறையில் மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் சாதாரண கட்டணங்களுடன் கூடிய கல்வியை வழங்குகின்றது.

விற்பனைப் பிரதிநிதிகளின் சுய ஆளுமை விருத்தி செய்யப்படும் போது சந்தைப்படுத்தல் துறையானது மேம்படுத்தப்படுவதுடன் நிறுவனத்தின் விற்பனையும் அதிகரிக்கின்றது எனலாம்.

**- எஸ்.எச்.**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளத்தை பண்படுத்தும் இந்து சமய அறநெறிக் கல்வி



**அ.உமாமகேஸ்வரன்**
பணிப்பாளர்,
இந்து சமய கலாசார
அலுவல்கள்
திணைக்களம்

இந்து சமய அறநெறிப் பாடசாலை என்பது இளஞ்சமுதாயத்தினருக்கு தேவையான ஒழுக்கவிழுமியங்களையும் அறச்சிந்தனைகளையும் சமயக்கல்வியையும் கலாசார, சமூக அம்சங்களையும் கற்றுத்தரும் ஒரு சமய கல்வி நிறுவனமாகும். இந்து சமய அறநெறிப் பாடசாலை மாணவர் பாடங்களுக்கூடாக மாத்திரமின்றி இணைப்பாடவிதானச் செயற்பாடுகளினூடகவும் புறக்கிருத்தியச் செயற்பாடுகள் மூலமாகவும் தம் ஆளுமை, கலைச் செயற்பாடுகள், சிறந்த வாழ்க்கைச் சிந்தனைகள் ஆகியவற்றை வளர்க்கத் தூண்டுகின்றன. இந்துக்களின் சமயக் கல்விப் பாரம்பரியத்தில் அறநெறிப்பாடசாலைகள் இன்று மிகமுக்கிய இடத்தைப் பெறுகின்றன. இந்து சமய அறநெறிப் பாடசாலைகளை ஊக்கப்படுத்துகின்ற மிக முக்கியமான பணியை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் கடந்த இரு தசாப்தங்களுக்கு மேலாக சிறப்பாக மேற்கொண்டு வருகின்றது. தற்போது மாறிவரும் சூழலுக்கு ஏற்ப இந்து சமய அறநெறிக் கல்விச் செயற்பாடுகளை மேலும் மேம்படுத்தி, இலங்கையில் வாழும் அனைத்து இந்துச் சிறுவர்களுக்கும் இந்து சமய அறநெறிக் கல்வியை வழங்கும் நோக்குடன் இந்து சமய அறநெறிக் கல்வித் திட்டம் இந்துமத அலுவல்கள் அமைச்சின் வழிகாட்டலின் கீழ் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் முன்னெடுக்கப்படுகின்றது.

### இந்து சமய அறநெறிக் கல்வியின் முக்கியத்துவம்

ஆக்கபூர்வமான கல்வி அறிவைப் பெற்றுக் கொள்வதன் மூலம் அடையும் மனித முன்னேற்றமே நீடித்து நிற்பதும் நிலையானதும் ஆகும். பண்டைக்காலம் முதல் இந்துக்களின் பண்பாட்டுப் பாரம்பரியத்தில் வந்த தவசீலர்கள் இந்த உண்மையினை உணர்ந்திருந்தனர். அறியப்பட வேண்டிய நெறி வெறும் நூலறிவு அன்று. புத்தக உள்ளடக்கத்தை மூளைக்கு மாற்றும் செயலுமன்று. அது உள்ளத்தை மாற்றியமைத்து உயர்வான வாழ்விற்கு செப்பனிடும் உயரிய நோக்கத்தைக் கொண்டிருந்தது. இத்தகைய அடிப்படைக் கொள்கையைக் கொண்டிருப்பதே அறநெறிக் கல்வியாகும்.

இன்று சமூகத்தில் நிலவும் அனைத்து முரண்பாடுகளுக்கும் முக்கிய காரணம் ஒழுக்க விழுமியங்களும் அறச்சிந்தனைகளும் குறைந்து வருவதே ஆகும். இந்து சமய அறநெறிக் கல்வி மூலம் இதனைச் சீரமைக்க முடியும். வாரத்தில் மூன்று மணிநேரம் இந்து சமய அறநெறிக் கல்வியைப் பெறுவதன் மூலம் மொத்த கல்வி கற்கும் சூழலையே மதிப்புமிக்கதாக உருவாக்க முடியும். ஏனெனில் அறநெறிப் பாடசாலைகள் வளரும் சமுதாயத்தினருக்குத் தேவையான ஒழுக்க விழுமியங்களையும் அறச்சிந்தனைகளையும் சமயக் கல்வியையும் கலாசார அம்சங்களையும் கற்றுத்தரும் சமய நிறுவனமாகப் பணியாற்றுகின்றன. இந்துக்களின் சமயக்



20 Anniversary

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விப் பாரம்பரியத்தில் அறநெறிப் பாடசாலைகள் மிகவும் முக்கிய இடத்தைப் பெறுகின்றன.

ஒவ்வொரு மாணவர்களின் உள்ளிருக்கும் தெய்வீக சக்தியைப் பயன்படுத்துவதற்கும் மற்றும் உள்மறைந்திருக்கும் மனித மேம்பாடுகளை வெளிக்கொண்டுவருவதற்கும் தேவையான திறமைகளை வளர்ப்பதற்கு இந்து சமய அறநெறிக் கல்வி உதவி செய்கிறது. ஒவ்வொரு மாணவர்களுக்குள்ளும் உள்ளார்ந்த மாற்றத்தைக் கொண்டுவருவதுதான் இந்து சமய அறநெறிக் கல்வியின் மிகப் பிரதானமான நோக்கம் ஆகும். இந்து ஆலய அறங்காவலர்களாலும் இந்து சமய நிறுவனங்களாலும் இந்து சமய அறநெறிப் பாடசாலைகளை நிர்வாகம் செய்யப்படுதல் ஒரு புனிதமான பணியாகும். மக்கள் சேவையே மகேசன் சேவை என்பதற்கு அமைவாக இளம் சிறார்களுக்கு சமயக் கல்வியையும் ஒழுக்க விழுமியங்களையும் கற்பிக்கும் இந்து சமய அறநெறிப் பாடசாலைகளை சிறந்த முறையில் நிர்வாகம் செய்வதனை நாம் இறைவனுக்கு ஆற்றும் சேவையாகக் கொள்ள வேண்டும்.

## இந்து சமய அறநெறிப் பாடசாலைகளின் வளர்ச்சி

இந்து அறநெறிப் பாடசாலைகள் ஏறக்குறைய நான்கு தசாப்த காலத்திற்கு முன்னமேயே இலங்கையில் தோன்றி வளர்ச்சி அடைந்துள்ளன. இதற்கு முன்னரும் இத்தகைய அறக்கல்வியைப் போதிக்கும் கல்விக் கூடங்கள் இயங்கியதாகவும் அறிய முடிகிறது. ஆயினும் 1992 ஆம் ஆண்டே ஆலயங்கள்தோறும் அறநெறிப் பாடசாலைகள் அமைக்கப்பட வேண்டும் எனும் கருத்து கொள்கை அளவில் தீர்மானிக்கப்பட்டது. இத்தீர்மானம் அந்நாளைய இந்து சமய விவகாரங்களுக்கு பொறுப்பான இராஜாங்க அமைச்சர் தலைமையில் மேற்கொள்ளப்பட்டபோது அறநெறிப் பாடசாலைகளுக்கான வழிகாட்டியாகவும் ஊக்குவிக்கும் அமைப்பாகவும் இந்து சமய விவகாரங்களுக்குப் பொறுப்பான அமைச்சும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் இருக்க வேண்டும் எனும் தீர்மானமும் எடுத்துக்கொள்ளப்பட்டது. அதற்கமைய இந்து சமய விவகாரங்களுக்குப் பொறுப்பான அமைச்சின் வழிகாட்டுதலின் கீழ் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் அறநெறிப் பாடசாலைகளின் பொருட்டு பல சேவைகளைச் செய்து அறநெறிப் பாடசாலைகளின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றி வருகின்றது.

## இந்து சமய அறநெறிப் பாடசாலைகள் எதிர்நோக்கும் சவால்கள்

இந்து சமய அறநெறிக் கல்வியை வழங்கும் அறநெறிப் பாடசாலைகள் கடந்த காலத்தில் வளர்ச்சியடைந்து வந்த போதிலும் இன்று பல பிரச்சினைகளையும் சவால்களையும் இவ் அறநெறிப் பாடசாலைகள் எதிர்நோக்குகின்றன. சுமார் ஆறு இலட்சம் இந்துச் சிறார்கள் இந்துசமய அறநெறிக் கல்வியைப் பெறவேண்டிய நிலையில், இன்று சுமார் ஒரு இலட்சம் இந்துச் சிறார்களே அறநெறிப் பாடசாலைகளுக்கு செல்கின்றார்கள். கடந்த காலத்தில் இடம்பெற்ற யுத்தம் காரணமாகவும் நாட்டில் இந்து சமய அறநெறிக் கல்வி வளர்ச்சி பல இடங்களில் பாதிப்புற்றது. மேலும் ஞாயிற்றுக்கிழமைகளில் இடம்பெறும் பிரத்தியேக வகுப்புகளும் இந்துசமய அறநெறிப் பாடசாலைகளின் செயற்பாடுகளுக்குப் பெரும் சவாலாக உள்ளன. பெற்றோர் மத்தியில் அறநெறிக் கல்வியின் முக்கியத்துவம் தொடர்பான விழிப்புணர்வு இன்மை, அறநெறிக் கல்வியை வழங்கும் பயிற்றப்பட்ட ஆசிரியர்களின் பற்றாக்குறை, அறநெறிப் பாடசாலைகளுக்கான வளப்பற்றாக்குறை என பல்வேறு பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகளாகவும் சவால்களாகவும் உள்ளன.

## இந்து சமய அறநெறிக் கல்வி அபிவிருத்தித் திட்டம்

இந்து சமய அறநெறிப் பாடசாலைகள் எதிர்நோக்கும் சவால்களை முறியடித்து இலங்கை முழுவதும் இந்து சமய அறநெறிக் கல்வியை மேலும் விரிவுபடுத்துதலும் இந்து சமய அறநெறிப் பாடசாலைகளின் கற்பித்தல் செயற்பாடுகளை மேம்படுத்தி முன்னேற்றுதலுமே இந்து சமய அறநெறிக் கல்வி அபிவிருத்தித் திட்டத்தின் பிரதான நோக்கம் ஆகும். இத்திட்டத்தின் இலக்கினை அடையும் பொருட்டு இந்து சமய அறநெறிக் கல்விச் செயற்பாட்டில் பிரதான இடம் வகிக்கும் நான்கு தரப்புகளான ஆசிரியர், மாணவர், பெற்றோர் மற்றும் அறநெறிப் பாடசாலை என்போர் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்படும். மக்கள் பிரதிநிதிகள், அரச நிறுவனங்கள்,இந்து சமய நிறுவனங்கள், இந்து ஆலயங்கள் என்பனவற்றின் ஒத்துழைப்புடன் பின்வரும் செயற்பாடுகளை இந்து சமய அறநெறிக் கல்வி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இலங்கை முழுவதும் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

* இந்துசமய அறநெறிக் கல்வியை நாடு முழுவதும் மேம்படுத்தி முன்னேற்றும் நோக்கில் தேசிய, மாவட்ட மற்றும் பிரதேச இந்து சமய அறநெறிக் கல்வி அபிவிருத்திக் குழுக்களை அமைத்தல்.

* இந்து சமய அறநெறிப் பாடசாலைகளுக்கு மாணவர் வரவு மற்றும் அப்பாடசாலைகளின் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கான முறைமை ஒன்றை உருவாக்குதலும் நடைமுறைப்படுத்துதலும். அறநெறிப் பாடசாலைகளை தடைகள் ஏதுமில்லாத வகையில் இயங்கச் செய்தல்.

* அறநெறிக் கல்வியின் முக்கியத்துவம் தொடர்பான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழிப்புணர்வை இந்துமக்கள் மத்தியில் குறிப்பாக பெற்றோர் மத்தியில் ஏற்படுத்துதல்.

* இந்துசமய அறநெறிப் பாடசாலைகள் இல்லாத பிரதேசங்களில் புதிய அறநெறிப் பாடசாலைகளை உருவாக்கல்.

* பல்வேறு சிறப்பான விடயங்களை உள்ளடக்கி மறுசீரமைக்கப்பட்டுவரும் அறநெறிக் கல்விக்கான பாடவிதானங்களை அடிப்படையாகக் கொண்ட பாடப்புத்தகங்களை அனைத்து மாணவர்களுக்கும் வழங்குதல் மற்றும் அறநெறிப் பாடசாலைகளுக்கு மாணவர்கள் விருப்புடன் வரும் சூழலை மேம்படுத்துதல்.

* அறநெறிக் கல்வி பயிலும் மாணவர்களது ஆக்கத்திறன்களை வெளிக்கொணர்வதற்கான களம் அமைத்தலும் விருது வழங்கிப் பாராட்டுதலும்.

* அறநெறி மாணவர்களிடையே இசைக்குழு மற்றும் சேவைக்குழு ஒன்றை உருவாக்கி சமய, சமூகப் பணிகளில் ஈடுபடவைக்கும் நோக்கில் அவர்களுக்கான பொருத்தமான பயிற்சிகள், தலைமைத்துவப் பயிற்சியை வழங்கல்.

* அறநெறிக் கல்வியை வழங்கும் ஆசிரியர்களது திறனை விருத்தி செய்தல் மற்றும் ஊக்கப்படுத்தும் செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

* அறநெறிப் பாடசாலைகளுக்கான அவசிய வளங்களை பெற்றுக்கொடுத்தல்.

* சிறந்த அறநெறிப் பாடசாலைகளையும் அவற்றின் நிர்வாகத்தினரையும் மற்றும் ஆசிரியர்களையும் தெரிவு செய்து பாராட்டுதலும் விருது வழங்குதலும்.

மேற்குறிப்பிட்ட பிரதான செயற்பாடுகளை ஒழுங்கிணைக்கப்பட்ட திட்டமிடல் செயல்முறையூடாக மேற்கொள்வதோடு, இந்து சமய அறநெறிப் பாடசாலைகளை மேலும் சிறப்பாக இயக்குவதற்குரிய பல்வேறு செயற்பாடுகளில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் முனைப்பாக ஈடுபட்டு வருகின்றது. இதன்மூலம் இந்து சமய அறநெறிக் கல்வியை இலங்கை முழுவதும் மேலும் மேம்படுத்தி விரிவுபடுத்த முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.



திருமதி விஜயகலா மகேஸ்வரன்
சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர்
யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் (ஐ.தே.க.)

## மென்மேலும் பணி தொடர வாழ்த்துகிறேன்

20ஆவது ஆண்டில் காலடி பதிக்கும் தினக்குரல் பத்திரிகைக்கு வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

தமிழ் பேசும் மக்களின் குரலாக ஏனைய தமிழ் ஊடகங்களைப் போன்று தினக்குரல் பத்திரிகையும் செயற்பட்டு வருகின்றது. யுத்தகாலத்தின் போதும் அதன் பின்னரும் தமிழ் மக்களின் பிரச்சினைகளை முன்கொண்டு வருவதில் தினக்குரல் பத்திரிகையும் தனக்குரிய பணியினை செய்திருக்கின்றது.

தமிழ் மக்களின் நலனை முதன்மைப்படுத்தி மென்மேலும் செயற்பாடுகளை மேற்கொள்ளும் வகையில் தினக்குரல் பத்திரிகை தொடர்ந்தும் பணியாற்ற வேண்டுமெனக் கோரி 20 ஆவது அகவையில் தடம் பதிக்கும் பத்திரிகையினை மனமார வாழ்த்துகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20ஆவது பிறந்த தினத்தை கொண்டாடும் தினக்குரல் பத்திரிகைக்கு எமது நல்வாழ்த்துக்கள்

RIL PROPERTY(PVT)LTD

# PARKLAND

## சொகுசான அலுவலக இடவசதிகளை வழங்கும் PARKLAND கட்டடத்தொகுதி

RIL மூலம் பூர்த்தி செய்யப்பட்டுள்ள Parkland சொகுசு கட்டடத்தொகுதியானது நவீன அத்தியாவசிய அலுவலக வசதிகளுடன் கொழும்பு நகர மத்தியில் அமைந்துள்ளது. இதன் மூலம் Parkland வாடிக்கையாளர்களுக்கு தமது வியாபார நடவடிக்கைகளை இலகுவாகவும், நம்பிக்கையாகவும் முன்னெடுக்க முடியும்.









## வரையறுக்கப்பட்ட அலுவலக இடவசதிகள் மட்டுமே! இன்றே விரையுங்கள்!

- முகாமைத்துவப்படுத்தப்பட்ட 8 மாடிகளைக் கொண்ட வாகனம் நிறுத்துமிட வசதிகள்.
- சிறந்த கட்டட முகாமைத்துவத்துடன் 24 மணிநேர 100% உயர்நிலை மின்சார வசதிகள்.
- குரல், தரவு தொடர்பாடல் மற்றும் டிஜிட்டல் TV உட்கட்டமைப்பு வசதிகள்.
- மாடி உச்சியில் உணவருந்தும்போது நகர காட்சிகளையும் கண்டு மகிழலாம்.
- 24 மணிநேர CCTV வசதிகளுடன் மையப்படுத்தப்பட்ட உத்தரவு வழங்கும் திட்டம்.
- 24 மணிநேர பணியாளர் சேவைகள்.

www.rilproperty.lk | +94 (77) 660 1797 | +94 (77) 665 0811 | 33, Park Street, Colombo 02.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Your doorway to Australia
## and beyond after A/L's

# BSc. Applied Accounting Degree

- A globally recognized degree offered by the Institute of Chartered Accountants of Sri Lanka
- **The only "Applied Accounting" Degree approved by the University Grants Commission of Sri Lanka**
- Industry exposure through internship and work placement at reputed organizations after 2 years
- Option of completing 2 years of your degree in Sri Lanka and enroll at La Trobe University, Australia for the final year.

Entry requirement: 3 passes in any stream at GCE A/L's or Edexcel / Cambridge A/L's

CA SCHOOL OF ACCOUNTING & BUSINESS

THE INSTITUTE OF CHARTERED ACCOUNTANTS OF SRI LANKA

Investment
Annually - Rs 180 000
To complete all 3 years in Sri Lanka - Rs. 540,000

**Enroll now for the September intake pending A/L results**

**Call us on**
**0710 235 263 or 0112 352 077**
**Email: sab@casrilanka.org**
**facebook.com/sabcasl**
**www.casrilanka.com**

ACCREDITED PROGRAM

The Institute of Chartered Accountants of Sri Lanka, 30A, Malalasekera Mawatha, Colombo 7.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச சேவையில் நியமன ஒழுங்கு
## அலுவலரின் சுயவிபரக்கோவை ஏற்பாடுகள்



ஏ.எல்.முஹம்மட் முக்தார்
பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
கல்முனை

அரசாங்க சேவைக்கான நியமனங்கள் 1987 ஆம் ஆண்டிலிருந்து மத்திய அரச சேவை, மாகாண அரச சேவை என இரு பிரிவாக வழங்கப்படுகின்றன. மத்திய அரசிற்கான சேவையினை அரச சேவை ஆணைக்குழுவும் மாகாண அரச சேவைக்கான சேவைகளை மாகாண அரச சேவை ஆணைக்குழுவும் மேற்பார்வை செய்து வருகின்றன. எவ்வாறாயினும் இலங்கை அரசியலமைப்புச் சட்டப்படி மாகாண அரச சேவையில் அல்லது மத்திய அரச சேவையில் பாதிக்கப்படும் எவரும் அரச சேவை ஆணைக்குழுவிற்கு மேன்முறையீடு செய்து தமக்கான தீர்வினைப் பெற்றுக்கொள்ள முடியும்.

அரசாங்க சேவையில் பொதுவாக நியமனங்கள் அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்பு அல்லது ஆட்சேர்ப்பு திட்டத்துக்கமைய அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்காக இடம்பெறும். நியமனங்கள் எழுத்துமூலப் பரீட்சை, தொழில் சார் தேர்வுகள், நேர்முகப் பரீட்சைகளில் பெறப்பட்ட புள்ளிகளின் திறமை ஒழுங்கில் மட்டும் செய்யப்படுதல் வேண்டும் என அரசாங்க சேவை ஆணைக்குழுவின் 20.02.2009 ஆம் திகதியிட்ட 1589/ 30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிக்கையின் மூலம் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

நேர்முகப் பரீட்சை மூலமாக புள்ளிகள் குறித்தொதுக்கப்படுமிடத்து புள்ளியிடல் திட்டமானது வெற்றிடங்களை நிரப்புவதற்காக விண்ணப்பங்களைக் கோரும் விளம்பரத்தில் வெளிப்படையாக உள்ளடக்கப்படல் வேண்டும். தெரிவுகள் நேர்முகப் பரீட்சை மூலமாக மட்டும் அல்லது நேர்முகப் பரீட்சை மற்றும் தொழில்சார் தேர்வு மூலமாகச் செய்யப்படும் போது அத்தகைய நேர்முகப் பரீட்சை சேவைப் பிரமாணக் குறிப்பு அல்லது ஆட்சேர்ப்புத் திட்டத்தின்படி ஒரு முறைமையில் அமைந்ததாக இருத்தல் வேண்டும். அத்துடன் நேர்முகப் பரீட்சையின் புள்ளியிடல் திட்டங்களும் தொழில்சார் தேர்வும் அப்பதவிக்கான விண்ணப்பங்களைக் கோரும் விளம்பரத்தில் கட்டாயம் உள்ளடக்கப்படல் வேண்டும்.

ஆட்சேர்ப்பானது போட்டிப்பரீட்சை ஒன்றின் பெறுபேறுகள் மீது மட்டும் செயற்படுமிடத்து அவ்வாறான நியமனமானது போட்டிப் பரீட்சையில் விண்ணப்பதாரர் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் திறமை அடிப்படையில் மட்டும் செய்யப்படுதல் வேண்டும். ஆயினும் எழுத்துமூலப் பரீட்சை, நேர்முகப் பரீட்சை, தொழில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சார் தேர்வுப் பரீட்சை என்பவற்றின் மீது செய்யப்படும் நியமனங்கள் விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் பெற்றுக்கொண்ட எழுத்துப் பரீட்சை, நேர்முகப் பரீட்சை, தொழில்சார் தேர்வுப் பரீட்சை ஆகியவற்றில் கூட்டுப் புள்ளிகளின் அடிப்படையில் நியமனங்களை செய்தல் வேண்டும்.


நியமனம் ஒன்றை பெறும் ஒருவர் அவ்வாறான நியமனத்தைப் பெற்ற ஒரு மாதத்தினுள் நியமிப்புச் செய்யும் அதிகாரி அல்லது நிர்வாக அதிகாரி அல்லது திணைக்களத் தலைவர் அல்லது நிறுவனத் தலைவர் முன்னிலையில் தமது நியமனத்தைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். நியமனம் பெறுபவர் கடமை ஏற்கும் முதலாவது நாளிலேயே நியமிப்புச் செய்யும் அதிகாரியிடம் அல்லது அவரால் பணிக்கப்படுபவரிடம் தான் கடமைக்கு வந்துள்ளதாக உறுதிப்படுத்திய கடிதம் ஒன்றை கையளித்தல் வேண்டும். அத்துடன் தேசிய அடையாள அட்டையின் பிரதி, பிறப்பு பதிவுச் சான்றிதழ், அடிப்படைக் கல்வித் தகைமைகள் மற்றும் தகைமைகளை உறுதிசெய்யும் சான்றிதழ்கள், திருமணச் சான்றிதழ், பிள்ளைகளின் பிறப்புச் சான்றிதழ், சொத்துப் பிரகடனம், சொந்த முகவரி, தொலைபேசி இலக்கம் என்பனவற்றையும் கையளித்தல் வேண்டும்.

நியமனத்தைப் பெற்றுக்கொண்டவர் கடமைக்கு வருகை தந்த பின்னர் அவரது நிறுவனத் தலைவரால் அவருக்கென பெயர் வழிக்கோவை ஒன்றை ஆயத்தமாக்குதல் வேண்டும். அவற்றில் நியமனக் கடிதப் பிரதி, வரலாற்றுத்தாள், ஓய்வூதியத் திட்டத்தின் கீழான பிரகடனப் பிரதி, பிணைப்பணம் தொடர்பான சான்று, மருத்துவ அறிக்கை என்பன உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

அரச சேவையில் நியமனம் பெறும் ஒரு உத்தியோகத்தர் தொடர்பாக அவர் கடமையாற்றும் அலுவலகத்தில் சுயவிபரக் கோவையொன்று அவர் சார்பாக பேணப்படும். இதுபற்றி தாபனக் கோவையில் அத்தியாயம் VIஇன் IVம் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு பேணப்படும் சுயவிபரக் கோவையானது ஒரு அலுவலகத்திலிருந்து இன்னொரு அலுவலகத்திற்கு இடமாற்றம் செய்யப்படும்போது இடமாற்றம் செய்யப்பட்டு 14 நாட்களுக்குள் சம்பந்தப்பட்ட புதிய சேவை நிலையத்திற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

அவ்வாறு அனுப்பி வைக்கப்படும் சுயவிபரக் கோவையுடன் உத்தியோகத்தருடைய அடுத்த சம்பள ஏற்றத்தை கொடுப்பனவு செய்வதற்காக உத்தியோகத்தரின் கடைசிச் சம்பள ஏற்றத் திகதியிலிருந்து இடமாற்றத்தினை நடைமுறைப்படுத்தும் திகதி வரையுள்ள காலப்பகுதிக்கான அவருடைய சிபாரிசு, உத்தியோகத்தரின் செயலாற்று மதிப்பீட்டு அறிக்கை, உத்தியோகத்தரின் லீவு விபரங்கள், உத்தியோகத்தரினால் பெற்றுக்கொள்ளப்பட்ட புகைவண்டி ஆணைச்சீட்டு பற்றிய விபரம், உத்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவுமையச் சமூகத்தில் அனைவருக்கும் உயர்கல்வி- இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் பங்களிப்பு

அறிவே பிரதான மூலதனமாகவும் ஊழியர்கள் அனைவரும் அறிவுசார் ஊழியர்களாகவும் விளங்கும் இன்றைய அறிவுமையச் சமூகத்தில் வாழும் ஒவ்வொரு பிரசையும் தனது அறிவினை இற்றைப்படுத்திக் கொள்ளும் வகையில் வாழ்க்கை நீடித்த கற்போனாகத் தன்னை வளப்படுத்திக் கொள்ள வேண்டியது இன்றியமையாததாகும். அந்த வகையில் "அனைவருக்கும் கல்வி" என்பதற்கும் அப்பால் "அனைவருக்கும் உயர்கல்வி" எனும் எண்ணக்கருவே தற்போது முனைப்புப் பெற்று வருகின்றது. இலங்கையைப் பொறுத்தவரை பாலர் கல்வி முதல் பல்கலைக்கழகம் வரை இலவசக் கல்வி வழங்கப்படுகின்ற போதிலும், அனைவருக்கும் உயர்கல்வி என்பது இன்னமும் கேள்விக்குரிய விடயமாகவே உள்ளது. பதின்மூன்று வருட கால பாடசாலைக் கல்வியின் நிறைவில் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்களில் மூன்று வீதத்திலும் குறைந்த எண்ணிக்கையானோருக்கு மட்டுமே பல்கலைக்கழக அனுமதி கிடைக்கின்றது. சகல பாடங்களிலும் சித்திபெற்ற பெரும்பாலான மாணவர்களின் உயர்கல்விக் கனவுகள் கலைந்து போகின்றன. மேலும், வறுமை, போர் மற்றும் இயற்கை அனர்த்தங்களின் விளைவுகள் போன்ற இன்னோரன்ன காரணங்களால், பாடசாலையில் இருந்து இடைவிலகுவோர் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது. இன்றைய அறிவுமையச் சமூகத்தில் இவ்வாறு உயர்கல்வி வாய்ப்பினை இழந்தவர்கள் அல்லது நிராகரிக்கப்பட்டவர்களது எதிர்காலம் பெருஞ்சவாலாக மேலெழுவதுடன், நாட்டின் அபிவிருத்திக்காக இவர்களது ஆற்றல்களும், திறன்களும் பயன்படுத்தப்படாது விரயமாகின்றமையும் பிரச்சினைக்குரிய விடயங்களாகும். இப்பிரச்சினைகளுக்கும் வினாக்களுக்கும் தீர்வுகளை முன்வைத்து அனைவருக்கும் கல்வி எனும் கனவினை நனவாக்கும் வகையில், இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம் அதன் கல்விக்கரங்களால் அனைவரையும் அரவணைக்கின்றது. அந்த வகையில், இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம், அதன் கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள், அவற்றுக்கான நுழைவுத் தகைமைகள் என்பன பற்றி இக்கட்டுரை விபரிக்கின்றது.

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகமானது, 1978 ஆம் ஆண்டின் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 16ஆம் இலக்க சட்டத்திற்கமைய 1980 இல் தாபிக்கப்பட்டது. இலங்கையிலுள்ள ஏனைய மரபு சார் பல்கலைக்கழகங்களுக்கு முற்றிலும் சமமான சட்ட மற்றும் கல்விசார் தகுதிகளைக் கொண்ட அரச பல்கலைக்கழகமான இலங்கைத் திறந்த பல்கலைக்கழகமானது வயது, பால், இனம், மதம், மொழி, என்ற சகல வேறு பாடுகளையும் கடந்து அனைவருக்கும் தரமான உயர்கல்வியை திறந்த தொலைக்கல்வி முறையில் வழங்குவதன் மூலம் இலங்கையின் உயர்கல்வித் துறையில் சிறப்பிடம் பெறுகின்றது. இலங்கைத் தீவு முழுதும் பரந்துள்ள 8 பிராந்திய நிலையங்கள், 19 கற்கை நிலையங்கள் மற்றும் போதனா நிலையங்கள் ஊடாக சான்றிதழ் கற்கை முதல் கலாநிதிப் பட்டம் வரையிலான அனைத்து கல்வி வாய்ப்புக்களையும் வழங்குவதன் மூலம், சகல தரப்பினரதும் உயர்கல்வி அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் காத்திரமான சேவையினை வழங்கி வரும் இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் தற்போதைய மாணவர் எண்ணிக்கை 40,000 இலும் அதிகம் என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகமானது கல்விப் பீடம், பொறியியல் தொழிநுட்ப பீடம், இயற்கை விஞ்ஞானங்கள் பீடம், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம், சுகாதார விஞ்ஞானங்கள் பீடம் ஆகிய ஐந்து பீடங்கள் ஊடாக பல்வேறு கற்கை நிகழ்ச்சித் திட்டங்களை வழங்கி வருகின்றது. க.பொ.த. உயர்தரத்தில் மூன்று பாடங்களில் சித்தியடைந்தவர்கள் இக்கற்கை நிகழ்ச்சித் திட்டங்களில் இணைந்து தத்தமது துறைசார்ந்த இளமாணிப்பட்டம் ஒன்றினைப் பெற்றுக்கொள்ள முடியும். மற்றைய கற்கைத் திட்டங்களோடு கூட இலங்கைத் திறந்த பல்கலைக்கழகமானது பொறியியல் தொழிநுட்பம், இயற்கை விஞ்ஞானம், சமூக விஞ்ஞானம், சட்டம், முகாமைத்துவம் ஆகிய துறைகளில் சிறப்பு இளமாணிப்பட்ட நெறிகளை வழங்குகிறது.

மேலும், இளையோர் அபிவிருத்தியில் டிப்ளோமா நிகழ்ச்சித் திட்டம், முன்பள்ளிக் கல்வியில் டிப்ளோமா நிகழ்ச்சித் திட்டம் போன்றவற்றில் இணைந்து கொள்வதன் மூலம் எதிர்காலத்தில் இத்துறை சார்ந்த பட்டம் ஒன்றினைப் பெறமுடியும்.

இவற்றைத் தவிர புதிதாகத் தாபிக்கப்பட்ட சுகாதார விஞ்ஞானங்கள் பீடத்தினால், சுகாதாரத் துறையில் பணியாற்றுவோரின் வாண்மை விருத்தியை நோக்காகக் கொண்டு பல்வேறு கற்கை நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்படுகின்றன. தாதியியல் விஞ்ஞானமாணிப் பட்டம், மருத்துவ ஆய்வுகூடத் தொழிநுட்பத்தில் விஞ்ஞானமாணிப் பட்டம், மருந்தியல் விஞ்ஞானமாணிப் பட்டம் என்பன இப்பீடத்தினால் வழங்கப்படுகின்றன.

இலங்கையின் கல்வித்துறைசார் ஆளணியினரின் வாண்மை விருத்தியிலும் கல்வியிலும் இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் கல்விப் பீடத்தின் மூன்று துறைகளினதும் பங்களிப்பு அளப்பரியது. இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலைக் கல்வித்துறை வருடந்தோறும் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட பட்டதாரி ஆசிரியர்களின் வாண்மை விருத்திக்காக பட்டமேற்கல்வி டிப்ளோமாவினை வழங்கி வருகின்றது. மேலும், கல்வியியலில் இளமாணி, முதுகல்விமாணி, ஆசிரியர் கல்வியில் முதுமாணி என பல்வேறுபட்ட மற்றும் பட்டமேற்கற்கை வாய்ப்புக்களையும் வழங்குகிறது. விசேட தேவைகள் சார் கல்வித்துறையானது விசேட தேவைகள்சார் பட்டமேற் கல்வி டிப்ளோமா மற்றும் விசேட தேவைகள்சார் கல்வியில் இளமாணிப் பட்டங்களை வழங்குகின்றது. முன்பிள்ளைப் பருவ மற்றும் ஆரம்பக் கல்வித்துறையானது முன்பள்ளிக் கல்விச் சான்றிதழ், முன்பள்ளிக் கல்வியில் உயர்கல்விச் சான்றிதழ், முன்பள்ளிக் கல்வி டிப்ளோமா, முன்பள்ளி மற்றும் ஆரம்ப பிள்ளைப்பருவக் கல்வியில் கல்வியியல் இளமாணிப் பட்டம் போன்ற கற்கை நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் க.பொ.த. சாதாரணதரம் கற்றவர்கள் உட்பட அனைவருக்கும் கல்வித்துறையில் உயர்கல்வி வாய்ப்பினை வழங்குகிறது.

இவற்றைத் தவிர ஆங்கிலம், சிங்களம், தமிழ், சுற்றுலாத்துறை என பல்வேறு துறைகளில் சான்றிதழ் கற்கை நெறிகளும் வழங்கப்படுகின்றன. தொழில் உலகின் கேள்விகளுக்கும் சமூக எதிர்பார்ப்புகளுக்கும் அமைய புதிய கற்கை நிகழ்ச்சித்திட்டங்களை அறிமுகப்படுத்த இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம் உத்தேசித்துள்ளது. உளவியல் மற்றும் வழிகாட்டலில் இளமாணிப் பட்டம், பாடசாலை மற்றும் கல்வி முகாமைத்துவத்தில் பட்டமேற்கல்வி டிப்ளோமா, விசேட தேவைகள்சார் கல்வியில் முதுமாணிப் பட்டம் போன்றன இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தினால் எதிர்காலத்தில் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்களாகும்.

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம் பின்பற்றும் தொலைக்கல்வி மூலமான கற்கை முறைமை, தொழில் புரியும் மாணவர்களுக்கு ஒரு பெரிய வரப்பிரசாதமாகும். ஏற்கனவே குறிப்பிட்ட பிரகாரம், நாடு முழுவதும் எமது பிராந்திய நிலையங்கள், கற்கை நிலையங்கள் இருப்பதனால் மாணவர்கள் தாம் இருக்கும் இடங்களில் இருந்து கொண்டே தமது கற்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வாய்ப்பு உள்ளது.

எந்த வயதுப் பிரிவினரும், எம்மொழி பேசுவோரும், எத்தொழில் புரிவோரும் தமது சமூக பொருளாதார மற்றும் தொழில் சார் பொறுப்புக்களுடன் இணைந்ததாக உயர் கல்வியையும் தொடரக்கூடிய வகையில் நெகிழ்ச்சிப் போக்கான கற்கை நிகழ்ச்சித் திட்டங்களை வழங்குவதன் மூலம் அனைவருக்கும் உயர்தரமான, வினைத்திறன் மிக்க, சமத்துவமான வாழ்க்கை நீடித்த கல்விக்கு இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம் வாய்ப்பளிக்கின்றது. பதினெட்டு வயதிற்கு மேற்பட்ட எவரும் தத்தமது முன் தகைமைகளுக்கேற்ப உரிய கற்கை நிகழ்ச்சித் திட்டங்களில் இணைந்து தமது உயர் கல்வியினைப் பூர்த்திசெய்ய முடியும். இன்றைய நவீன உலகின் செல்நெறிகளுக்கேற்ப இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் பரந்தளவிலான கற்கை வாய்ப்புக்களை அனைவரும் சிறந்த முறையில் பயன்படுத்தி தமது வாழ்க்கைத் தரங்களை மேம்படுத்திக் கொள்ள வேண்டும்.

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகமானது, உயர்கல்வி கற்க விரும்பும் அனைவருக்கும் வாய்ப்பளிப்பதுடன், மற்றைய பல்கலைக்கழகங்களைப் போலல்லாது கற்க விரும்பும் மாணவரின் தேவைக்கேற்ப, நெகிழ்ச்சித் தன்மையைக் கொண்டிருப்பதுடன், அவர்கள் இருக்கும் இடத்திற்கே உயர் கல்வியைக் கொண்டு வருகிறது. இலங்கையில் உள்ள ஒவ்வொரு பிரசையும் தனது தேவைக்கேற்புடைய ஒரு கற்கை நெறியைத் தெரிந்தெடுத்து தனது உயர்கல்வியைத் தொடர வாய்ப்பளிப்பதே திறந்த பல்கலைக்கழகத்தின் நோக்கமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தியோகத்தரின் சம்பள விபரங்கள், அவரது வெளி நாட்டு பிரயாண விபரங்கள், உத்தியோகத்தர் கலந்து கொண்ட கல்விநெறிகள், மாநாடு பற்றிய விபரங்கள் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

சுயவிபரக் கோவையில் தேவையற்ற அலுவலரைப் பாதிக்கக் கூடிய எந்தவொரு ஆவணமும் கோவைப்படுத்தப்படக்கூடாது. எனினும் குற்றப் பத்திரம் ஒன்று வழங்கப்பட்டு அக்குற்றப்பத்திரத்தின் அடிப்படையில் முறையான ஒழுக்காற்று விசாரணைகள் இடம்பெற்று இறுதியாக அவ் உத்தியோகத்தர் குற்றவாளியென நிரூபிக்கப்படும் பட்சத்தில் அவருக்கு வழங்கப்பட்ட தண்டனையையும் அவர் புரிந்த குற்றத்தையும் எழுத்துமூலம் குறிப்பிட்டு கோவையிட வேண்டும். இதுபற்றி தாபனக்கோவையின் அத்தியாயம் VIம் பிரிவின் உப பிரிவு 5:3 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒரு உத்தியோகத்தரின் சுயவிபரக் கோவையில் அடங்கியுள்ள வரலாற்றுத்தாள் (History Sheet) ஒவ்வொரு ஐந்து வருடத்திற்கு ஒருமுறை ஒரு பதவிநிலை உத்தியோகத்தர் முன்பாக சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர் பார்வையிட அனுமதிக்கப்பட வேண்டும். அவ்வாறு அவர் பார்வையிட்டமை பற்றி அதே உத்தியோகத்தரிடமிருந்து எழுத்துமூல சான்றிதழொன்றைப் பெற்று கோவைப்படுத்த வேண்டும். இதுபற்றி தாபனக் கோவையின் VIம் அத்தியாயத்தின் உப பிரிவு 2:9:6 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும் அதிகமான அலுவலகங்களில் இந் நடைமுறைகள் பின்பற்றப்படாதிருப்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர் ஓய்வுபெறும் வரை அவரது வாழ்நாளில் அவரது சுயவிபரக்கோவையை அவர் பார்வையிட முடியாத சந்தர்ப்பங்கள் அலுவலகங்களில் ஏற்படுத்தப்படுகின்றன. இதன் காரணமாக தாம் ஓய்வுபெறும் காலத்தில் பல்வேறு அசௌகரியங்களுக்கு உத்தியோகத்தர்கள் முகங்கொடுக்க வேண்டி ஏற்படுகின்றது.

சுயவிபரக்கோவை என்பது பல அலுவலகங்களில் மிகவும் இரகசியமான ஒன்றாகப் பேணப்பட்டு வருகின்றது. இதன் காரணமாக தமது சுயவிபரக்கோவையில் எவை கோவையிடப்பட்டுள்ளன என்பதை அறிந்து கொள்ள முடியாத நிலை பெரும்பாலான உத்தியோகத்தர்களுக்கு ஏற்படுகின்றது. சில உயரதிகாரிகள் தமக்கு வேண்டப்படாதோரின் சுயவிபரக்கோவைகளை தொலைத்துவிடுவதும் அல்லது தமக்கு வேண்டப்படாதவரின் சுயவிபரக்கோவையில் அவரைப் பாதிக்கக்கூடிய விடயங்களை கோவைப்படுத்துவதும் இடம்பெற்று வருகின்றன.

ஒரு உத்தியோகத்தரது சுயவிபரக்கோவையில் அடங்கியிருக்க வேண்டிய ஆவணங்கள்

1. முதல் நியமனக் கடிதம்
2. கடமையேற்றல் கடிதம்
3. பிறப்புச் சான்றிதழ்
4. பெயரில் மாற்றம் இருப்பின் அதற்கான சத்தியக் கடதாசி
5. ஒப்பந்தப் படிவம் [பொது - 160]
6. சத்தியப் பிரமாணம் [பொது - 278]
7. சொத்துப் பிரகடனப் படிவம் [பொது - 261]
8. ஆறாவது திருத்தம்
9. கல்விச் சான்றிதழ்கள்
10. பரீட்சைத் திணைக்களத்தினால் உறுதிப் படுத்தப்பட்ட கல்விச் சான்றிதழ்கள்
11. தொழிற் தகைமைச் சான்றிதழ்கள்
12. வரலாற்றுத் தாள் [பொது 53 A]
13. நற்சாட்சிப்பத்திரம்
14. திருமணச் சான்றிதழ்
15. வைத்திய அத்தாட்சிப்பத்திரம்
16. விதவை, அநாதை ஓய்வூதிய விண்ணப்பமும் இலக்கமும்
17. சேவையில் உறுதிப்படுத்திய கடிதம்
18. பதவி உயர்வுக் கடிதம்
19. பதவி உயர்வுக்கமைவான சம்பளமாற்றக் கடிதம்
20. ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பின் அது தொடர்பான விபரங்களும் தீர்ப்பும்
21. இலங்கைக்கு வெளியே செல்வதற்கான விடுமுறை விண்ணப்பமும் லீவு அனுமதிக்கப்பட்ட கடிதமும்
22. சம்பளமற்ற லீவுகள் பெற்றிருப்பின் அது தொடர்பான விபரங்கள் அடங்கிய கடிதங்கள்
23. மாகாண உள்ளீர்ப்பு
24. இளைப்பாறுவதற்கான விண்ணப்பம்
25. ஓய்வூதியம் அங்கீகரிக்கப்பட்ட கடிதம்

ஆசிரியராயின் மேலே குறிப்பிட்ட ஆவணங்களுடன் மேலதிகமாக பின்வருவன உள்ளடக்கப்படும்.

1. மாவட்ட சேவைத்திட்ட உறுதியுரை
2. ஆசிரியர் விபரப் படிவம் [275]
3. ஆசிரிய பதிவிலக்கம்



20 Anniversary

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழியர்களைத் திருப்தியுடன் பணியாற்றச் செய்வது நிறுவனங்களின் வெற்றிக்கு உதவும்

இலங்கை மசகு எண்ணெய் சந்தை 55 மில்லியன் லீற்றர் எண்ணெயை உற்பத்தி செய்யும் சிறிய சந்தையாகும். பிரதானமாக 13 நபர்களால் நாடு முழுவதும் மசகு எண்ணெய் விநியோகிக்கப்படுவதுடன், அவற்றில் பிரதானமாக மூவர் மட்டுமே உள்நாட்டு மசகு எண்ணெய் உற்பத்தியில் ஈடுபடுகின்றனர். இச்சிறிய சந்தையின் செயற்பாடுகள், ஏற்றுமதி, ஊழியர்களின் தொழில் திருப்தி, நுகர்வோர் திருப்தி மற்றும் எதிர்பார்ப்பு, பொருளாதாரப் பங்களிப்பு என்பவற்றை அறிந்து கொள்வதற்காக Chevron Lubricants Lanka PLCயின் பிரதம நிறைவேற்று அதிகாரி கிஷு கோம்ஸை அவர் அலுவலகத்தில் சந்தித்த போது அவர் இவ்வாறு விபரித்தார்.

ஏனைய நாடுகளை விடவும் இலங்கையின் உள்நாட்டு மசகு எண்ணெய் உற்பத்திச் சந்தை மிகச்சிறியது. எனவே, கேள்வி ஏற்படும் போது சர்வதேச சந்தையின் விலை, அரச வரி விதிப்புக் கொள்கை என்பவற்றை ஆய்வு செய்து சாதகமான ஒன்றை நாம் தெரிவு செய்து கொள்வனவு செய்வோம். எனினும் அரச விதிமுறைகள், வரி விதிப்புக் கொள்கைகள், வாடிக்கையாளர்களின் பழக்க வழக்கங்களில் மாற்றம் என்பன இத்துறையில் எமக்கு சவாலான விடயங்களாகும். மசகு எண்ணெய் உற்பத்தியை மேற்கொள்வதற்கான தொழில்நுட்ப உதவி மூல வளங்கள் மற்றும் இயந்திர உதவி என்பவற்றை அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் சிங்கப்பூர் போன்ற நாடுகளிலிருந்து பெற்றுக் கொள்கிறோம். மற்றும் விஞ்ஞான இரசாயனவியல் அறிவு இத்துறைக்கு முக்கியமானதாகும்.

வாடிக்கையாளர் திருப்தி எமக்கு மிகவும் முக்கியமானதொன்றாகும். நாம் இரு வகையான வாடிக்கையாளர்களுக்கு வழங்குனராக உள்ளோம். ஒன்று தொழிற்றுறை அமைப்புகளான இலங்கை மின்சார சபை, போக்குவரத்து சபை, புகையிரதத் திணைக்களம், முப்படைகள், கட்டிட நிர்மாண நிறுவனங்கள், இறப்பர் தொழிற்சாலைகள் என்பவற்றைக் குறிப்பிடலாம். இரண்டாவது சில்லறை வியாபாரிகளாவர். போட்டியாளர்களுக்கு மத்தியில் நுகர்வோருக்கு எது தேவை என்பதை அறிந்தே நாம் தொழிற்படுகின்றோம்.

மசகு எண்ணெய் எமது பாரம்பரிய ஏற்றுமதியாக இல்லாத போதிலும் பங்களாதேஷ் மற்றும் மாலைதீவு போன்ற நாடுகளுக்கு நாம் ஏற்றுமதியை மேற்கொள்வதன் மூலம் நாட்டின் வருமானத்துறைக்கு பங்களிக்கின்றோம். மற்றும் எண்ணெய் இறக்குமதியின் போது செலுத்தும் வரிகளின் மூலமும் நாம் பொருளாதாரத்துக்கு துணையாய் உள்ளோம்.

வாடிக்கையாளர் திருப்தியைப் போலவே ஊழியர்களின் திருப்தியும் எமக்கு முக்கியமானதாகும். தொழிற்றுறைக்கு ஒருவரை தெரிவு செய்யும் போது அவரின் திறமை அடிப்படையிலேயே வேலைக்கு அமர்த்துகிறோம். அத்துடன், தொடர்ச்சியாக அவரை மேம்படுத்திக் கொள்வதற்கான பயிற்சிகளையும் ஊக்கப்படுத்தல்களையும் தொழில் பாதுகாப்பையும் நாம் வழங்க வேண்டியது அவசியம்.



**Chevron Lubricants Lanka**
**பிரதம நிறைவேற்று அதிகாரி**
**கிஷு கோம்ஸ்**

அதேவேளை, வாழ்க்கைத் தரமொன்றை முன்னேற்றுவதற்கான சம்பளம் மற்றும் சலுகைகள், தொழில் முன்னேற்றம், ஊழியர் நலன்புரி சேவைகள் போன்ற ஊழியர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்வதன் மூலம் ஊழியர்களை திருப்தியாகவும் மகிழ்வாகவும் வைத்துக்கொள்ள முடிவதுடன் நிறுவனத்தை முன்னோக்கிய வெற்றிப் பாதையில் கொண்டு செல்ல முடிகிறது.

மேலும் இலங்கையில் காணப்படும் பல நிறுவனங்களால் உயர் பதவிகளில் வெளிநாட்டவர் இருப்பது எமக்கு மிகவும் வருத்தமான விடயமாக உள்ளது. இலங்கையர்கள் அனேகமானவர்கள் நிறுவனத்தில் உயர் பதவியில் இருக்க வேண்டிய திறமை மற்றும் கல்வியறிவு கொண்டவர்கள். இருப்பினும் கல்வியறிவு தவிர்த்து தலைமைத்துவம், நன்நடத்தை, ஆக்கத்திறன், வடிவமைப்புத் திறன், முகாமைத்துவ அறிவு, அறிவுசார் தகைமைகள், பொது அறிவு, குறிப்பிட்டதொரு பிரச்சினையை எதிர்கொள்ளும் தைரியம் மற்றும் சமயோசித புத்தி, முக்கியமாக தன்னம்பிக்கை என்பவற்றை மேம்படுத்திக் கொள்வதன் மூலம் அவர்கள் தொழிற்றுறையில் உச்ச நிலையை அடைய முடிவதுடன் இலங்கையில் தொழிற்படும் நிறுவனங்களில் வெளிநாட்டவர்களின் பங்களிப்பை குறைக்க முடியும். மற்றும் எமது Chevron Lubricants Lanka நிறுவனம் 100% இலங்கை ஊழியர்களைக் கொண்டு இயங்குவதுடன் வெளிநாட்டவர்களுக்கு நாம் ஒருபோதும் வாய்ப்பளிப்பதில்லை என்றார்.

**- எம்.ஆர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகச் சமூகம் கல்வியில் அபிவிருத்தி அடைந்து வருகிறதா?

## மலையகக் கல்வி அபிவிருத்தி மன்றம் வழங்கும் பதில்



ஒரு சமூகத்தின் வளர்ச்சிக்கு என்றும் கல்வியே பிரதான இடத்தை வகிப்பது நாம் அறிந்ததே. அதாவது பல்வேறு விடயங்களில் பின்தங்கியுள்ள சமூகத்தை கல்வியறிவு ஒன்றினாலேயே அபிவிருத்தியடைச் செய்ய முடியும். இந்நிலையில் எமது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கிய பங்களிப்பினை வழங்கி வரும் நிலையிலும் பல்வேறு விடயங்களில் கவனிப்பாரற்று பின்தங்கிய நிலையில் உள்ள மலையக சமூகமானது இன்று கல்வித்துறையில் எவ்வாறான முன்னேற்றத்தைக் கண்டுள்ளது என்பது எம் முன்னேயுள்ள கேள்வியாகும்.

இவ்வேளை மலையகத்தில் கல்விப் பணியாற்றி வரும் மலையக கல்வி அபிவிருத்தி மன்றமானது, இக்கேள்விக்கு ஆம் என்று விடை பகிர்கிறது. முன்னர் மலையகத்தில் இருந்து பல்கலைக்கழகங்களுக்கு சுமார் 150 தொடக்கம் 200 பேர் வரையிலுமே தெரிவு செய்யப்பட்டனர். ஆனால், இன்று ஆயிரத்துக்கும் மேல் பல்கலைக்கழகங்களுக்கு தெரிவு செய்யப்படுகின்றனர். இன்று மலையக சமூக மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காண்பிக்கின்றனர். கொழும்பு பிரதான வீதியில் ஆடை மற்றும் தங்கநகை விற்பனை நிலையங்களில் விற்பனையாளர்களாகப் பணிபுரிபவர்கள் கூட கல்விப் பொதுத்தராதர சாதாரண தரம் (O/L) வரையில் கல்வி பயின்றவர்களாக உள்ளனர் என்று மலையக கல்வி அபிவிருத்தி மன்றத்தின் தலைவர் எம்.சிவகுமார், செயலாளரான பி.தவக்குமார் மற்றும் பணிப்பாளரான எஸ். மோகன்ராஜ் ஆகியோர் தெரிவிக்கின்றனர்.

மலையக சமூகத்தின் கல்வியை மேலோங்கச் செய்ய வேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டு எவ்வித அரசியல், மத, இன வேறுபாடுகளுக்கும் அப்பால் 10 வருடங்களுக்கு முன்னர் சுமார் 15 பேருடன் கொழும்பு தலைநகரில் ஆரம்பிக்கப்பட்ட இந்த சமூகநல அமைப்பில் இன்று சுமார் 2500 பேர் அங்கத்தவர்களாக உள்ளனர்.

8 போஷகர்களின் உதவியுடன் எவ்வித அரசியல் தலையீடுமின்றி தனது கல்விச் சேவையை மேற்கொண்டுவரும் இந்த மன்றமானது, கொழும்பு Sea Streetஇல் 189 ஆம் இலக்க முகவரியில் இயங்கிவரும் நிலையில், மலையக கல்வி மேம்பாட்டுக்குச் செய்யும் பணிகள் எவை? என்ற வினா எம் நாவில் இருந்து எழுகிறது.

இதற்கு மூவரும் ஒன்றன்பின் ஒன்றாக தமது பதில்களை அளிக்கின்றனர். மலையகத்தில் இன்று கல்வியில் விழிப்புணர்வு ஏற்பட்டு வருகிறது. வைத்தியர்கள், பொறியியலாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் என இச்சமூகத்தில் இருந்து உருவாக்கப்படுகிறார்கள். கல்வியில் ஆர்வம் இருந்த போதிலும் இங்கு தேவைப்படுவது சரியான வழிகாட்டலே. இந்த வழிகாட்டலை வழங்கும் முகமாக மலையக கல்வி அபிவிருத்தி மன்றமானது 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு என மாதிரி பரீட்சைகளையும் கருத்தரங்குகளையும் நடத்தி வருகிறது. இரத்தினபுரி, குருநாகல், நுவரெலியா, அட்டன், மஸ்கெலியா, கேகாலை போன்ற பகுதிகளில் மாணவர்களுக்கு மட்டுமன்றி மாணவர்களை எவ்வாறு வழி நடத்துவது என்பது தொடர்பாக ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்கும் விழிப்புணர்வு நிகழ்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன. ஆரம்ப வகுப்புகள், 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் வகுப்புகள், சாதாரண தரம் (O/L), உயர்தரம் (A/L) என்ற ரீதியில் மாதிரி பரீட்சைகளும் கருத்தரங்குகளும் நடத்தப்பட்டு வருகின்றன.

மேலும் இன்று பாடசாலைகளில் மாணவர்களின் இடைவிலகலானது மிகவும் குறைந்து வருகிறது. அதாவது இந்த விடயமானது மாணவர்கள் கல்வியில் காண்பிக்கும் ஆர்வத்தையே உணர்த்துகிறது என லாம். பலர் O/L பூர்த்தி செய்து 18 ஆவது வயதிலேயே தொழிலில் சேரும் நிலைமை காணப்படுகிறது என இவர்கள் கூறுகின்றனர்.

எவ்வித அரசியல் தலையீடுமின்றி செயற்படுவது இம்மன்றத்தின் சிறப்பம்சமாகும். மலையகக் கல்வி அபிவிருத்தி மன்றமானது மன்றத்தின் கல்வி அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு போஷகர்கள் வழங்கும் உதவி அளப்பரியது என கூறுகிறது. மன்றத்தின் அங்கத்தவர்களின் சந்தா கட்டணங்கள் மூலம் சேவைகள் தொடரும் நிலையில், அச்சேவைகள் திறம்பட இடம்பெற போஷகர்களின் உதவியானது வழிவகுக்கிறது என்கின்றனர்.



மேலும் மலையகக் கல்வி அபிவிருத்தி மன்றமானது மலையக மாணவர்களின் கல்வித்துறைக்கு மட்டுமன்றி விளையாட்டுத் துறைக்கும் தனது பங்களிப்பை வழங்கி வருகிறது. மேலும் கலை நிகழ்ச்சிகளுக்கும் ஊக்குவிப்பை வழங்கி வருகிறது. அண்மையில் கொழும்பு, பம்பலப்பிட்டி கதிரேசன் மண்டபத்தில் 1000க்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் கலந்து கொண்ட கலை, கலாசார நிகழ்ச்சியில் அட்டன், ஹைலன்ஸ் கல்லூரி மாணவர்கள் தமது திறமையை வெளிப்படுத்தியமை மலையக மாணவர்களின் திறமைக்குச் சான்றாகும். இவ்வாறான மாணவர்களின் திறமைகளை இனம் கண்டு அவர்களை ஊக்குவிக்கும் செயற்பாடுகளை மன்றமானது மேற்கொண்டு வருகிறது.


மலையக சமூகம் உண்மையில் முன்னேற்றம் அடைய வேண்டுமானால் கல்வி அபிவிருத்தி மூலமே அதனை சாத்தியமாக்கலாம், மலையக கல்வி அபிவிருத்திக்கு பங்களிப்பினை வழங்கும் எவருக்கும் அல்லது எந்த அமைப்புக்கும் ஒத்துழைப்பு வழங்குவது எமது கடமையாகும்.

**- எம்.ஜி.**



20 Anniversary

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனக்கலவரங்களிலிருந்து தப்புவதற்கு வட பகுதிக்குச் சென்ற மலையகத் தமிழ் மக்களின் நிலைமை என்ன?



பேராசிரியர்
மா.செ.மூக்கையா

இலங்கையின் சுதந்திர காலத்தை அடுத்து வந்த அரசியல் வரலாற்றில் இன முரண்பாடுகள் கணிசமான இடத்தை வகித்து வருகின்றன. அதில் இனத்துவ தீவிரவாதிகளும் பாதிக்கப்பட்டவர்களும் பிரதான பங்காளிகளாவர். இவர்கள் தொடர்பில் கணிசமான ஆக்கங்கள் எழுத்துவடிவில் இடம்பெற்றுள்ளன. வடக்கு, கிழக்கு மற்றும் நாட்டின் ஏனைய பகுதிகளிலிருந்தும் வெளிநாடுகளுக்கு அகதிகளாகவும் மற்றும் ஏனைய உபாயங்கள் மூலமாகவும் புலம் பெயர்ந்தவர்கள் கணிசமானவர்கள். அதுவும் குறிப்பாக ஐரோப்பிய, அமெரிக்க, அவுஸ்திரேலிய நாடுகளுக்கு இவ்வாறாகச் சென்றடைந்தவர்கள் பற்றிய தகவல்கள் பல வெளிவந்துள்ளன.

ஆனால், 1956,1971,1977 மற்றும் 1981, 1983 ஆம் ஆண்டுகளிலும் அதன் பின்னரும் நாட்டின் மத்திய, தென்மத்திய, மேற்கு பகுதிகளிலிருந்து நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகள் நோக்கி குடிபெயர்ந்து இன்று இலட்சக்கணக்கில் வாழும் அம் மக்களது சமூக, பொருளாதார நிலைமைகள் பற்றித் தெளிவான விபரங்கள் மாவட்ட ரீதியாகவோ அல்லது மாகாண ரீதியாகவோ போதியளவில் வெளியாவதில்லை.

**நூற்றாண்டு காலமாக விவசாய அடிமைகளாயிருந்து, இனக் கலவரங்களால் துரத்தப்பட்டவர்கள், தமிழ் பேசும் நிலத்தில் தமக்கும் ஒரு விடிவு காலம் ஏற்படலாம் என்ற நப்பாசையுடன் எதிர்கால சந்ததியினராவது தமக்குரிய சொந்த நிலத்தில் பயிர் செய்யும் உரிமையுடன் வாழட்டும் என கொண்டிருந்த எதிர்பார்ப்பிற்கு என்ன நடந்தது?**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1988ஆம் ஆண்டோடு இந்திய தமிழ் மக்கள் என அடையாளம் காணப்பட்டவர்களில் பெரும் பகுதியினர் அல்லது அனைவருமே 2002ஆம் ஆண்டின் பின்னர் இலங்கைப் பிரஜைகளாக அங்கீகரிக்கப்பட்டவராகினர்

### பின்புலம்

இனக்கலவரங்கள் ஏற்பட்ட போதெல்லாம் பெருந் தோட்டங்கள் தென்னிலங்கை கிராமங்கள் மற்றும் நகர்ப்புறங்களைச் சார்ந்த இந்திய வம்சாவளி மலையகத் தமிழ் மக்கள் அப்போதிருந்த அவர்களுடைய நாடற்றவர் என்னும் அரசியல் நிலை, அரசியல் பிரதிநிதித்துவம் இல்லாமை மற்றும் வறுமை காரணமாக தமது எதிர்காலம் பற்றிய நம்பிக்கையீனம் என்பவற்றால் அவர்களுக்கு அப்போது தென்பட்ட 'நம்பிக்கை ஒளி' வட பகுதி நோக்கிய குடிபெயர்வு ஒன்றேயாக இருந்ததில் வியப்பில்லை. அவர்களது குடும்பங்களிலிருந்து வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளுக்கு வீட்டுப் பணிப் பெண்களாகவும் சிறுவர்களாகவும் சென்று வந்தபோது அரைகுறைச் செய்திகளைக் கொண்டு வந்தனர். அவ்வாறு பெற்றுக் கொண்ட செய்திகளை வழிகாட்டல்களாகக் கொண்டு இவ்வாறான தீர்மானத்தை மேற்கொண்டிருக்கின்றனர். ஆயினும் இவற்றை விட பதுளை மாவட்டத்தின் சில தோட்டங்களிலிருந்து மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் நிலவிய சில நிலைவரங்கள் பற்றிய சில தகவல்கள் கிடைக்கக் கூடியதாயிருந்திருக்கின்றன. ஏனெனில் பதுளை மாவட்டத்திலிருந்து மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் அம்பாறை போன்ற கிழக்கு மாகாணப் பகுதிகளுக்கு சிற்றூழியர்களாகவும் விவசாயத் தொழிலாளர்களாகவும் பணிபுரிய கணிசமான அளவானோர் தற்காலிக பருவ கால தொழில்களுக்கு சென்றிருக்கின்றனர். பின்னாளில் அங்கிருந்து கிழக்கு மாகாணப் பகுதிகளுக்குச் சென்று சிறிய வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டுமிருக்கின்றனர். இவ்வாறானவர்கள் பதுளைக்கு வந்து சென்றபோது அப்போது கிழக்கு மாகாண நிலைவரங்கள் பற்றிய தகவல்களைக் கூறிச் சென்றிருக்கின்றனர்.

மேலே குறிப்பிட்டவற்றைவிட இன்னுமோர் முக்கிய தகவல் வழங்கும் ஊடகமும் குறிப்பிடத்தக்கதாகும். நாட்டின் வடக்கு, கிழக்கு பகுதிகளிலிருந்து மத்திய மாகாண தென்மாகாணப் பகுதிகளின் பெருந் தோட்டங்களைச் சார்ந்த நகர்ப்புறங்களில் குறிப்பிடத்தக்க அளவில் பாடசாலை ஆசிரியர்கள், தபால் தந்தி ஊழியர்கள், புகையிரத நிலைய உத்தியோகத்தர்கள், கச்சேரி ஊழியர்கள் என பலதரப்பட்ட கல்வி கற்ற தரப்பினர் தொழில் புரிய வந்துசென்றனர். இவர்களும் தமது மாணவர்கள் மற்றும் தொழில் நிலையங்களுக்கு வந்து சென்றவர்களிடம் பெற்ற அறிமுகத்துடன் பலரிடம் வட மாகாணப் பகுதி பற்றிய பல தரப்பட்ட தகவல்களைக் கூறியிருந்தனர். அவ்வாறான செய்திகளில் முக்கியமானது அரசுக்குரிய நிலம் பற்றிய ஆக்கிரமிப்பு சார்ந்த செய்தியாகும். அதாவது வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிலமற்றவர்கள் அரசுக்குச் சொந்தமான காடுகளை அழித்து பயிர்ச் செய்கையை மேற்கொண்டால் ஒரு காலப் பகுதியின் பின்னர் காணி அதிகாரியின் அனுமதியுடன் ஒரு குறித்த சிறிய தண்டப் பணத்தைச் செலுத்திவிட்டு அதற்கு பெற்றுக் கொண்ட ரசீதுடன் அக் காணிக்கு பின்னர் உரிமையாளராகிவிடலாம் என்ற தகவலாகும். தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகள் சென்று தாமும் அவர்களோடு இனக் கலவரங்களுக்கு ஆளாகாது நிம்மதியாக வாழலாம் என கவர்ச்சியான செய்தியால் துன்பத்திற்காளாகிய அறியாமையுடனான அப்பாவிகள் கவரப்பட்டதும் வியப்புக்குரியதல்ல. ஆனால், அவ்வாறு அரச நிலத்தை ஆக்கிரமிக்க அவர்கள் இலங்கைப் பிரஜையாக இருக்க வேண்டும் என்ற அரச நிபந்தனையின் கடுமையினை சரியாகவும் போதியளவிலும் புரிந்து கொண்டிருக்காததன் காரணமாக பின்னர் பரிதாபத்திற்குரிய விளைவுகளை எதிர்கொள்ள வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தனர்.

### வட புலம் சென்றவர்களது எண்ணிக்கை

1982 ஆம் ஆண்டளவில் வடக்கு, கிழக்கு மாகா



20 Anniversary

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணங்களில் எட்டு மாவட்டங்களிலும் வாழும் இந்திய வம்சாவளி மலையகத் தமிழர்கள் பற்றிய சமூகப் பொருளாதார ஆய்வின் போது அம் மாவட்டங்களில் [எட்டு] ஏறத்தாழ 125,000 – 150,000 இடைப்பட்ட அளவில் இச் சமூகத்தினர்கள் வாழ்வார்கள் என அனுமானிக்கப்பட்டிருந்தது. ஆனால், 1981 ஆம் ஆண்டு அரசாங்கத்தின் திட்ட அமுலாக்க அமைச்சின் கீழ் செயற்படும் குடித்தொகை மதிப்பீடு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் மேற்கொண்ட குடித்தொகையெடுப்பின் பின்னர் அங்கே வாழும் இந்திய வம்சாவளி மலையகத் தமிழ் மக்கள் 75,000 பேர் என்றே குறிப்பிட்டிருந்தது.

இவ்வாறான வேறுபட்ட மதிப்பீடுகளில் எது சரி? எதனை ஏற்றுக் கொள்ளலாம் என்பவற்றில் பெரும் மயக்க நிலையே காணப்படுகின்றது. இம் மதிப்பீடு சரியானதுதானா? அல்லது வேறு மாற்றங்கள் உண்டா என்பது பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும். 2012ஆம் ஆண்டு குடி மதிப்பீட்டு விபரங்கள் கூறும் தகவல்களின்படி அம்மாவட்டங்களில் வாழும் இந்திய வம்சாவளி மலையக மக்களின் எண்ணிக்கை 7712 மட்டுமே ஆகும். இதனை எவ்வாறு உறுதி செய்து கொள்ளலாம் என்பது அடுத்த பிரச்சினையாகும். இதில் ஒரு சிறிய சிக்கலுண்டு. 1988ஆம் ஆண்டோடு இந்திய தமிழ் மக்கள் என அடையாளம் காணப்பட்டவர்களில் பெரும் பகுதியினர் அல்லது அனைவருமே 2002ஆம் ஆண்டின் பின்னர் இலங்கைப் பிரஜைகளாக அங்கீகரிக்கப்பட்டவராகினர். எனவே, அரசாங்கம் தனது நிர்வாக குறிப்புகளில் இந்திய தமிழ் மக்கள் என்ற வகைப்பாட்டை பயன்படுத்தி வந்தாலும் மலையக மாவட்டங்களைத் தவிர்ந்த பகுதிகளில் வாழும் இந்திய தமிழ் மக்கள் அவர்களுடைய அரசியல் அறிவுக்கு ஏற்ப தம்மை இலங்கைத் தமிழ் மக்களாகவே இனங்காட்டிக் கொள்கின்றனர். குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நாம் ஒன்றரை இலட்சம் பேர் வரையில் இந்திய தமிழ் மக்களாக இருக்கலாம் என சிந்திக்கையில் 2012ஆம் ஆண்டு அரசாங்க மக்கள் தொகை மதிப்பீடு அதனை 7712 எனக் கூறுவதற்கு இதுவும் ஒரு காரணமாகலாம்.

### 1981 ஆம் ஆண்டு குடி மதிப்பீடு

சரி, இனி 1981ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கம் கணிப்பிட்ட குடித்தொகை மதிப்பீட்டைப் பார்ப்போம். அப்போது ஏற்கனவே குறிப்பிட்டபடி பின் வரும் தமிழ் மாவட்டங்களில் 75,242 பேர் வாழ்ந்து வந்ததாக குடித்தொகை மற்றும் வீட்டு வசதி மதிப்பீடு 1981ஆம் ஆண்டு பொது அறிக்கை பகுதி IIIஇல் குடித்தொகை மற்றும் புள்ளிவிபர திணைக்களத்தினால் வெளியிடப்பட்டிருந்தது. மாவட்டங்களும் அவை பற்றிய விபரங்களும் பின்வருமாறு:

| மாவட்டம் | இந்திய தமிழ் மக்கள் எண்ணிக்கை (1981) |
|---|---|
| யாழ்ப்பாணம் | 19,647 |
| மன்னார் | 13,866 |
| வவுனியா | 18,829 |
| முல்லைத்தீவு | 11,461 |
| மட்டக்களப்பு | 4078 |
| அம்பாறை | 1631 |
| திருகோணமலை | 5730 |
| | 75,242 |

1981ஆம் ஆண்டில் கிளிநொச்சி பிரதேசம் யாழ்ப்பாண மாவட்டத்தின் தென் அரைப் பகுதியாக இருந்ததனைக் கவனிக்க. 1981 ஆம் ஆண்டிலேயே 150,000 பேராக இருக்க வேண்டியவர்கள் தொகை அப்போது 50 வீதம் குறைவாகவே குடித்தொகை மதிப்பீட்டில் கூறப்பட்டிருந்தது. இப்போது அம் மாவட்டங்களுக்கு குடியேறிய இந்திய தமிழ் மக்களின் புதிய தலைமுறையினர் பிறந்து வளர்ந்து அப் பகுதியின் செல்வாக்கிற்கு உட்பட்ட பரம்பரையாகி தம்மை அப் பிரதேச மக்களுடன் இனங்காட்டிக் கொள்வதில் ஆச்சரியப்படுவதற்கு எதுவுமில்லை.

உத்தியோகபூர்வமாக மதிப்பீடு செய்து 1981 ஆம் ஆண்டு அறிக்கையில் பதிவாளர் நாயகம் தனது கருத்தினைக் கூறியுள்ளவாறு இப் பகுதிகளில் இந்திய தமிழ் மக்களது எண்ணிக்கையின் உண்மையளவு யாதாயிருந்திருக்கலாம் என தனது 2012 ஆம் அறிக்கையிலும் விளக்கியிருந்தால் அது பயனுள்ளதாக இருந்திருக்கும். அதாவது 1971 ஆம் ஆண்டிற்கும் 1981 ஆம் ஆண்டிற்கும் இடையே இந்திய வம்சாவளி மலையகத் தமிழ் மக்கள் எண்ணிக்கை ஏன் அறிக்கையில் குறைவாகக் காணப்படுகிறது என்பது பற்றிய சரியான விளக்கம்.

எமது உத்தேச மதிப்பீட்டின் படி கடந்த 31 வருடங்களில், பொதுவாக இந்திய தமிழ்ச் சமூகத்தில் முழு நாட்டிலும் ஏற்பட்டுள்ள அதிகரிப்பு வீதத்தின் படியே வடக்கு, கிழக்கு மாவட்டங்களிலும் இச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்தினிடையே குடி வளர்ச்சி ஏற்பட்டிருந் தாலும் கூட அப்போது அம் மாவட்டங்களின் 2012 ஆம் ஆண்டில் இச்சமூகத்தின் எண்ணிக்கை 86,528 (75,24 X 15%) பேராக இருந்திருக்க முடியும். அதே சமயம் 1981 ஆம் ஆண்டின் உத்தியோகபூர்வமற்ற ஆனால், சிவில் சமூகங்களின் குறிப்பாக தொழில் சங்க மதிப்பீடுகளினதும் ஆண்டின்படி அங்கே 160,000 பேர் இச் சமூகத்தைச் சார்ந்தவர்களாக இருந் திருக்க வேண்டும் எனவும் ஒரு தரப்பினர் வாதிட லாம்.

### வடபுலம் நோக்கிய பெயர்வுகளின் கனவுகள்

நூற்றாண்டு காலமாக விவசாய அடிமைகளாயி ருந்து, இனக் கலவரங்களால் துரத்தப்பட்டவர்கள், தமிழ் பேசும் நிலத்தில் தமக்கும் ஒரு விடிவு காலம் ஏற்படலாம் என்ற நப்பாசையுடன் எதிர்காலச் சந்ததி யினராவது தமக்குரிய சொந்த நிலத்தில் பயிர் செய் யும் உரிமையுடன் வாழட்டும் என கொண்டிருந்த எதிர்பார்ப்பிற்கு என்ன நடந்தது? வட பகுதி நோக்கி குடிபெயர்ந்த இப்பிரிவினரில் நிலவுரிமை கொண்ட சுதந்திர பிரஜைகளானவர்கள் எத்தனை பேர்? இவர் களில் கல்வி கற்று தொழில் முறைகளில் ஏற்றம் பெற்று பொருளாதாரச் சுதந்திரத்துடன் வாழ்வோரது தற்போதைய எண்ணிக்கை யாது? 1988ஆம் ஆண் டோடு நாடற்றவர் என்ற அபாக்ய நிலை இருக்காது என அரச தலைவர்களால் கூறப்பட்டது. அதற்காக ஏற்பட்ட சில ஏற்பாடுகளும் உண்மை தான். 2002ஆம் ஆண்டளவில் இம்மக்கள் இலங்கைக் குடியுரி மையை பெறுவதிலிருந்த எஞ்சிய சில தடைகளும் பாராளுமன்றச் சட்டங்களுடன் ஒழிக்கப்பட்டன. இவ் வளர்ச்சிகள் வட பகுதி நோக்கிய மக்களது நிலவு டமை அபிலாஷைகளிலும் வாழ்வில் பொருளாதார சுதந்திரத்துடன் வாழும் எதிர்பார்ப்புகளிலும் குறிப்பி டத்தக்க மாற்றங்களைக் கொண்டு வந்தனவா? என் பன தொடர்பான வினாக்களுக்கு யாரிடம் எவ்வாறு பதிலைப் பெற்றுக் கொள்ள முடியும்?

### தற்போதைய நிலைவரம் பற்றிய முழுமையற்ற சில தகவல்கள்

எமக்கு கிடைக்கக்கூடியதாயுள்ள சில தகவல்கள் முழுமையற்றதாக உள்ளன. இதுவரை வவுனியா மாவட்டத்தில் இந்திய வம்சாவளி மலையகத் தமிழ் மக்களிலிருந்து ஒருவர் பாராளுமன்ற பிரதிநிதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார். ஆனால், இவர் அம் மக் களது அரசியல் ஆதரவினால் மட்டும் தெரிவு செய் யப்பட்டவரல்லர் என்பது சந்தேகம் ஏதுமற்ற உறுதி யான உண்மை. அவர் வவுனியாவைச் சேர்ந்த ஒரு தமிழ் அரசியல் வாதியாகவே செயற்பட்டவர். ஒரு சிலர் ஆசிரியர்களாகவும் சிலர் அரசாங்க சேவைக ளில் பணிபுரிபவர்களாகவும் சிறிய எண்ணிக்கையா னவர்கள் பல்கலைக்கழக கல்வியினைப் பெற்றமை பற்றிய தகவல்களும் கிடைக்கப் பெற்ற போதிலும் அவை முழுமையான தகவல்களாகாது.

ஒரு சிலர் வியாபாரம், பெரியளவு விவசாய நட வடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளமை தெரியவந் துள்ளது. எனவே, முழுமையான தகவல்கள் இல்லாத நிலையில் அம் மக்கள் பிரிவினரது உண்மை நிலை யாது? அவர்களது இன்றைய எதிர்ப்புகள் என்ன என் பது பற்றி உறுதியாக எதுவும் காண முடியாத நிலை வரமே காணப்படுகிறது. தனிப்பட்ட சிலரது தகவல் களின்படி ஒரு சில இந்திய வம்சாவளி மலையகத் தமிழ் மக்கள் தமது உரிமைகள் அப்பகுதி அரசியல் தலைமைத்துவங்களால் உதாசீனம் செய்யப்படுவ துடன், தமது கோரிக்கைகளை முற்றாக மழுங்க டிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகவும் விரக் தியுற்ற நிலையில் காணப்படுவது பற்றிய குற்றச்ச ாட்டுகளும் நிலவுகின்றன. இவற்றின் உண்மை தாற் பரியங்கள் என்ன என்பதறியாது முடிவுகளை எட்ட முடியாதுள்ளது.

யுத்தம் முடிந்து சமாதானம் ஏற்பட்டதனை முழுமையாக்க பல கோணங்களிலிருந்தும் பல தரப் பினரும் முயற்சிகளை எடுத்துவரும் இச்சந்தர்ப் பத்தில், இப் பிரிவினரது நிலைமை பற்றி எதுவித கேள்வி கேட்பவர்கள் அல்லது கரிசனத்துடன் விசா ரிக்கும் முயற்சிகள் செய்பவர்கள் பற்றியோ சிறப்பான தகவல்கள் ஏதும் கிடைக்கக் கூடியதாகவும் இல்லை. மறுபுறத்தில் இவ்வாறான அடையாளம் பேணப்பட வேண்டிய தேவையில்லை. வட பகுதியில் தமிழ் பேசும் அனைவரும் இலங்கைத் தமிழர்களே என்ற மாபெரும் சிந்தனையுடன் அவர்களை ஏற்று தமது நிரந்தர சமாதானத்திற்கான செய்முறைகளில் அப் பிரிவினரையும் இணைத்துச் செயற்படுவதாக நிலை வரம் காணப்படுகின்றதா? அப்படியானால் அது சாத்தியமானதா? என்பது போன்ற வினாக்களுக்கு திருப்தியான பதில் கிட்டும் வரையில் எமது தேடல் முழுமையடையாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A Global First!

UNIVERSITY OF THE WEST of SCOTLAND
UWS

# Are you a Passed finalist Or a member of AAT?

## Here is an exclusive opportunity

You can complete

CIMA with 11 Exemptions

+

Directly enter into YEAR 2 of

**BA (Hons) International Business & Finance**
degree from University of the West of Scotland (UK)
for the same cost

**Minimum mark to pass a module & get exemption from CIMA is 40% only**

**Attractive loan facilities available with major banks and financial institutions**



UGC APPROVED UGC

**Intake in September 2016**

Colombo
320 - 1/1, Galle Road,
Colombo 03, Sri Lanka
Phone : +94 11 4 51 52 53
+94 77 3 91 87 77
Email : info@icbsgroup.com

Kandy
No. 15 George E. De. Silva Mawatha,
Kandy, Sri Lanka
Phone : +94 81 4 950 950
+94 773 919 777
Email : info.kandy@icbsgroup.com

www.icbsgroup.com

Imperial College of Business Studies
The learning experience of a lifetime

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விப்புலத்தில் ஆசிரிய கலாசாலைகளின் வகிபாகம்



**ச.லலீசன்**
பிரதி முதல்வர்,
கோப்பாய் ஆசிரிய
கலாசாலை

## வடபுலத்தை முன்நிறுத்திய பார்வை

### வடபுலத்தில் சைவக் கல்விப் பாரம்பரியம்

ஈழத்தின் சைவக் கல்விப் பாரம்பரிய மரபு தொன்மை வாய்ந்தது. ஆறுமுகநாவலரை இதன் தொடக்கப் புள்ளியாகக் கருதுவர். தீர்க்கதரிசனமாக முறைசார் பாடசாலைகளை நிறுவிய பெருமை அவரையே சாரும். தமிழ் மொழி மூலப் பாடசாலைகளை நிறுவியமைக்கு மேலதிகமாக சைவச் சூழலில் ஆங்கில மொழி மூலப் பாடசாலை ஒன்றையும் 1872இல் அவர் வண்ணார்பண்ணையில் நிறுவினார். துரதிர்ஷ்டவசமாக அவர் நிறுவிய ஆங்கிலப் பாடசாலை தொடர்ந்து இயங்கமுடியாது போயிற்று.

நாவலர் கிறிஸ்தவ சூழலுடன் நெருக்கமுற்றிருந்தமையால் அவர்கள் மேற்கொண்ட நடைமுறைகளை ஒத்து முள்ளை முள்ளால் எடுப்பதற்கு ஒப்பாக தனது செயற்பாடுகளையும் முன்னெடுத்தார்.

நாவலரைத் தொடர்ந்து சேர்.பொன் இராமநாதன், சேர்.பொன் அருணாசலம், த.கைலாசப்பிள்ளை போன்ற பெரியவர்கள் நிறுவன ரீதியாக பாடசாலைகளை நிறுவினர். 1886இல் இந்துக் கல்லூரிச் சபையினால் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி நிறுவப்பட்டது. இதன் பின்னர் அரசு, சைவப் பாடசாலைகளுக்கும் உதவி நன்கொடை வழங்க முன்வந்தது.

இத்தூண்டுதலால் கொடைவள்ளல்களும் அறிஞர்களும் ஊருக்கு ஊர் பாடசாலைகளை நிறுவினர். பாவலர் துரையப்பாபிள்ளை தெல்லிப்பழையில் மகாஜனாக் கல்லூரியையும் [1910] கந்தையா உபாத்தியாயர் கந்தரோடையில் ஸ்கந்தவரோதயக் கல்லூரியையும் [1894] மழவராயர் கந்தையா புத்தூரில் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியையும் [1931] நிறுவிய பாடசாலைகளை இதற்கு எடுத்துக்காட்டாகக் குறிப்பிட முடியும்.

இலங்கையில் 1834 ஆம் ஆண்டில் வடமாகாணத்தில் 249 சைவத் தமிழ்ப் பாடசாலைகளும் 160 கிறிஸ்தவப் பாடசாலைகளும் 24 றோமன் கத்தோலிக்கப் பாடசாலைகளும் இருந்ததாக தி.செல்வமனோகரன் குறிப்பிடுகின்றார்.

### ஆசிரிய கலாசாலைகள் உருவாக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சைவ ஆசிரியர்களுடைய எழுச்சியை நாடிய சேர். பொன் இராமநாதன் கோப்பாய் தெற்கில் இருபாலைச் சந்திக்கு அண்மையில் ஐந்து ஏக்கர் காணியில் கோப்பாய் ஆசிரிய கலாசாலையை அமைத்தார்**

பெரும்பாலும் வெளிநாட்டில் கல்வி கற்றவர்களும் மதபோதகர்களுமே கிறிஸ்தவப் பாடசாலைகளில் ஆசிரியர்களாக விளங்கினர். இதேவேளை தமது ஆசிரியத் தேவையை நிறைவேற்றும் பொருட்டு கிறிஸ்தவ மிசனறிமார் ஆசிரியர் கலாசாலைகளை நிறுவினர். அமெரிக்க மிசனறிமாரால் 1881இல் தெல்லிப்பழையில் ஆண்களுக்கெனவும் உடுவிலில் பெண்களுக்கெனவும் நிறுவப்பட்ட ஆசிரிய கலாசாலைகள், கோப்பாயில் சேர்ச் மிசனறிமாரால் நிறுவப்பட்ட ஆசிரிய கலாசாலை, வெஸ்லியன் மிசனறியினர் 1837இல் கொட்டடியில் நிறுவிய கலாசாலை, கத்தோலிக்க மிசனறியால் 1881இல் கொழும்புத்துறையில் ஆண்களுக்காகவும் யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடத்தில் பெண்களுக்காகவும் நிறுவிய கலாசாலை என கிறிஸ்தவ மிசனறியினர் பல கலாசாலைகளை நிறுவினர்.

சைவப் பாடசாலைகள் காணப்பட்டனவாயினும் இப்பாடசாலைகளில் கற்பிப்பதற்கு கிறிஸ்தவ ஆசிரிய கலாசாலைகளில் பயின்றவர்களையே நம்பியிருக்கவேண்டிய சூழல் காணப்பட்டது. ஏனெனில் அரசாங்கத்திடமிருந்து உதவி நன்கொடையைப் பெறுவதாயின் பயிற்றப்பட்ட தராதரப்பத்திரமுடைய தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்கள் தேவைப்பட்டனர். இத்தகையோரை கிறிஸ்தவ மிசனறிமாரது கலாசாலைகளே உருவாக்கின.

கிறிஸ்தவ மிசனறிமாரின் கலாசாலைகளில் கல்வி பயில்வதாயின் கிறிஸ்தவராக மதம் மாற வேண்டும் என்ற எழுதப்படாத சட்டம் நடைமுறையில் இருந்தது. ஆசிரியர்களில் சிலர் சமயம் மாறிப் பயின்ற பின்னர் மீண்டும் சைவத்திற்கு மதம் மாறிய வரலாறும் உண்டு.

சைவர்களுக்கென ஓர் ஆசிரிய கலாசாலை நிறுவப்பட வேண்டும் எனக் கங்கணம்கட்டி நின்றவர் காரைநகர் அருணாசலம் உபாத்தியாயர் ஆவார். இவர் தெல்லிப்பழை அமெரிக்க மிசன் கலாசாலையில் கல்வி பயின்று பரீட்சையின் இறுதியில் சமயம் மாற வேண்டும் என்ற பயத்தில் அங்கிருந்து மதில் பாய்ந்து வெளியேறியவர்.

சைவர்களுக்கென கலாசாலை ஒன்றை நிறுவ வேண்டும் என்ற வெறி அவரிடம் இருந்தது. இதனால் தனது பிறப்பகமான காரைநகரில் முதன்முதலாக நிறுவ முயன்றார். அது தோல்வியில் முடிந்தது. தொடர்ந்து கீரிமலையில் யாழ்ப்பாணத்தில் இக்கலாசாலையை சில காலங்களுக்கு நிறுவி நடத்தினார். அதற்குரிய தகுதிப்பாட்டைக் கொண்டிருக்காமையால் அரச அங்கீகாரத்தை அவரது கலாசாலை பெற்றிருக்கவில்லை.

ஆயினும் அருணாசலம் இடைவிடாது முயன்று சேர். பொன் இராமநாதன், சேர் அ.கனகசபை போன்றோரது பரிந்துரைகளைப் பெற்று கோப்பாயில் ஐக்கிய பயிற்சிக் கலாசாலை என்ற பெயரில் 1916இல் கலாசாலை ஒன்றை உருவாக்கினார். கத்தோலிக்கரல்லாத கிறிஸ்தவர்களும் சைவர்களும் இணைந்து கற்கக்கூடிய வகையில் இக்கலாசாலை நடைபெறுவதற்கு அன்று அனுமதி வழங்கப்பட்டது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக ஏழு ஆண்டுகளுடன் இக்கலாசாலையின் ஆயுள் நிறைவுற்றது. இக்காலத்தில் 64 சைவ ஆசிரியர்களே உருவாக்கப்பட்டனர்.

சைவ ஆசிரியர்களுடைய எழுச்சியை நாடிய சேர். பொன் இராமநாதன் கோப்பாய் தெற்கில் இருபாலைச் சந்திக்கு அண்மையில் ஐந்து ஏக்கர் காணியில் கோப்பாய் ஆசிரிய கலாசாலையை அமைத்தார். கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் அப்போது 40 ஆசிரியர்களே பயிற்சிக்கு உள்வாங்கப்பட்டனர். இந்த எண்ணிக்கையை 75 ஆக உயர்த்த வேண்டும் என அன்று சட்டசபை உறுப்பினராக இருந்த இந்துபோர்ட் சு.இராசரத்தினம் அரசிடம் கோரிக்கை ஒன்றை முன்வைத்தார். அக்கோரிக்கை கலாசாலையின் வசதியீனத்தைக் காட்டி நிராகரிக்கப்பட்டது. இதனால் தான் சார்ந்திருந்த சைவவித்தியா விருத்திச் சங்கப் பங்களிப்புடன் இந்துபோர்ட் இராசரத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1943இல் மத்திய மகா வித்தியாலய உருவாக்கம், 1947இல் பாலர் வகுப்பு முதல் பல்கலைக்கழகம் வரை இலவசக் கல்விப் போதனை முறைமை உருவாக்கம் எனக் கல்வியில் மறுமலர்ச்சி ஏற்பட்டமையால் அரசு ஆசிரியர் கலாசாலைகளை தனது கையில் எடுக்க வேண்டிய தேவையை உணர்ந்தது. புதிதாக வளங்களுடன் கூடிய ஆசிரியர் கலாசாலைகளையும் உருவாக்கத் தலைப்பட்டது**

தினம் 1928ஆம் ஆண்டில் திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையை உருவாக்கினார். இங்குதான் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை தமிழ்த்துறை விரிவுரையாளராக இருந்தார் என்பது சுட்டிக்காட்டத்தக்கது.

இதேவேளை சேர். பொன் இராமநாதன் 1926இல் மருதனார்மடத்தில் மகளிருக்கான ஆசிரிய கலாசாலை ஒன்றை நிறுவினார். இங்குதான் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி கல்வி பயின்றார் என்பது சுட்டிக்காட்டத்தக்க செய்தி ஆகும்.

1930களில் இலவசக் கல்வி, தாய் மொழிக் கல்வி என்பவற்றிற்கான ஆதரவு பெருகிய நிலையில் பல பாடசாலைகள் உருவாகின. இதனால் ஆசிரியர்களும் அதிகமாகத் தேவைப்பட்டனர். ஒவ்வொரு அமைப்புகளும் தாம் நிறுவிய பாடசாலைத் தேவைக்கென கலாசாலைகளையும் நிறுவத் தொடங்கின.

சேர்.பொன் இராமநாதனின் மருகர் சு.நடேசபிள்ளை அந்நாளில் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தார். இவர் திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரியில் 1935ஆம் ஆண்டில் கலாசாலை ஒன்றை நிறுவினார். புகழ்பெற்ற தமிழ் அறிஞரான நவநீத கிருஷ்ண பாரதியார் இங்குதான் விரிவுரையாளராகக் கடமையாற்றினார்.

1943இல் மத்திய மகா வித்தியாலய உருவாக்கம், 1947இல் பாலர் வகுப்பு முதல் பல்கலைக்கழகம் வரை இலவசக் கல்விப் போதனை முறைமை உருவாக்கம் எனக் கல்வியில் மறுமலர்ச்சி ஏற்பட்டமையால் அரசு ஆசிரியர் கலாசாலைகளை தனது கையில் எடுக்க வேண்டிய தேவையை உணர்ந்தது. புதிதாக வளங்களுடன் கூடிய ஆசிரியர் கலாசாலைகளையும் உருவாக்கத் தலைப்பட்டது.

இந்த வகையில் 1946இல் கோப்பாய் ஆசிரிய கலாசாலை மகளிர் ஆசிரிய கலாசாலையாக உருமாற்றம் பெற்றது. 1941இல் அட்டாளைச்சேனை ஆசிரிய கலாசாலையும் 1946இல் மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலையும் 1947இல் பலாலி ஆசிரிய கலாசாலையும் 1979இல் கொட்டகலை ஆசிரிய கலாசாலையும் உருவாக்கப்பட்டன.

ஆசிரிய கலாசாலையில் விரிவுரையாற்றியவர்கள் அன்று பேராசிரியர்கள் என்ற பெயராலேயே அழைக்கப்பட்டனர்.

'பேராசிரியரும் பெருமைசேர் அதிபரும்
ஆராதனை செய்து அணைத்திடும் அன்னையே
ஞானமினிர் சாலை...'
[பலாலி ஆசிரிய கலாசாலைக் கீதம்]

காலப்போக்கில் பல்கலைக்கழகங்களின் எழுச்சி, பேராசிரியர் என்ற சொல்லை புரொபசர் என்ற சொல்லுக்கு இணையான தமிழ்ச் சொல் ஆக்கிக் கொண்டது. தமிழகத்தில் இன்றும் கல்லூரிகளில் விரிவுரையாற்றுகின்றவர்களை பேராசிரியர் என்றே அழைக்கும் வழக்கம் உள்ளது.

பலாலி ஆசிரிய கலாசாலை ஜூனியர் யுனிவேர்சிற்றி (Junior University) என அக்காலத்தில் அழைக்கப்பட்டது. இது சிங்கள மொழி மூலம் கல்வியை வழங்கிய மகரகம ஆசிரிய கலாசாலைக்கு ஒப்பான கல்விக்கூடமாகக் கணிக்கப்பட்டது.

பலாலி ஆசிரிய கலாசாலையில் அறிவியல் துறைசார்ந்த பாடங்களே போதிக்கப்பட்டன. விஞ்ஞானம், கணிதம், விவசாய விஞ்ஞானம், ஆங்கிலம், றோமன் கத்தோலிக்கம், உடற்கல்வி முதலிய பாடங்கள் இங்கு போதிக்கப்பட்டன.

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் பெரும்பாலும் கலைத்துறை சார்ந்த பாடங்களே போதிக்கப்பட்டன. தமிழ், இந்து சமயம், கர்நாடக சங்கீதம், பரதநாட்டியம், மனைப்பொருளியல், சித்திரம், சமூக விஞ்ஞானம் மற்றும் ஆரம்பக் கல்வி ஆகிய பாடங்கள் இங்கு பயிற்றப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பழைய TV ஐ புதுப்பிப்பதற்கு
இப்பொழுது செலவாவது
Sri Lanka Telecom
ரூ. 2,500/-
மட்டுமே.
திகில் நிறைந்த Movies, துணிகரச் செயல்கள் நிறைந்த Sports, குடும்பப் பாங்கான Teledrama போன்ற நூற்றுக்கணக்கான நிகழ்ச்சிகள் மற்றும் பல வசதிகளுடன்...
இச்சலுகை 2016 செப்டம்பர் 15 வரை மட்டுமே.
CATCH UP TV
VIDEO ON DEMAND
PICTURE IN PICTURE
RAIN PROOF
*நிபந்தனைகளுக்கு உட்பட்டது.
PEO TV
TV பார்க்க சிறந்த வழி
1212
Follow us on

கலாசாலைகளில் பயிற்சி பெற்று பரீட்சையில் சித்தியடைந்த ஆசிரியர்கள் ஆசிரிய சேவை மூன்றாம் வகுப்பில் பயிற்றப்பட்ட ஆசிரியர்களாக உள்வாங்கப்படுகின்றனர்.

**கல்விக் கல்லூரிகளின் எழுச்சியும் கலாசாலைகள் எதிர்கொண்ட சவால்களும்**

1985ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட கல்விக் கல்லூரிச் சட்டத்தின் பிரகாரம் நாடு முழுவதும் தேசிய கல்வியியற் கல்லூரிகள் நிறுவப்பட்டன. இலங்கையில் தற்போது 19 தேசிய கல்வியியற் கல்லூரிகள் உள்ளன. இவற்றுள் பெரும்பாலானவை முன்னாள் ஆசிரிய கலாசாலைகள் ஆகும். குறிப்பாக தென் பகுதியில் ஆசிரிய கலாசாலைகள் கல்வியியற் கல்லூரிகளாக உருமாற்றம் பெற்றன. தற்போது சிங்கள மொழி மூலம் கல்வி வழங்குவதில் உணவட்டுண, பலப்பிட்டிய, [இவை இரண்டும் காலி மாவட்டத்தில் உள்ளன] கிராகம [பேராதனையில் உள்ளது] ஆகிய கலாசாலைகளே தம்மைத் தக்கவைத்துள்ளன.

வடபுலத்தில் முதன்முதலாக வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியே உருவாக்கப்பட்டது. இது 1993ஆம் ஆண்டில் உதயமானது. யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி 2000ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது.

யாழ்ப்பாணத் தேசிய கல்வியியற் கல்லூரி முதன் முதலாக கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் ஒரு பகுதியாக உருவாக்கப்பட்டது என்பதையும் இங்கு சுட்டிக்காட்டுதல் பொருத்தம். ஆயினும் கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் செயற்பாடுகள் வீழ்ச்சி காணாத வண்ணம் தேசிய கல்வியியற் கல்லூரி தனக்கென தனியான இடம் ஒன்றை கோப்பாயில் நிறுவிக்கொண்டது.

பலாலி விமானத் தளத்தின் எல்லையில் ஒரு பல்கலைக்கழகத்திற்கு ஒப்பான வளங்களுடன் இயங்கிய பலாலி ஆசிரிய கலாசாலை நாட்டில் ஏற்பட்ட போர் நிலைமைகளால் 1986ஆம் ஆண்டில் பலாலியில் இருந்து இடம்பெயர்ந்து கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் ஒரு பகுதியாக இயங்கத் தொடங்கியது. தொடர்ந்து 1989ஆம் ஆண்டு தொடக்கம் திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாலயத்தில் பலாலி ஆசிரிய கலாசாலை தனது செயற்பாடுகளை முன்னெடுத்தது.

பலாலிக்குச் செல்ல முடியும் என்ற நம்பிக்கையின் திரட்சியால் தனக்கென ஒரு தனித்த இடத்தைத் தேடாமல் இக்கலாசாலை தன்னை மெல்ல மெல்ல இழந்தது. 2013ஆம் ஆண்டு இக்கலாசாலையின் நிர்வாகச் செயற்பாடுகள் உத்தியோகபூர்வமாக கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் கீழ் கொண்டுவரப்பட்டன.

வடபுலத்தில் முதன்முதலாக வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியே உருவாக்கப்பட்டது. இது 1993ஆம் ஆண்டில் உதயமானது. யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி 2000ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது.

நாடுமுழுவதிலும் நான்கு தமிழ் மொழி மூல ஆசிரிய கலாசாலைகளும் [கோப்பாய், மட்டக்களப்பு, அட்டாளைச்சேனை, கொட்டகலை] மூன்று சிங்கள மொழி மூல ஆசிரிய கலாசாலைகளுமே [உணவட்டுண, ஹிராகம, பலப்பிட்டிய] தற்போது இயங்கு நிலையில் உள்ளன.

**இலங்கையில் ஆசிரிய கல்வி**

இலங்கையில் ஆசிரிய கல்வியை வழங்கும் பிரதான நிறுவனமாக தேசிய கல்வி நிறுவகம் விளங்குகின்றது. இதன் வழிப்படுத்தலிலேயே தேசிய கல்வியியற் கல்லூரி, ஆசிரியர் கலாசாலை என்பவற்றில் ஆசிரிய வாண்மை விருத்திச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இவை தவிர பல்கலைக்கழகங்கள் பட்டப்பின் கல்வி டிப்ளோமா மற்றும் கல்விமாணி, கல்வி முதுமாணி கற்கை நெறிகளை முன்னெடுக்கின்றன. இதேபோல் தேசிய கல்வி நிறுவகமும் கல்விமாணி, கல்வி முதுமாணி கற்கைகளை முன்னெடுக்கின்றது.

இவை தவிர அவ்வப்போது தொலைக்கல்வி ஆசிரிய பயிற்சிப் பாடநெறி, பிரின்செண்ட் ஆசிரிய பயிற்சிப் பாடநெறி போன்றனவும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஆசிரிய வாண்மை விருத்தியில் கலாசாலைகள் பெறும் முக்கியத்துவம்

ஆசிரிய வாண்மையில் பயிற்றப்பட்ட ஆசிரியர்களின் பெருமை சிறப்பானது. பட்டப்பின் கல்வி டிப்ளோமாவின் போது ஒரு குறித்த பாடத்துறையை இலக்கு வைத்தே ஆசிரிய பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றது. ஆனால் ஆசிரிய கலாசாலைகளில் பயிற்சி பெறுகின்ற ஆசிரியர்கள் வதிவிடப் பயிற்சியைப் பெறுவதோடு, தமது பிரதான பாடத்துறைக்கு மேலதிகமாக இரண்டாவது உபபாடம் மற்றும் சமயம், தாய் மொழி, இரண்டாம் மொழி, தகவல் தொழில்நுட்பம், அழகியற் கல்வி, உடற்கல்வி, தொழில் சார் கல்வி முதலிய பாடத்துறைகளிலும் பயிற்சிகளைப் பெறுகின்றனர். இப்பயிற்சி இரண்டு வருடங்களுக்கு வழங்கப்படுகின்றது. இக்காலப்பகுதியில் எட்டு முதல் பத்து வாரங்களுக்கு பாடசாலை அனுபவத்தையும் கற்பித்தல் பயிற்சி அனுபவத்தையும் பெற்றுக்கொள்கின்றனர். அத்துடன் விளையாட்டுச் செயற்பாடுகள், சாரணியம், கலைத்துறைச் செயற்பாடுகள் என இணைக்கலைத்திட்ட மற்றும் புறக்கலைத்திட்டச் செயற்பாடுகளும் கலாசாலைகளால் முன்னெடுக்கப்படுகின்றன. இதனால் கலாசாலைப் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் சகல துறை வல்லவர்களாக மிளிர்வதற்கான வாய்ப்புகள் அதிகமாக வுள்ளன.

இலங்கையில் உள்ள கணிசமான பாடசாலைகளின் அதிபர்கள், கல்வி அதிகாரிகள் போன்றோர் கலாசாலைகளில் பயிற்சியைப் பெற்றவர்களே. இருப்பினும் பெரும்பாலானோர் உயர்நிலை பெற்ற பின்னர் தாம் ஆசிரிய கலாசாலைகளில் பயிற்சி பெற்றமையை






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைத்துவிடுகின்றமை துரதிர்ஷ்டமானதாகும்.

கலாசாலைகளில் இதுகாலவரையில் பயிற்சி பெற்றவர்களுடைய எண்ணிக்கை பல்லாயிரக்கணக் கானதாக இருப்பினும் இதுபற்றிய முறையான ஆவணம் பேணப்பட்டதாக அறிய முடியவில்லை. போர் நிலைமைகளால் ஏற்பட்ட இடப்பெயர்வுகள், ஆவணச் சிதைவுகள் போன்றவற்றால் இந்நிலைமை ஏற்பட்டுள்ளது. 1995 இல் இடம்பெற்ற இடப்பெயர்வின் பின்னரான நிலைமைகளை நோக்கும் போது ஏறத்தாழ பதினையாயிரம் ஆசிரியர்கள் வடபுலக் கலாசாலைகளில் பயிற்சியைப் பெற்றிருப்பர் எனக் கணிக்க முடிகின்றது.

### கலாசாலைக் கல்வி முறைமைக்கு ஏற்பட்ட சவால்கள்

தேசிய கல்வியியற் கல்லூரிகளின் எழுச்சிக்குப் பின்னர் ஆசிரிய கலாசாலை பயிற்சியின் தரத்தில் சிறிது தளர்வு ஏற்பட்டதையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

- பலாலி ஆசிரிய கலாசாலையின் இடப்பெயர்வினால் கணித, விஞ்ஞான ஆய்வுகூடம் இன்றிய ஏட்டுப் பயிற்சியே இந்தத் துறைசார்ந்தவர்களுக்கு வழங்கப்பட்டது.
- விளையாட்டு மைதானம் இன்றிய நிலையில் பிரதானமாக ஏட்டறிவை நம்பிய உடற்கல்விப் பயிற்சியையே பலாலி ஆசிரிய கலாசாலை வழங்கியது.

**இலங்கையில் உள்ள கணிசமான பாடசாலைகளின் அதிபர்கள், கல்வி அதிகாரிகள் போன்றோர் கலாசாலைகளில் பயிற்சியைப் பெற்றவர்களே. இருப்பினும் பெரும்பாலானோர் உயர்நிலை பெற்ற பின்னர் தாம் ஆசிரிய கலாசாலைகளில் பயிற்சி பெற்றமையை மறைத்துவிடுகின்றமை துரதிர்ஷ்டமானதாகும்.**

- அரசின் கல்விக் கொள்கைக்கு அமைவாக கலாசாலைகள் மூடப்படலாம் என்ற எதிர்பார்க்கையில் நிரந்தர விரிவுரையாளர் நியமனம், நிரந்தர அதிபர் நியமனம் என நீண்ட காலத்திற்கு இக்கலாசாலைகளில் இடம்பெறவில்லை.
- 2001ஆம் ஆண்டில் இடம்பெற்ற நிரந்தர நியமனத்தின் பின்னர் 2009ஆம் ஆண்டில் சில உத்தியோகத்தர்களே கல்வியாளர் சேவை சார்ந்து நிரந்தர நியமனம் பெற்றனர். அதன் பின்னர் 2015இல் சிலர் நியமிக்கப்பட்டனர்.
- கலாசாலைகளில் விரிவுரையாளர்களாகப் பணியாற்றியோருள் பெரும்பாலானவர்கள் பாடசாலை ஆசிரியர்களேயாவர். இவர்கள் இணைப்பு அடிப்படையில் கலாசாலைகளில் விரிவுரைப் பணியை ஆற்றினர்.
- மூடப்படக்கூடிய நிறுவனம் என்ற முத்திரை குத்தப்பட்டதால் பௌதிக வள விருத்திக்கான ஆர்வத்தை சம்பந்தப்பட்டவர்கள் காட்டவில்லை. இதனால் மிகப் பழைய இடிந்து விழும் நிலையில் உள்ள கட்டிடங்களுடனேயே கலாசாலைகள் செயற்பட்டு வருகின்றன. அவ்வப்போது மிகச் சிறிய நிதி ஒதுக்கீடுகள் மாத்திரம் வழங்கப்படுகின்றன.
- கலாசாலையில் போதிக்கப்படும் கலைத்திட்டம் 2009 ஆம் ஆண்டின் பின்னர் மீளாய்வு செய்யப்படவில்லை. புதிய மாற்றங்களை இக்கலைத்திட்டம் உள்வாங்காமை மிகப்பெரும் குறைபாடாகும்.
- கலாசாலைகளில் தற்போது அனுமதி பெறுவோர் தொண்டர் ஆசிரியர்களாக இருந்து ஆசிரிய உதவியாளர்களாக நியமிக்கப்பட்டவர்களாவர். இத்தகைய ஒரு ஆசிரிய நியமனம் ஆசிரிய சேவைப் பிரமாணக் குறிப்பின் அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்டதல்ல என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும்.
- கலாசாலைப் பயிற்சியின்போது அனுமதிக்கப்படும் பயிற்சியாளர் எண்ணிக்கையில் ஸ்திரத்தன்மை பேணப்படுவதில்லை. சில ஆண்டுகளில் பலநூற்றுக்கணக்கானவர்கள் பயிற்சி பெறுவதும் இன்னும் சில ஆண்டுகள் ஒருவரும் பயிற்சி பெறாமல் இருப்பதுவும் கலாசாலைகளின் ஸ்திரத்தன்மைக்கு சவாலான விடயமாகும்.
- தேசிய கல்வியியற் கல்லூரிகள் அடுத்த ஆண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தற்போது வடபுலத்தில் கோப்பாய் ஆசிரிய கலாசாலை மாத்திரமே இயங்கி வருகின்றது. குறைந்த வளங்களுடன் நிறைந்த சேவையை வழங்குவதற்கான எத்தனம் இங்கு உண்டு. நாடு முழுவதிலும் 22 பாடநெறிகளை ஆசிரிய கலாசாலை வழங்கிவரும் நிலையில், கோப்பாய் ஆசிரிய கலாசாலை 2015ஆம் ஆண்டில் 14 பாடநெறிகளை போதனை செய்தது**

டில் இருந்து [2017] கல்விமாணி பட்டக் கற்கையை வழங்கும் நிறுவனங்களாக புத்துருவாக்கம் பெறுகின்றன. இதனால் ஆசிரிய கலாசாலைப் பயிற்சி இன்னும் சவாலுக்குரியதாகக் கூடிய வாய்ப்பு உள்ளது.

தற்போது வடபுலத்தில் கோப்பாய் ஆசிரிய கலாசாலை மாத்திரமே இயங்கி வருகின்றது. குறைந்த வளங்களுடன் நிறைந்த சேவையை வழங்குவதற்கான எத்தனம் இங்கு உண்டு. நாடு முழுவதிலும் 22 பாடநெறிகளை ஆசிரிய கலாசாலை வழங்கிவரும் நிலையில், கோப்பாய் ஆசிரிய கலாசாலை 2015 ஆம் ஆண்டில் 14 பாடநெறிகளை போதனை செய்தது [654 ஆசிரிய பயிலுநர்கள்]. 2016இல் ஆரம்பக் கல்வி, றோமன் கத்தோலிக்கம், கர்நாடக சங்கீதம், வணிகம், விசேட கல்வி, உடற் கல்வி ஆகிய பாடங்களே போதிக்கப்படுகின்றன [318 ஆசிரிய பயிலுநர்கள்]. இதன் செயற்பாடுகளுக்கு வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் ஒத்துழைப்பும் குறிப்பிடத்தக்கதாக அமைந்திருக்கின்றது.

கலாசாலை சார்ந்த பெருமைகளையும் விழிப்புணர்வையும் மக்கள் மத்தியில் எடுத்துச் செல்வதில் ஊடகங்கள் அளப்பரிய பங்கை ஆற்றுகின்றன. அவற்றுள் தினக்குரல் நாளிதழ் கணிசமான பங்கை ஆற்றிவருகின்றமையையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். கல்விசார் செயற்பாடுகளுக்கு முக்கியத்துவம் வழங்கும் பத்திரிகையாக தினக்குரல் தன்னை அடையாளப்படுத்துகின்றமையே இதற்கான காரணமாகும். இந்த அடையாளப்படுத்தல்களை கல்வி சார்ந்த நேர்மனப்பாங்குடன் இப்பத்திரிகை முன்னெடுத்து வருகின்றது.



ஆசிரிய வாண்மை வளர்ச்சியில் அளப்பரிய பங்கினை ஆற்றிய, ஆற்றிவருகின்ற ஆசிரிய கலாசாலைகள் புத்தெழுச்சி அடைய வேண்டியமை காலத்தின் கட்டாயமாகும். புதிய உலகின் நவீனத்துவ மாற்றங்களை உள்வாங்கி இவை தம்மைத் தகவமைத்துக்கொள்ளக் கூடிய சூழல் ஏற்படுத்தப்படுமாயின் இலங்கையின் ஆசிரிய கல்வி வரலாற்றில் புதிய அத்தியாயங்கள் திறக்கப்படக்கூடிய வாய்ப்புகள் உருவாகும் என்பதில் ஐயமில்லை.

**உதவியன**


1. சந்திரசேகரம்.ப., 1987, 'யாழ்ப்பாணக் குடாநாட்டில் 20ஆம் நூற்றாண்டில் நிகழ்ந்த இந்து சமயக் கல்வி மறுமலர்ச்சி' லீலாவதி இராமநாதன் பெருமாட்டி நினைவுப் பேருரை, யாழ்ப்பாணம்.

2. செல்வமனோகரன்.தி., 2015, 'ஈழத்துச் சைவக் கல்விப் பாரம்பரியத்தில் சைவாசிரிய கலாசாலைகள்', அகில இலங்கை இந்து மாமன்ற வைரவிழா மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை, யாழ்ப்பாணம்.

3. ஜெபநேசன். எஸ்., 2009, 'இலங்கைத் தமிழர் சிந்தனை வளர்ச்சியில் அமெரிக்க மிஷன்', குமரன் புத்தக இல்லம்.

4. சந்திரசேகரன். சோ., கருணாநிதி. மா., 1992, இலங்கையின் கல்வி வளர்ச்சி, சூடாமணிப் பிரசுரம்.

5. ஜெயராசா. சபா., 2008, இலங்கையின் கல்வி வரலாறு, சேமமடு பதிப்பகம்.

6. ஆறுமுகம். வ., 2000, 'கல்விப் பாரம்பரியங்கள்', உயர்கல்விச் சேவைப் பதிப்பகம், யாழ்ப்பாணம்.

7. சதாசிவமூர்த்தி. கு., எமது கலாசாலை அன்றும் இன்றும் கலாவதி, பலாலி ஆசிரிய கலாசாலை.

8. திருநாவுக்கரசு. செ. 2008, 'கோப்பாய் ஆசிரிய கலாசாலை', செம்புலம், கோப்பாய் பிரதேச செயலகம்.



பல்வேறு இடர்களையும், தடை-
களையும் தாண்டி 20ஆவது
அகவையில் வெற்றியோடு கால்
பதிக்கும் தினக்குரல் பத்திரிகை
தமிழ் மக்கள் மத்தியில் தனக்கென
ஒரு தனி இடத்தைப் பிடித்திருப்பது
அதன் தனித்துவத்தை எடுத்துக்
காட்டுகின்றது. தினக்குரலின்
சமூகப்பணி மென்மேலும் வளர
வாழ்த்துகின்றோம்.



மலையக மக்கள் முன்னணி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுத்தும் எழுதுகோலும் தெய்வம்



பத்மா
சோமகாந்தன்

எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும் என்றாள் ஔவை. 'எழுத்து அறிவித்தவன் இறைவனாவான்' என்றும் அழுத்திக் கூறி வைத்தாள். எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும் கண் ணென்ப வாழும் உயிர்க்கு என வள்ளுவனும் எழுத்தைப் பற்றி, அதன் முக்கியத்துவத்தைப் பற்றி, அதன் உள்ளார்ந்த உயிர்ப்பைப் பற்றி மிக ஆணித்தரமாகக் குறிப்பிட்டுள்ளான். ஆனால் சமுதாயத்தின் பிசிறுகளையும் சீர்கேடுகளையும் ஊன்றி அவதானித்து உள்வாங்கிக் கொண்ட புரட்சிக் கவிஞன் பாரதி, எழுத்தின் வாண்மையினால் நேரி யதொரு பாதையில் இவற்றிற்கு வழிகாட்ட எழுத்தே தெய்வம்; இவற் றைப் பிரசவிக்கும் எழுதுகோலே தெய்வம் என ஒருபடி மேலே சென்று கூறிப்போந்தான்.

எழுத்தின் கூரிய தாக்கத்தை உணர்ந்து போலும் இதழியல் துறை யில் கால் பதித்த சி.சு. செல்லப்பா, தான் வெளிக்கொணர்ந்த சிற்றிதழ் சஞ்சிகைக்கு 'எழுத்து' என்றே பெயர் சூட்டி எழுத்தின் முக்கியத்துவத்

நம் நாட்டில் ஏன் பிறநாடுகளிலும் கூட
அன்றன்று இடம்பெறும் விடயங்கள்
நம்மைச் சுற்றியும் நமது
சமூகத்தோடொட்டியும் நிகழ்ந்த, நிகழ்ந்து
கொண்டிருப்பதுமான அரசியல், சமூக,
கல்வி, சுகாதாரம், பொருளாதாரம்,
எனப் பல்வகையான விடயங்களையும்
அன்றன்று தமது பத்திரிகை வாயிலாகத்
தெரிவிப்பதில் முன்னணி இதழ்களுள்
ஒன்றாக நாம் தினக்குரலைக்
கணிப்பிடுகின்றோம்

திற்குப் பெருமை சேர்த்தார். அவ்விதழிலே சமுதாய சீர்திருத்தம் தொடர்பான பல்வேறு விடயங்கள் இடம் பெற்றிருப்பினும் புதுக்கவிதையின் நுழைவாயிலா கவே அவ்விதழ் சிறப்புப் பெற்றிருந்தது.

மனிதச் சங்கிலித் தொடரான இல்வாழ்க்கையில் கூட பேச்சு, அதன் பின்னர் எழுத்து என்பன முக்கி யத்துவம் பெறுவதை நாம் வேடிக்கையாகக் குறிப்பி டலாம்.


‘அன்பினால் உலகை ஆளலாம்’ என்பது எத் தனை சாத்தியமானதோ அதேபோல பாரதியின் எழு துகோல் என்ற தெய்வம் – எழுத்தை சரியாகப் பயன்ப டுத்தி நல்குவதால் வாழ்வில் சகல வெற்றிகளையும் நம் கரங்களில் ஏந்திக் கொள்ளலாம் என்பதும் மறுக்க முடியாத உண்மையே. அதற்கான களமாக அமை வன நாளிதழ்கள், வார இதழ்கள், சஞ்சிகைகள், அவ ரவரது சொந்தப் படைப்புகள் எனப் பலதையும் குறிப் பிடலாம்.

இப்படி நாளிதழ், வார இதழ், சிறப்பிதழ் எனப் பல இதழ்கள் மூலம் தன்னை வெளிப்படுத்திக்கொண்ட ‘தினக்குரல்’ என்ற பத்திரிகை தனது 20ஆவது ஆண் டில் காலடி பதிக்கும்போது தனது கடந்தகால வரலாற் றை சிறிது புரட்டிப்பார்ப்பது அவசியமானது, ஆனந்த மானது, ஆரோக்கியமானது எனக் கருதுகிறேன்.

நம் நாட்டில் ஏன் பிறநாடுகளிலும் கூட அன் றன்று இடம்பெறும் விடயங்கள் நம்மைச் சுற்றியும் நமது சமூகத்தோடொட்டியும் நிகழ்ந்த, நிகழ்ந்து கொண்டிருப்பதுமான அரசியல், சமூக, கல்வி, சுகா தாரம், பொருளாதாரம் எனப் பல்வகையான விடயங் களையும் அன்றன்று தமது பத்திரிகை வாயிலாகத் தெரிவிப்பதில் முன்னணி இதழ்களுள் ஒன்றாக நாம்

**தினக்குரலுக்கு எமது இனிய வாழ்த்துக்கள் !**

மலையக அரசியல், தொழிற்சங்க வரலாற்றில் 77 வருடங்கள் இந்திய வம்சாவளி மக்களின் ஏகோபித்த சக்தியாக திகழும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பல்வேறு சோதனைகளை, சாதனைகளாக்கி சவால்களைக் கடந்து ஒன்றுபட்ட சக்தியாக நின்று சாதனையை நிலைநாட்டியுள்ளது. மலையக சமூகத்தை ஏனைய சமூகத்திற்கு நிகராக கட்டியெழுப்பிய இ.தொ.கா மலையக சமூகத்தில் எழுச்சிமிகு சேவையாற்றும் ஒப்பற்ற பல தலைமைகளை உருவாக்கிய தாய் தொழிற்சங்கமாகும். தடைகள் பல கண்டும் மலையக மக்களின் எழுச்சிக்காக மகத்தான பணியாற்றும் ஒரே தொழிற்சங்கம் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் எனப் பெருமை கொள்வோம் !



முத்து சிவலிங்கம் (பா.உ)
தலைவர் – இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்

பத்திரிகையுலகில் மலையக மக்களுக்கு சிறப்பான சேவை புரிந்து 20 வருடங்களை எட்டிப்பிடித்திருக்கும் தினக்குரலுக்கு எமது இனிய வாழ்த்துக்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினக்குரலைக் கணிப்பிடுகின்றோம்.

இன்றைய அரசியல், சமுதாயத்தின் போக்கு, நாம் முகம் கொடுக்கவேண்டிய பிரச்சினைகள் போன்றவற்றையெல்லாம்கூட ஒரு தூரநோக்குப் பார்வையில், சமூகத்தைக் கைநாடி பிடித்துப் பார்ப்பதுபோல மிகத் தெளிவாகவும் விளக்கமாகவும் ஆணித்தரமாகவும் அமைந்திருக்கும் ஆசிரியத் தலையங்கங்கள் என்றென்றும் வரவேற்கக் கூடியவையே. மஞ்சரி, மலையகப் பார்வை, சாளரம், வர்த்தகம், அரசியல் களரி, இலக்கியம், இவள் பக்கம், சினிகுரல், சிறுவர் பக்கம் என ஒவ்வொரு அம்சங்களுக்கும் முக்கியத்துவமும் சிறப்பும் அளித்து முடிந்தவரை பல்வேறு விடயங்களையும் உள்ளடக்கி உரிய நேரத்தில் தரமாக இதழ்களை வெளிக்கொணருவதென்பது இலேசான காரியமல்லவே. அத்தோடு விருப்பு, வெறுப்புக்கு உட்பட்ட காரணமான விடயங்களையும்கூட வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவதுபோல மெதுமெதுவாகவும் உண்மைவயப்பட்டு நின்றும் சமுதாய நலன் நோக்கியும் வெளிப்படுத்துவதென்பது கத்திமுனையில் நடப்பது போன்ற செயற்பாடே. இவற்றுக்கெல்லாம் முகம்கொடுத்து வெகு கச்சிதமாகவும் வெற்றியாகவும் நிறைவேற்றியுள்ள பெருமிதத்துடன் கடந்த ஆண்டுகளில் கண்ணோட்டத்தைப் பதிக்கிறது மக்கள் குரலாக ஒலிக்கும் தினக்குரல்.

இனி அடுத்த ஆண்டிற்கான படிகளைத்தாண்ட காலெடுத்தூன்றும் இவ்வேளையில் வளர்ச்சிக்கான இன்னும் சில உந்துதல்களைத் தெரிவிக்கவேண்டியது வாசகர்களதும் எழுத்தாளர்களதும் கடமையெனக் கருதுகின்றேன்.

பல்லாண்டுகளுக்கு முன்பெல்லாம் வெளியான பத்திரிகை இதழ்களின் மொழிநடை இலக்கண மரபு மாறாது கடுமையான வசன நடையைக் கொண்டே அமைந்திருந்தன. இவ்வசன நடையை இலகுவாக்கியும் எளிமையாக்கியும் புதுமை செய்தவன் பாரதி. நேருக்குநேர் பேசுவதுபோல குத்தலும் கிண்டலும் கலந்த நையாண்டி நடையை தனது ‘இந்தியா’ பத்திரிகையில் மிகுதியாகப் புகுத்தினாரென அன்றைய பத்திரிகையாளர் எஸ்.ஜி.ராமாநுஜீலு நாயுடுவும் பாரதியின் குரல் தேசவிடுதலைக்காக இருந்ததற்கு அவர் ஆற்றிய பத்திரிகைப் பணியே இன்றியமையாத காரணமாகுமென ஆய்வாளர் சேது பாண்டியனாலும் குறிப்பிடப்பட்டபடி இதழியல் முன்னோடியான பாரதி இதழியலில் பல்வேறு புதுமைகளைப் புகுத்தினான். அதுவரைகாலமும் வேற்றுமொழியிலேயே எழுதப்பட்ட ஆண்டு, மாதம், நாள் ஆகியவற்றையும் இதழ்களின் பக்க எண்களையும் கூடத் தமிழில் அறிமுகப்படுத்தி வைத்தவன் பாரதியே. இதழ்களில் கேலிச்சித்திரங்களை அறிமுகப்படுத்தினான். பண்டிதர் தவிர பாமரரும் படித்துப் பயன்பெறும் வகையில் வசனநடையை இலகுபடுத்தியதோடு அத்தியாவசியமான






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில கருத்துகளையும் எழுத்துகளில் புகுத்துமாறு சொல்லிவைத்தான். சமுதாய மாற்றத்தைப் பெரிதும் வேண்டிநின்ற பாரதி எழுத்துகள் எப்படியாக அமைய வேண்டுமென வழிகாட்டுவதுபோல்,

'ஆணும் பெண்ணும் - ஒருயிரில் இரண்டு கலைகள் என்றெழுது;

அவை ஒன்றிலொன்று தாழ்வில்லை என்றெழுது

பெண்ணைத் தாழ்மை செய்தோன் கண்ணைக் குத்திக்கொண்டான் என்றெழுது

**விருப்பு, வெறுப்புக்கு உட்பட்ட காரணமான விடயங்களையும்கூட வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவதுபோல மெதுமெதுவாகவும் உண்மைவயப்பட்டு நின்றும் சமுதாய நலன் நோக்கியும் வெளிப்படுத்துவதென்பது கத்திமுனையில் நடப்பது போன்ற செயற்பாடே.**

பெண்ணை அடைத்தவன் கண்ணை அடைத்தான் என்றெழுது' என நாட்டின் மேம்பாட்டிற்காகவும் பெண்ணின் விடுதலைக்காகவும் தன் எழுத்தின் ஒவ்வொரு வரியிலும் ஒவ்வொரு சொல்லிலும் கூட ஏராளமான புதுமைக் கருத்துகளை, சீர்திருத்தச் சிந்தனைகளை வெகுதுல்லியமாக அள்ளி அள்ளி நல்கினான். எழுத்தையும் எழுதுகோலையுமே தெய்வத்தின் பிரசன்னமாக ஏற்றுக்கொண்ட பாரதி எழுதுகோலைத் தூக்கிய யாவரையுமே பார்த்து இதனை எழுது, இப்படி எழுது எனத் தூண்டித் தூண்டி உந்துதல் பயப்பது எத்தனை வியப்பானது; வலிமை தருவது; வாழ வழிசமைப்பது; தீர்க்க தரிசனமானது.

மரமொன்று செழிப்பாகக் கிளைவிடவும் பூத்துக் காய்த்துப் பழம் தரவும் மண்ணுள் மறைந்து கிடக்கும் ஆணிவேரே காரணம் என்பது யாவரும் அறிந்ததே. அதேபோல குடும்பமென்ற கூட்டுக்கும் ஆணிவேராகத் திகழ்பவள் பெண்ணே. ஆணிவேர் வரட்சியால் காய்ந்தோ, கறையானால் அரிக்கப்பட்டோ கெட்டுப் போனால் மரம் ஆட்டங்கண்டு பட்டேவிடும். இதனை ஒத்ததே நம் குடும்ப வாழ்வு.

குடும்பத்தில் பெண் சகல துறைகளிலும் ஓரளவாவது அறிவும் ஆற்றலும் உலகியல் போக்கும் விளங்கியவளாக, சமமான வாய்ப்புகளைப் பெற்றவளாக அமைய வேண்டியது அவசியம். அதற்கான தகுதியைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் பெண்ணுடைய கல்வி அறிவு, வெளியுலகப் பார்வை, இளமையிலிருந்தே வளர்ச்சியடையக் கூடிய வகையில் கற்றல், பயிற்சிபெறல், சந்தர்ப்பங்கள் வழங்கப்படல் என்பன சிறப்பாக அமையவேண்டும். பெண் கல்வி அறிவு, ஆற்றல் திறமை மிக்கவளாக அமைந்திருந்தால் தான் குடும்ப வாழ்வு நலம் பெற்றோங்கும். அவர்களால் சற்புத்திரர்களைப் பெற்றெடுக்க முடியும்.

இப்படியாக ஒவ்வொரு குடும்பமும் சிறப்புற அமைந்தால் அந்த சமுதாயமே உயர் நிலையை அடையுமென்பதில் சிறிதும் ஐயமில்லை. எனவேதான் பெண்களென்றால் என்றென்றும் சமையலிலும் மேனாமினுக்கியாகவும் அலங்காரப் பொம்மையாகவுமே அமைவதற்கான இலக்குகளை சிறிது மாற்றி அவர்களைச் சிந்தனை உலகிலே உலாவரச் செய்வதோடு, உலகியல் அறிவுபெறவும் சிறந்த செயற்பாட்டாளர்களாகச் சாதனை படைக்கவும் இந்தத் தெய்வீக எழுத்துகள் அதிகம் உதவ வேண்டும். இப்படிக் குறிப்பிடுவதனால் இதுவரை காலமும் எதுவும் செயற்படுத்தப்படவில்லையென்பது அர்த்தமல்ல. இதன் வீச்சு போதாது என்பதையே இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

தினக்குரலின் புதியதோர் ஆண்டு ஆரம்பத்திலே பாரதி தந்த மந்திரமாக எழுத்து தெய்வம், இந்த எழுதுகோல் தெய்வம், என்ற மந்திரமே வாலாயமாக எழுதுகோலாளர்களின் மனதிலே ஒலிக்கட்டும் என வாழ்த்துகின்றேன்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்த்தகத் துறையில் அதிகரித்துவரும் பெண்களின் பங்களிப்பு



**பெண்களுக்கே ஆளுமைத்திறன், முகாமைத்துவத்திறன் அதிகம் என்கிறார் அபான்ஸ் குழுமத்தின் தலைவி அபான் பெஸ்டன்ஜி**

ஆரம்ப காலகட்டங்களை விட வியாபாரச் சூழலில் பெண்களின் பங்களிப்பு அதிகரித்து வருகின்ற அதேவேளை, ஆண்களுக்கு நிகரான ஒரு நிலையைப் பெற நாம் சற்று காத்திருக்கவே வேண்டியுள்ளது. கல்வியறிவு மிக்க பெண் சமுதாயம் தோன்றியுள்ளதுடன், நான்கு சுவருக்குள் கணவன், குடும்பம் என்று வாழ்ந்து வந்த பெண்கள் இலட்சியம் என்ற சிறகுகளை கொண்டு பறக்கத் தொடங்கிவிட்டனர். இலங்கையில் பெண்களுக்கு முன் உதாரணமாகத் திகழும் 'Abans Group of Com-panies' இன் தலைவி அபான் பெஸ்டன்ஜி (Aban Pestonjee)யை சந்தித்து இலங்கையில் பெண்களின் வியாபார மற்றும் வர்த்தகத்துறை பங்களிப்பு பற்றி வினவியபோது அவர் இவ்வாறு விபரித்தார்.

'Abans ஆரம்பத்தில் சாதாரணமாக ஆரம்பிக்கப்பட்ட ஒரு சிறிய வணிகமாகும். ஆனால் தற்போது இலங்கையில் 400 கிளைகளுடன் உலகத்தரம் வாய்ந்த இலத்திரனியல், வீட்டுப் பாவனை உபகரணங்களை வழங்கும் நிறுவனங்களில் முன்னணியாக உள்ளது. ஒரு பெண்ணாக எனது இந்த வெற்றிக்கு நேர்மை, கடின உழைப்பு மற்றும் விடா முயற்சியே காரணமாகும்.

பெண்கள் நாளாந்த குடும்ப வாழ்க்கை நிலை பாதிப்படையும் என்ற அச்சத்திலேயே வணிகத்தில் நுழைய சிந்திக்கின்றனர். ஆனால் தைரியமுள்ள திறமையான பெண்கள் குடும்பம் மற்றும் தொழில் இரண்டையும் எவ்வாறு சமநிலையில் பேணுவது என்பதை நன்கு அறிவர். அதுவும் அவர்களின் முகாமைத்துவத் திறனையே காட்டுகிறது.

எந்தத் துறையில் அதிக லாபம் காணலாம் என்பதைவிட எத்துறையில் நாட்டம் உள்ளதோ அந்தத் துறையை தெரிவு செய்தால் மட்டுமே வெற்றிகாண முடியும். வீட்டையும் அதேநேரம் தொழிலையும் கவனிக்கும் பெண்களுக்கு ஆண்களை விட ஆளுமைத் திறன், முகாமைத்திறன் அதிகம் என்றே கூற வேண்டும். தற்போது பெண்களின் கல்விநிலை துரிதமாக வளர்ச்சியடைந்துள்ள நிலையில் சிறப்பான, தமக்கு விரும்பிய தொழிற்றுறையை தெரிவு செய்யும் போது வெற்றி காண வாய்ப்பு சற்று அதிகமாக உள்ளது.

ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும் வியாபாரத்தில் ஒரு சில சவால்களை எதிர்நோக்க வேண்டியிருக்கும். இதில் பெண்களுக்கான தனிப்பட்ட சவால்கள் இருப்பதாக நான் கருதவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டு ஒன்றாகக் கிடைக்கும் போது

## சுரக்ஷனா

## (10% உத்தரவாத மீளளிப்பு)

ஐந்து வருட காலத்துக்குரிய நிலையான வைப்புத் திட்டம் இது. ஒரே தடவையில் கட்டுப்பணத்தை செலுத்துவதாக அமைந்த ஓர் திட்டமாகும். உயிர் வாழும் போது கால முடிவில் கட்டுப்பணத்தில் 1.5 மடங்கை மீளளிப்பு செய்யும் திட்டமாகும்.

**தகைமை நிபந்தனைகள்**

| | |
|---|---|
| சேர்வதற்கான குறைந்தபட்ச வயது | : 18 வருடங்கள். |
| சேர்வதற்கான உச்ச வயதெல்லை | : 65 வருடங்கள். |
| குறைந்தபட்ச காப்புறுதி தொகை | : LKR 25,000/= மற்றும் LKR 10,000/= இன் மடங்குகள் |
| காப்புறுதி கட்டணம் செலுத்தும் முறை | : ஒரே தடவையில் |
| காப்புறுதி தவணை காலம் | : 5 வருடங்கள் |
| முதிர்ச்சி அனுகூலங்கள் | : ஐந்து வருடங்களின் முடிவில் உயிருடன் இருக்கும் போது காப்புறுதியளிக்கப்பட்ட தொகையின் 1.5 மடங்கு ஆயுள் காப்புறுதிக்கு வழங்கப்படும். |
| இறப்பின் போது | : ஆயுள் காப்புறுதியாளரின் இறப்பின் போது காப்புறுதியளிக்கப்பட்ட தொகையின் இரண்டு மடங்கும். 5 வருடகாலத்துக்குள் விபத்து மரணத்தின் போது காப்புறுதி யளிக்கப்பட்ட தொகையின் மூன்று மடங்கும் வழங்கப்படும். |

**உத்தரவாத முதிர்ச்சிப் பெறுமதி / ஆயுட் காப்புறுதித் தொகை**

| காப்புறுதியளிக்கப்பட்ட தொகை LKR | முதிர்ச்சிப் பெறுமதி (LKR) | 5 வருடங்கள் காப்புறுதி தவணைக்கான காப்புறுதித் தொகை |
|---|---|---|
| 25,000 | 37,500 | 50,000 |
| 50,000 | 75,000 | 100,000 |
| 100,000 | 150,000 | 200,000 |
| 200,000 | 300,000 | 400,000 |
| 500,000 | 750,000 | 1,000,000 |
| 1,000,000 | 1,500,000 | 2,000,000 |

இரட்டிப்பு சலுகைகளை நீங்கள் அனுபவித்திடுங்கள்!

## முதலீடு + காப்புறுதி = சுரக்ஷனா

- கொழும்பு நகரம் தொ.பேசி - 011 2552277
- கொழும்பு மேற்கு தொ.பேசி - 2592982
- அநுராதபுரம் தொ.பேசி - 025 2236436
- பண்டாரவளை தொ.பேசி - 057 2225064
- பலாங்கொடை தொ.பேசி - 045 2286552
- மட்டக்களப்பு தொ.பேசி - 065 2226701, 065 2226702 (தொ.பேசி & பெக்ஸ்)
- சாவகச்சேரி தொ.பேசி - 021 2270070 (தொ.பேசி & பெக்ஸ்)
- சிலாபம் தொ.பேசி - 032 2223297 (தொ.பேசி & பெக்ஸ்)
- கம்பஹா தொ.பேசி - 033 2232083
- யாழ்ப்பாணம் தொ.பேசி - 021 2226325 (பெக்ஸ்) 021 2226326
- கிளிநொச்சி தொ.பேசி - 021 2285449
- ஹட்டன் தொ. பேசி - 051 2225771
- மன்னார் தொ. பேசி - 023 2223452
- மானிப்பாய் தொ.பேசி - 021 2256084
- நீர்கொழும்பு தொ.பேசி - 031 2220862 (தொ.பேசி&பெக்ஸ்)
- நுவரெலியா தொ.பேசி - 052 2222006
- புத்தளம் தொ.பேசி - 032 2267512 (தொ.பேசி&பெக்ஸ்)
- இரத்தினபுரி தொ.பேசி - 045 2226288
- குருநாகல் தொ.பேசி - 037 2233553 (தொ.பேசி&பெக்ஸ்)
- திருகோணமலை தொ.பேசி - 026 2223925 (தொ.பேசி&பெக்ஸ்)
- வவுனியா தொ.பேசி - 024 2224465 (தொ.பேசி&பெக்ஸ்)
- கல்முனை தொ.பேசி - 067 2224284 (தொ.பேசி&பெக்ஸ்)
- மாத்தறை தொ.பேசி - 041 2232558 (தொ.பேசி&பெக்ஸ்)
- சுன்னாகம் தொ.பேசி - 021 2242281
- கண்டி தொ.பேசி - 081 2203655 (தொ.பேசி&பெக்ஸ்)
- களுத்துறை தொ.பேசி - 034 2235565 (தொ.பேசி&பெக்ஸ்)
- பொலன்னறுவை தொ.பேசி - 027 2226033
- பருத்தித் துறை தொ.பேசி - 021 2260220

LIC
The Hands that Protect
Life Insurance Corporation (Lanka) Ltd

**Life Insurance Corporation (Lanka) Ltd.**
No. 29/2, Vishaka Road, Colombo - 04.
Web Site : www.liclanka.com Tel : 011 2552277 (hunting line), 2553577-8, 2554411, Fax : 011 2590495


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யும் தொழிலில் தெளிவு, கடின உழைப்பு இருக்குமானால் சாதிக்க முடியும். அவ்வாறு சாதித்துக் காட்டும் பெண்களிடமிருந்து ஆண்கள் நிறைய கற்றுக்கொள்வார்கள். வணிகத் துறையில் பெண்கள் ஒரு போதும் ஆண்களை விட சளைத்தவர்கள் அல்லர்.

ஆரம்ப காலங்களில் ஆண் உழைப்பவராகவும் பெண் குடும்ப நிர்வாகம் செய்பவரான நிலை காணப்பட்டது. ஆண்கள் சமையலறை வேலை செய்தலை அவரது கௌரவத்திற்கு குறைவானதாக கருதினர். இன்று அந்நிலை மாறி ஆண்களும் வீட்டுவேலை செய்கின்றனர். வீட்டில் ஆண், பெண் இருவருமே தொழில் புரிபவர்களாக இருக்கின்றனர். இதுவும் பெண்களுக்கு கிடைத்த வெற்றியே. நேர்மை, விடாமுயற்சி, கடின உழைப்பு, செய்யும் தொழிலில் தெளிவு, தைரியம், சிறப்பான முகாமைத்துவம், மாறுபட்ட சூழ்நிலைகளை எதிர்கொள்ளும் திறன், நம்பிக்கை என்பவை பெண்கள் வணிக சூழலில் கிரீடம் சூடுவதற்கு உதவியாக அமையும். செய்யும் முயற்சியாண்மைக்கு உடனடியாக வெற்றி கிடைக்காத போதும் விடாமுயற்சி, தொடர்ச்சியான செயன்முறை கண்டிப்பாக பெண்கள் உச்சத்தைத் தொட முடியும் என்றார்.

**- எம்.ஆர்.**

# ஊடகவியலாளர்களின் தரம் பேணப்பட வேண்டும்

**செல்வராஜா நவநீதன்**
பணிப்பாளர், வர்ணம் எப்.எம்.

இலங்கையின் ஊடகங்களுக்கு ஆண்டாண்டு காலமாக தனித்துவமான மரியாதை காணப்படுகின்றமை சர்வதேசத்தில் இயங்கிவரும் ஊடகங்கள் அனைத்தும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒன்றே. இருந்த போதிலும் இன்றைய ஊடகங்களும் நிர்வாகிகளும் மேற்கொள்ளும் ஒரு சில ஊடக விதிமுறைக்கு மாறுபட்ட தீர்மானங்கள் காரணமாக ஊடகவியலாளர்களின் தரம் பற்றிய பாரிய குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு வருகின்றமையும் உண்மையானதே.

ஊடகங்களுக்குள் உள்வாங்கப்படுகின்ற ஒலிபரப்பாளர்கள் தொடர்பில் நிறுவன உரிமையாளரால் முழு சுதந்திரம் வழங்கப்பட்டுள்ள ஊடக நிர்வாகிகள் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்பதை எனது தாழ்மையான வேண்டுகோளாக நான் முன்வைக்கின்றேன்.

சினிமாத்துறை அஸ்தமித்து காணப்படுகின்ற இலங்கையில் வானொலி அறிவிப்பாளர்களை தமது விருப்பத்திற்கு உரிய நட்சத்திரங்களாக பின்தொடர்ந்து வரும் நடைமுறை காணப்படுகின்றமை வானொலிகளில் அறிவிப்பாளராக உருவெடுக்க வேண்டும் என்ற தூண்டுதலை மேலும் மேலும் இளைஞர்கள் மத்தியில் அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

இன்றைய இளைஞர்கள் ஊடகங்களில் கால் பதிக்கும் போதே பிரபலமாக வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்களாக மட்டுமே காணப்படுகின்றார்கள். மாறாக நிஜப் பிரபலமாக வேண்டும் என்பதற்காக எவ்வாறு உண்மையாகவும் நேர்மையாகவும் உழைக்க வேண்டும் என்பதை உணர்ந்து கொள்ளாதவர்களாகவே உள்ளனர்.

இந்த நிலைமை ஊடகத் தாகம் அடங்காத எந்தவொரு ஊடகவியலாளனுக்கும் கவலை அளிக்கக் கூடிய ஒன்றாகவே அமைந்துள்ளது.

எனவே இளைஞர்கள் குறித்த துறைக்கு தாம் பொருத்தமானவர்களா என்பதை உணர்ந்த பின்னர் வாய்ப்பிற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்பதோடு, ஊடகங்களுக்குள் பிரவேசிக்கும் போது தாம் பெற்ற வாய்ப்பை சரியாகப் பயன்படுத்த வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்களாகவும் இருத்தல் காலத்தின் கட்டாய அவசியமாக நான் கருதுகிறேன்.

அத்துடன் ஊடகத் துறையில் எங்கள் சிரேஷ்ட ஒலிபரப்பாளர்கள் பெற்றுத் தந்துள்ள கௌரவத்தை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு ஒவ்வொரு ஊடகவியலாளனின் உள்ளத்திலும் விதையாக விதைக்கப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளம்பரப்படுத்தல்களை மேற்கொள்ள ஊடகங்கள் எவ்வாறு தெரிவுசெய்யப்படுகின்றன?



Grant McCANN நிறுவன ஊடக சேவைகள் பணிப்பாளர் பீட்டர் சொலமன்

விளம்பரப்படுத்தல் என்பது சந்தைப்படுத்தலில் இருந்து பிரிக்க முடியாத ஒரு அங்கமாகத் திகழ்வதுடன் பொருளொன்றின் விற்பனை அளவைத் தீர்மானிப்பதில் விளம்பரப்படுத்தல்களின் செல்வாக்கு இன்றியமையாததொன்றாகும். இருப்பினும் நிறுவனங்கள் விளம்பரப்படுத்தல்களுக்கான ஊடகமொன்றைத் தெரிவு செய்யும்போது பல சவால்களை எதிர்நோக்குகின்றன. இதுபோன்ற சவால்களுக்கு பதில் கூறும் முகமாக இயங்கிவரும் GRANT McCANN நிறுவனத்தின் ஊடக சேவைகள் பணிப்பாளரான பீட்டர் சொலமனை அவரது அலுவலகத்தில் சந்தித்தபோது அவர் இவ்வாறு விபரித்தார்.

நிறுவனங்கள் விளம்பரப்படுத்தல்களுக்கூடாகவே சிறப்பான சந்தைப்படுத்தலொன்றை மேற்கொள்ள முடியும். அதற்கான விளம்பரப்படுத்தல் ஊடகமொன்றைத் தெரிவு செய்வது மிக முக்கியமான தொன்றாகும். இங்கு விளம்பரப்படுத்தல் ஊடகமாக தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகை, கையடக்கத் தொலைபேசி, இணையம், பஸ் தரிப்பிடப் பகுதி போன்றவற்றைக் கூறமுடியும்.

விளம்பரம் ஒன்றை மேற்கொள்ளும்போது யாருக்கு?, நாட்டில் எப்பிரதேசத்தில் இருப்பவர்களுக்கு குறித்த விளம்பரம் போய்ச் சேர வேண்டும் என்பதை உறுதிப்படுத்த வேண்டும். அவர்கள் ஆண்கள், பெண்கள், குழந்தைகள், மாணவர்கள், முதியோர்கள் என யாராக வேண்டுமானாலும் இருக்கலாம். அடுத்தது நாட்டின் எப்பிரதேச மக்கள்?, தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகை போன்ற ஊடகங்களில் எவற்றின் பாவனையில் அதிக நேரம் செலவிடுகின்றனர் என்பதையும் இனம் காண வேண்டும்.

இவை தொடர்பான ஆய்வு முடிவுகளை நாம் Nalional Media Surveyயிடமும் LMRB (Lanka Marketing Research Bureau)யிடமும் பெற்றுக்கொள்வோம். இதனடிப்படையில் தொலைக்காட்சியிலும் வானொலியிலும் மக்களால் அதிகம் விரும்பப்படும் நிகழ்ச்சி எது? எந்தப் பத்திரிகையில் எந்தப் பகுதியை மக்கள் விரும்பிப் பார்க்கின்றனர்? இணையத்தில் மக்களால் அடிக்கடி பார்வையிடப்படும் முகவரி எது? இதற்காக எவ்வளவு நேரம் செலவிடுகின்றனர் போன்ற தகவல்களைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# After A/Levels

உங்களுடைய திறமைகளை மேம்படுத்த சர்வதேச அங்கீகாரம் பெற்ற பல்வேறு டிப்ளோமா பாடநெறிகள்

DiTEC INTERNATIONAL
Diploma in
**Information Technology**
காலம் : 4 மாதங்கள் | பாடநெறிகட்டணம் : ரூ.26,500

DiE
Diploma in
**English**
காலம் : 4 மாதங்கள் | பாடநெறிகட்டணம் : ரூ.19,500

DiWE
Diploma in
**Web Engineering**
காலம் : 6 மாதங்கள் | பாடநெறிகட்டணம் : ரூ.34,500

DiSE
Diploma in
**Software Engineering**
காலம் : 6 மாதங்கள் | பாடநெறிகட்டணம் : ரூ.34,500

DiHN
Diploma in
**Hardware & Networking**
காலம் : 4 மாதங்கள் | பாடநெறிகட்டணம் : ரூ.24,500



Assured by
PEARSON edexcel
2 சான்றிதழ்கள் வழங்கப்படும்
ESOFT + PEARSON (UK)

DiBM
Diploma in
**Business Management**
காலம் : 4 மாதங்கள் | பாடநெறிகட்டணம் : ரூ.24,500

DiCA
Diploma in
**Computerized Accounting**
காலம் : 5 மாதங்கள் | பாடநெறிகட்டணம் : ரூ.29,500

DiIM
Diploma in
**Internet Marketing**
காலம் : 4 மாதங்கள் | பாடநெறிகட்டணம் : ரூ.24,500

DiCAD
Diploma in **Auto CAD**
காலம் : 4 மாதங்கள் | பாடநெறிகட்டணம் : ரூ.24,500

DiAE
Diploma in
**Academic English**
காலம் : 4 மாதங்கள் | பாடநெறிகட்டணம் : ரூ.24,500

DiBE
Diploma in
**Business English**
காலம் : 4 மாதங்கள் | பாடநெறிகட்டணம் : ரூ.19,500

DiM
Diploma in
**Multimedia**
காலம் : 12 மாதங்கள் | பாடநெறிகட்டணம் : ரூ.80,000

செப்டம்பர் 10 ம் திகதி வரை பதிவுகளுக்கு விசேட கட்டணக்கழிவுகள் மற்றும் இலவசமாக T.Shirt வழங்கப்படும்
அனைத்து பாடநெறிக் கட்டணங்களும் தவணை முறையில் செலுத்த முடியும்

ESOFT
Shaping Lives, Creating Futures

## ESOFT METRO CAMPUS
இலங்கையின் மிகப்பெரிய தனியார் உயர் கல்வி நிறுவனம்.

நாடளாவிய துரித அழைப்பு
**011-7 572 572**

கொழும்பு 011-7555545, கண்டி 081-2204400, குருணாகல் 037-2223945, நீர்கொழும்பு 031-2227990, மாத்தறை 041-2233550,
நுகேகொட 011-7555571, வத்தளை 011-7555530, கல்முனை 067-3673555, கேகாலை 035-2222045, கிளிநொச்சி 021-2285444,
ஜா-எல 011-2229766, பிலியந்தல 011-2608672, குளியாப்பிட்டிய 037-2284621, மினுவாங்கொட 011-2280770,
அவிசாவளை 036-2230332, நுவரெலியா 052-7755400, பொலன்னறுவ 027-7501130, மொனராகல 055-2055444,
பாணந்துறை 038-7389040, களுத்துறை 034-7388050, அம்பலாங்கொட 091-5704504, சிலாபம் 032-2222577,

பிரதான கிளை : இல.03 டி பொன்சேகா பிளேஸ், கொழும்பு 04.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நீங்கள் உயர்கல்விக்காக எந்தத்துறையைத் தெரிந்தெடுத்தாலும் அதற்கு வேண்டிய தரமான பயனுள்ள வழிகாட்டல்களை உங்களுடைய நகரத்திலேயே வழங்குவதற்காக 45க்கும் மேற்பட்ட நாடளாவிய ESOFT கிளைகள் அனைத்து வசதிகளுடனும் அமைந்துள்ளன.**

## Streams we offer

- Information Technology
- Software Engineering
- Computer Networking
- Business Administration
- Hospitality Management
- Travel & Tourism Management
- Civil Engineering
- Mechanical Engineering
- Electronic & Communications Engineering
- Quantity Surveying




**உங்களுடைய முன்னேற்றத்தின் பாதை**

- MBA (1½ YEARS)
- TOP-UP (1 YEAR)
- HND (1½ YEARS)
- DIPLOMA (6 MONTHS)

காலி 091-7501125, கம்பஹா 033-7388051, யாழ்ப்பாணம் 021-2224142, மட்டக்களப்பு 065-7200070, மாத்தளை 066-7501122,

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ஹட்டன் | 051-7388053, | ஹோமாகம | 011-2891675, | கிரிபத்கொட | 011-7555535, | பத்தரமுல்ல | 011-4932293, |
| நாவலப்பிட்டிய | 081-5633725, | அநுராதபுரம் | 025-5670513, | பண்டாரவெல | 057-2224042, | அம்பிலிபிட்டிய | 047-2261845, |
| இரத்தினபுரி | 045-2230005, | திருகோணமலை | 026-7267200, | வவுனியா | 024-7694050, | வென்னப்புவ | 031-2252520, |
| நாரம்மல | 037-7526560, | பதுளை | 055-7796957, | தம்புல்ல | 071-4084040, | தங்காலை | 077-3785314 |

**நாடெங்கும் 45 கிளைகள்**

www.esoft.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளம்பரப்படுத்தும் நிறுவனத்தின் நோக்கம் பல வகையாகக் காணப்படும். விற்பனையை அதிகரித்தல், மக்கள் மனதில் உற்பத்தி தொடர்பாகத் தோன்றிய தவறான எண்ணத்தை மாற்றுதல், நிறுவனத்தின் சந்தைப்பங்கை அதிகரித்தல், உற்பத்தி தொடர்பான அறிவை நுகர்வோருக்கு வழங்கல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். எனவே இந்த நோக்கத்தை நாம் தெளிவாக விளங்கிக்கொண்டால் மட்டுமே வெற்றியடைய முடியும்

பெற்றுக் கொள்ளக் கூடியதாகவிருக்கும். இவை பிரதேசம், மக்கள், விருப்பு, வெறுப்பு அடிப்படையில் ஒருவருக்கொருவர் வேறுபட்டதாக இருக்கும்.

மற்றும் விளம்பரப்படுத்தலின் போது ஒரு உற்பத்தி அல்லது சேவை தொடர்பாக அதிக தகவல்களை வழங்க வேண்டுமெனின் பத்திரிகை சிறப்பானதாகவிருக்கும். மாறாக கதை அமைப்பில் வடிவமைக்கப்பட்ட விளம்பரப்படுத்தல்களுக்கு தொலைக்காட்சி அல்லது வானொலித் தெரிவு சிறப்பானது.

விளம்பரப்படுத்தும் நிறுவனம், விளம்பரத்தை வெளியிடும் ஊடகம் [தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகை] விளம்பரம் ஒளி, ஒலிபரப்பப்படும் நேரம், பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் பக்கம் [முழுப் பக்கம், அரைப் பக்கம்] மற்றும் விளம்பரம் சென்றடையும் நுகர்வோரின் எண்ணிக்கை என்பன விளம்பரப்படுத்தலுக்கான கட்டணத்தைத் தீர்மானிக்கின்றன.

விளம்பரப்படுத்தும் நிறுவனத்தின் நோக்கம் பல வகையாகக் காணப்படும். விற்பனையை அதிகரித்தல், மக்கள் மனதில் உற்பத்தி தொடர்பாகத் தோன்றிய தவறான எண்ணத்தை மாற்றுதல், நிறுவனத்தின் சந்தைப்பங்கை அதிகரித்தல், உற்பத்தி தொடர்பான அறிவை நுகர்வோருக்கு வழங்கல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். எனவே இந்த நோக்கத்தை நாம் தெளிவாக விளங்கிக்கொண்டால் மட்டுமே வெற்றியடைய முடியும்.

விளம்பரத்தை வெளியிட முன்னரும் பின்னரும் நாம் இரு ஆய்வுகளை மேற்கொள்வோம். முன்னரான ஆய்வில் எந்த ஊடகத்தில் எந்நிகழ்ச்சிக்கிடையில் அல்லது பத்திரிகையில் எப்பக்கத்தில் விளம்பரம் செய்வது போன்ற விடயங்களும் பின்னரான ஆய்வில் விளம்பரம் மக்களிடையே போய்ச் சேர்ந்துள்ளனவா? நிறுவனத்தின் விற்பனையில் ஏதேனும் மாற்றங்கள் காணப்படுகின்றதா? குறிப்பிட்ட விளம்பரம் பயனுள்ளதாக அமைந்ததா? போன்ற விடயங்கள் ஆய்வு செய்யப்படும்.

எனவே மேற்கூறிய சில முக்கிய விடயங்களைக் கருத்திற்கொண்டு செயற்படுவதன் மூலம் நாம் வெற்றியடைய முடியும். எனவே எமது துறை ஒரு போட்டித் தன்மையான துறை. விருது நிகழ்வில் பங்கேற்பதன் மூலம் நாம் எமது சந்தைப்படுத்தல்களை மேம்படுத்தி வருகின்றோம். 2014 ஆம் ஆண்டில் சிறந்த ஊடக முகவர் நிலையத்திற்கான விருதை வென்றுள்ளோம். இங்கு உருவாக்கப்படும் விளம்பரங்களுக்கு எல்லோருடைய பங்களிப்பும் அவசியமாகிறது என்றார்.

**- எம்.ஆர்.**

# தமிழர் பண்பாட்டில் கலை, அழகியல்




**பேராசிரியர் ஏ.என். கிருஷ்ணவேணி**
தலைவர், நுண்கலைத்துறை
யாழ். பல்கலைக்கழகம்


தமிழ்ப் பண்பாடு என்று கூறும்போது அது மொழிநிலைப் பண்பாடாக விளங்குவதைக் காணலாம். தமிழ்மொழி பேசும் மக்களின் பண்பாட்டையே இது குறித்து நிற்கின்றது. தமிழ் மொழியானது சமஸ்கிருதம், லத்தீன் மொழி போன்று தொன்மை வாய்ந்த மொழியாகும். ஒரு மனிதக் குழுமம் சமூக வரலாற்றினடியாகக் கற்றறிந்து கொண்டவற்றினதும், பயில் நிலையில் உள்ளவற்றினதும் தொகுதியாகப் பண்பாடு பார்க்கப்படுகிறது. அந்த வகையில் மதச் சிந்தனைகள், ஆத்மார்த்தக் கருத்துக்கள், கட்டிடம், சிற்பம், ஓவியம் போன்ற கலைகள் இலக்கியம், தொழில்நுட்பம், விஞ்ஞானம் போன்ற சகலவற்றினதும் தொகுதியாகவும் பண்பாடு நோக்கப்படுகிறது. பண்பாட்டில் எப்பொழுதும் பிரதான இடத்தைப் பெறுவது மதம். மதவெளிப்பாட்டிற்கும் தொடர்பாடலுக்கும் உரிய ஊடகமாக அமைவது மொழியே. தமிழகத்தைப் பொறுத்தமட்டில் சைவம், வைஷ்ணவம், சமணம், பௌத்தம், இஸ்லாம் பிற்காலத்தில் கிறிஸ்தவம் போன்றவையும் தமிழை அடிப்படையாகக் கொண்டே வெளிப்படுத்தப்பட்டன. அந்த வகையில் தமிழ்ப் பண்பாடு எனும் மொழிவழிக் கோட்பாடு தோன்றியது. எந்த ஒருமதமும், இலக்கியம் இல்லாமல் இருக்கமுடியாது. ஒவ்வொரு மதத்தவரும் தத்தம் கடவுட் கொள்கையை விளக்குவதற்கோ, கடவுளோடு தமக்குள்ள உறவை வெளிப்படுத்தவோ, வேண்டுதல் செய்யவோ, தமது ஓலங்களை எடுத்துக்கூறவோ, பிரார்த்தனை செய்யவோ

**இற்றைவரை நம்மத்தியில் பாவனைப் பொருட்களாக உள்ளவை கைவினைப் பொருட்களே. பாவனைக்கு அப்பால் அழகு என்ற உணர்வை வெளிப்படுத்தும் வகையில் உருவாக்கம் பெற்ற கலைகள் நுண்கலைகளாகக் கொள்ளப்படுகின்றன.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுநீரகம் தொடர்பான சகல நோய்களுக்குமான சிகிச்சைகளை வழங்கும் ஆசிரி சேர்ஜிகல் ஹொஸ்பிட்டல்ஸ்




ASIRI SURGICAL HOSPITAL LIVE MORE A Softlogic Group Company

இலங்கையில் காணப்படும் முன்னணி சுகாதார பராமரிப்பு சேவைகளை வழங்கும் வைத்தியசாலைகளில் ஒன்றான ஆசிரி சேர்ஜிகல் ஹொஸ்பிட்டல்ஸ், துறையில் காணப்படும் திறமையும், அனுபவமும் வாய்ந்த மருத்துவ நிபுணர்களை தன்வசம் கொண்டுள்ளதுடன், நவீன மருத்துவ சாதனங்கள் மற்றும் தொழில்நுட்பங்களையும் பின்பற்றி வருகிறது. நாட்டில் காணப்படும் சிறந்த சிறுநீரக சிகிச்சை நிலையத்தை இந்த வைத்தியசாலை தன்னகத்தே கொண்டுள்ளதுடன், இந்நிலையத்தின் மூலமாக சிறுநீரகம் தொடர்பான எந்தவொரு பரி சோதனைகளையும் மேற்கொள்ளும் வசதிகள் காணப்படுகின்றன. மேலும், நாட்டில் காணப்படும் சிறந்த சிறுநீரக சிகிச்சை நிபுணர்களின் சேவைகளை இந்த வைத்தியசாலையிலிருந்து பெற்றுக் கொள்ள முடியும்.

சிறுநீரகத்துடன் தொடர்புடைய வெவ்வேறு நோய்கள் காணப்படுகின்றன. சிறுநீரை மனித உடலிலிருந்து வடித்து வெளியேற்றுவதுடன் தொடர்புபட்டதாக இந்நோய்கள் அமைந்திருப்பதுடன், இவை ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் என சகல வயதையும் சேர்ந்தவர்களை பாதிக்கும் வகையில் அமைந்திருக்கும். மிகவும் பொதுவான நோய்களாக, சிறுநீரக கற்கள் மற்றும் ஆண்களின் சிறுநீர் குழாய் பெரிதடைதலுடன் தொடர்புடைய பிரச்சனைகளாக அமைந்துள்ளன. சிறுநீரகத் தொகுதியை பொறுத்தமட்டில் சாதாரண நோய்த் தொற்று முதல், உயிராபத்தை ஏற்படுத்தும் நிலை வரை வெவ்வேறு பிரச்சினைகள் எழக்கூடும். சிறுநீரகத் தொகுதி என்பது, சிறுநீரகங்கள், சிறுநீர்க்குழாய் மற்றும் சிறுநீர்ப்பை ஆகியவற்றுடன் தொடர்புடையதாக அமைந்துள்ளது. உடலிலிருந்து கழிவை அகற்றும் பிரதான செயற்பாடுகளுக்கு பொறுப்பு வாய்ந்ததாக இந்தத் தொகுதி அமைந்துள்ளது. குருதி அழுத்தத்தை கட்டுப்படுத்துவதுடன், குருதியின் அளவை கட்டுப்படுத்துவதிலும் பங்களிப்பு செய்கிறது. சிறுநீரகத்தொகுதியுடன் தொடர்புடைய கோளாறுகள் பெருமளவில் ஆரம்ப நிலையிலேயே இனங்காணப்படுகின்றன. ஏனெனில், தொற்றா நோய்களான உயர் கொலஸ்ரோல் மற்றும் நீரிழிவு போன்ற நிலைகள் இதனுடன் தொடர்புடையதாக அமைந்துள்ளன.

ஆசிரி சேர்ஜிகல் ஹொஸ்பிட்டலின் சிரேஷ்ட சிறுநீரக சிகிச்சை வைத்திய நிபுணரான வைத்தியர். அனுர விஜேவர்தன கருத்து வெளியிடுகையில், ஆரம்ப நிலையில் சிறுநீரகத் தொகுதியில் கற்கள் இருப்பதை இனங்கண்டு சிகிச்சை முறையை தீர்மானிப்பது முக்கியத்துவம் வாய்ந்ததாகும். பெருமளவான கற்தொகுதிகளை மருத்துவ சிகிச்சை மூலமாக குணப்படுத்திக் கொள்ள முடியும் எனவும் குறிப்பிட்டார். கற்கள் சார்ந்த நோய்களின் போது காணப்படும் பொதுவான அறிகுறிகள் பற்றி பொது மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவது என்பது மிகவும் முக்கியமானதாகும்." ஆண்களின் சிறுநீரகப் பையில் கற்கள் பதிவது என்பது சிறுநீரகக்குழாய் வீக்கமடைவதற்கு ஏதுவாக அமைகிறது. 40 வயது நடுப்பகுதியைச் சேர்ந்த ஆண்கள் மத்தியில் நாம் இதைக் காண்கிறோம். இதில் பெரும்பாலானவை புற்றுநொயை ஏற்படுத்தாதவை. இதில் சுமார் **18% - 20%** சீறுநீரகக்குழாயில் புற்றுநொயை ஏற்படுத்துவதாக இருக்கலாம். இது மிகவும் குறைந்த எண்ணிக்கையாக அமைந்திருந்த போதிலும், சமூகத்தில் ஆண்கள் மத்தியில் பெரும் பிரச்சினையாக அமைந்துள்ளது. 40 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் உடனடி மருத்துவ கவனிப்பை பெற்றுக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகின்றனர். ஆரம்ப நிலைகளில், சிறுநீரகக்குழாய் தொடர்பான புற்றுநோய் அறிகுறி என்பது, புற்றுநோயை ஏற்படுத்தாத சிறுநீரகக்குழாய் குறைபாட்டு அறிகுறையை ஒத்ததாக அமைந்திருக்கும். எனவே, நோயாளர்களுக்கு இந்த அறிகுறிகள் குறித்து கவனம் செலுத்த வேண்டிய தேவை காணப்படுகிறது. முதலில் தமது குடும்ப வைத்தியரை நாடலாம். அத்துடன் வைத்திய நிபுணரை சந்திப்பதற்கான நடவடிக்கைகளையும் அவர்கள் மேற்கொள்ள வேண்டும்" என்றார்.

ஆசிரி சேர்ஜிகல் ஹொஸ்பிட்டல்ஸ் அவசியமான ஆய்வுகூட பரிசோதனைகளை மேற் கொள்ளக்கூடிய வசதிகளைக் கொண்டுள்ளது. (சிறுநீரகத் தொகுதி மற்றும் குருதி) அத்துடன், சகல உயர் தரம் வாய்ந்த படமெடுத்தல் வசதிகளையும் கொண்டுள்ளது. **(x-ray, ultra sound** மற்றும் **CT** மற்றும் **MRI scan)** சிறுநீரகத் தொகுதியுடன் தொடர்புடைய கோளாறுகளை கண்டறியும் வசதிகளும் இங்கு காணப்படுகிறது.

சிறுநீரகக் கற்களை அகற்றுவதற்கு குறைந்தளவு துளையிடலுடன் கூடிய என்டோஸ்கொபி சிகிச்சை முறை வைத்தியசாலையில் பின்பற்றப்படுகிறது. **Percutaneous Nephro Lithotomy(PCNL), Ureteroscopy with Laser Lithotripsy, non-invasive extra corporeal Shock Wave Lithotripsy (ESWL)** மற்றும் நவீன குறைந்த துளையிடலுடனான சிகிச்சை முறைகள் **benignprostate** நோய்களுக்கு சிகிச்சையளிக்க பயன்படுத்தப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழி வேண்டப்படுகிறது. அந்த வகையில் மத அனுபவ வெளிப்பாட்டிற்கு மொழியும் இலக்கியமும் அவசியமாகிறது. மதத்தோடு தொடர்புடைய இலக்கியங்களில் பக்தி இலக்கியம் மிக முக்கியத்துவம் பெறுகிறது. பக்தியானது இறைவனோடு மனிதனுக்குள்ள சமூக உறவினடியாக வருவது. அந்தவகையில் சைவ, வைஷ்ணவ மதம் சார்ந்த பக்தி இலக்கியங்கள் [திருமுறைகள், திவ்ய பிரபந்தங்கள்] தமிழ் பண்பாட்டில் சிறப்புப் பெறுகின்றன. மத அனுபவம், இலக்கியம் கலைகளினூடாகப் பண்பாடு அறியப்படுகின்றது.

**முதன்முதலில் தன் தேவைக்கேற்ப ஒரு கல்லை வடிவமைத்து கருவியாக்கிப் பயன்படுத்தியவனே முதற்கலைஞன் என்பது மானிடவியலாளர்களின் கருத்து. தொல்பழங்காலத்தில் குகைகளில் வாழ்ந்த மனிதர்கள் தமது தேவைக்கேற்ப உணவு தேடி அலைந்தமையை வெளிப்படுத்துவனவாகக் குகைகளில் வரைந்த படங்கள் எமக்கு ஆதாரங்களாக உள்ளன**

### பண்பாட்டில் கலைகள்

பண்டைட காலந்தொட்டு மனிதன் தனது தேவையைப் பூர்த்தி செய்யும் வகையிலும் தனது அழகுணர்விற்குத் திருப்தியளிக்கும் வகையிலும் பௌதிகப் பொருட்களை உற்பத்தி செய்து வந்துள்ளான். இத்தகைய உற்பத்திப் பொருட்கள் கலை கைவினைப் பொருட்களாகக் காணப்படுகின்றன. கலைப்படைப் பொன்று அது தோன்றும் காலத்தின் உற்பத்திப் பொருள் என்பதையும், அத்தகைய கலைப் படைப்புக்களே ஒரு காலகட்டத்தை உருவாக்குபவையாக அமைகின்றன என்பதையும் கருத்திற் கொள்ள வேண்டும். நாகரீகத்தின் சிற்பிகள் கைவினைக் கலைஞர்களே என்பதனையும் நாம் மறந்துவிட முடியாது.

இற்றைவரை நம்மத்தியில் பாவனைப் பொருட்களாக உள்ளவை கைவினைப் பொருட்களே. பாவனைக்கு அப்பால் அழகு என்ற உணர்வை வெளிப்படுத்தும் வகையில் உருவாக்கம் பெற்ற கலைகள் நுண்கலைகளாகக் கொள்ளப்படுகின்றன. அந்த வகையிற் தமிழர் பண்பாட்டில் கட்டிடங்கள், சிற்ப, ஓவியங்கள் போன்ற காண்பியக் கலைகள் முக்கியத்துவம் பெறுகின்றன. அரங்கில் ஆற்றுகை செய்யப்படும் கலைகளாக இசை, நடனம், நாடகம் போன்றவை இடம்பெறுகின்றன. தொழில்நுட்ப ரீதியாக புகைப்படக் கலை, திரைப்படக்கலை போன்றவற்றைக் கூறலாம். எந்த ஒரு கலை வடிவமும் அதன் ஊடகமும் மூலப் பொருளுக்கு உட்பட்ட வகையிற் தொழில்நுட்பத்தின் வழியாக உற்பத்தி செய்யப்படுபவையே.

முதன்முதலில் தன் தேவைக்கேற்ப ஒரு கல்லை வடிவமைத்து கருவியாக்கிப் பயன்படுத்தியவனே முதற்கலைஞன் என்பது மானிடவியலாளர்களின் கருத்து. தொல்பழங்காலத்தில் குகைகளில் வாழ்ந்த மனிதர்கள் தமது தேவைக்கேற்ப உணவு தேடி அலைந்தமையை வெளிப்படுத்துவனவாகக் குகைகளில் வரைந்த படங்கள் எமக்கு ஆதாரங்களாக உள்ளன. அவை அழகுணர்வினைத் தூண்டுவனவாக இல்லாவிடினும் கருத்து வெளிப்பாடாக, வாழ்க்கை அனுபவமாக உள்ளன. கருத்து வெளிப்பாடும் ஆக்கத்திறனும் கொண்டனவாகவே கலைகள் உருவாக்கம் பெற்றன.

### ஓவியக் கலை

எந்தவொரு கலை வடிவமும் அது எழும் பிரதேசத்தின் அரசியல், பொருளாதார, மத, சமயப் பண்பாட்டுக் காரணிகளின் அடிப்படையில் தோற்றம் பெற்றிருப்பதை அவதானிக்கலாம். எனவே தான் கலைகளை அடிப்படையாகக் கொண்டு பண்பாடு அறியப்படுகின்றது. தமிழர் பண்பாட்டில் கட்டிடக் கலை தாய்க் கலையாக அமைந்ததனால் கட்டிடத்தை மையமாகக் கொண்டு ஏனைய கலைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ந்து வந்துள்ளன. அந்தவகையில் கோயில்க ளில் காணப்படும் ஓவியங்கள் அவ்வக் கடவுளர்க ளின் அருட் செயல்கள், அற்புதங்கள், புராண இதி காசங்களிற் கூறப்படும் சம்பவங்களை மக்களுக்குக் கூறுவனவாக உள்ளன. ஆரம்பகால ஓவியங்கள் பற்றி அறிவதற்கு பண்டைத் தமிழ் இலக்கியங்கள் ஆதாரங்களைத் தருகின்றன. எனினும் பல்லவர் காலப்பகுதியில் நேரடியாகக் கோயிற் சுவர்களிலும் விதானங்களிலும் ஓவியங்களைக் காணலாம். சோழர் காலப் பகுதியிற் தஞ்சைப் பெருங்கோயில் ஓவியங் கள் சிறப்புடையன. சுந்தரரைத் தடுத்தாட்கொண்ட செய்தி குறிப்பிடத்தக்கது.

தமிழகத்தில் தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள அனந்தபுரம் எனும் ஊருக்குப் பக்கத்தில் கீழ் வாலை [கி.மு.1000 – 500] எனும் இடத்தில் உள்ள ரத்தக் குடைக்கல் எனும் குகைகளில் மனிதன் விலங்குகளை வேட்டையாடும் காட்சிகள் சிவப்பு நிறக் கோடுகளால் வரையப்பட்டுள்ளன. [இந்தி ரன்: 1993:22] இங்குள்ள ஓவியங்கள் அனைத்திலும் கூட்டமாக உள்ள காட்சிகள், குறியீடுகள் இடம் பெறுகின்றன. இவை ஒரே வர்ணத்தாற் தீட்டப்பட் டவை. உணர்ச்சி வெளிப்பாடும் முக்கியத்துவம் பெறுகின்றது. சித்தன்னவாசல், பனமலை ஓவியங் கள் தமிழர் பண்பாட்டில் ஓவியங்களின் சிறப்பினை எடுத்துக்காட்டுவன. சித்தன்னவாசல் ஓவியங்களில் பறவை பறப்பதுபோல காட்டப்படுவதற்கு அவற்றின் உடல் மீதியான தோற்றமே பெரிதாகப் பயன்படுத் தப்பட்டுள்ளது. இறக்கைகள் இல்லாமலே அவை பறப்பது போன்ற உணர்வைக் காட்சிகளில் வெளிப் படுத்தியவிதம் கவனிக்கத்தக்கது. இந்த ஓவியங்க ளில் இயக்கம் முக்கியத்துவம் பெறுகின்றது. கலை யின் மூலம் கதை சொல்லுதல் என்பது ஒரு மரபாக வளர்ந்து வந்துள்ளது. விஜயநகர நாயக்கர் கால கலை ஓவியங்களில் இப்பண்பைக் காணலாம். தமிழ்நாட்டு ஓவியர்களின் தொழில் நேர்த்திக்கு முக்கிய காரணம் கோடுகளைப் பற்றிய அவர்களது ஆழ்ந்த புரிதல் என வும் சிற்பமாக இருந்தாலும் ஓவியமாக இருந்தாலும் நல்லதொரு வரை கலை அடிப்படை இல்லை என் றால் அவர்கள் சிகரங்களைத் தொடமுடியாது என வும் கூறப்படுகின்றது [இந்திரன்.1993:பக்.23].

இந்திய ஓவியக்கலை பற்றிய நூல்களில் முக்கி யத்துவம் பெறுவது விஷ்ணு தர்மோத்தர புராணத்தில் உள்ள சித்திர சூத்திரம் எனும் பகுதியாகும். ஓவியக் கலை பற்றியும் அதற்குப் பின்பற்றப்பட வேண்டிய விதிமுறைகள் பற்றியும் கூறுகின்றது. மனித உரு வங்களின் அளவுப் பிரமாணம், உடலின் பல்வேறு வகை நிலைகள், தலைமுடி, கண் பார்வை போன்ற விடயங்கள் பற்றி சித்திர சூத்திரம் கூறுகின்றது. கி.பி. 4ஆம், 5ஆம் நூற்றாண்டுகளிலேயே சடங் கக்கொள்கை உருவாகி விட்டதெனலாம். ரூப பேதம், பிரமாணம், பாவம், லாவண்ய யோஜனம், சாதிருஷ்யம், வர்ணிகாபங்கம் என்ற ஆறு கொள்கை களே ஓவியத்தின் பிரதான அங்கங்களாகும். இந்திய ஓவியங்களில் அஜந்தா ஓவியங்கள், தமிழ்நாட்டில் சித்தன்னவாசல் ஓவியங்கள் இத்தகைய இலட்ஷ ணங்களைப் பின்பற்றி உருவாக்கம் பெற்றுள்ளன. ஓவியங்களின் உணர்ச்சி வெளிப்பாடே பாவம் என்று அழைக்கப்படுகிறது. பாவங்களே அழகியல் ரசனைக் குக் காரணமாகின்றன.

நாட்டிய சாஸ்திரம் ரதி, ஹாஸம், சோகம், குரோதம், உற்சாகம், பயம், ஜுகுப்சை, விஸ்மயம் போன்ற எட்டு பாவங்களை அடிப்படை உணர்ச் சிகளாகக் கூறுகிறது. நடனத்திலும் சிற்பத்திலும் அபிநயங்களூடாகவும் ஓவியத்தில் வர்ணப் பிரயோ கங்களினூடாகவும் கவிதையில் மொழி, அது வெளிப்படுத்தும் அர்த்தங்கள் மூலமாகவும் உணர்ச்சி கள் வெளிப்படுத்தப்படுகின்றன. தொல்காப்பியரும் நகை, அழுகை, இழிவரல், மருட்கை, அச்சம், பெரு மிதம், வெகுளி, உவகை என்ற எட்டு மெய்ப்பாடுகள் கவிதையினூடாக வெளிப்படுத்தப்படுமாற்றினைத் தெளிவுபடுத்தியுள்ளார். கலைகளில் உணர்ச்சி அம் சமே அவற்றின் அழகுக்கும் அழகியல் ரசனைக்கும் காரணமாக உள்ளது.

### சிற்பக் கலையின் சிறப்பு

இந்திய தத்துவக் கொள்கைகள் யாவற்றிலும் உபநிடதக் கருத்துக்கள் ஊடுருவி நிற்பது போல இந்தியக் கலைகள் அனைத்திலும் ஊடுருவி நிற் பது தெய்வீகத் தன்மையே. சிற்பங்களில் கை, கால் நரம்புகள் வெளியே தோன்றாதவாறு பொருத்துக்கள் தெரியாத படி சடத்தன்மைக்கு அப்பால் தெய்வீகத் தன்மை வெளிப்படுத்தப்படுகின்றது. இந்திய சிற்பங் கள் யாவற்றிலும், சிற்ப அமைதியிலும், அழகிலும், தத்துவத்தினை வெளிப்படுத்துவதிலும் உன்னத




20 Anniversary

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிற்ப வடிவத்தை உருவாக்குபவர் அவ்வடிவத்தை, அதன் தனித்துவத்தை முழுமையாக இனங்காண வேண்டும். சிலவேளைகளில் ரௌத்திராகார மூர்த்தங்களை உருவாக்க வேண்டிய நிலையில் அவற்றையும் சரியாக இனங்கண்டு அறிந்து, உணர்ச்சிகளைப் புரிந்து அதற்கேற்ற வகையில் கல்லிலோ, கன்வசிலோ, வேறு மூலப்பொருட்களிலோ உருவாக்க வேண்டும் என்பது விதி**

வடிவமாகப் போற்றப்படுவது நடராஜ சிற்ப வடிவமே. பக்தி மரபு தமிழர் பண்பாட்டில் சிறப்புப் பெற்றது போன்று சிற்பக்கலை மரபில் நடராஜ வடிவம் மிகுந்த சிறப்பைப் பெறுகிறது. இந்திய – இலங்கைக் கலை மரபை உலகறியச் செய்த கலாநிதி ஆனந்த குமாரசுவாமி சிவானந்த நடனம் (Dance of Siva) என்ற நூலைச் செய்தமை குறிப்பிடத்தக்கது. இது தமிழர் நடனக் கலையின் அடிப்படையில் சிவநடனத்திற்கு விளக்கம் சொல்வதுடன், நடராஜ வடிவத்தின் தத்துவம், அழகியல் பற்றியும் எடுத்துரைக்கிறது. மக்கள் மத்தியில் கலை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தியதுடன் கலை பற்றிய ஆய்வு நூல்களையும் கலை வரலாறுகளையும் எழுதியவர் ஆனந்த குமாரசுவாமியே.

காண்பியக் கலை வடிவங்களிற் சிற்பக்கலை கல், மண், மரம், சுதை, உலோகம் போன்ற மூலப்பொருட்களின் அடிப்படையில் உருவாக்கம் பெறுகிறது. மூலப்பொருள் எதுவாயினும் அதை உருவாக்கும் ஸ்தபதி மன ஒருமைப்பாடு, புலனொடுக்கம், சாஸ்திர அறிவு பெற்றவராக இருக்கும் போதே சிற்பங்களை முறையாக, விதிப்படி உருவாக்க முடியும். இதன் காரணமாகவே அவர் யோகியுடன் ஒப்பிடப்படுகின்றார். சிற்பங்களுக்குரிய தியான ஸ்லோகங்களைக் கற்றுத் தனது சுயவிருப்பம் (Self willing), சுயசிந்தனை (self thinking), மூலம் உருவத்தை அகத்திற்கண்டு (Visualing the form of devada), சாதனை (Sadhana), மந்திரம், தியானம் மூலம் சிற்பத்தை உருவாக்க வேண்டும். எனவே சிற்ப உருவாக்கம் என்பது ஒரு தூய உளச் செயற்பாடாகவே [Citta Sanna – சித்த சஞ்ஞா] கொள்ளப்படுகிறது. ஒருவன் தியானத்தின் மூலம் அந்தர் கிருதய ஆகாசத்தில் (Immanent space in the heart) தெய்வ வடிவத்தை உருவாக்குகின்றார். பின்னரே அதற்குப் புறவடிவம் கொடுக்கப்படுகிறது. அகத்திற் பதிந்த



வடிவமே உண்மையான கலை, புறத்தே தோற்றுவிக்கப்படும் வடிவம் வெறும் மொழிபெயர்ப்புப் போன்றதென பௌத்த நூல்கள் கூறுவதும் கவனிக்கத்தக்கது.

சிற்பவடிவத்தை உருவாக்குபவர் அவ்வடிவத்தை, அதன் தனித்துவத்தை முழுமையாக இனங்காண வேண்டும். சிலவேளைகளில் ரௌத்திராகார மூர்த்தங்களை உருவாக்க வேண்டிய நிலையில் அவற்றையும் சரியாக இனங்கண்டு அறிந்து, உணர்ச்சிகளைப் புரிந்து அதற்கேற்ற வகையில் கல்லிலோ, கன்வசிலோ, வேறு மூலப்பொருட்களிலோ உருவாக்க வேண்டும் என்பது விதி. கலை உருவாக்கச் செய்முறையில் இஷ்ட தெய்வத்தின் மீதுள்ள பக்தி, வழிபாடு மூலம் உருவம் மனதில் உருவாக்கப்பட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்கம் பெறுகிறது. ஒரு சிற்பியைப் பொறுத்தமட்டில் அவரது அழகியல் உள்ளுணர்வு பற்றிய உளவியல் இங்கு விளக்கம் பெறுகிறது. தியான மொழி இங்கு தொழிற்படுகிறது. மாளவிகாக்னி மித்திரத்தில் [டிடி,2] ஓவியர் ஒருவர் ஓவியம் வரையும் போது தனது மாதிரி வடிவத்தின் அழகைத் தவறவிட்டால் அது அவரது கிரகிப்பு ஆற்றலின் தவறாகவே கொள்ளப்படும். இது சிதிலசமாதி என்று அழைக்கப்படுகிறது. (Imperfect absorption) தாந்தேயின் வார்த்தைகளிற் கூறுவதானால் ஓவியத்தைத் தீட்டும் ஒருவர் அதில் இல்லாமல் இருக்க முடியாது. அவ்வாறு இருக்கவில்லையானால் அவர் அதனை வெளியே கொண்டு வரமுடியாது. தாந்தேயின் இவ்வெண்ணக்கரு அரிஸ்ரோட்டில், புனிதர் தோமஸ் அக்குவயனஸ் போன்றோரிடம் உள்ளதை அறியலாம். சிற்ப ஓவிய உருவாக்கம் என்பது எத்தகைய அழகியலனுபவத்தைக் கொண்டுள்ளதென்பதை அறியலாம்.

**முத்தமிழ்க் கோட்பாடும் அழகியலும்**

தமிழில் முத்தமிழ்க் கோட்பாடு முதன்மையான இடத்தைப் பெறுகிறது. இலக்கியம், இசை, நாடகம் போன்ற கலைகள் பண்டைய சமூகப் பண்பாட்டுடன் நெருங்கிய தொடர்புடையவை. மொழியுடன் நெருங்கிய தொடர்புடைய இக்கலைகள் மக்களுடைய விருப்பு வெறுப்புக்கள், நம்பிக்கைகள், அபிலாசைகள், எதிர்பார்ப்புக்கள், சடங்குகள், அழகியல் ரசனை போன்றவற்றுடன் தொடர்புடையனவாக வளர்ந்து கலைகளாகப் பரிணமித்துள்ளன. பண்டை காலந்தொட்டு காண்பியக் கலைகளான சிற்ப ஓவியங்களும் நன்கு பயிலப்பட்டு வந்தமைக்கு இலக்கியங்களும் சிற்ப ஓவியங்களும் ஆதாரமாக உள்ளன. முத்தமிழ் என்ற கோட்பாட்டிற்குள் இவை இடம்பெறவில்லையாயினும் அவை வளர்ந்து வந்துள்ளமையை அடிப்படையாகக் கொண்டும் அவை சார்ந்த சாஸ்திர நூல்களின் துணை கொண்டும் தமிழர் பண்பாட்டு மரபினுள் இக்கலைகளின் இடத்தை அறியலாம். இந்திய மரபில் நுண் கலைகளுள் கட்டிடக் கலையானது வஸ்து பிரமவாதம் என்று சிறப்புப் பெறுகிறது. வசிப்பிடக் கலையான கட்டிடம் ஏனைய சிற்ப ஓவியக் கலைகளையும் உள்ளடக்கியதாகவே பேசப்படுகிறது. நாதப் பிரமவாதம் இசையையும் ரசப் பிரமவாதம் நடனம், நாடகம் போன்ற கலைகளையும்

தமிழில் முத்தமிழ்க் கோட்பாடு முதன்மையான இடத்தைப் பெறுகிறது. இலக்கியம், இசை, நாடகம் போன்ற கலைகள் பண்டைய சமூகப் பண்பாட்டுடன் நெருங்கிய தொடர்புடையவை. மொழியுடன் நெருங்கிய தொடர்புடைய இக்கலைகள் மக்களுடைய விருப்பு வெறுப்புக்கள், நம்பிக்கைகள், அபிலாசைகள், எதிர்பார்ப்புக்கள், சடங்குகள், அழகியல் ரசனை போன்றவற்றுடன் தொடர்புடையனவாக வளர்ந்து கலைகளாகப் பரிணமித்துள்ளன

சப்தபிரமவாதம் என்பது மொழியை ஊடகமாகக் கொண்ட இலக்கியங்களையும் குறித்து நிற்கின்றன.

இந்தக் கலைகள் அனைத்தினதும் அழகுக் கூறுகளை ஆராயும் போது பண்டைத் தமிழ் மக்களது வாழ்க்கை முறையே அழகை மையப்படுத்தியதாக அமைந்துள்ளமையை சங்க இலக்கியங்களே தெளிவுபடுத்துவனவாக உள்ளன. தமிழ் மக்களது வாழ்வியற் பிரதேசங்கள் நில இயற்கைக்கு ஏற்ப குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற ஐவகை நிலப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்ததுடன், ஒவ்வொரு நிலப்பிரிவுக்கும் ஏற்றவகையில் அவர்களது ஒழுக்கங்களும் தொழிற்றுறைகளும் பின்பற்றப்பட்டு வந்தமையையும் நோக்கும்போது தமிழர் வாழ்வியலில் அழகுக்கும் அழகியலுக்குமான இடத்தை அவதானிக்கலாம். தமிழ் மக்களது அழகு சார் பண்பாட்டு அடிப்படையில் சங்க இலக்கியங்கள் மக்கள் வாழ்க்கை முறைகளையே கருப்பொருளாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு அகம் என்றும் புறம் என்றும் வகுத்து அதற்குரிய விதிமுறைகளுடன் இலக்கியங்கள் உருவாக்கப்பட்டமை பற்றிய தொல்காப்பிய இலக்கணக் குறிப்புக்களை நோக்கலாம். பண்டைத் தமிழ் மக்களது வாழ்க்கைக்கும் அழகியலுக்கும் இலக்கணம் வகுத்த தொல்காப்பியம் பொருளதிகாரம் தமிழர் அழகியலில் முதல் நூலாகவும் தமிழ்க் கவிதையியல் நூலாகவும் கொள்ளப்படுகிறது. வடமொழி அழகியலில் பரதரது நாட்டியசாஸ்திரம் எத்தகைய இடத்தைப் பெறுகிறதோ அதேபோன்ற உயர்ந்த இடத்தைத் தமிழர் அழகியலிற் தொல்காப்பியம் பெறுகிறது. மேலைத்தேய அழகியலில் அரிஸ்டோட்டிலின் கவிதையியல் போன்று தொல்காப்பியம் பொருளதிகாரம் தமிழர் அழகியலிற் பிரதான இடத்தைப் பெறுகிறது. இத்தகைய சிறப்புக்களைக் கொண்ட தொல்காப்பியம் பொருளதிகாரம், அதன் வைப்புமுறை, அவற்றுள் முக்கியத்துவம் பெற்ற செய்யுளியல் அதற்குப் பொருளாக அமைந்த பொருளியல், அகம், புறம், களவு, கற்பு, இலக்கியத்தில் உணர்ச்சியின் அழகினை விளக்கிய மெய்ப்பாட்டியல், உணர்ச்சியை இலக்கியத்தில் வெளிப்படுத்தும் முறைமையான உவமையியல் தமிழர் மரபினை அடிப்படையாகக் கொண்ட மரபியல் ஆகியவற்றின் துணையுடன் கலை, இலக்கியம், அழகியல் பற்றித் திட்டவட்டமான கருத்துக்களை முன்வைக்கலாம். சங்ககால அகத்துறைப் பாடல்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்ட காதல் பல்லவர் காலத்தில் இறையியற் காதலாக உருப்பெற்று பக்தி உணர்ச்சி மூலம் வெளிப்படுத்தப்படும் பக்திர சானுபவமாக பக்தி இலக்கியங்களுக்கும் காவியங்களுக்கும் பொருளானது. சேக்கிழாரது பெரியபுராணம் பக்திரசத்தை வெளிப்படுத்தும் தமிழ்க் காவியமாகும். பக்தியில் உயர்ந்ததாகக் கொள்ளப்படும் மதுரபாவத்தை அடிப்படையாகக் கொண்ட இலக்கியங்கள் அழகியல் ரசனைக்குரியவை. தமிழ் நாட்டிற் தோன்றிய பக்தி இயக்கம் அனைத்திந்திய அளவிற் தமிழர் பண்பாட்டின் மாட்சிமையை வெளிப்படுத்தியதோடு, அத்தகைய ஓர் இயக்கம் வடநாட்டிற் தோன்றி பக்திப் பாரம்பரியம் வளர்வதற்கும், பக்தி இலக்கியங்களின் தோற்றத்திற்கும் கலைகளின் வளர்ச்சிக்கும் காரணமாயிற்று. பக்தியைப் பொருளாகக் கொண்ட சிற்ப ஓவியங்கள் தோற்றம் பெற்றன. உருவ வழிபாட்டை அடிப்படையாகக் கொண்ட கோயில் வழிபாட்டில் நாயன்மார்களாற் பாடப்பட்ட தேவார திருமுறைகளும், வைஷ்ணவ ஆழ்வார்கள் பாடிய திருப்பாசுரங்களும் இசையோடு பாடப்பட்டன. கோயில்களை அடிப்படையாகக் கொண்டு கலைகள் வளர இது வழி வகுத்தது.

தமிழர் பண்பாட்டில் ஆடற்கலை பெற்றிருந்த இடத்தினை சங்கத்தமிழ் நூல்களும் சிலப்பதிகாரம் போன்ற தமிழ்க் காப்பியங்களும் எடுத்துரைக்கின்றன. ஆடல் மகள், ஆடல் மகன், ஆடுகளம், கூத்தாட்டு அவைக்களம் போன்ற சொற்கள் ஆடற்கலையின் முக்கியத்துவத்தினை விளக்குகின்றன. பண்டைத் தமிழ் நூல்களில் நடனம், நாடகம், கூத்து என்றே அழைக்கப்பட்டது. சிவன் ஆடியதாகக் கூறப்படும் கொடுகொட்டி, பாண்டரங்கம் போன்ற ஆடல்கள் பற்றிய குறிப்புக்கள் சங்க இலக்கியங்களில் இடம்பெறுகின்றன. இயலிசை நாடகப் பொருட் தொடர்நிலைச் செய்யுளான சிலப்பதிகாரம் மாதவி ஆடிய பதினொருவகை ஆடல்கள் பற்றிக் கூறுகிறது.

அல்லியம் கொட்டிகுடைபாண்டரங்கம்
மல்லுடன் நின்றாடல் ஆறு
துடிகடையம் பேடுமரக்காலேபாவை
வடிவுடன் வீழ்ந்தாடல் ஐந்து

இவ்வாடல்கள் கரணப் பண்பும் மகிழ்வளிக்கும் தன்மையும் கொண்டவை. பதினொரு வகை ஆடல்களும் தெய்வங்களின் பெயரால் ஆடப்பட்டமையால் அவை தெய்வவிருத்தி என்று அழைக்கப்படுகின்றன. நாட்டிய நன்னூல் நன்கு கடைப்பிடித்து மாதவி ஆடியதாக அறிய முடிகிறது. அபிநயங்கள் ஆடலுக்கு அழகைக் கொடுப்பதோடு அர்த்தத்தை வெளிப்படுத்துவனவாகவும் உள்ளன. ஆங்கிகம், வாசிகம், ஆஹார்யம், சாத்துவீகம் என நால்வகை அபிநயங்கள் பற்றி அறியமுடிகிறது.

தமிழ் மக்களது வாழ்க்கை, வழிபாடு பண்பாட்டுடன் இணைந்ததாகவே இடம்பெற்றுள்ளன. சிலப்பதிகாரம், கானல்வரி, வேட்டுவவரி, ஆய்ச்சியர் குரவை, குன்றக்குரவை போன்றவை பண்டையத் தமிழ் மக்களின் ஆடல் பாடல்களைக் கூறுகின்றன. ஊஞ்சல், அம்மானை, பந்துவிளையாடுதல் போன்ற விளையாட்டுக்களின் போது பாடப்படும் பாடல்களும் முக்கியத்துவம் பெறுவன. முதன் முதலாக ஆற்று



20 Anniversary

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைக் கலையான நடனம் அரங்கில் ஆற்றுகை செய்யப்பட்டமைக்கு அரங்கேற்றுகாதையே ஆதாரம். அரங்கில் ஓவியங்கள் தீட்டப்பட்ட சித்திரவிதானம் பற்றியும் அறியமுடிகிறது. நடனம் இசையோடு தொடர்புடையதாகவே வளர்ந்து வந்துள்ளது. தமிழர் சமூக அமைப்பு வீரயுகத்தில் இருந்து விடுபட்டு வணிக சமூகமாக மாறுவதையும் அவ்வாறு மாறும் நிலையில் கலைச்செயற்பாடுகள், ஆற்றுகைப் பண்பு, ரசனை, ரசிகர்கள் சமூக மாற்றத்திற்கேற்ற வகையில் மாற்றம் பெறுவதையும் சிலப்பதிகாரம் வெளிப்படுத்தி நிற்கிறது.

பல்லவர் காலபக்தி இயக்கம் செல்வாக்குப் பெற்ற நிலையில் கோவில் வழிபாடு முக்கியத்துவம் பெறுவதோடு இசை, நடனம் போன்ற கலைகளும் கோயிலோடு தொடர்புடைய கோயிற் கலைகளாகவே வளரத் தொடங்கின. இறைவனை இசையால் வழிபட்டவர்கள் தேவார முதலிகள். இறைவனை இசையினாலும் நடனத்தினாலும் வழிபடுவதற்கு ஆகமங்கள் வழிவகுத்தமையை அறியலாம். தேவார குறிப்புக்களும் இதனை உறுதிப்படுத்துகின்றன. சோழர் காலத்தில் ஓதுவார்கள் திருமுறைகளைப் பண்ணோடு ஓதியமைக்கும் நடன மாதர்கள் கோயில்களில் நடனமாடியமைக்கும் கல்வெட்டுக்கள் ஆதாரங்களைத் தருகின்றன. இன்றும் கீதம், வாத்தியத்தினால் நாதோபாசனை நடைபெறுகிறது.

நாடகக் கலை இசை, நடனம் பேச்சு போன்ற ஏனைய கலைகளையும் உள்ளடக்கியது. மனித உணர்ச்சிகள் தவிர்ந்த எந்த ஒரு விடயமும் நாடகத்திற்குச் சிறந்த கருப்பொருளாக அமையமுடியாது என்பது நாட்டிய சாஸ்திரத்தின் அடிப்படைக் கருத்து. நாடகத்திற் பல்வேறு கதாபாத்திரங்கள் தாம் ஏற்று நடிக்கும் பாத்திரங்களை ஆளுரு மேற்கொண்டு நடிக்கும் போது வெளிப்படுத்தப்படும் உணர்ச்சிகள் பார்வையாளரது உள்ளத்தில் உள்ள உணர்ச்சிகளைத் தூண்டி அவற்றை ரசிக்கும் ரசானுபவநிலைக்கு கொண்டு வருகின்றன. இவ்வாறு நாடகத்தை அடிப்படையாகக் கொண்டு பேசப்படுகின்ற ரசானுபவம் சகல கலைகளுக்கும் பொருந்துவதாகும். கலைகளின் பயனாக ஒருவன் பெறும் ரசானுபவம் அவன் பரம்பொருளை அறிந்து அனுபவிக்கும் பிரமானுபவத்திற்கு வழிவகுக்கிறது. இதனாற் கலைகளும் மோட்ச சாதனமாகவே கொள்ளப்படுகின்றன.

இவ்வாறு மக்கள் தமது வாழ்க்கை அனுபவங்களூடாக வெளிப்படுத்திய ஆற்றல்களும் அனுபவ வெளிப்பாடுகளும் கலைகளாக உருப்பெற்றுள்ளதுடன் பண்பாட்டையும், சமூகப் பிரக்ஞையையும் வெளிப்படுத்தும் அமைவுகளாக முக்கியத்துவம் பெற்றுள்ளன. இந்த வகையிற் தமிழர் பண்பாட்டிற் கலை அழகியலின் வகிபாகத்தை நோக்கலாம்.



# LEYPOWER

POWERING YOUR NEEDS

## Brand New Diesel Generating Sets

## 05 KvA to 1000 KvA

( Sound proof,Water Cooled,Diesel )




**Manual / Auto Model**

ஓசையற்ற சகலவிதமான
நெடுநாள் நம்பகமான
சிக்கனமான செயற்பாடு

நாடளாவிய ரீதியில் பரவலாக்கப்பட்ட
விற்பனைக்குப் பின்னரான உத்தரவாதம்
மற்றும் இலவச பராமரிப்பு

தொடர்புகளுக்கு - 0775711273, 0778089676, 0777730787

அஷோக் லேலண்ட் என்ஜின்
ஸ்ராம்போட் ஆல்டனேடர்

**விஷேட விலையில் கையிலிருப்பில் உள்ளது ....**

**5KVA,10KVA,15KVA,20KVA,25KVA,40KVA,62.5KVA, 82.5KVA,100KVA,125KVA,140KVA,160KVA, 180KVA,200KVA,250KVA,350KVA,**

**LANKA ASHOK LEYLAND PLC**

No . 41, Edward Lane, R. A. De Mel Mawatha, Colombo-03.
Tel: 011-2502532, 2590404, 2592163. Fax: 011-2502286.
email: vipin@lal.lk / thivya@lal.lk web: www.lal.lk

LAL


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

L B FINANCE
FIXED DEPOSITS




சிரேஷ்ட பிரஜைகள் உங்களுக்கு
6மாத வைப்புகளுக்கு 12% வட்டி

| வைப்புக் காலம் | சாதாரண கணக்கு | | | | சிரேஷ்ட பிரஜைகளுக்காக | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மாதாந்த வட்டி வீதம் | வருடாந்த நிகர வட்டி வீதம் | முதிர்வின் போது வட்டி வீதம் | வருடாந்த நிகர வட்டி வீதம் | மாதாந்த வட்டி வீதம் | வருடாந்த நிகர வட்டி வீதம் | முதிர்வின் போது வட்டி வீதம் | வருடாந்த நிகர வட்டி வீதம் |
| 01 மாதம் | - | - | 9.50% | 9.92% | - | - | 10.50% | 11.02% |
| 03 மாதம் | 9.00% | 9.38% | 10.00% | 10.38% | 10.00% | 10.47% | 11.00% | 11.46% |
| 06 மாதம் | 10.00% | 10.47% | 11.00% | 11.30% | 11.00% | 11.57% | 12.00% | 12.36% |
| 12 மாதம் | 10.50% | 11.02% | 11.50% | 11.50% | 11.50% | 12.13% | 12.50% | 12.50% |
| 15 மாதம் | 10.50% | 11.02% | 11.50% | 11.34% | 11.50% | 12.13% | 12.50% | 12.32% |
| 18 மாதம் | 10.50% | 11.02% | 11.50% | 11.19% | 11.50% | 12.13% | 12.50% | 12.14% |
| 02 வருடம் | 11.00% | 11.57% | 12.00% | 11.36% | 12.00% | 12.68% | 13.00% | 12.25% |
| 03 வருடம் | 11.50% | 12.13% | 12.50% | 11.20% | 12.50% | 13.24% | 13.50% | 12.00% |
| 04 வருடம் | 12.50% | 13.24% | 15.00% | 12.47% | 13.50% | 14.37% | 16.00% | 13.16% |
| 05 வருடம் | 12.50% | 13.24% | 15.00% | 11.84% | 13.50% | 14.37% | 16.00% | 12.47% |

**Fitch Ratings "A-(lka)"**

நிலையான வைப்பிற்குரிய இந்த வட்டி வீதம் 2016 ஜூலை 21 ஆம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும் கூட்டிணைக்கப்பட்ட திகதி 1971.05.30. 2011 ஆம் ஆண்டின் 42 இலக்க நிதித்தொழில் சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் உரிமம் அளிக்கப்பட்ட நிதி நிறுவனம். இலங்கை மத்திய வங்கியினால் செயற்படுத்தப்படும் இலங்கை வைப்புக்கள் காப்புறுதி திட்டத்தின் கீழ் உரிய வைப்பிற்கு காப்புறுதி வழங்கப்பட்டுள்ளதால் ஒரு வைப்பாளருக்கு ஆகக்கூடியதாக ரூ.300,000 வரை இழப்பீடு வழங்கப்பட முடியும்.

We are Celebrating 45 Years
L B FINANCE

சிரேஷ்ட பிரஜைகளுக்கான 6மாத கால நிலையான வைப்பு வட்டி வீதம்
12.00% வ.வ.வீ | 12.36% வ.தி.வ.வீ

077 8 269 248 / 077 7 718 429 நிவ்பர்ட் - 077 3 276 477, பர்ஷான் - 077 2 518 908 யாழ்ப்பாணக்கிளை - 021 4 920 310

L B FINANCE
எல்.பீ.பினான்ஸ் பி.எல்.சீ
இல.20 தர்மபால மாவத்தை கொழும்பு 03
தொ.பேசி 0112 155 000
www.lbfinance.com
துரித அழைப்பு
0112 200 020

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகளவில் பிரசித்தி பெற்றுள்ள இலங்கை இரத்தினக்கற்கள்



தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபைத் தலைவர் அசங்க வெலகெதர

இலங்கை இரத்தினக்கல் துறை 2500 வருட பழமை வாய்ந்த வரலாற்றைக் கொண்டதாகும். இன்றும் சரி, இதற்கு முந்திய காலப் பகுதியிலும் சரி இலங்கையின் பிரதான ஏற்றுமதிப் பொருட்களுள் இரத்தினக்கற்கள் முக்கிய இடம் வகிப்பதுடன், உலகளாவிய ரீதியில் நல்ல வரவேற்பினையும் பெற்றுள்ளது. மகாவம்சத்தில் மன்னன் தேவநம்பியதீஸன் இந்தியாவில் அசோக சக்கரவர்த்திக்கு இரத்தினக் கற்களை அன்பளிப்பாக வழங்கியதும், இலங்கை 'இரத்தினதுவீபம்' என்று அழைக்கப்படுவதும் இதற்குச் சான்றாகும். இவை தொடர்பான மேலதிக தகவல்களை தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபைத் தலைவர் அசங்க வெலகெதர விபரித்தார்.

'இலங்கையின் பிரதான ஏற்றுமதிப் பொருட்களுள் இரத்தினக்கற்கள் முக்கியமானவை. இலங்கையில் இரத்தினபுரி, அவிசாவளை, பலாங்கொடை, எஹலியகொடை, ஹொரண, கதிர்காமம், மாத்தளை, மீடியகொட, நிவித்திகல, ஓக்கம்பிட்டிய, பொலநறுவை, மொனராகல போன்ற பிரதேசங்களிலிருந்து இரத்தினக்கற்களைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாகவுள்ளது. காண்போரை கவரக்கூடிய அழகு, வர்ணம், நீண்டகால ஆயுள், அரிய வகையில் கிடைக்கக்கூடிய தன்மை என்பன இவை உலகளாவிய ரீதியில் பிரசித்தி பெற்றுவரக் காரணமாகவுள்ளது. உலகில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள 200 வகையான இரத்தினக்கற்களில் 70 வகையான கற்களை இலங்கையில் பெறக்கூடியதாக உள்ளதுடன், இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட 'Ceylon Sapphire' இரத்தினக்கல் துறைக்கு பலம் சேர்ப்பதாய் உள்ளது.

இரத்தினக்கற்கள் பொதுவாக தங்கத்தோடு இணைத்து ஆபரண உற்பத்திகளுக்குப் (Neeklaces, Pendants, Rings, Earings, Nose Rings, Bracelets, Brooches, Coronets) பயன்படுவதோடு, யோகா மற்றும் இறைவழிபாடுகளின் போது ஜெபமாலையாகவும், பொறியியல் துறையில் சில பொருள் உருவாக்கத்துக்கும், கடிகாரம் மற்றும் விலைமதிக்க முடியாத பெறுமதி கூடிய சில பொருட்களிலும் பதிக்கப்


பட்டு உபயோகிக்கப்படுகிறது. மேலும் சிலர் ஜோதிட சாஸ்திரப்படி அதிர்ஷ்டம், அமைதி, மகிழ்ச்சி மற்றும் சில நோய்களிலிருந்து விடுபடும் நம்பிக்கையிலும் இரத்தினக் கற்களை அணிகின்றனர்.

இலங்கையிலிருந்து ஹொங்கொங், அமெரிக்கா, சுவிட்சர்லாந்து, தாய்லாந்து, ஐக்கிய இராச்சியம், பிரான்ஸ், இந்தியா, ஜேர்மனி போன்ற நாடுகளுக்கு இரத்தினக்கற்கள் ஏற்றுமதி செய்யப்படுவதுடன், இலங்கைக்கு வருமானம் ஈட்டித்தரும் துறையாகவும் பொருளாதாரத்துக்குப் பலம் சேர்க்கும் துறையாகவும் விளங்குகிறது.

அடுத்ததாக தங்கத்தை எடுத்துக் கொண்டோமானால் தங்கம் ஏனைய சில குறிப்பிட்ட உலோகங்களுடன் சேர்த்தே கவர்ச்சிகரமாகவும், உறுதியாகவும் ஆபரணங்களாக ஆக்கப்படுகின்றது. இதன் போது கலக்கப்படும் உலோகங்கள் விகிதாசாரப்படி கலக்கப்பட வேண்டும். இருப்பினும் சில இடங்களில் இவை சரியாக கடைப்பிடிக்கப்படுவதில்லை. அதிக இலாபம் கருதி சில தவறான விடயங்களில் ஈடுபடுகின்றனர். இவற்றிலிருந்து நுகர்வோரை பாதுகாக்கவே SLAO தரப்படுத்தலை நாம் அறிமுகப் படுத்தியுள்ளோம். இவ் SLAO அல்லது Hallmark தரமானது உலோகத்தின் தரம், வகை, தூயதன்மை என்ற மூன்று விடயங்களின் அடிப்படையில் வழங்கப்படுகின்றது. இம் முத்திரை மூலம் தங்கம் கொள்வனவு செய்பவர்களின் விசுவாசத்தை வெல்வதும் சிறப்பான சேவை வழங்குவதும் எமது நோக்கமாகும்.

**- எம்.ஆர்.**

# தினக்குரலின் முதலாவது முகவரின் வாழ்த்து



20ஆவது அகவையில் வெற்றிகரமாக கால் பதித்துள்ள தினக்குரல் பத்திரிகைக்கும் அதில் பணிபுரியும் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் ஊழியர்களுக்கும் இன்று மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன்.


இந்த பத்திரிகை என்று கருவில் சிசுவாகத் தோன்றி மண்ணில் பிறந்ததோ அன்று முதல் இன்று வரை இப்பத்திரிகையின் முகவராகத் திகழ்வதில் நான் மிகவும் எல்லையற்ற மகிழ்ச்சியடைகின்றேன். இப் பத்திரிகையை உருவாக்கிய சாமி ஐயா அவர்களுக்கும் இப் பத்திரிகைக்காக அயராது உழைக்கும் செய்தியாளர்களுக்கும் எனது மனமுவந்த வாழ்த்துகளை இவ்வேளையில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந் நிறுவனம் மேலும் பல இதழ்களை உருவாக்கி பல்லாண்டு காலம் சாதனை படைக்க எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

**மஸ்கெலியா முகவர், செ.தி. பெருமாள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறைபாடற்ற செவிப்புலன் மூலம் மகிழ்ச்சியான சுகவாழ்வு



காற்று, நீர், சூரிய ஒளி ஆகியன மனித வாழ்வுக்கான ஜீவாதார சக்திகளாக விளங்குவது போலவே மனிதர்களின் நடைமுறை வாழ்வுக்கு சுவாசித்தல், உணர்தல், சிந்தித்தல், பார்த்தல், கேட்டல், பேசுதல், ருசித்தல் ஆகிய புலன் உணர்வுகளும் அவற்றுக்கான புலன் உறுப்புகளும் குறைபாடின்றி அமைதல் முக்கியமானதாகும். இவ்வாறு கண், காது, வாய், மூக்கு மற்றும் புலன் உறுப்புகள் பிறப்பிலேயோ அல்லது இதன் பின்னர் வேறு காரணங்களாலோ குறைபாடுள்ளதாக அமைந்துவிட்டால் இயல்பு வாழ்க்கையை வாழ முடியாத நிலையில் வாழ்நாள் முழுவதும் துன்பகரமாக அமைந்துவிடுகிறது. புலன் உறுப்புகள் குறைபாடின்றி அமைந்திருத்தல் இயல்பு வாழ்க்கை வாழ்வதற்கு மட்டுமின்றி உடலின் அழகான, பரிபூரணமான தோற்றத்துக்கும் அத்தியாவசியமானதாகும்.

எந்த ஒரு தாயும் தனது குழந்தை கண், காது, வாய், மூக்கு மற்றும் உடல் உறுப்புகளில் குறைபாடின்றி அழகான, பரிபூரணமான தோற்றத்துடன் பிறக்க வேண்டுமென்றே எதிர்பார்க்கிறார். அத்துடன் அவ்வாறே தனது குழந்தையின் உடல் உறுப்புகளில் எந்தக் குறைபாடோ, தாக்கங்களோ ஏற்படாமல் அவதானமாகப் பேணி வளர்க்கிறார்.

மருத்துவம், விஞ்ஞானம் மற்றும் அனைத்துத் துறைகளிலும் தொழில்நுட்பங்கள் வெகுவாக முன்னேறியுள்ள இந்தக் காலகட்டத்தில் கண், காது, வாய், மூக்கு மற்றும் வெளியுறுப்புகளிலும் உள்ளுறுப்புகளிலும் பிறப்பிலேயோ அல்லது அதன் பின்னரோ ஏற்படக்கூடிய எந்தக் குறைபாடுகளையும் நீக்கி சுகவாழ்வு வாழ்வதற்கான பல்வேறு அதிநவீன சிகிச்சை முறைகளும் சிகிச்சை உபகரணங்களும் கருவிகளும் இன்று மருத்துவத்துறைகளில் பயன்படுத்தப்படுகின்றன.

இந்த வகையில் பிறப்பில் செவிப்புலன் குறைபாட்டுடன் பிறப்பதாலோ அல்லது பின்னர் வேறு காரணங்களால் செவிப்புலன் குறைபாடு ஏற்படுவதாலோ ஓசைகளைக் கேட்க முடியாது. செவிப் புலன் முற்றாகச் செயலிழக்கும் சந்தர்ப்பங்களில் செவிப்புலன் மட்டுமல்ல, பேசுதல், உணர்தல், பார்த்தல் ஆகிய புலன் உணர்வுகளும் பாதிக்கப்படுகின்றன. இந்த நிலையில் செவிப்புலன் குறைபாடுகளை நீக்கும் சிகிச்சைகளையும் சிகிச்சை உபகரணங்கள் மற்றும் கருவிகளையும் பயன்படுத்துதல் அத்தியாவசியமாகும். இதன் மூலம் கேள்விப்புலனை மீளப்பெற்று இயல்பான, மகிழ்ச்சியான வாழ்க்கையை வாழ முடியும்.

இவ்வாறு ஓசைகளைக் கேட்க முடியாத, செவிப்புலன் குறைபாடுகளுக்காக நவீன செவிப்புலன் மருத்துவ சிகிச்சைகள் தற்போது வழங்கப்படுவதுடன், அதற்காக இலகுவில் காதுகளில் பொருத்தக்கூடிய நவீன செவிப்புலன் உபகரணங்கள், கருவிகளும் தற்போது பாவனையில் உள்ளன. இந்த செவிப்புலன் உபகரணங்கள் முகத்தின் அமைப்பு மற்றும் காதுகளின் அமைப்புக்கேற்ப வெவ்வேறு வடிவமைப்புகளில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. இவற்றை செவிப்புலன் உபகரணங்கள் மற்றும் கருவிகள் விநியோகிக்கும் நிறுவனங்களில் செவிப்புலன் மருத்துவரின் அறிவுறுத்தலுக்கேற்ப பெற்றுக்கொள்ளலாம். எவ்வாறாயினும் இந்த செவிப்புலன் உபகரணங்கள் மற்றும் கருவிகளின் உற்பத்தித்தரத்தையும் ஓசைத் தொடர்பை ஏற்படுத்தும் செயற்பாட்டு முறைகள் பற்றியும் அவதானித்து இவற்றைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

இந்த வகையில் செவிப்புலன் மருத்துவ சிகிச்சையில் திறமையும் நீண்டகால அனுபவமும் பயிற்சியும் பெற்றதும் உயர்தரமான செவிப்புலன் உபகரணங்கள், கருவிகளை நீண்டகாலம் விநியோகித்து இத்துறையில் பிரபலமானதுமான ஒரு நிறுவனத்தில் அவற்றைப் பெற்றுக் கொள்வதன் மூலம் தெளிவாக கேட்கும் சக்தியைப் பெற்று மகிழ்ச்சியாக வாழ முடியும் என்பதில் சந்தேகமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாணந்துறையில்... தினக்குரல், உதயசூரியன், அழகி
அன்பளிப்பு பொருட்கள், பாடசாலை உபகரணங்கள் மற்றும்
அனைத்துப் பத்திரிகைகளையும் பெற்றுக்கொள்ள ஒரே இடம்
CITY BOOK SHOP பாணந்துறை

அக்கரைப்பற்றில்... தினக்குரல், உதயசூரியன், அழகி
மற்றும் அனைத்து பத்திரிகைகளையும் பெற்றுக்கொள்ள முடியும்.
சமையல் ஓடர்களும் ஏற்றுக்கொள்ளப்படும்.
பாத்திமா பத்திரிகை முகவர்
பொத்துவில் வீதி, அக்கரைப்பற்று. தொ.பேசி : 078 9503797 / 077 - 9417495

மன்னார் நகரில்!
தினக்குரல், உதய சூரியன், அழகி
பாடசாலை உபகரணங்கள், அன்பளிப்புப் பொருட்கள் சிறுவர்களுக்கான விளையாட்டுப் பொருட்கள்
மற்றும் அனைத்து பத்திரிகைகளையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள
JOTHY BOOKS AND MULTY CENTRE
GRAND BAZAR, MANNAR. Tel- 023-2222052

மட்டக்களப்பு நகரில்!
♦ தினக்குரல் ♦ உதயசூரியன் ♦ அழகி மற்றும்
அனைத்து பத்திரிகைகளையும் பெற்றுக் கொள்ள மட்டக்களப்பின்
பிரபல பத்திரிகை முகவர்
சிறீ முகுந்தராஜா
பார் வீதி, மட்டக்களப்பு. தொ. பேசி : 065 79 15 105.

ஹட்டன் நகரில்... ♦ தினக்குரல் ♦ உதயசூரியன் ♦ அழகி மற்றும்
அனைத்து பத்திரிகைகளுடன் பல் பொருள் விற்பனை
பொருட்களையும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள விரையுங்கள்!
HATTON STORES
03, MAIN STREET, HATTON

கிண்ணியா நகரில்... தினக்குரல், உதயசூரியன், அழகி
பாடசாலை உபகரணங்கள் மற்றும்
அனைத்துப் பத்திரிகைகளையும் பெற்றுக்கொள்ள...
Noor Mohamod News Agent
No.132, Main Street, Kinniya - 03. T.P : 026 2236266

நுவரெலியா நகரில்!
தினக்குரல், உதய சூரியன், அழகி
மற்றும் அனைத்து பத்திரிகைகளையும் ஒரே இடத்தில்
அதிகாலையில் பெற்றுக்கொள்ள
A. இராஜலிங்கம்
No 6, New Market, Nuwara Eliya. Tel - 072-2505554

வவுனியா பசார் வீதியில்
♦ தினக்குரல் ♦ உதயசூரியன் ♦ அழகி
பாடசாலை புத்தகங்கள், கொப்பிகள், அன்பளிப்பு பொருட்கள்
அனைத்தையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக் கொள்ள...
J.P.K SHOPPING COMPLEX
No.144,146, Bazar Street, Vavuniya. T.p : 024-2220295

வவுனியாவில்... தினக்குரல், உதயசூரியன், அழகி
பாடசாலை உபகரணங்கள் மற்றும் அன்பளிப்புப் பொருட்கள் மற்றும்
அனைத்துப் பத்திரிகைகளையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள...
K.P.K Centre
பஸ் நிலையம், வவுனியா, தொ.பேசி: 024 - 22 22504

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய பழக்க வழக்கங்கள் நாளை எமது நோய்க்கான காரணிகள் ஆகலாம்



## விசேட வைத்திய சிகிச்சை நிபுணர் டாக்டர் ஜி.இளங்குமரபாகுவுடனான செவ்வி

“இன்று எம்மில் 40 வயதுக்கு மேற்பட்டவர்களில் பலர் Non Communicable Diseases என அழைக்கப்படும் தொற்றாநோய்க替ளுக்கு ஆளாவதற்கான காரணம் அவர்களது வாழ்க்கை முறையும் பழக்கவழக்கங்களுமே ஆகும். இன்றைய பழக்க வழக்கங்கள் நாளை எமது நோய்க்கான காரணி ஆகலாம்” என்று விசேட மருத்துவ சிகிச்சை நிபுணரான டாக்டர் ஜி.இளங்குமரபாகு கூறுகிறார்.

தினக்குரலின் 20 ஆவது ஆண்டு மலருக்கு வழங்கிய சிறப்புச் செவ்வியின்போதே டாக்டர் இவ்வாறு தெரிவித்தார். டாக்டரிடம் தொற்றாநோய்கள் தொடர்பாக கேட்கப்பட்ட கேள்விகளும் அவற்றுக்கான பதில்களும் வருமாறு;

**கேள்வி: டாக்டர் எமக்கு தொற்றாநோய்கள் எவ்வாறு ஏற்படுகின்றன?**

**பதில்:** தொற்றாநோய்கள் ஏற்படுவதற்கு பிரதான காரணிகளாக சிறுவயது உடற்பருமன், வாழ்க்கை முறை மாற்றம், உடற்பயிற்சியின்மை, தரமற்ற உணவு வகைகள் போன்றவற்றைக் கூறலாம். எம்மைப் பாதிக்கக்கூடிய பிரதான தொற்றா நோய்களாக நீரிழிவு (Diabetes), இருதய நோய்கள் [மாரடைப்பு], புற்றுநோய் மற்றும் நீண்டகால சிறுநீரக நோய்கள் (CKD), புகைத்தலால் ஏற்படும் சுவாசப்பை நோய்கள் என்பன விளங்குகின்றன. எம்மில் நான்கில் ஒருவர் மேற்கூறிய நோய்களினால் பாதிக்கப்படுவதற்கு நாமே காரணம் ஆகின்றோம். பாடசாலைகளில் PT எனப்படும் உடற்பயிற்சி பாடமாகக் காணப்படுகிறது. ஆனால் விளையாட்டுகளுக்குப் போதிய நேரம் ஒதுக்கப்படுவதில்லை. இவ்வாறான நிலைமை மாற்றப்பட வேண்டும். ஏனெனில் தொற்றா நோய்கள் ஏற்பட உடற்பயிற்சியின்மையும் ஒரு காரணம் ஆகும்.

இலங்கையில் இன்று தொற்று நோய்கள் ஓரளவு கட்டுப்படுத்தப்பட்டு வருகின்றன. ஆனால் தொற்றா நோய்களின் ஆதிக்கமானது அதிகரித்து வருவதுடன் சிலவேளைகளில் மரணத்திற்கும் இவை இட்டுச் செல்கின்றன.

**கேள்வி: மேற்கூறிய நோய்கள் எமக்கு உண்டாவதற்கான சாத்தியக் கூறுகள் உண்டா?**

**பதில்:** உண்டு. இலங்கையில் 10% இனர் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். அதாவது 10 இல் ஒருவர் நீரிழிவு நோயின் தாக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Ranjanas CERAMIC
one shop
PORCELANOSA

HEAD OFFICE
307, George R De Silva Mawantha, Colombo 13, Sri Lanka
T : 11 2 543 255 5 850 302 / 2 449 664 F : 11 2 381 386

SHOWROOM | NAWALA 011 2 817 474
• NEGOMBO 031 2 227 505
• KIRIBATHGODA 011 2 929 206
• JAFFNA 021 2 220 033
• KANDY 081 2 225 541
• HATTON 051 2 225 087

NIRO GRANITE I-SPACE
( Exclusive Niro Granite Branded Concept Store )
132, Nawala Road, Nugegoda, Sri Lanka.
T : 011 2 890 381


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்திற்கு உட்படுகின்றார். இதேவேளை உயர் இரத்த அழுத்தத்தால் 20% தொடக்கம் 25% இனர் பாதிக்கப்பட்டுள்ளனர். அதாவது உங்களில் ஐந்தில் ஒருவருக்கு உயர் இரத்த அழுத்தம் உண்டாகலாம். உயர் இரத்த அழுத்தமானது மாரடைப்பு, பாரிசவாதம் போன்றவை ஏற்படுவதற்கு பிரதான காரணமாக உள்ளது.

**கேள்வி: இந்நோய்கள் ஏற்படுவதற்குரிய காரணிகள் யாவை?**

**பதில்:** இந்த நோய்க் காரணிகள் இலகுவில் எம்மால் மாற்றக் கூடிய நாளாந்த நடவடிக்கைகள் காரணமாகவே ஏற்படுகின்றன. அதாவது தவறான உணவுப் பழக்கவழக்கம், புகைத்தல், மது அருந்துதல், உடற்பயிற்சியின்மை என்பவை காரணமாக ஏற்படக் கூடிய நோய்க் காரணிகளாக உடற்பருமன் அதிகரித்தல், உயர் குருதி அழுத்தம், இரத்தத்தில் குளுக்கோஸின் [சீனியின்] அளவு அதிகரித்தல், இரத்தத்தில் கொலஸ்ட்ரோலின் / கொழுப்பின் அளவு அதிகரித்தல் என்பவற்றைக் கூறலாம்.

**கேள்வி: சரி, எம்மில் மேற்படி நோய்க்கான காரணிகள் இருக்கின்றனவா என்பதை எவ்வாறு அறிந்துகொள்வது?**

**பதில்:** இதில் முதலாவது காரணியான உடற்பருமன் அல்லது மேலதிக நிறை (Obesity) உடையவரா என்பதை எவ்வாறு அறிந்துகொள்வது என்பதைப் பற்றிப் பார்ப்போம்.

**1) உடற்பருமன்**

ஒருவர் தனது உயரத்திற்கேற்ப உடல் நிறையைக் கொண்டிருத்தல் வேண்டும். இதனை உடற்திணிவு சுட்டி எனப்படும் BMI (Body Mass Index) எனும் குறியீடு உணர்த்துகிறது.

$$BMI\ (kg/m^2) = \frac{\text{உடல் நிறை (kg)}}{\text{உயரம் (m) x உயரம் (m)}}$$

ஆசிய நாட்டவர்களின் [இலங்கையர்கள் உட்பட] BMIஆனது 23இனை விடக் குறைவாக இருத்தல் வேண்டும்.

எமது நிறையும் [கிலோகிராமில்], உயரமும் [சென்ரிமீற்றரில்] தெரிந்திருப்பின் பின்வரும் அட்டவணை மூலம் BMIஐ அறிந்து கொள்ளலாம். இந்த அட்டவணையில் நிறையினை X அச்சிலும் உயரத்தினை Y அச்சிலும் அடையாளப்படுத்த வேண்டும். பின்னர் இரு அளவுகளையும் [நிறையும் உயரமும்] இணைக்கும் புள்ளியிலுள்ள எண் BMIஇன் அளவினைச் சுட்டிக்காட்டும்.

இதனை தெளிவாக விளங்கிக்கொள்வதற்கு பின்

| Weight (Kg) | 45 | 50 | 55 | 60 | 65 | 70 | 75 | 80 | 85 | 90 | 95 | 100 | 105 | 110 | 115 | 120 | 125 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Height (cm) | | Under Weight | | | | Healthy Weight | | | | Over Weight | | | | Obese | | | |
| 140 | 23 | 26 | 28 | 31 | 33 | 36 | 38 | 41 | 43 | 46 | 48 | 51 | 54 | 56 | 59 | 61 | 64 |
| 145 | 21 | 24 | 26 | 29 | 31 | 33 | 36 | 38 | 40 | 43 | 45 | 48 | 50 | 52 | 55 | 57 | 59 |
| 150 | 20 | 22 | 24 | 27 | 29 | 31 | 33 | 36 | 38 | 40 | 42 | 44 | 47 | 49 | 51 | 53 | 56 |
| 155 | 19 | 21 | 23 | 25 | 27 | 29 | 31 | 33 | 35 | 37 | 40 | 42 | 44 | 46 | 48 | 50 | 52 |
| 160 | 18 | 20 | 21 | 23 | 25 | 27 | 29 | 31 | 33 | 35 | 37 | 39 | 41 | 43 | 45 | 47 | 49 |
| 165 | 17 | 18 | 20 | 22 | 24 | 26 | 28 | 29 | 31 | 33 | 35 | 37 | 39 | 40 | 42 | 44 | 46 |
| 170 | 16 | 17 | 19 | 21 | 22 | 24 | 26 | 28 | 29 | 31 | 33 | 35 | 36 | 38 | 40 | 42 | 43 |
| 175 | 15 | 16 | 18 | 20 | 21 | 23 | 24 | 26 | 28 | 29 | 31 | 33 | 34 | 36 | 38 | 39 | 41 |
| 180 | 14 | 15 | 17 | 19 | 20 | 22 | 23 | 25 | 26 | 28 | 29 | 31 | 32 | 34 | 35 | 37 | 39 |
| 185 | 13 | 15 | 16 | 18 | 19 | 20 | 22 | 23 | 25 | 26 | 28 | 29 | 31 | 32 | 34 | 35 | 37 |
| 190 | 12 | 14 | 15 | 17 | 18 | 19 | 21 | 22 | 24 | 25 | 26 | 28 | 29 | 30 | 32 | 33 | 35 |
| 195 | 12 | 13 | 14 | 16 | 17 | 18 | 20 | 21 | 22 | 24 | 25 | 26 | 28 | 29 | 30 | 32 | 33 |
| 11 | 11 | 13 | 14 | 15 | 16 | 18 | 19 | 20 | 21 | 23 | 24 | 25 | 26 | 28 | 29 | 30 | 31 |
| 205 | 11 | 12 | 13 | 14 | 15 | 17 | 18 | 19 | 20 | 21 | 23 | 24 | 25 | 26 | 27 | 29 | 30 |
| 210 | 10 | 11 | 12 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 215 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |



20 Anniversary

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரும் இரு உதாரணங்களைப் பார்ப்போம்.

உதாரணம் 1: 50 கிலோகிராம் நிறையும் 150 சென்ரி மீற்றர் உயரமும் உடைய ஒருவரின் BMI யாது? X அச்சில் 50kg இலிருந்தும் Y அச்சில் 150cm உயரத்தில் இருந்தும் வரையும் இரு வரிகளை இணைப்பதன் மூலம் BMIஇனை அறிந்து கொள்ளலாம். இங்கு BMI 22ஆக இருப்பதை அவதானிக்கலாம்.

உதாரணம் 2: 80 கிலோகிராம் நிறையும் 170cm உயரமும் உடைய ஒருவரின் BMI 28ஆக இருப்பதை அவதானிக்கலாம். எமது BMI 23ஐ விட கூடியிருப்பின் எமது உடல் நிறையைக் குறைப்பதற்கான வழிமுறைகளை கடைப்பிடிக்க வேண்டும்.

## 2) உயர் இரத்த அழுத்தம்

எமது இரத்த அழுத்தம் 140/90 mm Hgஇனை விடக்குறைவாக இருத்தல் வேண்டும். தொடர்ச்சியாக எமது இரத்த அழுத்தம் 140/90 mm Hgஇனை விடக் கூடுதலாக இருப்பின் மருத்துவ ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளல் அவசியம்.

## 3) குருதியில் வெல்லத்தின் (சீனியின்) அளவு அதிகரித்தல்

இதனை அறிவதற்காக காலை உணவை உண்பதற்கு முன்பாக இரத்தத்தில் குளுக்கோஸின் அளவு அளவிடப்படுகிறது. குளுக்கோஸின் அளவானது தொடர்ச்சியாக 126 mg/dlஇனை விடக் கூடுதலாக இருப்பின் எமக்கு நீரிழிவு நோய் உள்ளதை அறிந்து கொள்ளலாம்.

குளுக்கோஸின் அளவு 110 mg/dlஇணைவிடக் கூடுதலாக இருப்பின் உங்களுக்கு நீரிழிவு நோய் உண்டாவதற்கான சந்தர்ப்பங்கள் உண்டு. இவ்வாறான நேரத்தில் மேலதிக சோதனைகள் தேவைப்படலாம்.

## 4) இலிப்பிட் பரிசோதனை

அதாவது கொலஸ்ட்ரோல்/ கொழுப்பின் மட்டம் அதிகரித்தலை அறிய செய்யப்படுகிறது.

**கேள்வி: நோய்க்கான காரணிகளை அறிவதன் மூலம் ஏற்படக் கூடிய நன்மைகள் எவை?**

**பதில்:** பெரும்பாலும் நோய்கள் உண்டாகாது தவிர்க்க முடியும். எனவே மேற்படி பரிசோதனைகளின் மூலம் நோய்க் காரணிகளை அறிந்து அவற்றை நாம் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதன் மூலம் மாரடைப்பு, பாரிசவாதம், சிறுநீரக நோய்கள், நீரிழிவு மேலும் கண்பாதிப்பு போன்றவை ஏற்படும் சந்தர்ப்பங்களைக் குறைக்க முடியும். இதில் முக்கியமாகக் குறிப்பிட வேண்டிய அம்சம் என்னவென்றால், நோய்க்கான காரணிகளை ஆரம்பத்தில் இனம் காண்பதன் மூலம் நோய்களால் ஏற்படும் பாதிப்பினை பிற்போடலாம்; அல்லது தவிர்க்கலாம்.

**கேள்வி: நோய்க்கான காரணிகளில் இருந்து எம்மைப் பாதுகாக்க முடியுமா?**

**பதில்:** பாதுகாக்க முடியும்.

**கேள்வி: எவ்வாறு எம்மைப் பாதுகாப்பது?**

**பதில்: 1) உடற்பயிற்சி**

இன்றைய ஓய்வற்ற, போட்டியான வாழ்க்கை முறை காரணமாக உடற்பயிற்சி செய்வதற்கு போதிய நேரத்தை ஒதுக்க முடியாமல் உள்ளது. எனவே வாரத்திற்கு 3 நாட்கள் 30 நிமிடங்கள் தொடக்கம் 60 நிமிடங்கள் வரையிலாவது உடற்பயிற்சி செய்வது அவசியம். நடத்தல், லிப்டுகளைப் பயன்படுத்தாமல் மாடிப்படிகளைப் பயன்படுத்தல் என்பன இலகுவான உடற்பயிற்சிகளாகும். இதன்மூலம் எமது உடல் நிறையை உயரத்திற்கேற்ப (BMI) பேண முடியும். சிறிய பிரயாணங்களை கால்நடையாகவோ அல்லது துவிச்சக்கரவண்டி மூலமோ மேற்கொள்ளலாம். இதன் மூலம் எமது BMIயை பெண முடியும்.

**2) புகைத்தல் மற்றும் மதுபாவனையை நிறுத்தல்**

அவசியமான சந்தர்ப்பத்தில் புகைத்தல், மதுபாவனையை நிறுத்துவதற்கு மருத்துவரின் ஆலோசனையைப் பெறலாம்.

**3) உணவுப் பழக்கவழக்கங்கள்**

★ அதிகளவு கொழுப்பு, சீனியுள்ள உணவு வகைகள், Fast Foods, குளிர்பானம் ஆகியவற்றை இயலுமானவரை தவிர்த்தல்.

★ பழச்சத்து, நார்ச்சத்துள்ள உணவு வகைகளை உண்ணல்.

★ நேரந்தவறாது உண்ணல்

★ உப்பின் அளவைக் குறைத்தல்

★ சிறுவர்கள் தரமான உணவுப் பழக்கவழக்கங்களைப் பின்பற்றுவதற்கு ஊக்கப்படுத்தல்.

இறுதியாக, எம்மில் நான்கில் ஒருவர் தொற்று நோய்களினால் பாதிக்கப்படுவதற்கு எமது இலகுவில் மாற்றியமைக்கக்கூடிய செயற்பாடுகளே காரணமாக அமைகின்றன. இன்றைய பழக்கவழக்கங்கள் நாளை நோய்க்கான காரணமாகலாம். இன்றைய நோய்க்கான காரணிகள் நாளை நோய்களைத் தோற்றுவிக்கலாம்.

(டாக்டர் இளங்குமரபாகு
கொழும்பு - 10இல், அமைந்துள்ள
National Institute for Nephralogy Dialysis and Transpl antation Unitஇல்
வைத்திய நிபுணராக பணிபுரிகிறார்)



20 Anniversary
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதாரத்தில் தாதியம்



**திருமதி**
**அனுஷபவானி**
**சிவகுமாரன்**
**தாதிய உத்தியோகத்தர் – விடுதி சகோதரி**
**போதனா வைத்தியசாலை,**
**யாழ்ப்பாணம்.**

சுகாதாரம் என்பது தனிப்பட்ட ஒரு சொல் மட்டுமன்றி சுகத்திற்கு ஆதாரமான பலதரப்பட்ட விடயங்கள் ஒன்றிணைந்த ஒரு வலுமிக்க சேவை நிறைந்த, ஆட்சிமிக்க, அங்கீகரிக்கப்பட்ட ஒரு விடயமாகும்.

ஒரு நாட்டின் சுகாதார முன்னேற்றமானது அந்நாட்டின் உயர்வை, மக்களின் கல்வித் தரத்தை, வாழ்க்கைத் தரத்தை, நாட்டின் அபிவிருத்தியை உயர்த்தவும், நல்ல நிலையில் வைத்திருக்கவும் அடிகோலுகின்றது.

இந்த சுகாதார உயர்வானது தனி ஒருவரால் செய்ய முடியாதது. இதைக் கட்டியெழுப்ப பல திட்டங்கள் உருவாக்கப்பட்டு, திணைக் களங்கள் அமைக்கப்பட்டு, மூலவளங்கள் பாவிக்கப்பட்டு, பலசேவைகள் ஒன்றிணைக்கப்பட்டு, விஞ்ஞானரீதியான தொழில்நுட்பங்கள் உட்புகுத்தப்பட்டு, செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

ஒரு நாட்டு மக்களின் உடல், உள, சமூக, ஆன்மீக ஆரோக்கியத்தை உயர்த்துகின்ற ஒன்றிணைந்த சேவைகளில் தாதிய சேவையானது ஒரு முக்கிய இடத்தை வகிக்கின்றது.

தாதியமானது தனிமனித மற்றும் சமூகநலனை உயர்த்துவதற்காக அர்ப்பணிக்கப்பட்ட ஒரு சேவையாகும். மக்களுக்கு சுகாதார சேவையைக் கிடைக்கச் செய்வதற்காக செய்யப்படும் சேவையே தாதிய சேவையாகும். இவ்வுத்தியோகமானது முன்னேற்றமான அல்லது தரமான பயிற்சியை உள்ளடக்கியதாகவும் அறிவுசார்ந்த செயற்திறன் கொண்டதாகவும் இருக்கின்றது. அத்துடன் விஞ்ஞானரீதியான தொழில்நுட்பங்கள், நீண்டகால பயிற்சிநெறி விதிகள், நீதிநெறிக்

**தாதியப் பராமரிப்புடன் சேர்த்து நோயாளியின் கௌரவத்தைப் பாதுகாத்தல், அவரது உரிமைகளைப் பெற்றுக் கொடுத்தல், சமயரீதியான, சட்டரீதியான நடவடிக்கைகளை மதித்தல், அவற்றுக்குக் கீழ்ப்படிதல் என்பனவும் தாதிய நடவடிக்கைகளில் சங்கமமாகின்றன.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்பாடுகள் போன்றவற்றை உள்ளடக்கி இருப்பதுடன், மனித விழுமியங்கள், நம்பிக்கைகள், பெறுமதிகள், நல்ல மனப்பான்மைகள் போன்றவற்றையும் மதிக்கத்தக்க உயர்ந்த குணாதிசயங்களையும் கொண்டுள்ளது. சுகத்தைப் பேணுதல், சுகநலத்தை உயர்த்துதல், சுகத்தை பழைய நிலைக்கு கொண்டுவருதல், நோய் ஏற்படாது தடுத்தல், நிலைமைக்கு ஏற்ப உதவுதல், மரணத்தறுவாயில் உதவுதல் போன்ற தனது இலக்குகளை நிறைவேற்ற தனது அறிவு, திறமை, மனப்பாங்கு என்பவற்றைப் பயன்படுத்தி சிறந்த சேவையை வழங்குவதற்காக விரிவாக்கப்பட்ட பல வகிபாகங்களை தாதியானவள் ஏற்றுக் கொண்டு தாதியத்தை சிறப்பிக்கின்றார்.

சுகாதாரக் குழுவின் அங்கத்தவராக இருக்கும் ஒரு தாதிய உத்தியோகத்தர் பராமரிப்பு அளிப்பவராக, தொடர்புபடுத்துபவராக, சுகாதார போதனையாளராக, உளவளத் துணையாளராக, தீர்மானம் எடுப்பவராக, தலைமை தாங்குபவராக, சௌகரியமளிப்பவராக, புனர்வாழ்வு அளிப்பவராக, இணைப்பாளராக முதலான பல வகிபாகங்களை எடுத்து சுகாதார முன்னேற்றத்துக்கு உதவ வேண்டிய பொறுப்பினை வழங்குகின்றார்.

சுகாதாரக் குழுவின் உத்தியோகத்தர்கள், ஊழியர்களை ஒன்றிணைத்து அவர்களிடமிருந்து பெறக்கூடிய உயர்ந்தபட்ச சேவைகளைப் பெற்று தனக்கு வழங்கப்படும் வளங்களைப் பயன்படுத்தி தனது அறிவு, திறமை என்பவற்றை உபயோகித்து நேரான மனப்பாங்குடன் செயற்பட்டு ஆரோக்கியத்தை உயர்த்தப் பாடுபடுகின்ற தலைமைப் பண்புள்ளவரே தாதியாவார்.

உண்மை, நேர்மை, விசுவாசம், சமத்துவம், சுதந்திரம், பிறர்நலம் கருதும் தன்மை, கௌரவம் என்பவை தாதியம் சிறப்பிக்கின்ற அடிப்படைக் குணாதிசயங்களாகும். இக்குணாதிசயங்களைத் தன்னுள் வளர்த்துக் கொண்டு தான் கற்றுக்கொண்ட அடிப்படைத்தத்துவங்களையும்மனதிற்கொண்டு விஞ்ஞான ரீதியான தாதிய சேவையை வழங்குவதன் மூலம் தாதியம் சுகாதார மேம்பாட்டிற்கு உறுதுணை புரிகின்றது.

தாதியப் பராமரிப்புடன் சேர்த்து நோயாளியின் கௌரவத்தைப் பாதுகாத்தல், அவரது உரிமைகளைப் பெற்றுக் கொடுத்தல், சமயரீதியான, சட்டரீதியான நடவடிக்கைகளை மதித்தல், அவற்றுக்குக் கீழ்ப்படிதல் என்பனவும் தாதிய நடவடிக்கைகளில் சங்கமமாகின்றன.

தொடர்பாடல் திறன் என்பது தாதியத்தின் ஒரு சிறப்பம்சமாக பரிணமிக்கின்றது. நோயாளருக்கு கிடைக்கும் சேவையை ஒருங்கிணைக்க இத்திறன் மிகவும் கைகொடுக்கின்றது. அன்பான, மரியாதையான, நாகரீகமான, இனிமையான, சாதகமான, நேரான, உத்தியோகபூர்வமான தொடர்பாடலைப் பயன்படுத்தி தனது பங்கை வெளிப்படுத்தல் மூலம் தாதியம் சுகாதார முன்னேற்றத்திற்கு பெரிதும் உதவுகின்றது.

தாதியம் தன்னையும் தன்னைச் சார்ந்தவரையும் பாதுகாத்து அத்துடன் நோயாளியையும் அவரது குடும்பத்தவரையும் அதன்மூலம் சமூகத்தையும் அதனூடாக தனது நாட்டையும் முழு உலகையும் பாதுகாப்பதில் தனது கடமையைச் செய்கின்றது.

ஒரு தாதியானவர் தனது தோற்றம், அந்தஸ்து, மரியாதை, ஒழுக்கம், கௌரவம், ஆரோக்கியம், நேரம் என்பவற்றைப் பேணுவதன் மூலம் தாதியத்தின் தரத்தை மேலும் உயர்த்த முடியும்.

தற்காலத்தில் தாதியமானது கல்வியில் ஏற்படுகின்ற மாற்றங்கள், அறிவுப்பரம்பல், தாதியரிடையே ஏற்பட்டுவரும் விழிப்புணர்ச்சி, பெண்ணுரிமை மனிதஉரிமை அமைப்புக்களின் விழிப்புணர்வு போன்றவைக்கு ஈடுகொடுக்கும் வகையில் தனது தரத்தை உயர்த்த பல விரிவாக்கச் செயற்திட்டங்களை அமுல்படுத்துகின்றது. இந்தவகையில் தாதியரின் கல்வியில் மேலதிக அக்கறை செலுத்தல், மேற்படிப்புக்கான சந்தர்ப்பங்களை உருவாக்குதல், தேசிய உலகளாவிய தாதியக் கற்றலில் ஒன்றிணைதல், ஆராய்ச்சிகளில் பங்கேற்றல் போன்றவை எழுச்சி பெற்றுள்ளன. இவைகளைப் பயன்படுத்தி மேலும் தமது அறிவு, திறமை என்பவற்றை வளர்த்து நேரான மனப்பாங்கு மாற்றத்துடன் செயற்பட்டு தாதியத்தின் தரத்தை உயர்த்த தாதிய சமூகம் முன்வரவேண்டும்.

சமூகத்தில் மிகவும் கனதியான பங்கினை வகித்து சமூகத்தைக் காக்கின்ற தாதியத்தை சமூகமும் அதைச் சார்ந்தவர்களும் மதித்திட வேண்டும். அதன் மேன்மையை, அந்த சேவையின் பவித்திரத்தை புரிந்திட வேண்டும். புனிதமான, மனிதநேயம்மிக்க, இன, மத, ஜாதி பேதமற்ற தாதிய சேவையினை இனம் கண்டு அதைப் பேணுவதன் மூலம் தாமும் சுகம் பெற்று நாடும் நலம் பெற உதவ முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரீட்சைப் பெறுபேறுகளை விரைவாக வெளியிட்டு வரும் பரீட்சைத் திணைக்களம்

## பரீட்சைகள் தொடர்பான பணிகளை மேலும் மேம்படுத்த நடவடிக்கை



பரீட்சை ஆணையாளர்
டபிள்யூ.எம்.என்.ஜே. புஷ்பகுமார
சார்பாக
**செ.பிரணவதாசன்**
உதவிப் பரீட்சை ஆணையாளர்,
இலங்கை பரீட்சைத் திணைக்களம்

தினக்குரல் பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டு 20 ஆவது ஆண்டில் தடம் பதிப்பதையிட்டு மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன். 19 வருடங்களைக் கடந்து வரும் போதும் ஒவ்வொரு வருடமும் புதுப்புதுத் திட்டங்களை ஆரம்பித்து வருவதிலும் அதை சரியான முறையில் வாசகர்களிடம் ஒப்படைப்பதிலும் அளப்பரிய சேவையை ஆற்றியுள்ளது என்பது கண்கூடாகும். அத்துடன் எமது செயற்பாடுகளுடனும் பரீட்சை செய்திகளை வெளியிடுவதிலும் அதிகளவு ஒத்துழைப்பு வழங்கி வருவதையிட்டு இவ்விடத்தில் பெருமையுடன் நன்றிகூற கடமைப்பட்டுள்ளேன்.

அந்த வகையில் நாட்டில் மிகப் பாரிய கடமைகளை நிறைவேற்றிக் கொண்டிருக்கும் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினது வளர்ச்சியையும் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

ஆரம்பத்தில் இலங்கையில் பரீட்சைகள் நடத்தப்பட்டது பொதுக் கற்றல் திணைக்களத்தின் பணிப்பாளரினாலாகும். எனினும் அது கல்வித் திணைக்களத்தின் கீழ் ஒரு கிளையாகவே செயற்பட்டது. நாளடைவில் பரீட்சைகளின் எண்ணிக்கை அதிகரித்தமையினால் தனி ஒரு கிளையினால் சமாளிக்க முடியாது இருந்தது.

அந்த வகையில் 1951ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 1 ஆம் திகதி பரீட்சை ஆணையாளரின் கீழ் இலங்கைப் பரீட்சைத் திணைக்களமாக செயற்பட ஆரம்பித்தது.

ஆரம்பத்தில் அதாவது 1952ஆம் ஆண்டில் க.பொ.த. [சா/த] பரீட்சை ஆரம்பிக்கப்பட்டதோடு, அதற்குத் தோற்றிய பரீட்சார்த்திகள் அண்ணளவாக 52,992 பேர்களாவர். இப்பரீட்சைக்கு சிங்களம், தமிழ், ஆங்கிலம் போன்ற மும்மொழிகளிலும் 60 பாடங்கள் நிர்ணயிக்கப்பட்டதோடு, பரீட்சார்த்திகள் தமக்கு விரும்பிய பாடங்களைத் தெரிவு செய்யும் வசதியும் காணப்பட்டது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நல் வாழ்த்துக்கள்

**20ஆவது ஆண்டு பூர்த்தியைக் கொண்டாடும்**
**தினக்குரல் பத்திரிகைக்கு**
**எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்!**

தொழிலாளர் தேசிய சங்கத் தலைவர்
மலைநாட்டு புதிய கிராமங்கள்
உட்கட்டமைப்பு வசதிகள்
மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சர் - பழனி திகாம்பரம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆடை உலகின் ராஜ கிரீடம்

# ராம் பிரதர்ஸ்

(பிறைவேட்) லிமிட்டட்

140, மெயின் வீதி, கொழும்பு-11. தொலைபேசி: 2320127, 2447698 பெக்ஸ் : 2543424

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வரலாற்றில் முதற்தடவையாக 2011ஆம் ஆண்டிலே ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறுகள் 20 நாட்களில் வெளியிடப்பட்டன. தற்போதும் அம்முறை பேணப்பட்டு வருகிறது.**

இவ்வாறு பரீட்சை ஆணையாளர்களாக 1951ஆம் ஆண்டிலிருந்து 1988 ஆம் ஆண்டு வரை பதினொரு பரீட்சை ஆணையாளர்கள் கடமையாற்றியுள்ளனர். இக்காலத்திலே அதாவது 1959 – 1964ஆம் ஆண்டு வரை எஸ். ஈ.ஆர்.பேரின்பநாயகம் என்ற சிறுபான்மை இனத்தவரும் கடமையாற்றியுள்ளார்.

1968ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க பிரபல்யமான பரீட்சை சட்டத்தின் மூலம் பாடசாலைப் பரீட்சைகள், தொழில்நுட்பக் கல்விப் பரீட்சைகள், அரச மற்றும் அரச உதவி பெறும் திணைக்களங்கள் நடத்தும் பரீட்சைகள் உட்பட சகல பரீட்சைகளையும் ஒழுங்கமைப்புச் செய்து நடத்தும் அதிகாரம் பரீட்சைத் திணைக்களத்திற்கு கிடைக்கப் பெற்றது.

ஆரம்பத்தில் கொழும்பு – 02 மலே வீதியில் விசேடமாக கட்டப்பட்ட கட்டிடத்திற்கு 1957ஆம் ஆண்டு இரகசிய கிளை கொண்டு செல்லப்பட்டது. அத்துடன் 1958ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற க.பொ.த. [சா/த] பரீட்சையானது முதல் தடவையாக ஒரே வினாத்தாள் மூன்று மொழிகளிலும் தயாரிக்கப்பட்டு நடத்தப்பட்டது.

க.பொ.த. உயர்தரப் பரீட்சையானது முதல் முறையாக 1964ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் நடைபெற்றதுடன், 1965ஆம் ஆண்டிலிருந்து இந்தப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கேற்ப பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

1991ஆம் ஆண்டில் இருந்து பரீட்சைத் திணைக்களத்தின் தலைவர் பதவியான பரீட்சை ஆணையாளர் பதவியானது பரீட்சை ஆணையாளர் நாயகமாக மாற்றப்பட்டது.

1999ஆம் ஆண்டு பத்தரமுல்லையில் அமைந்துள்ள சகல வசதிகளும் கொண்ட புதிய நவீன கட்டிடத் தொகுதிக்கு பரீட்சைத் திணைக்களம் மாற்றப்பட்டது.

க.பொ.த. [சா/த] மற்றும் உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் D,C,S,F என நடைமுறைப்படுத்தப்பட்ட முறையானது 2001ஆம் ஆண்டிலிருந்து A,B,C,S,F என மாற்றியமைக்கப்பட்டது.

2003ஆம் ஆண்டிலிருந்து பாடசாலைப் பரீட்சைகளுக்கு SBA புள்ளிகளும் பெறுபேறுகளுடன் இணைக்கப்பட்டன.

வெளிநாடுகளுக்கு சான்றிதழ் விநியோகிக்கும் ஒருநாள் சேவையானது 2003ஆம் ஆண்டில் இருந்து ஆரம்பமாகியது.

வரலாற்றில் முதற்தடவையாக 2011ஆம் ஆண்டிலே ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள் 20 நாட்களில் வெளியிடப்பட்டன. தற்போதும் அம்முறை பேணப்பட்டு வருகிறது.

இந்த வகையிலான வளர்ச்சிப் பாதையில் செல்லும் எமது திணைக்களத்தினை அதன் ஏழாவது பரீட்சை ஆணையாளர் நாயகமாக டபிள்யூ. எம்.என்.ஜே. புஷ்பகுமார 1.1.2012ஆம் ஆண்டிலே பொறுப்பேற்றுக் கொண்டார். அன்று முதல் இன்று வரை திணைக்களம் அபார விதமான வளர்ச்சிப் பாதையிலே சென்று கொண்டிருக்கிறது. அவரது அதீத சிந்தனையின் மூலம் தினந்தோறும் புதுப்புது விடயங்களைப் புகுத்தி முன்னேற்றிச் செல்கிறார். அந்த வகையில்;

- சான்றிதழ் கிளையிலே ஒருநாள் சேவையில் சான்றிதழ்களை அன்றே விநியோகிக்கும் சேவையை அறிமுகப்படுத்தி அதன்மூலம் தினந்தோறும் 600 க்கும் மேற்பட்ட சான்றிதழ்களை மூன்று மணித்தியாலங்களுள் பெற்றுக்கொள்ளக்கூடிய வசதி ஆரம்பிக்கப்பட்டது. இங்கு எமது சான்றிதழ்களை உலக நாடுகள் அனைத்தும் ஏற்றுக் கொள்கின்றன. எனினும் நாம் குறிப்பிட்ட ஒரு சில நாடுகளின் சான்றிதழ்களையே ஏற்றுக் கொள்கின்றோம். அந்த வகையில் எமது கல்வி முறைமையையும் நம்பகத்தன்மையையும் நாம் சிறந்த முறையில் பேணி வருகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• பரீட்சைக் கடமைகளில் ஈடுபடும் பரீட்சைக் குழுவினரை தெரிவு செய்து அவர்களைப் பயிற்றுவித்து பரீட்சகர்கள் குழாமினராக இணைப்பாளர்கள், உதவி இணைப்பாளர்கள், மேற்பார்வையாளர்கள், உதவி மேற்பார்வையாளர்களின் பயிற்றப்பட்ட குழுக்களை ஒவ்வொரு மாகாணங்களிலும் உருவாக்கி வருகின்றார். இதன்மூலம் பரீட்சைகளின் போது ஏற்படும் குளறுபடிகள் தவிர்க்கப்படுகின்றன. அது மட்டுமல்லாது க.பொ.த சாதாரண மற்றும் உயர்தர பரீட்சை, ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைகளின் போது நாடு பூராகவும் பரீட்சை நிலையங்கள், இணைப்பு நிலையங்கள் அனைத்தும் எமது அதிகாரிகள் மூலமாகவும் மாகாண, வலய மட்ட அதிகாரிகள் மூலமும் இரவு, பகலாக மேற்பார்வை செய்யப்படுகின்றன.

• பாடசாலைப் பரீட்சைகள் தவிர ஏனைய போட்டிப் பரீட்சைகள், தடை தாண்டல் பரீட்சைகள், அறநெறிப் பாடசாலைப் பரீட்சைகள் உட்பட 350 இற்கும் அதிகமான பரீட்சைகள் வருடந்தோறும் நடத்தப்படுவதுடன், அவற்றின் பெறுபேறுகளையும் இரண்டு மாதங்களுக்குள் வெளியிட்டு உரிய திணைக்களத்திற்கு அனுப்பியும் வருகின்றோம். உரிய புள்ளிகள், பெறுபேறுகளையும் பரீட்சார்த்திகளுக்கு அனுப்பியும் வருகின்றோம்.

• திணைக்களத்தின் இடவசதியை விரிவுபடுத்தும் நோக்கில் பரீட்சைகளை நடத்தக்கூடிய மண்டபங்கள், விரிவுரை மண்டபங்கள், வளவாளர்களுக்கான விடுதி வசதிகள் அடங்கிய ஆறு மாடிக் கட்டிடமொன்றை அமைப்பதற்கான அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன், அது விரைவில் ஆரம்பிக்கப்படவும் உள்ளது. இதன்மூலம் பல பரீட்சைகள், மதிப்பீட்டுப் பணிகளையும் விரைவில் கிழமை நாட்களிலும் நிறைவேற்ற முடியும்.

• 300இற்கும் குறைவாக உள்ள விண்ணப்பதாரிகளுக்கான பரீட்சைகளை வார இறுதி நாட்களில் நடத்தாது கிழமை நாட்களில் எமது திணைக்களத்திலேயே நடத்துவதற்குரிய வசதியாக அண்மையில் ஒரு கட்டிடப் பகுதி விரிவாக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. இங்கு ஆசிரியர்கள், வளவாளர்களையும் பயிற்றுவிக்கக்கூடிய வசதியும் அமைக்கப்பட்டுள்ளது.

**300இற்கும் குறைவாக உள்ள விண்ணப்பதாரிகளுக்கான பரீட்சைகளை வார இறுதி நாட்களில் நடத்தாது கிழமை நாட்களில் எமது திணைக்களத்திலேயே நடத்துவதற்குரிய வசதியாக அண்மையில் ஒரு கட்டிடப் பகுதி விரிவாக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. இங்கு ஆசிரியர்கள், வளவாளர்களையும் பயிற்றுவிக்கக்கூடிய வசதியும் அமைக்கப்பட்டுள்ளது.**

• Online மூலம் பரீட்சைகளுக்கு மற்றும் சான்றிதழ்களுக்கு விண்ணப்பிக்கும் முறையும் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. அந்த வகையில் பரீட்சார்த்தமாக GIT பரீட்சை, அரச கரும மொழிப் பரீட்சைக்கான விண்ணப்பங்களும் தற்போது அம்முறை மூலம் ஏற்கப்படுகின்றன. விரைவில் ஏனைய பரீட்சைகளுக்கும் இம்முறையை விரிவுபடுத்தவுள்ளோம்.

• O/L மற்றும் A/L பரீட்சைப் பெறுபேறுகளை கூடிய விரைவில் சரியாக வெளியிடும் திட்டத்தையும் ஆரம்பித்துள்ளோம். அந்த வகையில் 2015ஆம் ஆண்டு டிசம்பரில் நடைபெற்ற சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகளை இம்முறை மார்ச் மாதம் 19ஆம் திகதி வெளியிட்டு சாதனை படைத்துள்ளோம். இப்பரீட்சைக்கு இம்முறை பரீட்சை வரலாற்றிலேயே அதிகப்படியான மாணவர்கள் அதாவது 6.5 இலட்சம் பேர் தோற்றியது சிறப்பம்சமாகும். அத்துடன் இவ்வருடம் நடைபெற்ற, நடைபெறவுள்ள உயர்தரப் பரீட்சை, சாதாரணப் பரீட்சை, ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை, GIT பரீட்சை மற்றும் செயன்முறைப் பரீட்சைகளுக்கான திகதிகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# YOU ONLY NEED 5 CREDIT PASSES
## AT O/L'S TO ENTER 27 AUSTRALIAN UNIVERSITIES VIA THE ACBT UNIVERSITY FOUNDATION PROGRAM

**Enter these globally ranked universities by February 2017**

BOI
SRI LANKA
APPROVED
PROJECT

"I started with ACBT in 2015 and to this date, I do not regret the decision made by my parents, because from the day I started, I have had the support of ACBT. I started my program by following the 'University Foundation in IT, it's been my passion from the beginning. ACBT's unique education system makes it easier for students to do well in their studies. Personally, I would always recommend ACBT to anyone, who is willing to fast track their higher education, as it's an education experience like no other"

**-Ryndhri Jacob-**
Bachelor of computer science

**Diploma - 8 Months**

- Diploma of Business CRICOS: 018819J →
- Diploma of Science (Computing/IT) CRICOS: 032042C →
- Diploma of Science (Engineering Studies) CRICOS: 085483F

**Degree - 16 Months**

- Bachelor of Business CRICOS: 003740F
- Bachelor of Computer Science CRICOS: 052112F

↑

**Foundation - 8 Months**

Foundation / Certificate IV - CRICOS: 084430E
(Business, Computing/IT, Engineering, Science)

Colombo: 442, Galle Road, Colombo 3
Tel: 2565511 Hotline: 077 3 000 900
Kandy: 3A, Mahamaya Mawatha, Kandy
Tel: 081-2205800 Hotline: 077 2 273 333
Galle: 46 1/2, Colombo Road Kaluwella, Galle
Tel: 224 4544/91 222 4535 Hotline: 0773 099 251
E: info@acbt.lk W: www.acbt.net

acbt

AUSTRALIA ECU EDITH COWAN UNIVERSITY
CRICOS code: IPC00279B


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருட ஆரம்பத்திலேயே அறிவித்து மாணவர்களை பரீட்சைக்கு தயார் செய்யும் வகையிலும் ஊக்கு வித்து வருகின்றோம்.

• இம்முறையில் இருந்து அதாவது 2016 டிசம்ப ரில் இருந்து க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை புதிய பாடத்திட்டத்தில் நடைபெறவுள்ளதோடு, அதற்கான மாதிரி வினாத்தாள்களை தயாரித்து பாடசாலைக ளுக்கு அனுப்பி வருகின்றோம்.

• எமது திணைக்களமானது 24 மணி நேரமும் பாது காப்பு பலப்படுத்தப்பட்டு அச்சகம் மற்றும் ஏனைய கிளைகளும் C.C.T.V கமராவின் மூலம் மேற்பார்வை செய்யப்படுவதோடு, வினாத்தாள் தயாரித்தல், அச் சடித்தல், விநியோகித்தல் என்பனவற்றில் எதுவித இடையூறும் ஏற்படாதவாறு பாதுகாப்பு ஊழியர்கள், பொலிஸார் ஆகியோர்களின் உதவியுடன் பூரண பாதுகாப்பு வழங்கப்படுகிறது.

• பரீட்சைகளில் இடம்பெறும் ஆள்மாறாட்டம், மோசடிச் செயல்களை அவதானிக்க எமது அதி காரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். முறைப்பாடுகள் கிடைக்கப் பெறும்போது பூரண விசாரணை நடை பெற்று அவ்வாறானவர்களின் பெறுபேறுகள் இடை நிறுத்தப்படுவதுடன், அவர்களுக்கு வாழ்நாள் தடையும் விதிக்கப்படும். பரீட்சைக் குழுவினர் இவ் வாறான மோசடிச் செயலில் ஈடுபட்டால் அவர்களின் சேவைகளையும் இடைநிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மாணவர்களின் முறைப்பாடு கள் கிடைக்கப் பெற்ற உடனேயே அதற்குரிய விசா ரணை நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்படும்.

• பரீட்சைப் பெறுபேறுகளை விரைவாக வெளி யிடுவதோடு அவற்றை வெளியிடுவதற்கு முன்னர் பல சோதனைகளின் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே தற்போது வெளியிடப்படுகிறது.

• மதிப்பீடுகளின்போது அவற்றின் தரம் அதிகரிக் கப்பட்டுள்ளது. ஏற்கனவே குழு மதிப்பீட்டு முறை இருந்தாலும் தற்போது அதன் தரத்தை அதிகரிப்பதற் காக பல பரிசோதனை முறைகள் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன.

• இங்கு கடமையாற்றும் ஊழியர்களினது நலனோம்பல் வசதிகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன. அத்துடன் சமய நிகழ்வுகளுக்கும் முக்கியத்துவம் வழங்கப்படுகிறது. புத்தசமய பிரித் நிகழ்வு, சரஸ்வதி

**2016 டிசம்பரில் இருந்து க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை புதிய பாடத்திட்டத்தில் நடைபெறவுள்ளதோடு, அதற்கான மாதிரி வினாத்தாள்களை தயாரித்து பாடசாலைகளுக்கு அனுப்பி வருகின்றோம்.**

பூஜை, இப்தார் நிகழ்வு, கிறிஸ்மஸ் நிகழ்வு என்பன அவற்றிற்கான சில உதாரணங்களாகும்.

• எமது திணைக்களத்தில் திட்டமிடல் கிளை ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு, எதிர்வரும் ஐந்தாண் டுகளில் நடைமுறைப்படுத்த உரிய செயற்பாடுகள் திட்டமிடப்படுகின்றன. அவற்றுள் சிலவற்றைப் பார்த்தால்;


• மாகாண மட்டத்தில் வினாப்பத்திரத்தை தயா ரிக்கும் குழுவினரை பயிற்றுவிக்கும் திட்டம் ஆரம் பிக்கப்பட உள்ளதோடு பாடசாலை மட்ட பரீட்சை களை நடத்துவதற்குரிய தலைமை நிறுவனம் என்ற வகையில் ஒரே சமத் தன்மையைப் பேணுவதோடு அதற்குரிய குழுவினரை பயிற்சியளித்து உருவாக்க வுள்ளோம்.

• போட்டிப் பரீட்சைகளுக்கான விண்ணப்பங்க ளையும் Online மூலம் ஏற்றுக்கொள்ளவுள்ளோம்.

• அரசின் கொள்கைக்கேற்ப கல்வித் திட்ட மாற் றங்களை உடனடியாகவும் சரியாகவும் அமுல்படுத்த வுள்ளோம். அதற்கான திட்டமிடல்கள் நடைபெற்று வருகின்றன.

அந்த வகையில் எம்முடன் கைகோர்த்துள்ள தினக்குரல் நிறுவனமானது தனது 20ஆவது அகவை யில் தடம் பதிப்பதையிட்டு மீண்டும் எனது பாராட் டுகளை தெரிவிப்பதுடன், தொடர்ந்தும் எம்முடன் சிறந்த முறையில் செயற்படுவதற்கு வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துரிதகதியிலான வாழ்க்கை முறையில் பதற்றத்தை எவ்வாறு தணிக்கலாம்?



மனநல ஆலோசகர்
திருமதி புஷ்பராணி சாந்தலிங்கம்

பதற்றம் அதாவது டென்ஷன் எனச் சொல்லப்படும் பயம் அன்றாடம் நாம் அனுபவிக்கின்ற ஒரு உணர்வு எனலாம். தற்போதைய அவசர உலகில் 90% மானோர் இந்த உணர்விற்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. உடலியல் காரணிகளான மூளையில் ஏற்படும் இரசாயன மாற்றங்கள் இந்த உணர்விற்கு முக்கிய காரணமாக அமைகின்றன. இந்த உணர்வினை பயமூட்டக்கூடிய அல்லது எதிர்பாராமல் திடீரென ஏற்படும் சூழ்நிலைகளுக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்படும் போது காணக்கூடியதாக உள்ளது. இது அனைவரும் அனுபவிக்கின்ற உணர்வாகும்.

பதற்றம் உண்டாகும் போது ஒருவர் காரணத்தை அறிந்து அதற்கு முகம் கொடுத்து சமாளிக்கும் போது பதற்றத்தைக் குறைக்கவோ அல்லது இல்லாமல் செய்யவோ முடியும். ஆனால் பதற்றத்தை உருவாக்கிய காரணி மிகவும் திடமாக இருக்குமேயானால் ஒருவரால் முகம்கொடுத்து சமாளிக்க முடியாமல் போய் விடும். இந்தக் காரணத்தால் பதற்றம் மென்மேலும் அதிகரித்து அவரை பயமுறுத்தக் கூடும். அத்துடன் வாழ்வின் சமநிலை பாதிக்கப்படும். செயற்பாட்டுத் திறனும் குறைய இடமுண்டு.

பதற்றத்தின் வெளிப்பாடு ஒருவரின் உடல், உள ரீதியாக பாதிப்பை ஏற்படுத்தும்.

உடல் – நெஞ்சு இறுக்கம், படபடப்பு, உடல் நடுக்கம், நித்திரையின்மை, சுவாசிப்பதில் சிரமம், தலைவலி, உதடுகள் உலர்தல் இவை ஒவ்வொருவருக்கும் வேறுபடலாம்.

உளம்– உள்ளத்தில் ஏற்படும் மாற்றங்களை பார்த்தோமேயானால் ஞாபக மறதி முதலில் ஏற்படும். அத்துடன் தீர்மானம் எடுப்பதில் சிரமம், சொல்ல முடியாத பய உணர்வு, கோபமும் எரிச்சலும் ஏற்படும், குழப்ப சிந்தனை, கட்டுப்பாடற்ற நிலை, அவதானக் குறைவு, அபாயம் ஏற்படுமோ என்ற அச்ச உணர்வு போன்றவை ஏற்படும்.

இந்தப் பதற்றத்தால் வேலைப் பளு சுமையாகி அக்கறை குறைந்து வேலையை இழக்கக்கூடிய சூழ்நிலையும் உருவாக வாய்ப்புண்டு. ஆண்களை விட பெண்களே கூடிய அளவில் பதற்றத்திற்கு உள்ளாகின்றன. ஓமோன்களில் ஏற்படும் மாற்றங்களும் ஒரு காரணியாக அமைகின்றன. நெருக்கீட்டிற்கு முகம் கொடுப்பதில் சிரமம் பதற்றம் ஏற்பட முதன்மை காரணிகளில் ஒன்றாகிறது.

- பதற்றத்திலிருந்து விடுபட பல வழிமுறைகள் உள்ளன.
- முதலாவதாக சாந்த வழிமுறை – உடம்பையும் மனதையும் அமைதிப்படுத்துவதற்கு உதவும்.
- அடுத்து தியானம், மூச்சுப் பயிற்சி, யோகாசனம், இசையை ரசித்தல்.
- உங்கள் பிரச்சினைகளை உங்களுக்கு நெருங்கிய ஒருவரிடம் பகிர்ந்துகொள்ளுங்கள். இந்த சூழ்நிலை அவர்களுக்கும் ஏற்பட்டிருக்கலாம். அவர் உங்களுக்கு ஆலோசனை வழங்க இடமுண்டு.
- மனதில் எரிச்சலையும் கோபத்தையும் தவிருங்கள். முடிவுகளை ஆலோசித்து எடுங்கள். ஆக்கபூர்வமாக சிந்தியுங்கள். தேவையில்லாத எண்ணங்களை விட்டுவிடுங்கள்.
- குடும்ப உறவுகளிடையே அன்பும் பரிவும் காட்டுங்கள்.
- ஆரோக்கியமாக வாழுங்கள், உடற்பயிற்சி, முறையான உணவு, போதுமான தூக்கம் ஆகியவற்றின் மூலம் உங்கள் உடலை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ளுங்கள். உங்களுக்கு பிடித்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள். ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள். சுகமாக மெல்லிசையை கேளுங்கள்.
- மலையருவி, தென்றல் தொடும் இலைகள் போன்ற மனதிற்கு இதமான இயற்கை காட்சிகளை கற்பனை செய்யுங்கள்.
- மிக அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் வாழுங்கள். பதற்றம் உங்களை விட்டுச் சென்றுவிடும்.



20 Anniversary

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையை அச்சுறுத்தும் வீதி விபத்துகள் இவற்றுக்கு காரணங்கள் என்ன?




போக்குவரத்து என்பது அன்றாட வாழ்வில் தவிர்க்க முடியாததொரு விடயமாகும். சுமுகமான போக்குவரத்து நாளாந்த வாழ்க்கையை இலகுபடுத்துவதுடன், எமது தொடர்ச்சியான இயக்கத்துக்கும் உதவியாகவுள்ளது. சிறப்பான போக்குவரத்தினை மேற்கொள்ள முறையான வாகனத் தெரிவு, நாட்டின் வீதி அமைப்புகள் ஆகியவற்றுடன் திறமையான அனுபவம் கொண்ட சாரதிகள் மிகவும் அவசியமாகின்றனர்.

எவ்வாறாயினும் அன்றாட வாழ்வில் போக்குவரத்தின் போது சில இடையூறுகளை எதிர்கொள்வதினை தவிர்க்க முடியாதுள்ளது. வாகன நெரிசல், புனரமைப்பற்ற வீதி அமைப்பு, சாரதிகளின் பொறுப்பற்ற செயற்பாடுகள், குடிபோதையில் வாகனம் செலுத்துதல், வேகமாகச் செல்லுதல், வீதி ஒழுங்கு முறைகளை கடைப்பிடிக்காமை, அதிகரித்துள்ள வீதி விபத்துக்கள் போன்றவை அவ்வாறான சில இடையூறுகளாகும்.

அண்மைய காலங்களில் இலங்கையில் வீதி விபத்துகள் அதிகரித்து வருவதுடன், கடந்த வருடம் மாத்திரம் 2801 மக்கள் விபத்தில் சிக்கி அந்த இடத்திலேயே உயிரிழந்துள்ளனர். அதேவேளை கடந்த ஆண்டு இலங்கையில் 35,000 கொடூர வீதி விபத்துகள் பதிவு செய்யப்பட்டுள்ளதோடு, இது மாதமொன்றுக்கு சராசரியாக 3,000 விபத்துகள் இடம்பெற்றதனை குறிக்கின்றது. இலங்கையில் இவ்வாறான வீதி விபத்துகள் ஏற்படுவதற்கான 5 பிரதான காரணங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

வேகமாக வாகனங்களைச் செலுத்துதல் (Speed), மதுபோதையில் வாகனம் செலுத்துதல் (Drunk & Drive), கவனமின்மை மற்றும் வீதி சமிக்ஞைகள் மற்றும் ஒழுக்க நெறிகளைப் பின்பற்றாமை (Traffic Rules), தலைக்கவசம் (Helmat), இருக்கைப்பட்டி (seat belt) அணியாமை மற்றும் சரியாக அவற்றை அணியாமை மற்றும் கைத்தொலைபேசி (Mobile) பாவனை என்பவையே அக்காரணிகளாகும். வாகனமொன்றுக்கு அனுமதிக்கப்பட்டிருக்கும் வேகமானது சாதாரண வீதிகளில் 70 km/h மற்றும் அதிவேகப் பாதைகளில் 100 km/h மற்றும் முச்சக்கர வாகனங்களுக்கு அனுமதிக்கப்பட்டிருக்கும் வேகம் 40 km/h ஆகும். எனினும் இவற்றைச் சரியாக கடைப்பிடிக்காமை அதிகரித்த வாகன விபத்துக்கு காரணமாயுள்ளது. அதிகரித்த வாகனங்களின் எண்ணிக்கையும் வீதி விபத்துக்கு முக்கிய காரணியாயுள்ளது. மொத்தமாக 5.9 மில்லியன் வாகனங்கள் தற்போது வீதியில் செல்கின்றன. எனவே அண்மைக்காலங்களில் வாகன இறக்குமதி தொடர்பில் அரசு பல சவால்களை எதிர்கொண்டு வருவதுடன், சில வரையறைகளையும் பின்பற்றுகிறது. அத்தோடு இலங்கையில் பாவனையிலுள்ள மிக நீளமான கனரக வாகனங்கள் மற்றும் லொறிகள் நம் நாட்டு வீதிகளுக்கு பொருத்தமற்றதாகும். இதனால் வீதிகள் அதிகம் சேதமடைவதுடன், அதற்கான புனரமைப்புப் பணிகளுக்கு அரசு பாரிய அளவிலான முதலீட்டையும் மேற்கொள்ள வேண்டியுள்ளது. பாதை அபிவிருத்தி மற்றும் புனரமைப்பு என்பன எந்தவொரு அரசுக்கும் மிக சவாலான விடயமாகும்.

அன்றாடம் மக்கள் போக்குவரத்து தொடர்பாக எதிர்நோக்கும் பிரச்சினைகளை 011- 2696890/ 011- 2687105 என்ற எண்களுக்கூடாக தெரிவிக்க முடிவதோடு, வீதி ஒழுக்க நெறிகளைப் பின்பற்றி சிறப்பான போக்குவரத்தை மேற்கொள்ள பங்களிப்புச் செய்ய வேண்டியது எம் அனைவரதும் கடமையாகும்.

**- ஆர்.எம்.**



20 Anniversary

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வித்துறையில் மாணவர்களின் காலம் வீணடிக்கப்படும் நிலை



**இலங்கைக் கல்வி முறைமையிலுள்ள குறைபாடுகள் நீக்கப்பட வேண்டும் என்கிறார் இலங்கை திறந்த பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.ஏ.அரியதுரை**

ஆசிய நாடுகளுடன் ஒப்பிடும் போது இலங்கையின் கல்வி முறையானது பாடசாலை மட்டத்தில் அதிகளவு கல்வி வாய்ப்பை மாணவர்களுக்கு பெற்றுத்தருகிறது. இதற்கு இலங்கையில் காணப் படும் இலவசக் கல்வி முறைமையே பிரதான காரணமாகவுள்ளதென்ப தால் இதனைப் பாதுகாத்து, மேலும் கூடுதலான வசதிகளை ஏற்படுத்த வேண்டும் என இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் துணை வேந்த ரான பேராசிரியர் எஸ்.ஏ. அரியதுரை தெரிவித்தார்.

இலங்கையின் இலவசக் கல்வி முறையானது சிறப்பாக உள்ள போதிலும் கல்விக் கட்டமைப்பில் அநேக குறைபாடுகள் உள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். தற்போது இலங்கையில் காணப்படும் கல்விக் கட்டமைப்பு காரணமாக மாணவர்களின் காலமானது அதி களவு வீணடிக்கப்படுகின்றது. உலகில் அநேக நாடுகளில் கல்விக் கட்டமைப்பானது 10+2+3 [4] என்றுள்ள வேளையில் இலங்கையில் 11+2+3 [4] என்ற முறைமை பின்பற்றப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். மேலும் க.பொ.த. சாதாரண மற்றும் உயர்தர பரீட்சைக ளுக்குப் பின்னர் எமது மாணவர்கள் 1 முதல் 2 1/2 ஆண்டுகள் வரை எவ்வித காரணமுமின்றி காலத்தை வீணடிக்கிறார்கள்.

இதற்கமைய இலங்கையில் பல்கலைக்கழக அனுமதியைப் பெறும் போது மாணவர்களின் வயதெல்லை மற்ற நாடுகளுடன் ஒப்பிடுகை யில் அதிகமாகவுள்ளதுடன், இவர்கள் கல்வியை முடிக்கின்ற வய தும் அதிகமாகவுள்ளது. உதாரணமாக இந்தியாவில் ஒரு மாணவன் 20 வயதில் பட்டதாரியாகும் அதேவேளை, இலங்கையில் 20 வயதில் தான் பல்கலைக்கழக நுழைவு கிடைக்கின்றது. இதனால் அவர்களது சகல வாழ்க்கை நடவடிக்கைகளும் காலதாமதமாகி பாரிய சமூக தாக் கத்தை ஏற்படுத்துகின்றது. இலங்கையைப் பொறுத்தவரை கல்வி அமைச்சு, இலங்கை பரீட்சைத் திணைக்களம், உயர் கல்வி அமைச்சு, இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு என்பன வெவ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









# BRIGHTEN HOTELS & TRAVELS





• Banquet Halls • Family Restaurant • North Indian Foods
• Executive Buffet Lunch (Weekdays) • Standard/ Luxury Rooms.
• Tour Arrangements (Inbound & Outbound)

## Bright Inn

Luxury Holiday Resort
No. 51, Sivan Road, Thirunelveli, Jaffna.
Tel : 021 222 1889, Fax : 021 205 1889.
Webside : www.brightenhotels.lk
Email : brightinnjaffna@yahoo.com
Hotline : 0777 983 933

## Brighten Rest

(Private Limited)
No. 214/2, Messenger Street,
Colombo - 12, Srilanka.
Tel : 011 23 29 664, 011 23 24 034,
Email : brighten@eureka.lk,
Web : www.brightenrest.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறாக தனித்து இயங்குகின்றன. இதற்கமைய இலங்கையில் முன்னெடுக்கப்படும் கல்வி நடவடிக்கைகள் மற்றும் பரீட்சைப் பெறுபேறுகள் அனைத்தும் மிகத் தாமதமாகவே வெளியிடப்படுகின்றன. இதுவே மாணவர்களின் கல்வித் தாமதத்திற்கான மூல காரணமாகும். எனவே, இந்த ஸ்தாபனங்கள் அனைத்தும் ஒன்றிணைந்து செயற்பட்டு இப்பிரச்சினைக்கு உடனடித் தீர்வு காண வேண்டும் என்பதே எனது தாழ்மையான அபிப்பிராயம் என துணைவேந்தர் மேலும் தெரிவித்தார்.

மாணவர்களைப் பொறுத்தவரையில் இலங்கையில் உயர்கல்விக்கான வாய்ப்பானது குறைவாகவே உள்ளது. அரசாங்கத்தினால் வருடாந்தம் பல்கலைக் கழகங்களுக்கு Z Score [வெட்டுப்புள்ளி] அடிப்படையில் 24,000- 25,000 மாணவர்கள் உள்வாங்கப்படுகின்றனர். க.பொ.த. [உ/த] பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியடைந்த மாணவர்கள் உயர்கல்வி கற்பதற்கு தகுதியானவர்களாகக் கொள்ளப்படுகின்றனர். எனினும் அரசாங்கத்தினால் 'அனைத்து மாணவர்களுக்கும் உயர்கல்வி' என்பது இன்னும் சாத்தியமற்றதொன்றாகவே விளங்குகின்றது. இந்தப் பின்னணியில் தனியார் பல்கலைக்கழகங்களின் வருகையானது வரவேற்கத்தக்கதொன்றாகும்.

இருப்பினும் இலங்கையைப் பொறுத்தவரையில் தனியார் பல்கலைக்கழகங்களின் தரம், கல்விச் செயற்பாடுகள், அறவிடப்படும் கட்டணம் மற்றும் பிறவிடயங்கள் தொடர்பாக எவ்வித ஒழுங்கு முறைகளும் கிடையாது. இதனால் தனியார் கல்வித் துறையில் சுரண்டல் நடவடிக்கைகளுக்கு வழிவகுக்கப்படுகின்றது. இதனை அரசாங்கம் கவனத்தில் கொண்டு தேவையான சட்ட ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவது அவசியமான விடயமாகும் என அவர் மேலும் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்; கல்வி பயில்வது என்பது தனி மனிதனுக்கு நன்மை பயப்பதுடன் நாட்டிற்கு நன்மையளிக்கக்கூடியதாகும். 'Education is a public good'. ஒரு தனிமனிதனின் கல்வி மேம்பாடானது சமுதாயத்தின் வளர்ச்சிக்கும் ஒரு நாட்டினது வளர்ச்சிக்கும் நன்மையளிப்பதாகவுள்ளது. எனவே கல்வி குறித்தான தீர்மானங்களை எடுக்கும் போது வர்த்தக ரீதியான தர்க்கங்களோ, சித்தாந்தங்களோ கருத்திற்கொள்ளப்படாது. தனியாகவே கல்வி ஒரு சமுதாயத்தையும் நாட்டையும் கட்டியெழுப்ப, அபிவிருத்தி செய்ய மூலகாரணி என்ற அடிப்படை மட்டுமே கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கையின் எதிர்கால கல்வித் திட்டங்கள் தொடர்பாக அவர் தெரிவிக்கையில்; இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது Srilanka Qualification Framework என்றதொரு கட்டமைப்பை அண்மையில் அறிமுகப்படுத்தியுள்ளது. ஆரம்பத்தில் சகல அரச உயர்கல்வி நிறுவனங்களும் இதனைப் பின்பற்றுவது கட்டாயமானதாகுவதோடு எதிர்காலத்தில் தனியார் பல்கலைக்கழகங்களும் இதனை பின்பற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என எதிர்பார்க்கலாம். இதன்படி க.பொ.த. [சா/த] பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் ஆகக்குறைந்தது இரண்டு வருட அத்திவாரப்படிப்புடன் (Foundation Course) உயர்கல்வியை தொடரமுடியும். மேலும் உயர்படிப்பின் ஒவ்வொரு மட்டத்திலும் பெறப்படவேண்டிய ஆகக்குறைந்த திறமை, புலமை என்பவை வரையறுக்கப்பட்டுள்ளதுடன், மாணவர்கள் வெவ்வேறு தராதரங்களைப் பெற்றுக்கொள்ள வாய்ப்பளிப்பதுடன், அவர்கள் வாழ்நாள் முழுவதும் தமது கற்கையை Lifelong Learning மேற்கொள்ள வழிவகுக்கின்றது.

மேலும் தேசிய தொழிற்தகைமை (NVQ) மட்டங்களை பூர்த்தி செய்த மாணவர்கள் இணைப்புப் பாடங்களை Bridging Courses கற்றுக்கொண்டு உயர் கல்வியைத் தொடர்வதற்கும் வாய்ப்பளிக்கின்றது எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த 21 ஆம் நூற்றாண்டில் புதிய சவால்களுக்கு முகங்கொடுக்கக்கூடிய வகையில் தொழில்நுட்ப ரீதியாக மாற்றமடையும் உலக மயமாக்கலுக்கமைய கல்வி முறையானது மாற்றமடைவது அவசிய மாகும். மிகமுக்கியமாக, கல்வி நடவடிக்கைகள் அதிக நெகிழ்ச்சித் தன்மைகளை உள்ளடக்கியவையாக இருத்தல் வேண்டும். எது எவ்வாறாயினும் கல்வியானது எத்தகைய மாற்றத்துக்கு உட்பட்டாலும் அதன் தராதரம் மாறாமல் இருக்கவேண்டும் என துணைவேந்தர் மேலும் தெரிவித்தார்.

**- எஸ்.எச்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர்கள் தொழிற்துறையில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை அடைய பூரண ஈடுபாடும் அர்ப்பணிப்பும் அவசியம்



சிங்கர் ஸ்ரீலங்கா சந்தைப்படுத்தல் பணிப்பாளர் **குமார் சமரசிங்க**

இளைஞர்கள் நாட்டின் இதயத் துடிப்பு ஆவர். அவ்வாறான இளைஞர்கள் வியாபாரத்திலும் சரி, வாழ்க்கையிலும் சரி, சில சவால்கள் தான் சிறந்த நிலையை அடைய முறையிலான வழிக்காட்டல்கள் அவசியமாகும்.

இன்றைய வியாபாரச் சூழல்களில் தொழிற்துறையில் பிரவேசிப்போர் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் அவற்றை எவ்வாறு எதிர்கொள்வதென சிங்கர் ஸ்ரீலங்கா நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் பணிப்பாளர் குமார் சமரசிங்விடம் வினவியபோது அவர் இவ்வாறு விபரித்தார்.

அடிக்கடி மாறிக்கொண்டிருக்கும் வியாபாரச் சூழலில் நிறுவனத்தை முன்கொண்டு செல்லும் போதும் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தலை மேம்படுத்தும் போதும் நிறைய சவால்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. அவற்றில் போட்டியாளர்கள், நவீன தொழில்நுட்ப மாற்றம், நுகர்வோரின் தேவை, தெரிவு, மாற்றம் என்பவற்றை முக்கியமாகக் குறிப்பிடலாம். இருப்பினும் இவற்றில் உண்மையான சவால் எதுவெனில், இக்காரணிகளில் ஏற்படப் போகும் மாற்றங்களை அதற்கு முன்னதாகவே இனம்கண்டு அவற்றை எதிர்கொள்ளுவதற்காக எம்மை தயார்படுத்தலே ஆகும். நாளைக்கு என்ன நடக்கும்? என இன்றே சிந்தித்து செயற்பட வேண்டிய தேவை சந்தைப்படுத்தல் துறையில் இருக்கும் ஒவ்வொருவருக்கும் அவசியமானது.

எனவே உலக சந்தையில் ஏற்படுகின்ற தொழில்நுட்ப மாற்றம், மனித நடத்தை மாற்றம், போட்டியாளர்களின் தந்திரோபாயங்கள் மற்றும் சந்தையில் என்ன நடக்கின்றது? போன்ற விடயங்களை கவர்ந்து அவதானித்து அவற்றை எமது அறிவு, அனுபவம் மற்றும் குழுச் செயற்பாட்டோடு எதிர்கொள்ளும் போது நாம் வெற்றி அடைய முடியும்.

ஆரம்ப காலத்தில் நாம் கடினமாக உழைக்க வேண்டிய தேவை இருந்தது. ஆனல் இன்று தொலைக்காட்சி, இணையம், கையடக்கத் தொலைபேசி, கணினி என நவீன உலகில் எல்லாவற்றையும் இளைஞர்கள் இலகுவாகப் பெறுகின்றனர். எனவே அவர்கள் திறமையானவர்கள். அதேவேளை, அதிர்ஷ்டசாலிகள், பெற்றோர்களின் சிறந்த வழிகாட்டலில் அவர்கள் தம்மைத் தாமே செதுக்கிக் கொள்ள முடியும்.

ஒரு இளைஞனாக வியாபாரம் ஒன்றை ஆரம்பிக்கும்போது அல்லது தொழிற்றுறைக்கு பிரவேசிக்கும் போது சுயநம்பிக்கை, என்னால் அதனை சாதிக்க முடியும் என்ற மனோநிலை முக்கியமானது. அடுத்ததாக சூழலை நன்கு ஆராய்ச்சி செய்ய வாய்ப்புகளை இனம்கண்டு சிறந்ததொன்றை தெரிவு செய்வதுடன், முழுமையான ஈடுபாட்டோடும், அவதானத்தோடும், அர்ப்பணிப்போடும் செயற்படும் போது நிர்ணயிக்கப்பட்ட இலக்கை அடைய முடியும்.

வெற்றி அடைய குறுக்கு வழி எதுவும் இல்லை. உண்மையான வெற்றி, கடின உழைப்பினாலும், முழுமையான அவதானத்துடனும் படிப்படியாகவே அடைய முடியும் என்றார்.



20 Anniversary

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகத்தின் எழுச்சியில் ஊடகங்களின் வகிபாகம்

**ஏ.ஆர்.வி.லோஷன்**
பணிப்பாளர், சூரியன் எப்.எம்.

ஒரு சமூகத்தின் முன்னேற்றத்தில் அந்தச் சமூகத்தைப் பிரதிபலிக்கும் ஊடகங்களின் வகிபாகமானது மிக அத்தியாவசியமானதாக அமைகிறது. மக்களுக்குத் தேவையானதை வழங்குவதும், மக்களது உரிமைகள் பற்றி வெளிப்படுத்துவதும் மக்களது உண்மையான பிரதிநிதிகளாகச் செயற்படுவதும் ஜனநாயகத்தின் தூண்களில் ஒன்றான ஊடகங்களின் தலையாய கடமைகள் ஆகின்றன.

செய்திகளை அறியத்தருவதோடு நின்றுவிடாமல், அந்தச் செய்திகளின் பின்னணியோடு பின்னிப் பிணைந்த வரலாறுகள், அந்த வரலாற்றின் வழியான மக்கள் வாழ்வியல், அது காட்டும் எதிர்காலத்துக்கான அரசியலும் நடைமுறையும் என்று பல்வேறுபட்ட காரணிகளின் தொகுப்பைச் சரியான முறையில் நடைமுறைப்படுத்தும் ஊடகம் அந்த மக்களின் உண்மையான பிரதிநிதியாக இருக்கும் என்பது தெளிவு.

உலகம் சுருங்கி, இணைய வளர்ச்சி, தொழில்நுட்ப வளங்களின் பெருக்கம் என்பவற்றின் மூலம் செய்திகளும் தகவல்களும் கண்ணிமைக்கும் நேரத்தில் பல்கிப் பெருகி மக்களுக்குச் செய்திகள் மலிந்து கிடக்கும் இந்தக் காலகட்டத்தில் சரியான, உண்மையான, தேவையான செய்தியை சரியான விதத்தில், உரிய நேரத்தில் வழங்குவது ஒவ்வொரு சமூகப் பொறுப்புணர்வுள்ள ஊடகத்தினதும் தார்மீகக் கடமையாகிறது.

இந்தப் பொறுப்புள்ள கடமையை இலங்கையிலும் புலம்பெயர் தேசங்களிலும் வாழும் தமிழ் மக்களின் வாழ்வியலில் முக்கியமான அங்கமாக மாறியிருக்கும் தினக்குரல், தனக்கான நேர்வழியில் ஆற்றிக்கொண்டிருக்கிறது என்பதில் சமகாலத்தில் இலத்திரனியல் ஊடகத்தில் செயலாற்றிக் கொண்டிருக்கும் ஒரு ஊடகவியலாளனாக மகிழ்வோடு நோக்குகிறேன். இந்தச் செம்மையான பணியில் தினக்குரலின் குழுமமும் ஆசிரியர் குழாமும் ஊடகவியலாளர்களும் சீராக ஈடுபட்டும் என அன்போடும் உரிமையோடும் வாழ்த்தி மகிழ்கிறேன்.



கல்வி இராஜாங்க அமைச்சர்
வே. இராதாகிருஸ்ணன்

மக்களின் பிரச்சனைகளை வெளி உலகத்திற்கு கொண்டு வருவதிலும் மக்களின் மனநிலையையும் எம்மைப்போன்ற அரசியல் வாதிகளின் கருத்துக்களையும் பொது மக்களிடம் கொண்டு செல்வதில் பாரிய பங்களிப்பைச் செய்வது அச்சு ஊடகங்கள் என்று சொன்னால் அது மிகையாகாது.

20 வருடங்களுக்கு முன் பிறந்த தினக்குரல் குழந்தை தற்பொழுது வளர்ந்து பெரியவனாகி 20வயதை தொட்டிருக்கின்றது. தினக்குரலின் கடந்த கால செயற்பாடுகள் மிகவும் சிறப்பாக அமைந்திருந்தமை வரவேற்கத்தக்கது. பக்கச்சார்பு இல்லாமல் நடுநிலையாக நின்று செயற்பட்டு மக்களுக்காக குரல் கொடுக்கும் ஒரு பத்திரிகையாக நான் தினக்குரலைப் பார்க்கின்றேன்.

தினக்குரல் நிறுவனத்தின் உரிமையாளர்கள், பிரதம ஆசிரியர், செய்தி ஆசிரியர், உதவி ஆசிரியர்கள் உட்பட அனைத்து தரப்பினருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகின்றேன். தொடர்ந்தும் பக்கச் சார்பில்லாமல் செய்திகளையும் கட்டுரைகளையும் தினக்குரல் வழங்க வேண்டும். இன்னும் 100 ஆண்டுகளைக் கடந்து செல்ல எல்லாம் வல்ல இறைவன் துணைபுரிய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடபகுதி மக்களுக்கு யாழ். போதனா வைத்தியசாலையின் தலைசிறந்த சேவைகள்



வைத்திய கலாநிதி
த.சத்தியமூர்த்தி
MBBS, PGDM, MSc & MD (Medical Administration)
பணிப்பாளர்,
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

வட மாகாணத்தில் அமைந்துள்ள ஒரே ஒரு போதனா வைத்தியசாலை யாழ். போதனா வைத்தியசாலை ஆகும். மாகாணத்தில் இருக்கின்ற ஏனைய நூறு வைத்தியசாலைகளிலும் இருந்து மேலதிக சிகிச்சைக்காக நேரடியாக அல்லது நோயாளர்களாகவே வந்து சிகிச்சை பெறக்கூடிய எல்லா விசேட சேவைகளையும் கொண்டு இவ் வைத்தியசாலை இயங்குகின்றது. நாள் ஒன்றில் 24 மணி நேரமும் சுறுசுறுப்பாக இயங்கும் இவ் வைத்தியசாலையில், சுமார் 1100 வரையிலான நோயாளிகள் விடுதியில் இருந்து சிகிச்சை பெறுகின்றனர். தினசரி 2700 நோயாளிகள் கிளினிக் சிகிச்சையை பெறுகின்ற அதே வேளை, சுமார் 850 நோயாளிகள் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெறுகின்றனர். இவ் வைத்தியசாலை ஆனது அபிவிருத்திப் பாதையில் பயணித்து மேலும் சிறப்பான சேவைகளை வழங்கத் தயார்படுத்தப்படுகின்றது.

மேற்படி வைத்தியசாலையானது நகரத்தின் மிக முக்கியமான பகுதியில் அமைந்திருப்பதுடன், பல்வேறு பிரதேசங்களில் இருந்து வருகின்றவர்களுக்கு சிகிச்சை வழங்கக்கூடிய வசதிகளைக் கொண்டுள்ளது. இருப்பினும், தற்போது வைத்திய

**1500க்கு மேற்பட்ட உத்தியோகத்தர்களை ஒருங்கிணைத்து வைத்திய சேவையினை தடங்கலின்றி இயக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. பொதுமக்களுக்கு அசௌகரியங்களை குறைக்கும் வகையில் சேவை மேம்பாட்டிற்கான திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.**



20 Anniversary

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யாழ். போதனா வைத்தியசாலையில் பல்வேறு விசேட சிகிச்சைப் பிரிவுகள் இயங்கி வருகின்றன. குறிப்பாக பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சைப் பிரிவு, இருதய சத்திர சிகிச்சைப் பிரிவு, கண் சத்திர சிகிச்சைப் பிரிவு, காது – மூக்கு – தொண்டை சத்திர சிகிச்சை பிரிவு அடங்கலாக பல்வேறு விசேட பிரிவுகள் இயங்கி வருகின்றன.**

சாலைப் பகுதியினுள் நோயாளர் படுக்கைகள் மற்றும் ஏனைய வசதிகள் அதிகரிக்கப்பட வேண்டி இருக்கிறது.

வைத்தியசாலையைப் பொறுத்த வரை 76 வைத்திய நிபுணர்களும் 242 வைத்தியர்களும் 423 தாதியர்கள் உள்ளடங்கலாக 1,543 பேர் கடமையில் ஈடுபடுகின்றனர். குறிப்பாக தாதியரின் எண்ணிக்கையை இரட்டிப்பாக அதிகரிப்பதன் மூலம் நோயாளிகளுக்கு ஏற்படக்கூடிய அசௌகரியங்களை தவிர்க்க முடியும். இது விடயமாக மத்திய அமைச்சுக்கு பல்வேறு கோரிக்கைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. வட மாகாணத்தில் போதியளவு மாணவர்கள் உயர்தரத்தில் விஞ்ஞான பாடங்களை கற்காதமையினாலும் குறைந்த Z-Score எடுப்பதினாலும் போதியளவு தாதிய மாணவர்கள் வட பகுதியில் இருந்து தாதியர்களுக்காக தெரிவு செய்யப்படுவதில்லை. அத்துடன் மாவட்ட கோட்டா முறையும் கணக்கில் எடுக்கப்படுவதில்லை. ஆகவே இதன்பொருட்டு தமிழ் அரசியல் வாதிகளின் கவனம் ஈர்க்கப்படுகின்றது. மாவட்ட கோட்டா முறையில் வட பகுதி மாணவர்களை உள்வீர்ப்பதுடன் விஞ்ஞான, கணித பிரிவுடன் கலை, வர்த்தகப் பிரிவு மாணவர்களையும் குறிப்பிட்ட காலத்திற்கு வட மாகாணத்தில் இருந்து தாதியர் பயிற்சிக்காக உள்ளீர்த்தால் மாத்திரமே எதிர்காலத்தில் இப்பிரச்சினைக்கு ஒரு தீர்வைக் காணமுடியும்.

வைத்தியசாலையில் தற்போது பல அபிவிருத்தி நடவடிக்கைகள் நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது. அதன் முதற்கட்டமாக சுமார் 1200 மில்லியன் ரூபா செலவில் சுமார் 400 படுக்கைகளைக் கொண்ட விபத்து அவசர சிகிச்சை மற்றும் விடுதிகளைக் கொண்ட ஆறு மாடிக் கட்டிட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு இருக்கின்றது. மூன்று வருடத்தில் இவ் வேலைகள் பூர்த்தியடையும். அத்துடன், மகப்பேற்று கட்டிடத்தொகுதி, இருதய சிகிச்சைக் கட்டிடத் தொகுதி, சிறுநீரக அறுவை மாற்று சத்திர சிகிச்சை கட்டிடத் தொகுதி உட்பட பல பாரிய வேலைகள் எதிர்வரும் ஆண்டுகளில் கட்டி முடிக்கப்பட இருக்கிறது. இவ்வாறு பல மாடிகளைக் கொண்ட கட்டிடத் தொகுதிகளை அமைப்பதனால், வைத்தியசாலையில் காணப்படுகின்ற நெரிசலான பல கட்டிடங்கள் அகற்றப்பட்டு போதிய வசதிகளைக் கொண்டதாக வைத்தியசாலையினை இயக்க முடியும். இது தவிர தாதியர்கள், வைத்தியர்கள் ஏனைய உத்தியோகத்தர்களது தங்குமிட வசதிகளைக் கொண்ட விடுதிகளும் அமைக்கப்படவுள்ளன.

இவ்வைத்தியசாலையின் மேற்குப் பகுதியில் அமைந்திருக்கும் ஒரு பகுதி காணியையும் உள்வீர்த்து வைத்தியசாலையை சுற்றி வரக்கூடிய வகையில் வீதியமைத்து, வசதிகளை ஏற்படுத்த முடியும். இவ்வாறு அமைப்பதன் மூலம் வைத்தியசாலைப் பகுதியை வைத்தியசாலை சதுக்கம் என அறிவிக்க முடியும். இதனால் வைத்தியசேவைக்கு முன்னுரிமை கிடைப்பதுடன், நோயாளருக்கான சேவை மேலும் வளர்ச்சி அடையும். அது விடயமாக பல தரப்பினருடனும் தொடர்புகொள்ளப்பட்டிருக்கிறது.

வைத்தியசாலையின் master plan தயாரிப்படுத்தப்பட்டுக்கொண்டு இருக்கிறது. இவ்வாறு சரியான முறையில் கட்டிடங்கள் கட்டப்படுமாயின் வைத்திய சிகிச்சை பெற வரும் நோயாளர்களுக்கு போதியளவு வசதிகளும் சேவைகளும் கிடைக்கும்.

யாழ். போதனா வைத்தியசாலையானது பல்வேறு கற்கை நெறிக்கான பயிற்சி நிலையமாகக் காணப்படுகிறது. குறிப்பாக மருத்துவ பீட மாணவர்கள், தாதிய மாணவர்கள் இங்கு பயிற்சியைப் பெறுகின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றனர். இது தவிரவும், மேலும் பல கற்கைகளுக்கான பயிற்சி நிலையமாகவும் யாழ். போதனா வைத்திய சாலை செயற்பட்டு வருகிறது. இருப்பினும், போதி யளவு தாதியர்கள் பயிற்சியில் உள்வாங்கப்படாமை ஒரு குறைபாடாகவே காணப்படுகிறது.

மாதாந்தம் நோயாளிகளின் அதிகரிப்பு வைத்தி யசாலைக்குச் சவாலாகவே இருக்கிறது. குறிப்பாக யாழ். மாவட்டத்தில் காணப்படும் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை, மற்றும் சாவகச்சேரி ஆதார வைத் தியசாலை ஆகியன முழுமையாக இயங்கி சிறப்பான சேவை நடைபெறுமாயின், யாழ். போதனா வைத் தியசாலையின் இட நெருக்கடி குறைக்கப்படும். அத்துடன் சிறிய வைத்தியசாலைகளும் சிறப்புடன் செயற்படுத்தப்படும்.

இவ்வைத்தியசாலையில் பல்வேறு விசேட சிகிச்சை பிரிவுகள் இயங்கி வருகின்றன. குறிப்பாக பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை பிரிவு, இருதய சத்திர சிகிச்சைப் பிரிவு, கண் சத்திர சிகிச்சை பிரிவு, காது – மூக்கு – தொண்டை சத்திர சிகிச்சைப் பிரிவு அடங்க லாக பல்வேறு விசேட பிரிவுகள் இயங்கி வருகின்றன.

1500க்கு மேற்பட்ட உத்தியோகத்தர்களை ஒருங் கிணைத்து வைத்திய சேவையினை தடங்கலின்றி இயக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பொது மக்க ளுக்கு அசௌகரியங்களை குறைக்கும் வகையில் சேவை மேம்பாட்டிற்கான திட்டங்கள் நடைமுறைப்ப டுத்தப்பட்டு வருகின்றன. இருப்பினும், ஆளணி வெற் றிடம் மற்றும் ஒரு சில குறைபாடுகளினால் சத்திர சிகிச்சைக் கூடம் பூபுரணமாக அதனுடைய முழு வீச்சி ல் இயங்க முடியாத நிலை காணப்படுகிறது. எதிர்காலத் தில் போதியளவு தாதியர்கள் சேவையில் உள்ளீர்க்கப் பட்டால் இப்பிரச்சினையைத் தீர்க்க முடியும்.

இரவு – பகலாக பல்வேறு சத்திர சிகிச்சை கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இருப்பினும், பெருகி வரும் சத்திரசிகிச்சைகளின் எண்ணிக்கை காரணமாக எல்லாவற்றையும் உரிய நேரத்தில் செய்ய முடியாத நிலை காணப்படுகிறது. காலதாமதமாக சத் திர சிகிச்சை மேற்கொள்ளப்படுவதனால் பொது மக் கள் அசௌகரியங்களுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். இதனைக் குறைக்கும் பொருட்டு அடுத்த வருட ஆரம்பத்தில் போதியளவு தாதியர்கள் வருகின்றபட் சத்தில் மேலும் சத்திரசிகிச்சைக் கூடத்தினை விரிவுப டுத்த திட்டமிடப்பட்டுள்ளது. அதேசமயம் கிளிநொச்சி பொது வைத்தியசாலை, முல்லைத்தீவு பொது வைத் தியசாலை என்பனவற்றின் சத்திரசிகிச்சை கூடங் கள் பூரணமாக இயங்குமாயின் மக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களை தவிர்க்க முடியும்.

அடுத்த வருடத்தில் புதிய CT Scan ஒன்றும் MRI Scan ஒன்றும் கொண்டு வரப்பட இருக்கின்றது. அத் துடன் மேலும் பல உபகரணங்களும் கொள்வனவு செய்யப்பட இருக்கிறது. இதன் மூலம் சேவையை விரிவுபடுத்த முடியும்.

வைத்தியசாலைக்கு வைத்திய சேவையினை பெற வருபவர்கள் போதிய ஆயத்தத்துடன் வர வேண்டும். குறிப்பாக விடுதியில் தங்கியிருந்து சிகிச்சை பெறுபவர்களை பார்வையிட வருபவர்கள் குறிப்பிட்ட நோயாளிக்குத் தேவையான உதவியை செய்து விட்டு விரைவாக வெளியேறுதல் முக்கிய மானதாகும். மாறாக ஒருவரைப் பார்க்க பலர் ஒரே சமயத்தில் வைத்தியசாலை விடுதிக்குள் புகுவத னால் ஏனைய நோயாளர்களுக்கு பெரும் அசௌக ரியத்தை ஏற்படுத்துகின்றது. ஆகவே, பொதுமக்கள் இவற்றைத் தவிர்த்துக் கொள்வதுடன், உரிய ஒத்து ழைப்பை வழங்க வேண்டும்

எதிர்காலத்தில் இவ்வைத்தியசாலையின் சேவைகள் நவீன தொடர்பு சாதன வழிமுறைகளைப் பின்பற்றி சேவை விரிவுபடுத்தப்படும். அத்துடன், கிளி னிக்கில் சிகிச்சை பெற வருபவர்களுக்கு குறிப்பிட்ட நேரத்திற்கு வருகை தந்து சிகிச்சை பெற்றுச் செல்லு கின்ற வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

வைத்தியசாலையின் வளர்ச்சிக்குப் பொதுமக்கள் மற்றும் நலன் விரும்பிகளின் ஆலோசனைகளும் உதவியும் தேவைப்படுகின்றது. அத்துடன், ஏனைய திணைக்களங்களின் உதவியும் அனுசரணையும் மிக முக்கியமானது. குறிப்பாக வைத்தியசாலையின் வளர்ச்சியில் மத்திய அமைச்சு கவனம் செலுத்தி னாலும், இப்பகுதி அரசியல்வாதிகளினதும் ஆலோ சனைகளும் உதவிகளும் இன்றியமையாதமை. பொது மக்களுக்காகச் சேவை செய்யும் வைத்திய சாலை அனைவரது ஒத்துழைப்புடன் நாட்டில் தலை சிறந்த வைத்தியசாலையாகக் கட்டி எழுப்பப்படும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Northern Central Hospital

Channeling Services
Intensive Care Unit (ICU)
ECHO Cardiography/ ECG
Digital X-Ray
EMG and EEG
Laparoscopic Surgeries
Premature baby unit
Health care packages
Lung function test
Plastic Surgery
Cardiothoracic Unit (CTU)
Emergency Unit (ETU)
Exercise Tolerance Test (ETT)
MRI/CT
Ultrasound Scan
Endoscopy
Physiotherapy and Speech Therapy
Hemodialysis Unit
Neurosurgeries
Immunizations


Hemodialysis by Experienced Team


Minimally invasive Laser Therapy


Get Your MRI/CT close to home!



Advanced ICU care

## 24 hours Laboratory, Pharmacy, OPD, Ambulance, and Accident &Emergency Services

342, Palaly Road, Thirunelvely, Jaffna.
T.P: 021 221 9988, 021 221 9977, 021 222 2263
Fax: 021 221 6677 email: nchjaffna@gmail.com
Website: www.nchjaffna.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒவ்வொரு வருடமும் இலங்கையில் 12,000 புதிய புற்றுநோயாளர்கள் இனங்காணப்படும் நிலை



மஹறகம தேசிய புற்றுநோய் வைத்தியசாலையின் புற்றுநோயியல் சிகிச்சைக்கான சிரேஷ்ட ஆலோசகர் **டாக்டர் தமயந்தி பீரிஸ்**

ஒவ்வொரு வருடமும் 12,000 புதிய புற்றுநோயாளிகள் இலங்கையில் இனங் காணப்படுவதாக மஹரகம தேசிய புற்றுநோய் வைத்தியசாலையின் புற்றுநோயியல் சிகிச்சைக்கான சிரேஷ்ட ஆலோசகரான டாக்டர் தமயந்தி பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் பிரதான தொற்று நோய்களில் ஒன்றாகத் திகழும் புற்றுநோய் தொடர்பாக டாக்டரிடம் கேட்கப்பட்ட கேள்விகளும் அவர் அளித்த பதில்களும் வருமாறு;

**கேள்வி: மஹரகம தேசிய புற்றுநோய் வைத்தியசாலை மூலம் நாடளாவிய ரீதியில் புற்றுநோயினால் பாதிக்கப்பட்டவர்கள் பயனடையக் கூடியதாக உள்ளதா?**

**பதில்:** ஆம். கண்டி, காலி, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, பதுளை ஆகிய மாவட்டங்களில் மஹரகம தேசிய புற்றுநோய் வைத்தியசாலையின் கிளினிக்குகள் அமைந்துள்ளன. அத்துடன் அனைத்து மாவட்டங்களிலும் புற்றுநோயியலுக்கான விசேட சிகிச்சை நிபுணர்கள், ஆலோசகர்கள் மற்றும் சத்திரசிகிச்சை நிபுணர்கள் என்போர் கடமையாற்றுவதால் சிகிச்சைகளை பூரணமாக பெற்றுக்கொள்ளக் கூடியதாக உள்ளது.

**கேள்வி: இலங்கையில் புற்றுநோயினால் அதிகமாக ஆண்களா? பெண்களா? பாதிக்கப்படுகின்றனர்?**

**பதில்:** இரு பாலரும் சமனாக பாதிக்கப்படுகின்றனர்.

**கேள்வி: உண்மையில் புற்றுநோய் ஏற்படுவதற்கான பிரதான காரணங்கள் யாவை?**

**பதில்:** பிரதானமாக உணவுமுறை, அடுத்து உடற்பயிற்சியின்மை. இவை காரணமாக Obecity எனப்படும் உடற்பருமன் நிலை ஏற்படுவதால், ஏனைய தொற்று நோய்கள் போன்று புற்றுநோயும் ஏற்பட ஏதுவாகிறது. அடுத்து புகையிலை பாவனைக்கு அடிமையாதல் மதுபானங்கள் போன்றன புற்றுநோய் ஏற்பட பிரதான அடித்தளத்தை இடுகின்றன.

**கேள்வி: உணவு பழக்க வழக்கமானது எவ்வாறானதாக அமைய வேண்டும்?**

**பதில்:** எமது பாரம்பரிய முறையானது போற்றத்தக்கது என்றே செ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ால்ல வேண்டும். சிவப்பு பச்சை அரிசி சோறு, பல இயற்கை காய்கறிகள், பழங்கள் என்பவை ஆரோக்கியத்தைத் தருகின்றன. எமது உணவில் தானியங்கள், காய்கறிகள் மற்றும் பழங்கள் என்பவற்றை சேர்த்துக் கொள்வது அவசியம்.

அரிசியில் காணப்படும் காபோஹைதரேற்றானது உடலுக்கு நன்மை பயக்கிறது. ஆனால் பாணில் காணப்படும் காபோஹைரேற்றானது உடலுக்கு தீமை பயப்பதாகும். எனவே பாணைவிட அரிசிச் சோறானது சிறந்ததாகும்.

தற்போது பலர் Fast Food எனப்படும் திடீர் உணவுப் பழக்க வழக்கங்களுக்கு அடிமையாகின்றனர். பேர்கர், சொசேஜஸ் போன்றவை உடல் ஆரோக்கியத்துக்கு பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

**கேள்வி: புற்றுநோயின் அறிகுறிகள் யாவை?**

**பதில்:** கட்டிகள், வீக்கங்கள் ஏற்படுதல், இரத்தம் வெளியேறுதல், தொண்டை புற்றுநோய் எனில் உணவை விழுங்குவதில் சிக்கல் நிலை ஏற்படும்.

**கேள்வி: புற்றுநோயினை குணப்படுத்த முடியுமா?**

**பதில்:** மூன்றில் ஒரு புற்றுநோய்கள் குணப்படுத்தக் கூடியவையாகவும் மூன்றில் ஒரு புற்றுநோய்கள் தடுக்கக்கூடியவையாகவும் எஞ்சிய மூன்றில் ஒன்று மட்டுமே குணப்படுத்த முடியாததாகவும் உள்ளன.

**கேள்வி: புற்றுநோய்க்கான சிகிச்சைகள் எவை?**

**பதில்:** சத்திரசிகிச்சை, ரேடியோதெரபி மற்றும் கீமோதெரபி என்பனவாகும்.

**கேள்வி: மார்பகப் புற்றுநோயானது பெண்களை பாதிக்கும் பிரதான நோயாக உள்ளது. இலங்கையில் இதன் நிலைமை என்ன?**

**பதில்:** ஐக்கிய அமெரிக்காவைப் போன்று இலங்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையிலும் ஏழில் ஒரு பெண்கள் மார்பகப் புற்றுநோயி னால் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

**கேள்வி: மார்பகத்தில் தோன்றும் எல்லா கட்டிக ளும் மார்பகப் புற்றுநோயின் வெளிப்பாடா?**

**பதில்:** நிச்சயமாக இல்லை. ஒரு சிலவே புற்று நோய் கட்டிகள். ஏனையவை புற்றுநோயல்லாத பைபிரோய்ட் சிஸ்ட் போன்ற கட்டிகள் ஆகும். பொது வாக புற்றுநோய் கட்டிகள் வலி ஏற்படாது.

**கேள்வி: மெமோகிரம் மற்றும் அல்ட்ராசவுண்ட் என்ப வற்றின் மூலம் புற்றுநோயினை இனம் காணமுடியுமா?**

**பதில்:** மெமோகிராம் என்பது வெறுமனே ஸ்கி ரீனிங் எக்ஸ்ரே பரிசோதனையாகும். இதன் மூலம் கட்டிகள் இருப்பதை அறியலாம். இதேபோன்று அல்ட்ராசவுண்டும் கட்டிகள் இருப்பதை வெளிப்ப டுத்துகிறது. ஆனால் பயோஸ்பி எனப்படும் இழை யவியல் பரிசோதனை முறையே இக்கட்டியை பகுப்பாய்வுக்கு உட்படுத்தி புற்றுநோய் இருப்பதை உறுதி செய்ய உதவுகிறது.

**கேள்வி: எந்த வயதிற்குப் பின்னர் மார் பகப் புற்றுநோய் ஏற்படுகிறது?**

**பதில்:** அவ்வாறு வயதை வரையறை செய்ய முடியாது. 21 வயதிலும் ஏற்பட லாம். 40 வயதின் பின்னரும் ஏற்படலாம்.

**கேள்வி: மெமோகிராம் ஸ்கிரீனிங் எனப்படும் புற்றுநோயினை அறிய உதவும் ஸ்கிரீனிங் முறையை பெண்கள் எவ்வய தில் செய்ய வேண்டும்?**

**பதில்:** குறிப்பாக நடுத்தர வயதிற்குப் பின்னர் அதாவது 45 வயதிற்குப் பின் னர் செய்வது சிறந்தது. ஆண்டுக்கு ஒரு முறையோ அல்லது இரு ஆண்டுகளுக்கு ஒரு முறையோ இந்த ஸ்கிரீனிங் பரிசோத னையை செய்யலாம்.

**கேள்வி: மார்பகப் புற்றுநோய் ஏற்பட்ட ஒருவருக்கு மார்பகத்தை அகற்றுவது கட் டாயமா?**

**பதில்:** இல்லை. அது கட்டியின் அளவு, பெண்ணின் வயது, நோயின் நிலை என்பவற்றை கருத்திற் கொண்டே தீர்மானிக்கப்படுகிறது. நோய் தீவிர நிலை யில் இல்லாத போது கட்டியை அகற்று வதே போதுமானது.

**கேள்வி: இறுதியாக இந்நோயிலிருந்து நாம் பாது காப்புப் பெறுவதற்கு நீங்கள் கூறும் அறிவுரை என்ன?**

**பதில்:** முதலில் சிறந்த உணவு பழக்க வழக்க முறையை பின்பற்றுவதுடன், உடற் பயிற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும். அத்துடன் மதுபாவனை, புகையிலை, சிகரெட் பாவனை, வெற்றிலை பாக்கு போடுதல் போன்றவற்றை தவிர்க்க வேண்டும்.

45 வயதிற்குப் பின்னர் பெண்கள் கட்டாயம் மார் பகப் பரிசோதனைகளை செய்ய வேண்டும். இதில் முக்கியமானது சுயப் பரிசோதனை. கைகளாலேயே பிடித்து கட்டி இருக்கிறதா என்பதை உணர்தல். ஒவ்வொரு மாதமும் இதனை செய்யலாம். அடுத்து மெமோகிராம் ஸ்கிரீனிங் முறை. இதன்மூலம் கை களால் பிடித்து உணர முடியாத சிறிய கட்டிகளை அறிந்து கொள்ளலாம் என்றார்.

**-எம்.ஜி, எம்.ஆர்.**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அல்லல்படும் மக்களின் குரலை வெளிப்படுத்தும் 'தினக்குரல்'

சி.தண்டாயுதபாணி

கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சர், கிழக்கு மாகாணம், திருகோணமலை

தினக்குரல் நாளேடு தனது ஊடகப் பணியில் இருபதாவது வருடத்தில் கால் பதிப்பதையிட்டு தமிழ் பேசும் மக்கள் மகிழ்ச்சியடைகின்றார்கள்.

அரசியல், சமூகம், பொருளாதாரம், பண்பாடு, சமயம், விளையாட்டு, உலக விவகாரங்கள் என சகல துறைகளையும் சார்ந்த செய்திகளை மிகவும் நேர்த்தியாகவும் கவர்ச்சியாகவும் தருவதில் தினக்குரல் எமது நாட்டிலேயே ஒரு முன்னணி நாளேடாகத் திகழ்கின்றது என்றால் அது மிகையானதல்ல. அத்துடன் தமிழ் பேசும் மக்கள் இந்நாட்டிலே எதிர்கொள்கின்ற அரசியல், சமூகப் பிரச்சினைகளைத் தெளிவாக வெளிக்கொணர்வதில் தினக்குரல் காத்திரமான பங்களிப்பை வழங்கிக் கொண்டிருக்கின்றது என்பதையும் நாம் அறிவோம்.

அல்லல்களுக்கும் நலிவுகளுக்கும் உள்ளாகி அவதியுறும் மக்களின் குரலை வெளிப்படுத்துகின்ற ஒரு பொறுப்புள்ள ஊடகமாக தினக்குரல் திகழ்கின்றது. பக்கச் சார்பில்லாமலும் நேர்மையாகவும் நடுநிலை நின்று செய்திகளையும் கருத்துகளையும் வெளிப்படுத்த வேண்டியது ஒரு நல்ல ஊடகத்தின் பணியாகும்.

அத்தகைய சிறந்த பணியினை ஆற்றிக் கொண்டிருக்கும் தினக்குரல் தனது இருபதாவது வருடத்தை எட்டியிருக்கின்ற இந்தத் தருணத்தில் தமிழ் பேசும் மக்களுக்கான தனது ஊடகப் பணியினை மேலும் புதிய பரிமாணங்களுடன் வெற்றிகரமாகத் தொடர வேண்டும் என வாழ்த்துகிறேன்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் ஊடகங்கள் எதிர்கொள்ளும் சவால்கள்

முருகேசு பரணீதரன்
தமிழ் எப்.எம். பிரதானி

இலங்கையின் ஊடகத்துறையில் மூன்று மொழிகளும் முக்கியத்துவம் பெற்றிருக்கின்றன. எந்தவொரு ஊடகத்தையும் கொண்டு நடத்த பொருளாதார ரீதியான பலம் அத்தியாவசியமாகின்றது. ஏனெனில், இன்றைய காலகட்டம் இலாப நோக்கங்கள் கொண்ட ஊடகங்கள் மாத்திரமே செயற்படும் காலகட்டம் என்பதால் அச்சு, இலத்திரனியல், டிஜிட்டல் என எந்த வகையென்றாலும் வர்த்தக ரீதியாக வெற்றி பெறுவது அவசியமாகும்.

ஊடகங்கள் வருமானமீட்டுவது வர்த்தக விளம்பரங்கள் மூலமே. நமது நாட்டின் தற்போதைய வர்த்தகத் துறையில் விளம்பரங்கள் மூலம் தமது தயாரிப்பை, பொருட்களை, சேவைகளை மக்கள் முன் கொண்டு செல்லும் முக்கிய ஆதாரம் ஊடகமே. இருப்பினும், மும்மொழிகளிலான ஊடகங்கள் மலிந்திருக்கும் நமது நாட்டில், தமிழ் மொழிக்கென வர்த்தக நிறுவனங்கள் மற்றும் விளம்பர முகவர் நிறுவனங்களால் ஒதுக்கப்படும் சிறியளவிலான தொகையையே நம் தமிழ் ஊடகங்கள் தமக்கிடையே பங்கிட்டுக்கொள்ள போட்டா போட்டி போடும் சூழ்நிலை உருப்பெற்றுள்ளது. இங்கு ஒதுக்கப்படும் தொகையை தீர்மானிப்பது ஊடகங்கள் என்பதை விட தமிழ் பேசும் சமூகத்தின் கொள்வனவுத் திறன் (Buying Power) என்பதையும் நாம் உணர வேண்டும்.

குறிப்பாக இலங்கையில் ஆங்கில மொழி பேசுபவர்களின் கொள்வனவுத் திறன் அதிகமென்பதால், ஆங்கில ஊடகங்கள் மூலம் அதிக விளம்பரங்களை மேற்கொள்ள விளம்பரதாரர்கள் முற்படுகின்றனர். ஆனால் நமது நிலை வேறு. தமிழ் ஊடகங்கள் பொருளாதார ரீதியாகப் பலம் பெற்றால் தான் சமுதாயத்திற்கான பிற நடவடிக்கைகளையும் முன்னெடுக்க முடியும். அதற்கு நம் நாட்டின் தமிழ் பேசும் சமூகம் பொருளாதாரப் பலம் மிக்க சமுதாயமாக உயர வேண்டும். எமது மக்களின் வருமானம், வாழ்வாதாரம் உயர்ச்சிபெற்று அவர்களும் அதிக கொள்வனவுத் திறன் மிக்கவர்களாக மாறவேண்டும். தற்கால தமிழ் ஊடகங்கள் சமுதாயத்தின்பால் அதிக அக்கறை கொண்டு செயற்பட்டால் தான் இது சாத்தியமாகும். சுருங்கச் சொன்னால் 'வரப்புயர...' கொள்கை இதனைச் செய்ய ஊடக தர்மமும் தரமும் முக்கியம். அவ்வாறான தரமான தமிழ் ஊடகத்துறையைக் கட்டியெழுப்பவே நாம் முயற்சிக்கிறோம்.

இருபது ஆண்டுகளாக இந்தப் பணியை மிகச் சிறந்த முறையில் மேற்கொண்டு வரும் தினக்குரல் பத்திரிகைக்கு மனமார்ந்த வாழ்த்துக்கள்.

தினக்குரல் பத்திரிகையின்
20ஆவது ஆண்டில்
தடம் பதிக்கும் இவ்வேளையில்
நாம் எமது நல்வாழ்த்துக்களைத்
தெரிவித்துக்கொள்கின்றோம்.



JEBZ
ADVERTISING (PVT) LTD
No. 4-1/2, Regent Building, 1st Floor,
Sir Chittampalam A.Gardiner Mawatha, Colombo 2.
Tel: 2543840, 2388630, 2395800, Fax: 2472120
E-Mail: jebzad@sltnet.lk, Website: www.jebz.lk



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது சேவைக்கு கிடைத்த அங்கீகாரம்

## சிறந்த ஊடகவியலாளர் விருது - 2005



**சிறந்த பத்தி எழுத்தாளர்**

பி.மகேந்திரராஜா – தினக்குரல்



**சிறந்த விவரணக் கட்டுரையாளர்**

அரசரட்ணம் ரஜீவன் – தினக்குரல்

## சிறந்த ஊடகவியலாளர் விருது - 2006



**சிறந்த ஊடகவியலாளர்**

சோமசுந்தரம் ஜெயமுரளி – தினக்குரல்



**சிறந்த பத்தி எழுத்தாளர்**

மொஹமட் நவாஸ் எம்.அனஸ் – தினக்குரல்

## சிறந்த ஊடகவியலாளர் விருது - 2007



**சிறந்த பத்தி எழுத்தாளர்**

பாலசுப்பிரமணியம் கிருபாகரன் – தினக்குரல்



**சிறந்த கேலிச்சித்திரம்**

ரட்ணராஜா சி.பிரதீப் குமார் – ஞாயிறு தினக்குரல்

## சிறந்த ஊடகவியலாளர் விருது - 2008



**சிறந்த பத்தி எழுத்தாளர்**

பாலசுப்பிரமணியம் கிருபாகரன் – தினக்குரல்

## சிறந்த ஊடகவியலாளர் விருது - 2009



**சிறந்த விவரணக் கட்டுரையாளர்**

பாலசுப்பிரமணியம் கிருபாகரன் – தினக்குரல்



**சிறந்த பத்தி எழுத்தாளர்**

ஜயாக்கண்ணு டிட்டோகுகன் – தினக்குரல்



**சிறந்த சமூக அபிவிருத்தி செய்தியாளர்**

மொஹமட் ஹுசைன் பாத்திமா ஹுஸ்னா – தினக்குரல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**சிறந்த வணிகச் செய்தியாளர்**
யோகராஜா நிமல்ராஜ் –
தினக்குரல்



**சிறந்த சூழலியல் செய்தியாளர்**
குழந்தைவேல் ஜெயந்திரன் –
தினக்குரல்

## சிறந்த ஊடகவியலாளர் விருது - 2010



**சிறந்த சமூக அபிவிருத்தி செய்தியாளர்**
பி.எம்.எம்.ஏ. காதர் – ஞாயிறு
தினக்குரல்



**சிறந்த புகைப்படப் பிடிப்பாளர்**
பாலேந்திரம் பிரதீபன் – தினக்குரல்

**சிறந்த கேலிச்சித்திரம்**
ரட்ணராஜா சி.பிரதீப்குமார் –
ஞாயிறு தினக்குரல்

**நெருக்கடியான சூழலில் செய்தி தேடல்**
பாலேந்திரம் பிரதீபன் – ஞாயிறு
தினக்குரல்

**சிறந்த விவரணக் கட்டுரையாளர்**
பாலசுப்பிரமணியம் கிருபாகரன் – தினக்குரல்

## சிறந்த ஊடகவியலாளர் விருது - 2011



**சிறந்த விவரணக் கட்டுரையாளர்**
மொஹமட் ஹுசைன் பாத்திமா
ஹுஸ்னா – தினக்குரல்

**சிறந்த சூழலியல் செய்தியாளர்**
பாலசுப்பிரமணியம் கிருபாகரன் –
தினக்குரல்

## சிறந்த ஊடகவியலாளர் விருது - 2012



**சிறந்த பத்தி எழுத்தாளர்**
இஸ்மாயில் பிமஃ ஆரிப் –
தினக்குரல்



**சிறந்த சமூக அபிவிருத்தி செய்தியாளர்**
எஸ்.துஷ்யந்தன் – ஞாயிறு தினக்குரல்

**நெருக்கடியான சூழலில் செய்தி தேடல்**
ஜெயம் கிரிஸ்பிராஜா – ஞாயிறு
தினக்குரல்



**சிறந்த விளையாட்டுச் செய்தியாளர்**
ரவிச்சந்திரன் ராம்குமார் –
ஞாயிறு தினக்குரல்

## சிறந்த ஊடகவியலாளர் விருது - 2013



**சிறந்த விவரணக் கட்டுரையாளர்**
ஏ.ஜெயசூரியன் ஞாயிறு
–தினக்குரல்



**சிறந்த விவரணக் கட்டுரையாளர்**
சிறப்பு விருது மொஹமட்
ஹுசைன் பாத்திமா ஹுஸ்னா
– தினக்குரல்

**சிறந்த சமூக அபிவிருத்தி செய்தியாளர்**
எஸ்.துஸ்யந்தன் – ஞாயிறு
தினக்குரல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சிறந்த ஊடகவியலாளர் விருது - 2014



**சிறந்த சூழலியல் செய்தியாளர்**
மொஹமட் ஹுசைன் பாத்திமா ஹுஸ்னா – தினக்குரல்

**நெருக்கடியான சூழலில் செய்திதேடல்**
பாலேந்திரம் பிரதீபன் – ஞாயிறு தினக்குரல்

### சிறந்த ஊடகவியலாளர் விருது - 2015



**சிறந்த பக்கவடிவமைப்பு -**
ஞாயிறு தினக்குரல்

### இலங்கை மருத்துவ சங்க விருது - 2009, 2010



**சிறந்த மருத்துவ கட்டுரையாளர்**
பாலசுப்பிரமணியம் கிருபாகரன் – தினக்குரல்

### இலங்கை மருத்துவ சங்க விருது - 2011, 2013, 2015



**சிறந்த மருத்துவ கட்டுரையாளர்**
மொஹமட் ஹுசைன் பாத்திமா ஹுஸ்னா தினக்குரல்

### அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சு விருது - 2010



**அனர்த்தங்கள் தொடர்பான சிறந்த அறிக்கையிடல்**
பாலசுப்பிரமணியம் கிருபாகரன் – தினக்குரல்

### முஸ்லிம் மீடியா போரம் விருது - 2015



**சிறந்த ஊடகவியலாளர்**
மொஹமட் ஹுசைன் பாத்திமா ஹுஸ்னா – தினக்குரல்

### சிறந்த இணையத்தளத்துக்கான சிறப்பு விருது 2013




தினக்குரல் இணையத்தளம்
www.thinakkural.lk

### சிறந்த இணையத்தளத்துக்கான சிறப்பு விருது 2014




தினக்குரல் இணையத்தளம்
www.thinakkural.lk

### இலங்கை வெகுஜன ஊடக விருது 2008



ஆண்டின் சிறந்த தமிழ் பத்திரிகை – தினக்குரல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மற்றொரு மைல் கல்லை எட்டியுள்ள தினக்குரல்



**யோ. நிமல்ராஜ்**
தலைவர்
தினக்குரல் ஊழியர் நலன்புரிச் சங்கம்



தினக்குரல் பத்திரிகை தனது ஊடகப் பயணத்தில் மற்றொரு மைல் கல்லினை கடந்துள்ளது. ஒவ்வொரு அகவையிலும் பல்வேறு மாற்றங்களுடன் சமகாலத்துக்கேற்றவாறு தனது ஊடகப்பணியினை தொடர்வது தினக்குரலின் சிறப்பியல்பாகும்.

பல்வேறு சவால்கள் நிறைந்த காலப்பகுதியில் சமூகங்களின் பிரச்சினைகளை அரசியல் நடத்தைகளை, உள்ளதை உண்மையாக எடுத்துரைக்க உதயமான ஒரு பத்திரிகை இன்று இரு தசாப்தங்களை நிறைவு செய்து தனது பணியினைத் தொடர்கின்றது.

இன்று சமூக ஊடகங்கள் தொழில்நுட்ப வளர்ச்சிகள் காரணமாக வாசகர் எண்ணிக்கையில் வீழ்ச்சிகள் உலகளவில் ஏற்படுவதாகக் கூறிக்கொள்கின்றார்கள். ஆனால் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மூலமாக செய்தித் தாள்களின் இருப்பு மிகவும் ஆரோக்கியமானதாகவே காணப்படுவதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை புதிய பல பத்திரிகைகள் வெளிவந்த வண்ணமே உள்ளன. இவ்வாறான நிலையில் மக்கள் பிரச்சினைகளை வெளிக்கொணர்வதற்கும் மாற்றங்களை தருவதற்கும் பத்திரிகையின் இருப்பு அவசியம் என்பதனை எம்மால் உணர முடிகின்றது.

எமது நாட்டில் காணப்பட்ட அசாதாரண சூழ்நிலையில் கூட மிகவும் கடினமான சவால்களின் மத்தியில் இப் பத்திரிகையின் செயற்பாடுகள் நடுநிலையுடன் தொடர்ந்திருந்தது. ஊடக சுதந்திரம் அச்சுறுத்தல்களுக்கு உட்பட்டிருந்த நிலையிலும் மிகவும் துணிவுடன் பக்கச் சார்பற்ற ஊடகப் பணியினை தினக்குரல் தொடர்ந்திருந்தது.

பத்திரிகையினை ஜனநாயகத்தின் நான்காவது தூண் என்று கூறிக்கொள்வார்கள்.ஜனநாயக கட்டமைப்புக்களை ஒழுங்கமைக்க வேண்டிய பொறுப்புக்களும் பத்திரிகைகளுக்கு உள்ளது.

தற்பொழுது எமது நாட்டில் ஜனநாயக மாற்றங்கள், அபிவிருத்திகள் முன்னெடுக்கப்படுவதாக அரச தலைவர்கள் கூறுகின்றனர். இவ்வாறான தருணத்தில் தினக்குரல் நாடளாவிய ரீதியிலுள்ள தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளை வென்றெடுப்பதற்கு தனது செயற்திறன் மிக்க பங்களிப்பினைத் தொடர்ந்து வழங்க வேண்டும் என்பதே அனைவரினதும் அபிலாசையாகும்.

ஆற்ற வேண்டிய கடமைகளை உணர்ந்து, அவற்றைப் பண்பார்ந்த முறையில் நிறைவேற்ற மேற்கொள்ளப்படும் முயற்சிகள் அனைத்தும் நல்ல கடமைகள் என்றே கொள்ளப்படும் என ''கடன் என்ப நல்லவை எல்லாம் கடன்அறிந்து சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு'' என்ற குறள் மூலம் திருவள்ளுவர் கூறியுள்ளார்.

அந்த அடிப்படையில் தினக்குரல் என்றென்றும் மக்களின் கடமைகளை ஆய்ந்து ஆற்றுமென நம்பிக்கை கொண்டுள்ளோம். இப்பத்திரிகையின் பணி தொடர வாழ்த்துக்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களினது கல்வி எழுச்சியின் தனித்துவக் குரலாக ஆதரவற்றவர்களுக்கு உதவிக்கரம் நீட்டும் தினக்குரல்




எஸ்.சுஜீவன்

முகாமைத்துவ உதவியாளர், யாழ்.தினக்குரல் பொருளாளர், கருணைப்பாலம்


20ஆவது அகவையைப் பூர்த்தி செய்யும் தினக்குரல், சமூகப் பொறுப்புடன் பல்வேறு வேலைத்திட்டங்களைச் செய்து கொண்டிருக்கின்றது. மகத்தான அச்சேவை தொடர்பில் தினக்குரல் வாசகர்களுடன் என் எண்ணக் கருத்துக்களைப் பகிர்ந்துகொள்ள விரும்புகின்றேன்.

தினக்குரல் தனது அகவையில் அரையாண்டுகளாக, கல்வி மற்றும் சமூகப் பணியாற்றி மக்கள் மனங்களில் நீங்கா இடத்தைப் பிடித்துக் கொண்டுள்ளதென்றால் அது மிகையாகாது.

தினக்குரலின் பிராந்தியப் பதிப்பாக வெளிவந்து கொண்டிருக்கும் யாழ்.தினக்குரல் பத்திரிகையின் ஆரம்ப காலத்தில் பொதுமுகாமையாளராகக் கடமையாற்றிக் கொண்டிருந்த அமரர் ஆ.சி.நடராஜா அவர்களினால் கல்வி மற்றும் சமூகப் பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன. 2008ஆம் ஆண்டு முதன் முறையாக தேசிய தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களைப் பரீட்சைக்குத் தயார்ப்படுத்தும் முகமாக பரீட்சைக்கு ஒருமாத காலங்களுக்கு முன்னராக ஒரு முன்னோடிப் பரீட்சையை நடாத்துவதற்கு தினக்குரல் பத்திரிகையைக் களமாகப் பயன்படுத்தியிருந்தார்.

மக்கள் வங்கி அனுசரணையுடன் யாழ்.மாவட்ட மாணவர்களுக்காக மட்டும் நடாத்தப்பட்டு மேற்படி பரீட்சை நாளடைவில் வடமாகாணப் பாடசாலைகள் தோறும் விஸ்தரிக்கப்பட்டன. இவ்வாண்டில் அப்பரீட்சை மத்திய மாகாணப் பாடசாலைகள் தோறும் நடாத்தப்பட்டமை சிறப்பம்சமாகும்.

பரீட்சையிலே அதிகூடிய புள்ளிகளைப் பெற்று கோட்ட, வலய ரீதியாகத் தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கான பரிசளிப்பு விழாவையும் வருடாந்தம் சிறப்பாக நடாத்தி வருகின்றோம். அதேநேரத்தில் ஒருபாடசாலையிலிருந்து 10இற்கும் குறைந்தளவான மாணவர்களை தேசிய தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்ற வைத்து அவர்கவில் குறைந்தது ஒருவரையேனும் சித்தியடையச் செய்யும் பாடசாலைகளின் அதிபர் மற்றும் அம்மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வையும் நடாத்தி வருகின்றோம்.

2014ஆம் ஆண்டு முதல் யாழ்.தினக்குரல் பத்திரிகையின் 'கல்விக் குரல்' பகுதியூடாக தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றுகின்ற மாணவர்களுக்கான 15தொடர் மாதிரிப் பரீட்சைகளை ஒன்றவிட்ட

வாரம் என்றவாறு நடாத்திக் கொண்டிருக்கின்றோம். அத்தொடர் மாதிரிப் பரீட்சையில் பங்குபற்றி தேசிய தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைகின்ற மாணவர்களைக் கௌரவிப்பதுடன், அவர்கள் கல்விகற்ற பாடசாலையின் அதிபர்கள் மற்றும் கல்வி கற்பித்த தரம் 5 ஆசிரியர்கள் ஆகியோரையும் கௌரவித்து வருகின்றோம்.

2015ஆம் ஆண்டு நடைபெற்று முடிந்த புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வினை யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி, கண்டி, மட்டக்களப்பு ஆகிய ஆறு மாவட்டங்களில் நடாத்தியிருந்தோம். இந்நிகழ்வினூடாக சுமார் 2 ஆயிரத்து 200மாணவர்களும் 900 அதிபர், ஆசிரியர்களும் கௌரவிக்கப்பட்டிருந்தார்கள்.

இவ்வாண்டு நடைபெற்று முடிந்த தேசிய தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 100புள்ளிக்கு மேல் பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ளவுள்ள மாணவர் களையும் கௌரவித்தல் என்ற புதிய வேலைத்திட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம். அதனூடாக சுமார் 5ஆயிரம் மாணவர்களை கௌரவிக்கத் திட்டமிட்டுள்ளோம்.

இவ்வாறான கௌரவிப்பு நிகழ்வுகளுக்கு மக்கள் வங்கி, SISIL World, Mobitel, Hutch ஆகிய நிறுவனங்கள் நிதியனுசரணையை வழங்கி வருகின்றன.

எம்மால் நடாத்தப்பட்டு வருகின்ற 15 தொடர் மாதிரிப் பரீட்சையிலும் மாணவர்கள் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளை நாளாந்தப் பத்திரிகையில் பிரசுரித்து அவர்களை ஊக்கப்படுத்தி வருகின்றோம். அத்துடன் தேசிய தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தால் அவர்களின் புகைப்படம் மற்றும் அவர்கள் கல்விகற்ற பாடசாலை அதிபர், ஆசிரியர்களின் புகைப்படங்கள் அடங்கிய சிறப்புமலரொன்றையும் வெளியிட்டு ஊக்கப்படுத்தி வருகின்றோம்.

வடமாகாணத்தைப் பொறுத்தவரையில் 70வீதமான மாணவர்கள் எம்மால் நடாத்தப்பட்டுவரும் 15தொடர் மாதிரிப் பரீட்சையிலும் பங்குபற்றிப் பயன் பெற்று வருகின்றார்கள். அதேபோல் வடமாகாணம் தவிர்ந்த ஏனைய மாகாணப் பாடசாலை மாணவர்களும் கணிசமானளவில் பங்குபற்றி பயன்பெற்று வருகின்றார்கள்.

தரம் 5 மாணவர்களுக்கு நடாத்தப்பட்டுவரும் தொடர் மாதிரிப் பரீட்சை போல் தரம் 11 மாணவர்களுக்கான 10 தொடர் மாதிரிப் பரீட்சைகளையும் நடாத்திக் கொண்டிருக்கின்றோம். இப்பரீட்சையிலும் கணிசமானளவு மாணவர்கள் பங்குபற்றி பயன்பெற்றுக் கொண்டிருக்கின்றார்கள். இம்முறை கடந்த வருடம் க.பொ.த [சா/த] பரீட்சைக்குத் தோற்றி கணிதம், விஞ்ஞானம் ஆகிய இருபாடங்களிலும் திறமைச் சித்தியைப் பெற்று உயர்தரத்தில் கல்விகற்றுக் கொண்டிருக்கும் மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வொன்றையும் நடாத்தத் திட்டமிட்டுள்ளோம். இத்திட்டம் எதிர்வரும் காலங்களிலும் தொடரப்படும்.

தரம் 5 மற்றும் தரம் 11 மாணவர்களுக்கு நடாத்தப்பட்டுவரும் பரீட்சை போல், பாடசாலை மாணவர்களுக்கிடையிலான சித்திரப்போட்டி மற்றும் சதுரங்கப் போட்டி போன்றவற்றையும் கடந்த காலங்களில் நடாத்தியிருந்தோம். அவற்றிற்கு இலங்கை வங்கி மற்றும் ஹற்றன் நஷனல் வங்கி ஆகியன நிதி அனுசரணை வழங்கியிருந்தன.

கல்விக்காக மகத்தான சேவையாற்றும் தினக்குரல் சமூகத்திற்கான அளப்பெரிய சேவையையும் ஆற்றிக் கொண்டிருக்கின்றது. அந்த வகையில், வன்னி இறுதி யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் முகமாக 2009ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட ஓர் சமூகப்பொறுப்புமிக்க அமைப்பே கருணைப்பாலமாகும். இக்கருணைப்பாலம் என்ற அமைப்பினூடாக கடந்த 8 ஆண்டு காலப்பகுதிகளில் 4 கோடிக்கு மேல் நிதிசேகரிக்கப்பட்டு மக்களுக்கான சமூகநல வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

குறிப்பாக வன்னி இறுதிப் போரில் கணவனையிழந்தவர்களுக்கான வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் முகமாக கால்நடைவளர்ப்பு, தையல் இயந்திரம், நீரிறைக்கும் இயந்திரம், சுயதொழில் ஊக்குவிப்பு நிதி என உதவித் திட்டங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. அதேநேரத்தில் வன்னி இறுதிப்போரில் பெற்றோரையிழந்த பிள்ளைகளின் கற்றலுக்காக மாதாந்த கல்வி ஊக்குவிப்பு நிதி, துவிச்சக்கரவண்டி என்பன அன்பளிக்கப்பட்டு வருகின்றன. அங்கவீனமடைந்தவர்களுக்கான மருத்துவ உதவிகள், பின்தங்கிய பிரதேசங்களிலுள்ள பாடசாலைகளில் இலவச பிரத்தியேக வகுப்புக்கள், முன்பள்ளிக் கட்டடங்கள், தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு புலமைப்பரிசில் நிதிகள் எனப் பல்வேறு வகையிலான வேலைத்திட்டங்கள் ஊடாக உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் தினக்குரல் பத்திரிகையில் 'கல்லையும் கரைக்கும் கண்ணீர்க் காவியம்' என்ற பகுதியினூடாக வன்னி இறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திப் போரில் பாதிக்கப்பட்டவர்களின் கட்டுரைகள் வெளிவரும். அவற்றைப் பார்வையிடும் எமது வாசகர்கள் மனமுவந்து தாமாக முன்வந்து அன்பளிக்கும் நிதிகளைக் கொண்டே மேற்படி வேலைத்திட்டங்களைச் செய்துவருகின்றோம்.

அன்பர்கள் வழங்கும் நிதிக்குரிய கணக்குவிபரங்கள் மற்றும் நன்கொடை வழங்கப்படுகின்ற பொழுது எடுக்கப்படுகின்ற புகைப்படங்கள் என்பன ஆதாரங்களுடன் பத்திரிகையில் பிரசுரிக்கப்படுவதால் நன்கொடை வழங்குபவர்களுக்கு தினக்குரல் 'கருணைப்பாலத்தின்' சமூகப்பொறுப்புமிக்க சேவையில் தனிமதிப்புள்ளது. அதனால் தான் இன்றுவரை எது வித தளர்வுமின்றி தினக்குரல் 'கருணைப்பாலத்தினால்' சமூக சேவையை செய்யக் கூடியதாகவுள்ளது.

எமது தோழமை அமைப்பான லண்டன் Think 2wice ஒன்றியத்தினூடாக வருடாந்தம் 50 இலட்ச ரூபாவிற்கு மேலான வேலைத்திட்டங்களை வெற்றிகரமாகச் செய்துகொண்டிருக்கின்றோம். லண்டன் Think 2wice ஒன்றியம் எம்முடன் இணைந்து ஆற்றும் மக்கள் சேவையைப் பார்த்து வெளிநாடுகளிலுள்ள வேறுபல அமைப்புக்களும் தற்பொழுது எம்முடன் இணைந்து சில வேலைத்திட்டங்களை சிறியளவில் முன்னெடுத்துவருகின்றன. எதிர்வரும் காலங்களில் அவ்வமைப்புக்களும் பாரியளவிலான வேலைத்திட்டங்களை எம் ஊடாக மேற்கொள்ளுமென எதிர்பார்க்கின்றோம்.

எல்லாவற்றிற்கும் மேலாக தினக்குரல் பத்திரிகை ஓர் இணைப்புப் பாலமாகவிருந்து சமூகப் பணியாற்றி வருவதுடன், சிறந்த கல்விப் பணியையும் ஆற்றிவருகின்றது. இப்பணி எதிர்வரும்காலத்தில் மிகவும் சிறப்பாகத் தொடர எல்லாம் வல்ல இறைவன் அருள் பாலிக்க வேண்டும்.

# தினக்குரலின் கல்விப் பணி தொடரட்டும்



**பீ.எஸ்.சதீஸ்**
**மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்**
**மாகாணக் கல்வித் திணைக்களம்**
**மத்திய மாகாணம், கண்டி.**

தினக்குரல் பத்திரிகை தனது இருபது ஆண்டு நிறைவைக் கொண்டாடுவதையிட்டு பெரு மகிழ்வடைகிறோம்.

குறுகிய காலத்தில் வாசகர் மனங்களை கொள்ளை கொண்ட தினக்குரல் தனது தரமான செய்திகளையும் ஆக்கங்களையும் வெளியிடுவதன் மூலமே இந்நிலையைடைந்துள்ளது.

மேலும் விசேடமாக தினக்குரல் கல்வித் துறையைப் பொறுத்தவரையில் பெரும் பங்காற்றி வருகிறது. மாணவர்களின் தேடலுக்கும் சுய கற்றலுக்கும் பயன்படக் கூடிய பல விடயங்களை தொடராக வெளியிட்டு வருகிறது.

குறிப்பாக தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு தொடராக வினாப் பத்திரங்களும் பரீட்சைகளும் நடத்தப்படுவது பாராட்டுக்குரிய விடயமாகும். அது மாத்திரமன்றி மத்திய மாகாணத்தைப் பொறுத்தவரை தினக்குரல் அனுசரணையில் ஏறத்தாழ 18000 மாணவர்களுக்கு முன்னோடிப் பரீட்சை நடத்தப்பட்டது. அது மாத்திரமன்றி கூடிய புள்ளி பெற்ற மாணவர்கள் பரிசில் வழங்கி ஊக்குவிக்கப்பட்டதுடன், வழிகாட்டிய ஆசிரியர்கள், அதிகாரிகளும் கௌரவிக்கப்பட்டனர்.

உண்மையிலேயே தினக்குரல் புலமைப்பரிசில் பரீட்சைக்கு பெரும் பங்காற்றி வருவது மட்டுமன்றி க.பொ.த. சா/த, உயர்தர மாணவர்களுக்கும் பயன்படத்தக்க பல சேவைகளைச் செய்து வருவது போற்றற்குரியது.

எனவே கடந்த இருபது வருடங்களாக கல்விக்கு பெரும் பங்காற்றிய தினக்குரல் எதிர்காலத்திலும் தனது சேவையைத் தொடர்ந்து மென்மேலும் வளர்ச்சி பெற்று பத்திரிகைத் துறையில் தனித்துவமிக்கதாக விளங்க மனமார வாழ்த்துகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறுதியான பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுக்கும் பணவீக்கம்

**2015ஆம் ஆண்டு 2 ஆம் அரையாண்டில் ஜூலை மாதம் 1.8%ஆக இருந்த வருடாந்த பணவீக்கமானது கடந்த ஆண்டு டிசம்பர் மாத முடிவில் 4.2%ஆக உயர்வடைந்துள்ளதுடன், கடந்த ஆண்டு ஜூலை மாதம் 0.2%ஆக வீழ்ச்சியடைந்திருந்த மாதாந்த பணவீக்கமானது டிசம்பர் மாதம் 1.1%ஆக உயர்வடைந்துள்ளது.**

**இதேவேளை கடந்த ஆண்டு ஜூலை மாத முடிவில் 108.9 புள்ளிகளாக இருந்த தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணானது படிப்படியாக அதிகரித்ததுடன், டிசம்பர் மாத முடிவில் 113.2 புள்ளிகளாக அதிகரித்துள்ளது.**



சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கைக்கு இணங்க ஒரு நாட்டினது பணவீக்கமானது பொருளாதார வளர்ச்சியை இனங்காண்பதற்கு வழிவகுக்கின்றது. அதாவது பணவீக்கமானது பணத்திற்கு பெறுமதியைச் சேர்ப்பதுடன் உறுதியான பொருளாதார வளர்ச்சிக்கும் வழிவகுக்கின்றது எனலாம்.

மேலும் பணவீக்கமானது பொருட்கள் மற்றும் சேவைகளினது விலை அதிகரிப்பில் பங்களிப்புச் செய்கின்றது. நாட்டினது தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை கணிப்பதற்கு உதவுகிறது. பணவீக்கமானது தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் மாற்றத்தை ஏற்படுத்துகின்றது.

ஒருநாட்டினது பணவீக்கமானது அதிகரிக்கும் போது உலக சந்தையில் ஏற்றுமதிக்கு குறைந்தளவான போட்டியே நிலவும். பணவீக்கமானது மாற்றமடையும் போது பொருட்களின் விலைகளானது வீழ்ச்சியடைவதுடன், பொருளாதார வளர்ச்சியிலும் வீழ்ச்சியை ஏற்படுத்துகின்றது.

மேலும் பணவீக்கமானது தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண்ணில் மாற்றத்தை ஏற்படுத்தும். அதாவது பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகளில் மாற்றத்தை ஏற்படுத்தும். பொருட்கள் எனும் போது இதில் உணவு மற்றும் உணவு அல்லாத பிரிவானது உள்ளடங்குகின்றது. புடவைகள் மற்றும் பாதணிகள், வீடு, நீர், மின்சாரம், சமையல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எரிவாயு மற்றும் பிற எரிபொருட்கள், தளபாடங்கள், வீட்டு உபகரணப் பொருட்கள், வீட்டு பராமரிப்பு பொருட்கள், தகவல் தொடர்பாடல், சுற்றுலா விடுதிகள் மற்றும் ஹோட்டல்கள் போன்றவைகள் உணவு அல்லாத பிரிவினுள் அடங்குகின்றன.

சுகாதாரம், போக்குவரத்து, பொழுதுபோக்கு மற்றும் கலாசாரம், கல்வி மற்றும் உப பிரிவுகள் சேவைகளாகக் கொள்ளப்படுகின்றன.

குடிசன மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களமானது கடந்த காலங்களில் கொழும்பு நுகர்வோர் விலைச் சுண்டெண்ணையே வெளியிட்டு வந்தது. இருப்பினும், கடந்த 2015 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் முதல் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை அறிமுகப்படுத்தியது. இதற்கமைய தற்போது தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணானது நாட்டினது அனைத்து மாகாணங்களையும் உள்ளடக்கியதாக வெளியிடப்படுகின்றது. அதாவது குடும்பங்களின் வருமானம் மற்றும் செலவின் அடிப்படையில் கணிக்கப்படுகின்றது.

மேலும் கொழும்பு நுகர்வோர் விலைச் சுண்டெண்ணின் அடிப்படையில் கடந்த 2014ஆம் ஆண்டு 3.2%ஆக இருந்த நாட்டினது வருடாந்த பணவீக்கமானது கடந்த 2015ஆம் ஆண்டு 4.5%ஆக அதிகரித்துள்ளது. அத்துடன் கடந்த 2014ஆம் ஆண்டு 3.5% ஆக இருந்த வருடாந்த மூலாதார பணவீக்கமானது கடந்த ஆண்டு 3.1% வீழ்ச்சியடைந்துள்ளது.

2015 ஆம் ஆண்டு 2 ஆம் அரையாண்டில் ஜூலை

## ஒரு நாட்டினது பணவீக்க பெறுமதியானது அதனுடைய பலவீனத்தை எடுத்துக்காட்டுவதாக உள்ளது.

மாதம் 1.8% ஆக இருந்த வருடாந்த பணவீக்கமானது கடந்த ஆண்டு டிசம்பர் மாத முடிவில் 4.2% ஆக உயர்வடைந்துள்ளதுடன், கடந்த ஆண்டு ஜூலை மாதம் 0.2% ஆக வீழ்ச்சியடைந்திருந்த மாதாந்த பணவீக்கமானது டிசம்பர் மாதம் 1.1% ஆக உயர்வடைந்துள்ளது. இதேவேளை கடந்த ஆண்டு ஜூலை மாத முடிவில் 108.9 புள்ளிகளாக இருந்த தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணானது படிப்படியாக அதிகரித்ததுடன், டிசம்பர் மாத முடிவில் 113.2 புள்ளிகளாக அதிகரித்துள்ளது.

இவ்வாண்டு ஜனவரி மாதம் சமர்ப்பிக்கப்பட்ட வரவு – செலவுத் திட்டத்தைத் தொடர்ந்து பொருட்களில் ஏற்பட்ட விலை வீழ்ச்சிக்கமைய நாட்டினது வருடாந்த பணவீக்கமானது இவ்வாண்டு ஜனவரி மாதம் 0.7% ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாண்டு பெப்ரவரி மாதம் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அடிப்படையில் மாதாந்த பண வீக்கமானது 1.1% ஆக பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், வருடாந்த பணவீக்கமானது 1.7% ஆக அதிகரித்துள்ளது. அத்துடன் மார்ச் மாதம் மாதாந்த பணவீக்கமானது 0.7% ஆக வீழ்ச்சியடைந்திருந்ததுடன், வருடாந்த பணவீக்கமானது 2.2% ஆக உயர்வடைந்துள்ளது.

இவ்வாண்டு ஏப்ரல் மாதம் 4.3% ஆக இருந்த வருடாந்த பணவீக்கமானது வரிகளில் மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தைத் தொடர்ந்து மே மாதம் நாட்டினது பணவீக்கமானது 5.3% ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை கடந்த ஜூன் மாதம் பணவீக்கமானது 6.4 % ஆக உயர்வடைந்துள்ளது. பணவீக்கத்தின் அடிப்படையில் மே மாதம் 7.2% ஆக இருந்த நாட்டினது பொருளாதார வளர்ச்சியானது ஜூன் மாத முடிவில் 7.7% ஆக உயர்வடைந்துள்ளது.

**குடிசன மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களமானது கடந்த காலங்களில் கொழும்பு நுகர்வோர் விலைச் சுண்டெண்ணையே வெளியிட்டு வந்தது. இருப்பினும், கடந்த 2015ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் முதல் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை அறிமுகப்படுத்தியது.**

இவற்றின் அடிப்படையில் பார்க்கும் போது ஒரு நாட்டினது பொருளாதார வளர்ச்சி, மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) தேசிய வருமானம், வர்த்தக பற்றாக்குறை, நாட்டினது அபிவிருத்தித் திட்டங்கள், முதலீடுகள், நாட்டினது மூலதனம் என்பவற்றில் பணவீக்கமானது பங்களிப்புச் செய்கின்றது.

மேலும் பொருளியல் நிபுணர்கள், வர்த்தகத் தலைவர்கள் நாட்டினது பணவீக்கத்தை கட்டுப்படுத்துமாறு வலியுறுத்திக் கூறுகின்றனர். பணவீக்கத்தினை கட்டுப்படுத்துவதில் அரசாங்கமும் இலங்கை மத்திய வங்கியும் பிரதான பொறுப்பாளராகவுள்ளனர். ஆராய்ச்சியாளர்களின் கருத்துப்படி நாட்டினது பணவீக்கத்தினைக் கட்டுப்படுத்தாவிடின் அரசாங்கத்தின் செலவிட்டு தொகையைக் குறைக்க முடியாது என தெரிவிக்கின்றனர். ஒரு நாட்டினது பணவீக்கப் பெறுமதியானது அதனுடைய பலவீனத்தை எடுத்துக் காட்டுவதாக உள்ளது.

மேலும் பணவீக்கமானது பண விநியோகம், பொருட்களின் விலை போன்றவைகளை அதிகரிக்கச் செய்கின்றது எனலாம்.

– எஸ்.எச்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் மற்றும் இளைஞர் சம்பந்தமான ஒழுக்க அறிக்கையிடலுக்கான கோட்பாடுகளும் வழிகாட்டல்களும்

## யுனிசெப் பத்திரிகை நிலையம்

**போராளியாக இருந்தவர், வன்செயலுக்கு உட்பட்டவர், பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகியவர் அல்லது சுரண்டலுக்கு உள்ளாகிய சிறுவர்களின் பெயர் மற்றும் அடையாளம் என்பவற்றை இரகசியமாக வைத்திருப்பதை எப்பொழுதும் உறுதிசெய்து கொள்ளுங்கள்**

சிறுவர்களுக்கும், இளைஞர்களுக்கும் வயதுவந்தோருக்குமான உரிமைகள் அனைத்தும் உள்ளன. அத்தோடு, தீங்கிலிருந்து பாதுகாக்கப்படும் உரிமையும் அவர்களுக்கு உள்ளது. பிரத்தியேகமாக கதை ஒன்றின் எல்லைகளை வரைவுபடுத்தவே முடியாத நடைமுறை யுகத்தில், சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் குறித்து அறிக்கையிடுவதென்பது மேலதிக பரிமாணங்களையும், மட்டுப்பாடுகளையும் கொண்டுள்ளது. இந்த ஆவணத்தின் நோக்கம், சிறுவர்களின் உரிமைகளில் விட்டுக் கொடுப்பு எதையும் செய்யாது, உண்மைக்கான பொதுமக்களின் ஒழுக்கவியல் ஈடுபாட்டுக்குச் சேவை செய்யும் வகையில், ஒழுக்கவியல் அறிக்கையாளர்களின் நல்லெண்ணத்துக்கு ஆதரவு வழங்குவதாகும்.

சில சந்தர்ப்பங்களில் சிறுவர் குறித்து அறிக்கையிடல் அவர்களை அல்லது ஏனைய சிறுவர்களைப் பழிவாங்குதல் அல்லது வடுப்படுத்தி ஒதுக்குதல் போன்ற இடர்வரவுகளுள் தள்ளிவிடுகின்றது. அறிக்கையாளருக்குச் சந்தேகங்கள் எழும்போது அவர் கவனமாகவும் சிறுவரைத் தீங்கிலிருந்து பாதுகாக்கும் வகையிலும் செயற்படுதல் வேண்டும். இச்சூழ்நிலைகள் எப்பொழுதுமே தெளிவாக இருக்கமாட்டா என்பதால் அறிக்கையாளர்கள் சிறுவரின் மிகச் சிறந்த நலன்களைப் பேணும் வகையில் யூனிசெப் பதவியினருடன் அல்லது ஏனையோருடன் கலந்தாலோசிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

போராளியாக இருந்தவர், வன்செயலுக்கு உட்பட்டவர், பாலியல்



20 Anniversary

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகியவர் அல்லது சு ரண்டலுக்கு உள்ளாகிய சிறுவர்களின் பெயர் மற்றும் அடையாளம் என்பவற்றை இரகசியமாக வைத்திருப் பதை எப்பொழுதும் உறுதிசெய்து கொள்ளுங்கள்.

**I கோட்பாடுகள்**

1. சகல சூழ்நிலைகளிலும் ஒவ்வொரு சிறுவரி னதும் கௌரவமும் உரிமைகளும் மதிக்கப்படுதல் வேண்டும்.

2. சிறுவர்களை நேர்முகம் காணுதல் மற்றும் அவர்கள் குறித்து அறிக்கையிடல் ஆகிய விடயங் களில் தனிப்பட்ட அந்தரங்கம் மற்றும் நம்பிக்கை, அபிப்பிராயங்கள் செவிமடுக்கப்படுதல், தன்னைப் பாதிக்கும் தீர்மானங்கவில் பங்குகொள்ளுதல் போன்ற உரிமைகளுக்கும், தீங்கு மற்றும் பழிவாங் கப்படுதலிலிருந்தும், அவற்றுக்கான சாத்தியப்பாடு களிலிருந்தும் பாதுகாக்கப்படும் உரிமைகளுக்கும் விசேட கவனம் செலுத்தப்படுதல் வேண்டும்.

3. சிறுவர் பிரச்சினைகள் மற்றும் அவர்களின் உரிமைகளை முன்னேற்றுதல் போன்ற விடயங்க ளில் அதீத ஈடுபாடு உள்ளடங்கலாக ஏனைய விட யங்களை விட, சிறுவர்களின் அதி உயர்வான நலன் கள் என்பவை பாதுகாக்கப்படுதல் வேண்டும்.

4. ஒரு சிறுவரின் அதி உயர்ந்த நலன்களைத் தீர்மானிப்பதில் அவரின் வயது மற்றும் முதிர்ச்சிக்கு ஏற்ற விதத்தில் அவரின் கருத்துகளுக்கு மதிப்பளிக் கப்படவேண்டிய உரிமைக்கும் கவனம் செலுத்துதல் வேண்டும்.

5. ஒரு சிறுவன் அல்லது சிறுமி சம்பந்தமாவ அறிக்கை ஏற்படுத்தக்கூடிய அரசியல், சமூக மற்றும் கலாசார விளைவுகள் குறித்து சிறுவரின் சூழ்நிலை யோடு நெருங்கிய தொடர்பு கொண்டோரும், அதை மதிப்பீடு செய்யக்கூடியோருமானவர்களுடன் கலந் தாலோசித்தல் வேண்டும்.

6. பெயர்கள் மாற்றப்பட்டு, மறைக்கப்பட்டு அல் லது பயன்படுத்தப்படாதிருந்த சந்தர்ப்பங்களிலும், சிறுவரை, சகோதரர்களை அல்லது சகவயதினரை இடர்வரவுக்குள்ளாக்கும் கதை அல்லது படத்தைப் பிரசுரிக்க வேண்டாம்.

**II சிறுவர்களை நேர்முகம் காண்பதற்கான வழிகாட்டல்கள்**

1. எந்த ஒரு சிறுவருக்கும் தீங்கு விளைவிக்க வேண்டாம்; சரி பிழை கூறுதல்,



கலாசார விழுமியங்களுக்குக் கூருணர்வின்மை, சிறுவரை ஆபத்துக்கு அல்லது ஏளனத்துக்கு உள்ளாக்கல், மன அதிர்ச்சி வடு குறித்த நிகழ்வு கள் சம்பந்தமான சிறுவரின் வேதனை அல்லது துயரத்தைப் புதுப்பித்தல் என்பவற்றை ஏற்படுத் தக்கூடிய வினாக்கள், மனப்பாங்குகள் அல்லது கருத்துரைகளைத் தவிர்க்கவும்.


2. சிறுவர்களை நேர்முகத்துக்குத் தெரிவு செய் வதில் பால், இன, வயது, அந்தஸ்து, கல்விப் பின் னணி அல்லது உடல் இயலுமைகள் அடிப்படையில் பாரபட்சம் காட்டவேண்டாம்.

3. நடிப்பு வேண்டாம்: தமது சொந்த வரலாற்றின் ஒரு பகுதியல்லாத ஒரு கதையைக் கூறும்படியோ, ஒரு செயற்பாட்டைச் செய்யும்படியோ சிறுவர்க ளைக் கேட்கவேண்டாம். ஒரு பிள்ளை அல்லது பாதுகாவலர் தான் ஓர் அறிக்கையாளரிடம் அல்லது பத்திரிகை நிருபரிடம் பேசுகிறாரென்பதை அறிந்து கொள்வதை உறுதிசெய்துகொள்ள வேண்டும். நேர்முகத்தின் நோக்கம் மற்றும் அது எதற்குப் பயன் படுத்தப்படவுள்ளது என்பது குறித்து தெளிவுபடுத் துங்கள்.

4. சகல நேர்முகங்கள், வீடியோப் படமெடுத்தல், மற்றும் இயன்றவிடத்து விவரணப் புகைப்படங்க ளுக்குப் பிள்ளையிடமிருந்தோ அல்லது அவரின் பாதுகாவலரிடமிருந்தோ அனுமதியைப் பெற்றுக் கொள்ளுங்கள். பிள்ளையோ, பாதுகாவலரோ எந்த விதமான பலவந்தப்படுத்தலுமின்றி, உள்நாட்டிலும் உலகரீதியாகவும் அனைவர் மத்தியிலும் பரப்பப் படவுள்ள ஒரு கதையின் பகுதியாகத் தாம் உள்ளோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மென்பதைப் புரிந்துகொள்வதை உறுதிப்படுத்தும் சூழ்நிலைகளில் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும். இது வழக்கமாக பிள்ளையின் மொழியில் அனுமதி பெற்றுக்கொள்ளப்படும் போதும், பிள்ளை நம்பிக்கை வைக்கக்கூடிய வளர்ந்தவர் ஒருவருடன் கலந்தாலோசித்து தீர்மானம் மேற்கொள்ளப்படும் போதும் மாத்திரமே உறுதி செய்யப்படும்.

5. பிள்ளையுடன் நேர்முகம் எங்கே, எப்படி இடம் பெறுகின்றது என்பது குறித்துக்கவனம் செலுத்தவும். நேர்முகம் காண்போர் மற்றும் படப்பிடிப்பாளர்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்தவும் பிள்ளைகளிடம் இயற்கையாகவும், நேர்முகம் காண்பவர் உட்பட, வெளியார் எவரதும் அழுத்தங்களின்றியும் தமது கதையைக் கூறக்கூடிய இயலுமையை உறுதி செய்யவேண்டும். திரைப்படம், வீடியோ மற்றும் வானொலி நேர்முகங்களில் கட்புலன் அல்லது செவிப்புலன் பின்னணித் தெரிவு பிள்ளையினது வாழ்க்கை அல்லது கதை குறித்து உட்கிடையாக எதைத் தெரிவிக்கும் என்பது குறித்துக் கவனம் செலுத்துங்கள். சிறுவரின் அல்லது சிறுமியின் வீடு, ஜனசமூகம் அல்லது பொதுவான இருப்பிடங்களைக் காட்டுவதன் மூலம் பிள்ளைக்கு ஆபத்து அல்லது பாதகமான விளைவு ஏற்படாதிருப்பதை உறுதி செய்தல் வேண்டும்.

### III சிறுவர்கள் குறித்து அறிக்கையிடுவதற்கான வழிகாட்டல்கள்

1. சிறுவர் எவரையும் மேலும் வடுப்படுத்தி ஒதுக்க வேண்டாம். மேலதிக உடல் அல்லது உளரீதியான தீங்கு, அல்லது நிரந்தரமான துஷ்பிரயோகம் அல்லது அவர்களின் உள்ளூர் ஜனசமூகங்களால் பாகுபாடு அல்லது நிராகரிப்பு ஏற்படக்கூடிய வகையில் அவர்களை வகைப்படுத்துவதையோ, வர்ணிப்பதையோ தவிர்த்துக்கொள்ளுங்கள்.

2. எப்பொழுதும் ஒரு பிள்ளையின் கதைக்கு அல்லது பிரதிபிம்பத்துக்கான சரியான சூழமைவை வழங்குங்கள் .

3. எப்பொழுதும் பின்வரும் விடயங்களோடு இனங்காணப்படும் ஒரு பிள்ளையின் பெயரை அல்லது கட்புல அடையாளத்தைத் திரிபுபடுத்துங்கள்.

அ] பாலியல் துஷ்பிரயோகத்துக்கு அல்லது சுரண்டலுக்கு ஆளாகியவர்.

ஆ] படையில் போராளியாக இருந்தவர்.

இ] உடல்ரீதியான அல்லது பாலியல் துஷ்பிரயோகத்தில் தொடர்ச்சியாக ஈடுபட்டவர்.

ஈ] ஒரு பிள்ளை, பெற்றார் அல்லது பாதுகாவலர் பூரண அறிவார்ந்த சம்மதம்

உ] வழங்கினாலொழிய, எச்ஐவீ தொற்றுடன் வாழ்பவர், எயிட்ஸ் நோயாளி அல்லது எயிட்ஸ் நோய் காரணமாக இறந்தவர்.

ஒரு குற்றம் சம்பந்தமாகச் சார்த்துதல் பெற்றவர், அல்லது குற்றத் தீர்ப்புப் பெற்றவர் தீங்கு அல்லது பழிவாங்கல் இடர் அல்லது சாத்தியவள இடர் உள்ள சந்தர்ப்பங்களில் பின்வரும் விடயங்களோடு இனங் காணப்படும் ஒரு பிள்ளையின் பெயரை மாற்றுங்கள் அல்லது கட்புல அடையாளத்தைத் திரிபுபடுத்துங்கள்.

அ] தற்போது அல்லது முன்னாள் படைப் போராளி

ஆ] தஞ்சம் கோருபவர், அகதி அல்லது உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்.

சில சந்தர்ப்பங்களில் ஒரு பிள்ளையின் பெயர் மற்றும்/ அல்லது இனங்காணக்கூடிய படத்தை உபயோகிப்பது பிள்ளையின் அதி உயர்வான நலனுக்கு உகந்ததாகவிருக்கும். ஆயினும் பிள்ளையின் அடையாளத்தை உபயோகிக்கும்போது இன்னமும் தீங்கு, வடுப்படுத்தி ஒதுக்குதல் மற்றும் பழிவாங்கல் களிலிருந்து பாதுகாப்பு மற்றும் ஆதரவு என்பவை வழங்கப்படுதல் வேண்டும்.

இந்த விசேட சந்தர்ப்பங்களின் சில உதாரணங்கள் பின்வருமாறு:


அ] சிந்தனை வெளிப்பாட்டுச் சுதந்திரம் மற்றும் அபிப்பிராயம் செவிமடுக்கப்படுவதற்கான உரிமை என்பவற்றைப் பிரயோகிக்க விரும்பி ஒரு பிள்ளை ஓர் அறிக்கையாளருடன் அல்லது பத்திரிகை நிருபருடன் தொடர்பு கொள்ளுதல்.

ஆ] ஒரு பிள்ளை துடிப்பான, நிலைபேறான நிகழ்ச்சித்திட்டமொன்றின் அல்லது சமூக அணி திரட்டலில் செயற்பாட்டின் ஒரு பகுதியாக விளங்கும்போதும். பிள்ளை தான் இனங்காணப்படுவதை விரும்பும்போதும்

இ] பிள்ளையொன்று ஒரு சமூக உளவியல் நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபெறும்போதும் தனது பெயரும், அடையாளமும் தனது ஆரோக்கியமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அபிவிருத்திக்கு அவசியமொன்று வற்புறுத்தும் போதும்.

6. ஒரு பிள்ளை சொல்லவிருப்பதன் சரியான தன்மையை ஏனைய சிறுவர்களூடாக அல்லது வளர்ந்தவர் ஒருவரூடாக அல்லது இருதிறத்தாரூடாகவும் உறுதிப்படுத்திக்கொள்ளவும்.

7. ஒரு பிள்ளைக்கு இடர்வரவு உண்டென்ற சந்தேகம் எழும்போது, கதைக்கு எவ்வளவுதான் செய்திப் பெறுமதி இருந்தபோதிலும், ஒரு தனிப்பட்ட சிறுவரையன்றி, பிள்ளைகளின் பொதுவான சூழ்நிலை குறித்தே அறிக்கையிடவும்.

## IV யூனிசெப் விடயப்பொருட்களைப் பயன் படுத்துதல்

விடய வாசகங்கள், படங்கள் மற்றும் வீடியோ நாடாக்கள் உள்ளிட்ட சகல யூனிசெப் விடயப்பொருட்களும் பதிப்புரிமை பாதுகாப்புப் பெற்றவையாகும். யூனிசெப் விடயப் பொருட்கள் எவற்றையும் உபயோகிப்பதற்கான அனுமதியை உரிய யூனிசெப் அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். இந்த அனுமதி இந்த ஆவணத்தின் கோட்பாடுகள் மற்றும் வழிகாட்டல்களோடு இணங்கியொழுகும் நிபந்தனையின் பேரிலேயே வழங்கப் படும்.

**மூலங்கள் :** சிறுவர் உரிமைகள் குறித்த மரபொழுங்கு: சிறுவர் உரிமைகளும், ஊடகமும் பத்திரிகையாளர்களுக்கான வழிகாட்டல்கள், சர்வதேச பத்திரிகையாளர் சம்மேளனம் ஊடகங்களும், பிரத்தியேக பாதுகாப்பு தேவைப் படும் சிறுவர்களும் [உள்ளக ஆவணம்], யூனிசெப் தொடர்பாடல் பிரிவு : எச்ஐவி / எயிட்ஸ் மற்றும் மனித உரிமைகள் குறித்த இரண்டாவது சர்வதேச கலந்தாய்வு, ஐக்கிய நாடுகள் சபை செயலாளர் நாயகம்.

**மேலும் தகவல்களுக்கு,**
**எஸ்.அபேசேகர, யூனிசெப்.**
**தொலைபேசி: 2677550 / 077 316 5378,**
swooster@Unicef.org
**ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம்**
**இலங்கைத் தேச அலுவலகம்**
**5, கீதாஞ்சலி பிளேஸ், காலி வீதி**
**கொழும்பு - 7, இலங்கை.**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறுசுவையுடன் ஆரோக்கியத்தையும் வழங்கும் சைவ உணவு வகைகள்



## சூரியா உணவகத்தின் உரிமையாளர் ஜே.ரவிசங்கர்

உலகளவில் பிரான்ஸ்,சீனா, இந்தியா, அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து போன்ற நாடுகளின் சமையல் வகைகளானவை பிரபல்யமடைந்து உள்ளன. இருப்பினும் இந்திய உணவு வகைகளே மூலிகை நுட்ப முறைகளுக்கமைய 'உணவே மருந்து' என்ற தாற்பரியத்தின் அடிப்படையில் சமைக்கப்படுகின்றன எனலாம்.

உடலின் சமநிலையைப் பேணல், உணவின் ஜீரணத் தன்மையைச் சரிப்படுத்தல், உடலின் ஆரோக்கியம் மற்றும் புத்துணர்ச்சிக்கு வழிவகுத்தல், உடலையும் மனதையும் ஒன்றிணைத்தல் போன்றவற்றில் நாம் உண்ணும் உணவு பிரதான இடத்தை வகிக்கின்றது. இதற்கு நாம் உண்ணும் உணவில் அறுசுவைகளும் உள்ளடங்கியிருக்க வேண்டும். இந்திய உணவு வகைகளானவை பெரும்பாலும் அறுசுவைகளை உள்ளடக்கியதாகவே தயாரிக்கப்படுகின்றன.

மக்களின் உணவு முறையானது பெரும்பாலும் அவர்கள் வாழும் சூழல் பழக்கவழக்கங்கள், அவர்களுடைய கலாசாரம் போன்றவைகளின் அடிப்படையில் வேறுபடுகின்றன. சைவ உணவு வகைகளுக்கு இந்தியாவே புகழ்பெற்ற நாடாகவுள்ளது. இந்தியாவானது பல மாநிலங்களைக் கொண்டுள்ள போதிலும் இந்திய உணவு வகைகள் பொதுவாக வட இந்தியா, தென்னிந்தியா என்ற ரீதியிலே வேறுபடுகின்றன. இது தொடர்பாக சூரியா உணவகத்தின் உரிமையாளரான ஜே.ரவிசங்கர் தெரிவிக்கையில்;

தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா, கர்நாடகா போன்ற மாநிலங்களின் உணவுகளே தென்னிந்திய உணவுகளாகக் கருதப்படுகின்றன. தென்னிந்திய உணவு முறையானது பெரும்பாலும் சாதம் மற்றும் நாட்டு காய்கறிகளை அடிப்படையாகக் கொண்டவையாக உள்ளன. தென்னிந்திய உணவு வகைகள் அறுசுவையை அடிப்படையாகக் கொண்டவை. இருப்பினும் இம்முறையானது நாளடைவில் மாற்றமடைந்துள்ளதுடன், உணவின் சுவையும் ஆரோக்கியமும் குறைவடைந்துள்ளன.

தென்னிந்திய உணவின் பாரம்பரியமானது தமிழ்நாடு, கர்நாடகா போன்ற மாநிலங்களில் அதிகமாக நிலவுவதுடன், அந்நியரின் ஆதிக்கத்தைத் தொடர்ந்து ஆந்திரா, கேரளா போன்ற மாநிலங்களில் இப்பாரம்பரியமானது மாறியுள்ளது என்றார்.

உலகளவில் முன்னெடுக்கப்பட்ட ஆய்வுகளின் பிரகாரம் உலகில் சிறந்த சைவ உணவாகவும் ஆரோக்கிய உணவாகவும் தென்னிந்திய உணவான இட்லி அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. இவற்றுக்கு மேலதிகமாக தென்னிந்திய உணவுகளில் தோசை பிரபல்யமடைந்துள்ளதுடன், இது 100 வகைகளில் தயாரிக்கப்படுகிறது.

வட இந்திய உணவு வகைகள் மும்பாய், டெல்லி, கல்கத்தா, பஞ்சாப் போன்ற பிரதேசங்களுக்கு புகழ்பெற்றவையாகும். வட இந்திய உணவு வகையானது பெரும்பாலும் பால், நெய், கோதுமை போன்றவைகளை அடிப்படையாகக் கொண்டே தயாரிக்கப்படுகின்றது. சப்பாத்தி, நான், பன்னீர், உருளைக்கிழங்கு சார்ந்த உணவுகள் வட இந்திய உணவுகளாகும்.

தமிழ்நாட்டில் கொங்கு உணவுகள், செட்டிநாடு உணவுகள், நாஞ்ஜில் நாடு உணவுகள், முதலியார் உணவுகள் போன்ற பிரிவுகளில் சைவ உணவுகள் உள்ளன. சைவ உணவினை உட்கொள்வதனால் உடலுக்கு கிடைக்கும் நன்மைகள் தொடர்பாக அவர் தெரிவிக்கையில், காய்கறி வகைகளையும் இறைச்சிகளையும் வெட்டி ஒரு மணி நேரத்திற்கு அதிகமாக திறந்த வெளியில் வைக்கும் போது காய்கறியானது நிறம் மாறாது புத்தம் புதியதாக இருக்கும். ஆனால் இறைச்சியில் துர்மணம் வீசும். இவற்றின் அடிப்படையில் பார்க்கும் போது அசைவ உணவுகளை விட சைவ உணவு வகைகள் சிறந்ததாக இருக்கின்றன.

விலங்கினங்களைப் பார்க்கும் போது சைவ உணவுகளை உண்ணும் மிருகங்களே நீண்ட ஆயுளையும் அழகினையும் கொண்டவையாகவுள்ளன. இவற்றின் அடிப்படையில் பார்க்கும் போது இந்திய சைவ உணவு வகைகள் உடலையும் மனதையும் ஒன்றிணைப்பதில் முக்கிய பங்காற்றுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் சுற்றுலா வளர்ச்சியில் பெரும் பங்களிப்பினை வழங்கி வரும் நில ஆதனத்துறை



நாட்டில் அண்மையில் சுற்றுலாத் துறையின் வளர்ச்சிக்கு நில ஆதனத் துறை பாரிய பங்களிப்பினை வழங்கியிருந்ததுடன், இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கும் உறுதுணையாக அமைந்திருந்தது.

'இந்து சமுத்திரத்தின் முத்து' என அழைக்கப்படும் இலங்கை காண்போரின் கண்களைக் கவரக்கூடிய இயற்கை எழில் கொண்டதொரு அழகிய தேசமாகும். 30 வருட போருக்குப் பின்னரான இலங்கைப் பொருளாதாரம் நிலையான வளர்ச்சியுடன் காணப்படுவதுடன், சுற்றுலாத் துறையிலும் பாரியளவு வளர்ச்சியை பதிவுசெய்துள்ளது. இது முதலீட்டாளர்கள் மத்தியில் தைரியத்தையும் நம்பிக்கையையும் அதிகரித்துள்ளது.

கடல்வளம், மலைத்தொடர் என்ற பல இயற்கை அன்னையின் பொக்கிஷங்களைத் தன்னகத்தே கொண்ட இலங்கை, போர்க்காலத்தில் பல இழப்புக்களை சந்தித்திருந்ததுடன், பொருளாதாரம் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் பாரிய வீழ்ச்சியையும் எதிர்நோக்கியிருந்தது. தற்போதைய நிலையில் சீனா, இந்தியா, சிங்கப்பூர், மலேசியா மற்றும் ஜப்பான் போன்ற நாடுகள் இலங்கையில் முதலீடு செய்ய ஆர்வம் காட்டி வருவதுடன், அவற்றில் நில ஆதனத் துறை முக்கியமாகக் குறிப்பிடப்பட வேண்டியதொன்றாகும். நில ஆதனத் துறையில் ஈடுபடும் பணியாளர்கள் இயற்கையைப் பாதிக்காத வண்ணம் தமது நடவடிக்கைகளை மேற்கொண்டு செல்வதுடன், நாட்டின் உட்கட்டமைப்புத் துறையில் பாரிய முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளனர். இலத்திரனியல் சந்தைப்படுத்தல், சர்வதேச ஆதனக் கண்காட்சி மூலம் நில ஆதனத் துறைக்கான சந்தைப்படுத்தல் வாய்ப்புகளை பெறக்கூடியதாக உள்ளதுடன், ஆசியாவில் இலங்கையின் அமைவிடமும் சாதகமாக அமைந்துள்ளது.

இதன் மூலம் நாட்டின் சுற்றுலாத்துறை வளர்ச்சி கண்டுள்ளதுடன், நாட்டின் மொத்த வருமானம் மற்றும் பொருளாதாரம் என்பனவும் முன்னோக்கிய பாதையில் செல்கின்றது.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் நில ஆதனத் துறையை அபிவிருத்தி செய்யும் போது போக்குவரத்துப் பாதைகள், உட்கட்டுமானத் துறைகளில் சிறந்ததொரு முன்னேற்றத்தை இனம்காணக்கூடியதாக உள்ளதுடன், வெளிநாட்டு முதலீடுகளின் வருகை இலங்கையின் கலாசாரத்தையும், பாரம்பரியத்தையும் ஒரு போதும் பாதிக்காத வண்ணம் இவ் அபிவிருத்திப் பணிகள் அமைந்துள்ளன.

இலங்கை முதலீட்டுச் சபையின் அறிக்கையின்படி வெளிநாட்டு நேரடி முதலீடுகள் அதிகரித்துள்ளதுடன், 2016 க்கான வெளிநாட்டு நேரடி முதலீட்டுக்கான பெறுமதி 4 பில்லியன் ரூபாவாக இருக்குமென நம்பப்படுகிறது.

அரசினால் மேற்கொள்ளப்படும் பாரியளவிலான உட்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டம் மூலம், நாட்டின் பல முன்னணி நகரங்களான காலி, ஹம்பாந்தோட்டை மற்றும் கண்டி பிரதேசங்களில் அதிவேக பாதை நிர்மாணிப்பு மற்றும் சிறப்பான தொழில்நுட்ப செயற்திட்டம் என்பவை வெளிநாட்டு முதலீட்டாளர்களை முதலிடத் தூண்டுவதோடு, நாட்டின் சுற்றுலாத்துறைமூலமான பொருளாதார முன்னேற்றத்துக்கு பாரியளவு பங்களிப்புச் செய்கிறது. எனவே நில ஆதனத்துறைக்கூடான இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் சிறப்பான நன்மைகளை வழங்கும் என்பதில் எதுவித ஐயமுமில்லை.

**- எம்.ஆர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுத்துறையில் தமிழ் இளைஞர்கள் ஆர்வமுடன் ஈடுபட முன்வர வேண்டும்



## முத்தையா முரளிதரன்

இலங்கையின் அடையாளச் சின்னங்களுள் ஒன்றான, விளையாட்டுத் துறையானது இன்று பல்வேறு சவால்களுக்கு முகங் கொடுக்கின்றது. எனினும் இலங்கையினை சர்வதேச தரத்திற்கு கொண்டு சென்ற பெருமை கிரிக்கெட்துறையையே சாரும். இலங்கையின் கிரிக்கெட் அணியை சர்வதேச தரத்திற்கு கொண்டு சென்றவர்களுள் முன்னாள் கிரிக்கெட் வீரரும் சுழல் பந்து வீச்சாளருமான முத்தையா முரளிதரனும் ஒருவராவார்.

இலங்கையின் விளையாட்டுத்துறை தொடர்பாக நாம் வினவியபோது அவர் இவ்வாறு தமது கருத்துகளை பகிர்ந்து கொண்டார்.

இலங்கையைப் பொறுத்தவரையில் கிரிக்கெட் விளையாட்டே சர்வதேச அளவில் புகழ் பெற்றுள்ளதுடன், சர்வதேச அளவில் பேசப்படுகின்றது. இதற்கு கிரிக்கெட் விளையாட்டின் மேம்பாட்டுக்குத் தேவையான வசதிகள் வழங்கப்பட்டுள்ளதே காரணம் ஆகும். எனினும் மற்றைய விளையாட்டுகளைப் பொறுத்தவரையில் இதற்கான வசதி வாய்ப்புகள் குறைவானதாகவுள்ளன. அதாவது விளையாட்டுப் பயிற்சி நிலையங்கள், விளையாட்டு மைதானத்திற்கான ஓடுபாதைகள், பயிற்றுவிப்பாளர்கள் போன்ற வசதிகள் குறைவானதாகவே உள்ளன. இத்தகைய வசதிகளை மேம்படுத்துவதற்காக விளையாட்டுத்துறை அமைச்சினால் ஒதுக்கப்படும் நிதியானது குறைவாகவே உள்ளது. இதனை அதிகரிப்பதன் மூலம் இலங்கையின் விளையாட்டுத்துறையை சர்வதேச அளவிற்கு கொண்டு செல்லலாம் என தெரிவித்தார்.

இலங்கையின் விளையாட்டுத்துறையில் தமிழ் இளைஞர்களின் பங்களிப்பானது குறைவாகவே உள்ளது. அவர்களுக்கு சம வாய்ப்புக்கள் வழங்கப்படுகின்றனவா? என வினவியபோது, தமிழ் இளைஞர்களுக்கு விளையாட்டுத் துறையில் சமவாய்ப்புகள் வழங்கப்பட்டாலும் அவர்கள் பெரிதாக விளையாட்டுகளில் ஈடுபட முன்வருவதில்லை எனலாம். அத்துடன் இலங்கையின் சனத்தொகை அளவில் பார்க்கும்போது தமிழ் இளைஞர்களின் பங்களிப்பானது குறைவாகவே உள்ளது.

மேலும் 30 வருட காலம் நாட்டில் நிலவிய யுத்த நிலையைத் தொடர்ந்து தமிழ் இளைஞர்களின் பங்களிப்பானது விளையாட்டுத் துறையில் அருகியதை இங்கு குறிப்பிட வேண்டும். இருப்பினும் தற்போது யுத்த சூழல் முடிவுற்றதைத் தொடர்ந்து அவர்களுக்கான விளையாட்டுத் துறை அபிவிருத்திகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதற்கமைய எதிர்காலத்தில் வட, கிழக்கு பகுதிகளிலிருந்து திறமையான இளைஞர், யுவதிகளை விளையாட்டுத் துறையில் எதிர்பார்க்க முடியும்.

இளைஞர், யுவதிகள் தங்களுடைய திறமைகளை முயற்சியுடன் வெளிப்படுத்துவதனூடாக தாம் எதிர்நோக்கும் சவால்களை முறியடித்து எத்துறையிலும் வெற்றி பெற முடியும் என்றார்.

இவ்வருடம் 20 ஆவது வருட நிறைவினைக் கொண்டாடும் தினக்குரலுக்கு தனது வாழ்த்துகளை தெரிவித்ததோடு, தமிழ் பேசும் மக்களுக்கு தினக்குரல் உன்னதமான சேவையை வழங்குவதாகவும் அவர் தெரிவித்தார்.

**எஸ்.ஹரியதர்ஷனி**



20 Anniversary

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நீங்கள் சோர்வுடன் திரும்பும் இடத்திற்கு அருகிலேயே வெற்றி காத்திருக்கும்; திரும்பி விடாதீர்கள்



சதா பாரதி
முனைவர்
நா.சங்கரராமன்,
தமிழ்த்துறை,
எஸ்.எஸ்.எம்.
கலை அறிவியல்
கல்லூரி, ஈரோடு,
தமிழ்நாடு

மிகப்பெரிய பயணங்கள் எல்லாமும் நாம் நம்பிக்கையோடு எடுத்து வைக்கும் முதலடியிலிருந்தே தொடங்குகிறது எனலாம். அந்த வகையிலே தயக்கமும் சோர்வுமே நம்முடைய வெற்றிக்குத் தடையாக இருக்கும். ஒவ்வொரு முறையும் தயங்காமல் நாம் எடுக்கும் முயற்சிகளே நம்மை முன்னோக்கி அழைத்துச் செல்லும். பல சரித்திர சாதனையாளர்களுடைய ஆரம்ப கால முயற்சிகள் அனைத்துமே மிகவும் ஏளனமாகப் பார்க்கப்பட்டது என்பதே உலக வரலாறாகும். ஆனால் அவர்கள் எந்த நிலையிலும் சோர்வடையாமல் தொடர்ச்சியான முயற்சிகளாலும் நம்பிக்கையாலுமே இந்த உலகத்தை வசப்படுத்த தொடங்கினார்கள் என்பது நாம் அனைவரும் அறிந்த ஒன்றே ஆகும்.

''எங்க ஊர்ல இவனெல்லாம் சின்ன வயசுல டவுசரோடு திரிஞ்சவன். மூக்கு ஒழுகிகிட்டே இருக்கும். எங்கிட்டதான்டா பென்சில் வாங்குவான்'' என்றபடியே நம்மோடு இருந்து நம்மை கடந்து இன்று உலகமே மதிக்கும் யாராவது ஒரு உயர்ந்த மனிதரை அடையாளம் காட்டி நம்மோடு அவர்கள் இருந்த இளமைக்காலங்களையும் பழைய நினைவுகளையும் இன்னமும் அதிகம் போனால் அவரோடு நாம் இருக்கும் பழைய புகைப்படங்களையும் பதிவிட்டு பெருமை தேடிக்கொள்வோம். ஆனால் ஆரம்ப காலகட்டத்தில் அவருடைய உழைப்பினை எள்ளி நகையாடிய நபர்களில் நாமும் ஒருவராகக் கூட இருந்திருப்போம். ஒவ்வொரு முறையும் அவர்களுடைய அயராத உழைப்பினை இப்போது நாம் சற்று எண்ணிப்பார்க்க வேண்டும். அதைவிட முக்கியம் நாம் அந்த நிலையினை ஏன் எட்டவில்லை என்பதையும் யோசித்துப்



**நீங்கள் எந்த அளவுகோல்களால்
மற்றவர்களை அளக்கிறீர்களோ
அதே அளவுகோலாலே
நீங்களும் அளக்கப்படுவீர்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பார்க்க வேண்டும். இந்த உலகம் உண்மையிலேயே அற்புதமானதே. இயற்கை அனைவருக்கும் சம வாய்ப்பையே கொடுக்கிறது. நாம்தான் அந்த வாய்ப்புகளையும் முயற்சிகளையும் பிறரோடு ஒப்பீடு செய்து வாழ்வதிலேயே தொலைத்துவிடுகிறோம்.

*நீங்கள் எந்த அளவுகோல்களால் மற்றவர்களை அளக்கிறீர்களோ அதே அளவுகோலாலே நீங்களும் அளக்கப்படுவீர்கள்*

என்ற உண்மையை உணர்ந்துகொள்ள வேண்டும். நம்மைப்பற்றி நாம் நினைக்கும் நினைப்புகள் அனைத்தையும் உயர்வானதாக எண்ணவேண்டும். இந்த உலகின் மிக முக்கிய நபர் நாம் என்ற எண்ணமே நம்மை அடுத்த நிலை நோக்கி நகரச் செய்யும் என்பதை உணர வேண்டும். அவ்வாறு தங்களை உணர்ந்தவர்களே சாதனைப்பட்டியலில் தங்களுடைய பெயரினைப் பதியவைத்தவர்களாக இருந்துள்ளனர். சாதனையாளர்கள் யாருமே உண்மையில் மிகப்பெரிய அல்லது வசதி வாய்ப்பு நிறைந்த குடும்பத்தில் பிறந்தவர்களில்லை. அடுத்த வேளை உணவிற்கும் ஆடைக்கும்கூட வசதியில்லாத குடும்பத்தில் பிறந்தவர் அமெரிக்காவின் ஜனாதிபதி ஆவதும், எங்கோ பெயர் தெரியாத தேசத்தில் பிறந்து உலகிலேயே மிகச்சிறந்த பெயர் வாங்கிய சாதனையாளர்களின் முயற்சிகளையும் அவர்களுடைய உழைப்பையும் நாம் அத்தனை எளிதாக எடைபோட்டு விடக்கூடாது. ஒவ்வொரு முறையும் வெல்ல வேண்டும் என்ற எண்ணமும் யாருக்கும் தீங்கு இல்லாமல் சமுதாயத்திற்குப் பயன்படும்படியான வாழ்வினை வாழவேண்டும் என்ற எண்ணம் அனைவருக்குள்ளும் எழ வேண்டும்.


*எதைச் செய்ய முடியாது என்று உங்கள் மனம் நினைக்கிறதோ அதையே உங்கள் இலக்காக்கிக் கொள்ளுங்கள்*

சில விடயங்களை நாம் பிரமிப்போடும் அதிர்ச்சியோடும் பார்த்துவிட்டு நம்மால் இது சாத்தியமில்லை என்று ஒதுங்கி நிற்கும் நேரங்களிலே நம்முள்ளே நம்பிக்கை எழ வேண்டும். எல்லாம் நம்மால் சாத்தியமாகும் என்ற எண்ணத்தோடு நாம் செயல்படும் நேரங்களிலே இயல்பாக நம்முள்ளே எழும் நேர்மறை எண்ணங்களும் முயற்சிகளுமே நம்மை அடுத்த நிலை நோக்கி நகர்த்திச் செல்லும். ஒவ்வொரு கடினமான செயலையும் நாம் செய்து முடித்தபின்னர் நம்முடைய மனம் எத்தனை மகிழ்வாக உள்ளது என்பதை உணர வேண்டும். நெருக்கடியான காலகட்டத்திலேதான் நம்முடைய திறமையும் முயற்சியும் அதிகமாக வெளிப்பட வாய்ப்பு பிறக்கிறது என்பதை உணர வேண்டும்.

'உங்கள் ஆய்வகம் எரிந்து விட்டதே? உங்கள் உழைப்புகள் அத்தனையும் வீணாகி விட்டதே?' என்ற நிருபர்களின் கேள்விக்கு

''எந்தக் கவலையுமில்லை. என்னுடைய தவறுகள் எல்லாம் சாம்பலாகிவிட்டன. இப்போது என்னுடைய முயற்சிகளை இன்னமும் வேகமாகத் தொடங்குவேன்'' என்று சிரித்தபடியே பதிலளித்தார் எடிசன். தனது மிகப்பெரிய ஆய்வகம் எரிந்து சாம்பலான போதும் சற்றும் மனம் தளராமல் அடுத்த முயற்சிக்கு தயாரான எடிசனின் நம்பிக்கையே அவரை சாதனைப்பட்டியலில் இடம்பிடிக்கச் செய்தது என்றால் அது மிகையாகாது. உங்களுக்கான இலக்குகளை நிர்ணயித்துக் கொள்ளுங்கள். இடையே வரும் சிறு சிறு தோல்விகள், புறக்கணிப்புகளைக் கண்டு கலங்காமல் அவற்றை நம்முடைய அனுபவங்களாக ஏற்றுக் கொண்டு தொடர்ந்து நடைபோடுங்கள். வெற்றி உங்களை வாரி அணைத்துக் கொள்ளும்

*உங்கள் அவமானங்களை சேர்த்து வையுங்கள்*
*வெற்றி விழாவில் அனுபவமாக பேசி விடலாம்*
*வெற்றி உங்களைத் தேடுகிறது*






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நில ஆதனத்துறையில் புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்திவரும் மாடி வீடமைப்புத் தொகுதிகள்

கடந்த சில வருடங்களாக இலங்கையின் நில ஆதனத்துறையானது மாடி வீடமைப்புத் தொகுதிகள் காரணமாக மாற்றமடைந்து வருகிறது. வானை நோக்கி உயர்ந்து காட்சியளிக்கும் வீடமைப்புத் தொகுதிக் கட்டிடங்கள் கொழும்பினை ஆட்சி செய்து வருகின்றன. இந்நிலையில் இலங்கையின் நில ஆதனத்துறையின் அபிவிருத்தி தொடர்பாக தனது கருத்துகளை இங்கு பரிமாறிக் கொள்கிறார். Blue Ocean குழுமத்தின் தலைவரான எஸ்.துமிலன்.



Blue Ocean
குழுமத்தின் தலைவர்
**எஸ்.துமிலன்**

**கேள்வி: கடந்த சில வருடங்களாக உயரமான சொகுசு வசதியுடைய மாடித் தொகுதி கட்டிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக தங்களின் கருத்து என்ன?**

**பதில்:** நில ஆதனமானது நாட்டின் அபிவிருத்திக்கு உதவும் வகையில் சர்வதேச முதலீடுகளையும் வெளிநாட்டு பணப் பரிமாற்றத்தையும் ஈர்ப்பதற்கான சிறந்ததோர் வழியாகத் திகழ்கிறது. உதாரணமாக டுபாய் சிறிய சனத்தொகையைக் கொண்ட நாடாகத் திகழ்ந்த போதிலும் அவர்கள் பாரிய நில ஆதனத் துறையைக் கொண்டுள்ளனர்.

குறிப்பாக உயர்ந்த எழுச்சிமிக்க மாடி வீடமைப்புத் தொகுதிகளைக் கொண்டுள்ளதுடன், இவற்றை வர்த்தக விடயங்கள் மற்றும் பொழுது போக்கு அம்சங்களுக்காக கொள்வனவு செய்யுமாறு வெளிநாட்டவர்களுக்கு அழைப்பு விடுத்து வருகின்றனர். இதே மாதிரியான சூழ்நிலையை நாம் அவுஸ்திரேலியாவிலும் காணலாம். நிதி சவால்களில் இருந்து அவுஸ்திரேலியாவை மீட்பது இதன் பிரதான கொள்கை ஆகும். இதன் காரணமாக அவுஸ்திரேலிய நில ஆதனச் சந்தையானது சீன வெளிநாட்டு பணப்பரிமாற்றத்தினை கவர்வதாக உள்ளது.

இலங்கையானது இவ்வாறான வளங்களுக்கான வாய்ப்புகளை உருவாக்கி வருவதை அவதானிக்கலாம்.

எமது நோக்கமானது இந்த உயர்ந்த ரக கட்டிடங்களை இரண்டாவது வீடுகளாகச் சந்தைப்படுத்துவதாகும். மாடித் தொகுதிகள் மிகச் சிறந்த ஏற்புடைய கொள்கை ஆகும். காரணம் இலங்கையில் தேசிய வெளிநாட்டவர்கள் மாடி வீடமைப்புத் தொகுதி ஒன்றுக்குச் சொந்தமாக முடியும். அடிக்கடி பயணம் செய்பவர்கள் நீண்டகாலத்திற்கு தாம் விரும்பியபடி தமக்கு ஏற்றவகையில் சொந்தமாக உணவு தயாரித்து

**மீரா கணேசமூர்த்தி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ விரும்புவதால் இவ்வாறான மாடி வீடமைப்புத் தொகுதிகள் புகழ் பெற்று வருகின்றன.

வர்த்தகத்திற்காக பயணம் செய்வதால் நானும் இதனையே விரும்புகிறேன். அத்துடன் பாதுகாப்புக் காரணங்களுக்காகவும் இவை விரும்பப்படுகின்றன. சில பயணிகள் நீண்ட காலத்திற்கு தங்க விரும்பும் போது ஹோட்டல்களில் தமது கடவுச்சீட்டுகளை வைத்திருக்க விரும்புவதில்லை. இதன் காரண மாக நீங்கள் கட்டுப்பட்டிருக்கத் தேவையில்லை. இலங்கை வளர்ச்சியடைய வேண்டுமானால் நில ஆதனச் சந்தையானது திறக்கப்படுவது அவசிய மாகும். இலங்கையில் மாடி வீடமைப்புத் தொகுதி களில் மக்களை வாழ்வதற்கு ஈர்ப்பதும் அவற்றுக்கு அவர்களைச் சொந்தமாக்குவதும் கல்வி, உணவு மற்றும் குடிபானம் சில்லறையியல் பிரிவுகள் ஆகிய வற்றில் கேள்விகளை எழுப்பும் என எதிர்பார்க்கலாம்.

இலங்கையின் நில ஆதனத்துறைக்கு கேள் வியை எழுப்ப வேண்டுமானால் நாட்டுக்கு வெளி நாட்டவர்களை ஈர்ப்பது அவசியம். இதற்கு சிறந்த உதாரணம் டுபாய் ஆகும். டுபாயிலுள்ள அதிகளவு உயர்ந்த மாடி வீடமைப்புத் தொகுதிகள் வெறுமனே காணப்படுகின்றன. இதற்குக் காரணம் தேசிய வெளி நாட்டவர்களுக்கு இவை சொந்தமாக இருப்பதாகும். ஆனால் இது டுபாய்க்கு பெரும் முதலீடாகும். ஏனெ னில் இந்த வெளிநாட்டவர்கள் விடுமுறை காலத் தில் இங்கு வந்து தங்கியிருக்கும் போதோ அல்லது வர்த்தக விடயங்களை மேற்கொள்ளும் போதோ அவர்கள் தமது பணத்தினை டுபாயில் செலவழிக் கின்றனர். வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஈர்க் கும் முகமாக இது வரியற்ற முதலீடாக சந்தைப்ப டுத்தப்படுகிறது. ஆனால் இந்த நாளின் முடிவில் டுபாயில் வர்த்தகத்தை ஆரம்பிக்க வேண்டுமானால் ஒருவருக்கு டுபாயில் அனுசரணையாளர் இருக்க வேண்டும். மேலதிகமாக நீங்கள் மருத்துவ வசதிக ளுக்கும் பொருளாதார அனுமதிப்பத்திரங்களுக்கும் மற்றும் பலவற்றுக்கும் கொடுப்பனவுகளை மேற் கொள்ள வேண்டும்.

எனவே நாடானது தொடர்ச்சியாக வருமானத் தைப் பெறுகிறது.

**கேள்வி: தகைமை மற்றும் தொழிற்றுறை தரங்க ளில் இலங்கையானது சர்வதேச சந்தையுடன் எவ் வாறு ஒப்பிடப்படுகிறது?**

**பதில்:** இலங்கையானது சர்வதேச தரத்தை அடைவதற்குத் தடையாக உள்ள சவால்களை தகர்த் தெறிவது அவசியமாகும். ஒப்பந்தக்காரர்கள் எனும் நிலையில் நாம் நில ஆதனத்துறையில் சில சவால் களை எதிர்நோக்குகிறோம். இதில் பிரதான காரணி களில் ஒன்று என நான் நம்புவது உள்நாட்டு உற்பத் தியாளர்களுக்கான மேலதிகமான பாதுகாப்பு ஆகும். உண்மைதான் உள்நாட்டு தொழிற்றுறையை நாம் பாதுகாப்பது அவசியம். எவ்வாறாயினும் உள்நாட்டு உற்பத்தியாளர்கள், உள்நாட்டில் மட்டுமன்றி சர்வ தேச ரீதியிலும் ஆற்றல் வாய்ந்தவர்கள் என்பதை உறுதிப்படுத்துவதால் சமநிலையைப் பேண முடியும்.

எமது நில ஆதனத்துறையை நோக்கும் போது குறிப்பாக சொகுசு மாடி வீடமைப்புத் தொகுதிகள் மலேசியா, சிங்கப்பூர் மற்றும் டுபாயில் உள்ளவற் றுடன் போட்டியிடும் நிலையில் உள்ளன. எனவே வடிவமைப்பதில் இருந்து பூர்த்தி செய்வது வரையில் சர்வதேசச் சந்தையில் இவற்றின் மதிப்பு பேணப்பட வேண்டும்.

வாடிக்கையாளர்கள் இந்தச் சொத்துகளை பெறும தியான விலையில் கொள்வனவு செய்ய வேண்டுமா னால், இவை மிகச் சிறந்த பூர்த்தியைக் கொண்டிருத் தல் வேண்டும். உள்நாட்டுச் சந்தையானது எமக்குத் தேவையானது. உற்பத்தி செய்ய முடியாவிட்டால் இந்தப் பொருட்களை நாம் இறக்குமதி செய்யலாம். அதாவது ஓடுகள் முதல் குளியலறை இணைப்புகள் வரையில் நாம் மிகச் சிறந்ததை இறக்குமதி செய்ய முடியும். எவ்வாறாயினும் அரசாங்கமானது உள் நாட்டு தொழிற்றுறையை பாதுகாப்பதற்காக இறக்கு மதிகளில் வரிகளை திணிக்குமானால் இது சர்வதேச தரத்தை ஊக்குவிக்காது எனலாம். இதன் காரணமாக எமது உற்பத்திகளின் கொள்விலையானது தேவை யற்று அதிகரிக்கும். இந்த செயற்கையான விலை அதிகரிப்பானது இலங்கையின் நில ஆதனச் சந் தையை சர்வதேச சூழலில் குறைந்த போட்டியுடைய தாக ஆக்கிவிடும். இதன் காரணமாக அனைத்து உள் நாட்டு உற்பத்தியாளர்களும் உலகளாவிய ரீதியான போட்டிக்குத் தயாராக வேண்டும். அரசாங்கமானது இந்தச் சூழலுக்கு ஆதரவளிப்பதுடன், அளவுக்கு அதிகமான பாதுகாப்பினை வழங்குவதைக் குறைக்க வேண்டும். மேலும் வெளிநாட்டுப் பணிகளின் பங்களிப்பினை அரசாங்கம் ஊக்குவிப்பதுடன், இது உள்நாட்டவர்களின் விருப்பத்துடன் நிர்மாணத்து றையில் நடைபெறும் போது உற்பத்தித் திறனில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடத்தக்கதோர் வளர்ச்சி ஏற்படும். இதற்குக் காரணம் என்னவெனில் அவர்கள் ஒன்றாகப் பணிபுரியும் போது அவர்கள் அறிவினைப் பகிர்ந்து கொள்வதுடன், புதிய ஆற்றல்களை கற்றுக் கொள்ள நேரிடுவதாகும்.

**கேள்வி: இலங்கையில் நிர்மாணத்துறை மற்றும் நிலங்களின் கொள்விலை தொடர்பாகக் கூறுவீர்களா?**

**பதில்:** முதலில் நான் குறிப்பிட்டது போன்று இலங்கையின் நிர்மாணத்துறை கொள்விலைகள் தொடர்ச்சியாக அதிகரித்து வருகின்றன. நிர்மாணத்துறையில் திட்டமுகாமைத்துவமானது பிரதம அம்சமாக விளங்குகின்ற போதிலும் எதிர்கால விலை உயர்வுக்கு வரவு – செலவினை ஒதுக்குவது எமக்கு மிகவும் கடினமானதாகும். வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்க வேண்டுமானால் எமது விலைகள் அதற்கேற்றவாறு இருக்க வேண்டும். இதற்குச் சிறந்த உதாரணம் அண்மைக்காலத்தில் பெறுமதி சேர் வரியில் ஏற்படுத்தப்பட்ட அதிகரிப்பு ஆகும். இது 11% இல் இருந்து 15%ஆக அதிகரிக்கப்பட்டது (பின்னர் மீண்டும் அரசாங்கத்தால் 11%ஆக குறைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.). இவ்வாறான அதிகரிப்பு ஏற்படும் போது நிர்மாணத்துறையில் அதிகளவு தாக்கத்தை உண்டுபண்ணும் எனலாம். சாதாரணமாக நாம் திட்டம் ஒன்றுக்கு வரவு– செலவினை மேற்கொள்ளும் போது பாதுகாப்பான எல்லை ஒன்றினை வகுத்துக் கொள்ள வேண்டும். வரி அதிகரிப்பானது தொடர்ந்திருந்தால் நாம் 20% வரையிலான பாதுகாப்பான எல்லை ஒன்றினை வகுத்திருக்க வேண்டும். இதனால் மாடி வீடமைப்புத் தொகுதியின் விலை அதிகரித்து நில ஆதனத்துறையானது போட்டியற்றதாக மாறியிருக்கும்.

**கேள்வி: 2016 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டமானது எவ்வாறு ஆதனச் சந்தையை பாதிக்கிறது?**

**பதில்:** சில இறக்குமதிகளின் வரிகள் நீக்கப்பட்டமையானது வரவேற்புக்குரியது. ஏனெனில் இதனால் உற்பத்திகளின் கொள்விலையானது வீழ்ச்சியடைந்துள்ளது. எவ்வாறாயினும் புதிய வதிவிட விசாவானது இலங்கைக்கு முதலீட்டாளர்களை ஈர்ப்பது அதிகரித்துள்ளது. எமது சட்டவிதிகள் சர்வதேச தரத்திற்கு அமைவாக உள்ளதால் ஏனைய நாடுகளுடன் போட்டியிட்டு வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்க முடியும். முதலீட்டாளர்களின் உறுதியைப் பேணும் வகையில் புதிய எழுச்சிகள் மேற்கொள்ளப்படும் என நம்புகிறோம்.

**கேள்வி: இலங்கையின் நில ஆதனச் சந்தையானது தொடர்ச்சியாக வளர்ச்சியடைய நிறைவேற்றப்படவேண்டிய முக்கிய தேவைகள் எவை?**

**பதில்:** 2016ஆம் ஆண்டுக்கான வரவு– செலவுத் திட்டமானது சில உறுதியளிக்கும் கொள்கைகளுடன் தீட்டப்பட்டுள்ளதால் நாம் சிறிது நம்பிக்கையுடன் உள்ளோம். அரசாங்கமானது முதலீட்டாளர்களின் நம்பிக்கையை ஊக்குவிக்கும் வகையில் செயற்பட வேண்டும்.

இலங்கையில் ஆற்றல் மிகுந்த ஊழியர்களுக்கு தட்டுப்பாடு நிலவுவது தொடர்பாக வெளிப்படுத்துவதில் அரசாங்கத்தின் உதவியை எதிர்பார்க்கிறோம். அதிகளவான இளைஞர்கள் இங்கு முச்சக்கரவண்டிகளையும் டக்ஸிகளையும் ஓட்டுகின்றனர். எனவே இலங்கைக்குள்ளேயே இக்குறைபாட்டினைத் தீர்க்க நாம் முன்வர வேண்டும். அல்லது சர்வதேச ஊழியர்களை இலங்கைக்கு கொண்டு வர வேண்டும். நிர்மாணத்துறையில் ஊழியர்கள் பற்றாக்குறையானது குறிப்பிடத்தக்க விடயமாக உள்ளது.

**கேள்வி: இலங்கையில் நில ஆதனத்துறையின் எதிர்காலம் தொடர்பாக நீங்கள் கருதுவது யாது?**

**பதில்:** நேரடியாக மற்றும் நேரடியற்ற வரிகள் மூலமாக நிர்மாண மூலப் பொருட்களின் விலைகள் அதிகரிப்பதால் நிர்மாண அபிவிருத்தியாளர்கள் பாரிய சவால்களை எதிர்நோக்குகின்றனர். விசேடமாக இறக்குமதி செய்யப்படும் நிர்மாண மூலப்பொருட்களின் விலைகள் மிகவும் அதிகரித்துள்ளன. ஆற்றல் மிகுந்த ஊழியர்கள் பற்றாக்குறை, அதிகார சபைகளின் அனுமதியைப் பெறுவதில் தாமதம், அடிக்கடி சட்ட விதிமுறைகளை மாற்றுவது என்பன நிலைமையை சிக்கலாக்கி வருகின்றன. எனவே நில ஆதனச் சந்தையில் முதலீடுகள் மேற்கொள்ளப்படும் போது இவை கவனத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இந்நிலையில் சர்வதேச தரத்துடன் கூடிய சொகுசு மாடி வீடமைப்புத் திட்டங்கள் நாட்டின் அபிவிருத்தியில் பாரிய பங்கினை வகிக்கும் என்பதில் சந்தேகமில்லை. எனவே நில ஆதனத்துறையின் குறைபாடுகள் நீக்கப்பட வேண்டும்.



20 Anniversary

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் வளர்ந்து வரும் சந்தையாக விளங்கும் குறைந்த வருமான வீடமைப்பு நிதித்துறை




வீடமைப்பு நிதிச் சந்தைகள் இன்று விஸ்தரிக்கப்பட்டு வருவதுடன், பல வளர்ந்து வரும் நாடுகளில் குறிப்பாக ஆசியப் பிராந்தியத்தில் அபிவிருத்தி உள்ளடங்கலாக பொருளாதார வளர்ச்சிக்கான சக்தி வாய்ந்த கருவியாக தம்மைப் பிரதிநிதித்துவப்படுத்தி வருகின்றன. வீடமைப்பு நிதிச் சந்தைகள் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (GDP) இரு பிரதான சேர்வைகளான மொத்த உள்நாட்டு நிலையான வதிவிட மூலதன உருவாக்கம் மற்றும் வீடமைப்புடன் தொடர்புடைய நுகர்வு ஆகியவற்றுக்கான சூழலை இயங்கச் செய்கின்றன.

இந்த சேர்வைகள் விஸ்தரிக்கப்படுவதானது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி வீதங்களுக்கான உந்துசக்தியாகும் எனலாம். அதாவது வீடமைப்பினை திட்டமிடல் முதல் நிர்மாணம் வரை, பராமரிப்பு முதல் மீளக் கட்டமைப்புவரை, மூலப்பொருட்களை உற்பத்தி செய்தல் முதல் களஞ்சியப்படுத்தல் வரை, வர்த்தகம், போக்குவரத்து மற்றும் விநியோகம், பயன்பாடுகள், விநியோகமும் பராமரிப்பும் ஆகியவற்றின் தாக்கங்கள் இதில் பங்களிப்புச் செலுத்துகின்றன.

இது தொழிலாளர்கள் முதல் உயர் சம்பளம் பெறும் தொழிற்தகைமையாளர்கள் வரை, தொழிற் சந்தையின் ஒவ்வொரு மட்டத்திலும் புதிய தொழில் வாய்ப்புகளை உருவாக்குகிறது. வீடமைப்பு நிதியும் வீடமைப்பு சந்தைகளுக்கு ஆதரவு வழங்குவதன் மூலமும் நிதிப்பிரிவு மற்றும் மூலதனச் சந்தைகளைப் பலப்படுத்துவதன் மூலமும் அபிவிருத்திச் செயற்பாடுகளில் முக்கிய பங்கினை வகிக்கிறது. உலக வங்கியின் கருத்துப்படி மேற்கத்தைய உலகில் சுமார் 270 துறைகள் வீடமைப்புடன் தொடர்புபட்டவையாக உள்ளன. இதேவேளை ஆசிய – பசுபிக் பிராந்தியத்தில் 40 க்கு மேற்பட்ட துறைகள் வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறையுடன் நேரடியாகத் தொடர்புடையனவாக உள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. தாய்லாந்தில் 600 துறைகள் தொடர்புபட்டுள்ளன. இப்பிரிவில் செலவுகளில் ஒரு அலகு அதிகரிக்குமானால் அலகுக்கு 5 மடங்கு வருமானத்தை உருவாக்கும் என உலக வங்கியானது மதிப்பிட்டுள்ளது. பல ஆய்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# MISTY MORNING VIEW FROM YOUR BEDROOM

Relax and enjoy magnificent hill views in a quiet place of Katumana, Nuwara Eliya. Stay in one of our newly renovated hotel rooms ideal for family vacations or extended stays.



Span Grand Holiday Homes offers Comfortable rooms with attached bathrooms with hot water, Private Terrace and Hill Views.

- Convenient location to access Hakgala Gardens, Gregory Lake, Horton Plains, Seetha eliya Temple
- Kitchen | Hot water | Tv | Wifi | BBQ | Car Parking



Span Grand
Dream. Explore. Discover

A : No.05, Misty Hills, Badulla Road, Katumana, Nuwara Eliya
T : 0522 051 067 / 0112 599 699
E : info@spangrand.com

www.spangrand.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கு இணங்க குறைந்தளவு வருமானத்தைத் தரும் வீடமைப்பு நிதியானது அபிவிருத்தி பொருளாதாரங்களில் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர் பிரிவு மற்றும் கிராமிய தொழிலில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது.

மேலும் வீடமைப்பு முதலீடானது வீட்டுரிமை வீதங்களில் அதிகரிப்பை ஏற்படுத்தி வருகின்ற அதே வேளை, இது சமூக ஸ்திரத்தன்மையில் பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்தி வருகின்றது எனலாம். வீட்டுரிமங்களில் அதிகரிப்பு ஏற்படுவதானது சொத்துச் சேமிப்பினை வினையூக்கப்படுத்துவதுடன் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர் பிரிவுக்கான ஆரம்பத்தையும் வழங்குகிறது.

அடுத்து முக்கியமான விடயம் என்னவென்றால், உறைவிட உரிமை - அதாவது வீட்டுரிமையானது வாக்குரிமை, சுகாதாரம், நீர், சுற்றுச் சூழல், கல்வி போன்றவை போன்று முக்கியமானதாகும். அடுத்து குறைந்த வருமான வீடமைப்பு முதலீடும் சமூக உள்ளகக் கட்டமைப்பு, குறிப்பாக சுகாதார நலப் பிரிவு ஆகியவற்றில் வாழ்வாதார நிபந்தனைகள் மற்றும் வீடமைப்புத் தரத்தினை மேம்படுத்துவதில் பங்காற்றுகிறது. இலங்கையின் வீடமைப்பு நிதிச் சந்தையும் இதற்கு விதிவிலக்கானதல்ல.

இலங்கையில் அரசாங்கத்தின் கீழ் செயற்படும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையானது குறைந்த வருமானத்தைப் பெறும் குடும்பங்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுப்பதில் பிரதான பங்கினை வகித்து வருவது நாம் அறிந்ததே. எனினும் குறைந்த வருமானம் பெறுவோருக்கும் மத்தியதர வருமானம் பெறுபவர்களுக்குமிடையில் இன்றும் இடைவெளி காணப்படுவதற்குக் காரணம், தனியார் பிரிவின் பங்குபற்றுதலே ஆகும். வீடமைப்பு நிதி மூலமான மிகச்சிறந்த வெளிப்படுத்தல் முறைமையே இந்த இடைவெளியைக் குறைக்கும் எனலாம்.

2012 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட குடிசனத்தொகை புள்ளிவிபர மதிப்பீடுகளின்படி, இறுதி முப்பது வருடங்களில் நாட்டின் சனத்தொகையானது 14.9 மில்லியனிலிருந்து 20.3 மில்லியனாக 37% ஆல் வளர்ச்சியடைந்துள்ளது. நாட்டின் சனத்தொகை வருடாந்த வளர்ச்சி வீதமானது 0.7



என பிராந்தியத்தில் குறைந்தளவினைப் பதிவு செய்துள்ளது. இதே காலப்பகுதியில் வதிவிடப் பங்கானது 2.9 மில்லியனில் இருந்து 5.7 மில்லியனாக 97%ஆல் அதிகரித்துள்ளது. இதற்கிணங்க வீட்டின் அளவானது 5 அங்கத்தவர்கள் என்பதிலிருந்து 3.5 அங்கத்தவர்கள் எனக் குறைவடைந்துள்ளது.

இந்தப் புள்ளி விபரங்கள் இலங்கையானது தேசிய வீடமைப்பு இடைவெளியை வெற்றிகரமாக சமாளித்துள்ளதை எமக்கு உணர்த்துகிறது. இது சுமார் 350,000- 400,000 அலகுகள் என 2001 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் இன்னும் போதியளவு இடைவெளியானது குறைந்த மற்றும் மத்தியதர வருமானம் பெறுவோருக்கிடையே நிலவுகிறது. வடக்கு, கிழக்கில் மீள்குடியேற்றம் காரணமாக அதிகளவு வீடுகளின் தேவையானது நிலவுகிறது.

சராசரி வருமானம் பெறும் குடும்பம் ஒன்றுக்கு வீடே பாரிய முதலீடாகும். உலக வங்கியின் தரவுகளுக்கு இணங்க, தனிப்பட்டவர்களுக்கு உரிமையான வீடுகள் வளர்ந்து வரும் பொருளாதாரத்தில் 75% தொடக்கம் 90% வரையிலான பங்கினை வகிக்கின்றன. அபிவிருத்தியடைந்த நாடுகளில் சராசரி சாதாரணமான வீட்டின் கொள்விலையானது வீட்டுரிமையாளர்களின் வருடாந்த வருமானத்தில் சுமார் 400% ஆக திகழும் அதேவேளை, வளர்ந்து வரும் நாடுகளில் இது 600% தொடக்கம் 700% வரையில் திகழ்கிறது. இலங்கையின் சிறந்த சூழல் காரணமாக நிலத்தின் விலை அதிகரித்து வருவதுடன், நிர்மாணப்பொருட்களின் விலையும் அதிகரித்துவருவதால் சாதாரண வீடு ஒன்றின் கொள்விலையானது வருடாந்த வருமானத்தில் 7 தொடக்கம் 8 மடங்காக அதிகரிக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான சவால்களின் பின்னணியில் போதிய நிலத்துடன், அடிப்படை வசதிகளுடன் சிறந்த பாங்குடைய வீடு ஒன்றுக்கு உரிமையாளராவதானது பெரும்பான்மையான இலங்கைக் குடும்பங்களுக்கு கனவாகவே உள்ளது. இதேவேளை இலங்கையில் வீடமைப்புத்துறையில் வீடமைப்புக் கடன்கள் வழங்கப்பட்டு வருவதுடன், இதற்காக வீட்டுரிமையாளரின் மாதாந்த வருமானத்தில் 40% ற்கு குறைவான தொகையே அறவிடப்படுகிறது.

இந்தச் சூழ்நிலையில் வீடமைப்புச் சந்தையினை வளர்ச்சியடையச் செய்யும் முகமாகவும் விஸ்தரிக்கும் முகமாகவும் வீடமைப்பு முறைமையை ஒருங்கிணைக்கும் முகமாகவும் ஏனைய அம்சங்கள் பல பங்களிப்புச் செய்கின்றன. இதற்கு ஒத்ததாக வீடமைப்பு நிதி வர்த்தகமானது வீடமைப்புத் துறையினை விஸ்தரிப்புச் செய்வதன் மூலம் இலாபம் மிகுந்த துறையாக அபிவிருத்தியடைவதற்கான பாரிய வாய்ப்பு நிலவுகிறது. வீடமைப்பு நிதியானது புதிய நிர்மாணத்திற்கான நிதி அல்லது சொத்துக் கொள்வனவு, பணம் ஆகியவற்றை மட்டும் உள்ளடக்கியிருக்கவில்லை. வீடமைப்பு நிர்மாணம், திருத்தங்கள், பொலிவாக்கல், நில ஆதன அபிவிருத்திகள் ஆகியவற்றுக்குப் போதியளவு நிதிகள் தேவைப்படுகின்றன.

நாட்டின் வீடமைப்பு நிதிச் சந்தையானது கடந்த தசாப்தத்தில் 30% ஆல் வளர்ச்சியடைந்துள்ளது. சந்தையின் பெறுமதியானது 2015 ஆம் ஆண்டின் இறுதியில் 517 பில்லியன் ரூபாவென மதிப்பிடப்பட்டுள்ளது. வணிக வங்கியியல் பிரிவானது சந்தையில் பரந்தளவு வருமானத்தை அதாவது 68% வருமானத்தைப் பதிவு செய்துள்ள அதேவேளை, உத்தரவு பெற்ற வங்கிகள் 32% சந்தைப் பங்கினையே பதிவு செய்துள்ளன. குறைந்த மற்றும் மத்தியதர வருமானப் பிரிவானது உத்தரவு பெற்ற வங்கிகள் பிரிவினாலேயே கையாளப்படுகிறது.

உலக வங்கியின் தரவுகளின்படி சந்தையின் அளவானது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 10% மட்டுமே ஆகும். உலக சராசரி வீதம் 30% ஆக இருக்கும் நிலையில், இது மிகவும் குறைந்ததாகும். இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அடமானப் பிரிவானது தற்போது 9% ஆக இருக்கும் நிலையில், 2020ஆம் ஆண்டளவில் இது 20% ஆக வளர்ச்சியடையும் என இந்தியாவின் தேசிய வீடமைப்பு வங்கியானது தெரிவித்துள்ளது. இந்த வீதமானது மலேசியாவில் 32%, சீனாவில் 15%, சிங்கப்பூரில் 44%, ஐக்கிய அமெரிக்காவில் 78% மற்றும் ஐக்கிய ராஜ்ஜியத்தில் 86% ஆக உள்ளது. இந்த புள்ளிவிபரங்கள் இலங்கையில் வீடமைப்பு நிதித்துறையில் சாத்தியமான வளர்ச்சி இருப்பதையே எடுத்தியம்புகின்றன. சனத்தொகைப் பிரிவானது நாட்டின் நிதிச் சந்தையில் வளர்ச்சியை ஊக்குவிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றது. மத்திய வங்கியின் தரவுகளின் அடிப்படையில் உள்நாட்டு மூலதன உருவாக்கத்தில் சனத்தொகைப் பிரிவானது வருடாந்தம் 240 பில்லியன் ரூபாவினை செலவழிக்கிறது. இது நாட்டின் மொத்த அடமான செலவில் 10% உயர்வானதாகும்.

மத்தியதர மற்றும் குறைந்தளவு வருமான மற்றும் முறைசாராப் பிரிவானது இச்சந்தையின் பூரண பிரதிநிதியாகவுள்ளது. சனத்தொகையின் பரந்தளவு வருமானம் மற்றும் உயர் மத்திய தரப் பிரிவுகள் முறைசார் நிதி முறைமையினால் திறம்பட செயற்படுத்தப்படுகின்றன.

மத்தியதர மற்றும் குறைந்தளவு வருமானம் பெறும் குடும்பங்களின் சனத்தொகையானது இரண்டு பிரிவுகளில் பிரிக்கப்படலாம். இதற்கிணங்க முதலாவது பிரிவினர் மாதாந்தச் சம்பளம் பெறுபவர்களாகவும் இரண்டாவது பிரிவினர் நாட்சம்பளம் பெறுபவர்கள் அல்லது கூலித் தொழிலாளர்கள் அல்லது விவசாயிகளாகவுமுள்ளனர். இவ்வாறான இரண்டாவது வகையினருக்கு தமது வருமான உறுதியையோ அல்லது சொத்து உறுதியையோ வெளிப்படுத்தும் வகையிலான ஆவணங்களையோ சமர்ப்பிக்க முடியாத நிலை உள்ளது. இவ்வாறான பிரிவினரால் எதிர்பார்க்கப்படும் தொகையை வங்கிக்குச் செலுத்த முடியும் என்பதே உண்மையாகும்.

அடுத்து குறைந்த வருமானம் பெறும் துறையை எடுத்துக்கொண்டால் குடும்ப நிதியை நிர்வாகம் செய்வதில் பெண்களே பிரதான பங்கினை வகிக்கின்றனர். இதனால் பெண்களே நிதி தொடர்பான முடிவுகளை மேற்கொள்வதால் தாமதமின்றி மீள்கொடுப்பனவுகளைச் செய்வார்கள் என எதிர்பார்க்கலாம். மேலும் வாடிக்கையாளர்கள் கல்வியறிவு பெற்றவர்களாக இருப்பது கடன் தவறுதல் முகாமைத்துவத்தில் மிகவும் சக்திவாய்ந்த அம்சமாகத் திகழ்வதை இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

இலங்கை மத்திய வங்கியின் மதிப்பீடுகளின்படி 5.2 மில்லியன் வீட்டுரிமையாளர்கள் 862 மில்லியன் ரூபாவினை 2012 ஆம் ஆண்டின் வீடமைப்பு மற்றும் வீடமைப்பு தொடர்பான நுகர்வுகளுக்காக செலவிட்டுள்ளனர். இது மொத்த வீட்டுரிமையாளர்களின் நுகர்வுச் செலவுகளில் 16% ஆகும். இதற்கிணங்க 2012 ஆம் ஆண்டில் இது மொத்த மூலதன உருவாக்கத்தில் 23% ஆகும். இந்நிலையில் 2012 ஆம் ஆண்

**மத்தியதர மற்றும் குறைந்தளவு வருமானம் பெறும் குடும்பங்களின் சனத்தொகையானது இரண்டு பிரிவுகளில் பிரிக்கப்படலாம். இதற்கிணங்க முதலாவது பிரிவினர் மாதாந்தச் சம்பளம் பெறுபவர்களாகவும் இரண்டாவது பிரிவினர் நாட்சம்பளம் பெறுபவர்கள் அல்லது கூலித் தொழிலாளர்கள் அல்லது விவசாயிகளாகவுமுள்ளனர். இவ்வாறான இரண்டாவது வகையினருக்கு தமது வருமான உறுதியையோ அல்லது சொத்து உறுதியையோ வெளிப்படுத்தும் வகையிலான ஆவணங்களையோ சமர்ப்பிக்க முடியாத நிலை உள்ளது. இவ்வாறான பிரிவினரால் எதிர்பார்க்கப்படும் தொகையை வங்கிக்கு செலுத்த முடியும் என்பதே உண்மையாகும்**

டில் வணிக வங்கிகள் பிரிவானது வாடிக்கையாளர் சந்தையில் 206 பில்லியன் ரூபா சந்தைப் பெறுமதியை பதிவுசெய்துள்ளது. இது நாட்டின் வீடமைப்பு நிதிச் சந்தையில் சுமார் 25% இனை பதிவு செய்துள்ளதுடன், கடந்த 5 வருடங்களில் மந்தமான வளர்ச்சியையே காண்பிக்கிறது. விசேட அனுமதி பெற்ற வங்கிகள் துறையில் (LSB) 17% சந்தைப்பங்குடன் HDFC வங்கியானது பிரதான பங்கினை வகிக்கிறது. கடந்த 4 வருடங்களில் 12% வருடாந்த சராசரி வளர்ச்சி வீதத்தைக் காண்பிப்பதுடன், உலக வங்கியின் மதிப்பீடுகளின்படி 183 பில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட இலக்கினை அடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**- எம்.ஜி.**



20 Anniversary

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளம்பரங்களுக்கு அதிகளவு நம்பகத்தன்மையை வழங்கும் பத்திரிகைகள்



## Phoenix Advertising


### ஊடகப் பணிப்பாளர் எட்ரியன் செல்வதுரை

தொழில்நுட்ப ரீதியாக மாற்றமடைந்து வரும் உலக மயமாக்கலுக்கமைய இன்று விளம்பரத் துறையானது டிஜிட்டல் மயப்படுத்தப்பட்டுள்ளது. பொதுவாக விளம்பரத்துறையானது அச்சு, இலத்திரனியல் ஊடகங்களை அடிப்படையாகக் கொண்டது. பொருட்கள், சேவைகள் தொடர்பாக மக்களுக்கு தெரியப்படுத்தப்படுவதுடன், அதன் மேல் மக்களுக்கு கேள்வி, விருப்பத்தை ஏற்படுத்துவதே விளம்பரங்களின் நோக்கமாகும்.

இலங்கையிலுள்ள விளம்பர முகவர் அமைப்புகளில் 2ஆவது இடத்தில் உள்ள Phoenix Advertising நிறுவனமானது 1970ஆம் ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், தற்போது இந்நிறுவனமானது உலக விளம்பர முகவரமைப்பான Ogilvy Advertising நிறுவனத்துடன் இணைந்து செயற்படுகின்றது. இந்நிறுவனத்தின் ஊடக பணிப்பாளரான எட்ரியன் செல்வதுரை விளம்பரத்துறையின் வளர்ச்சி, எதிர்காலப் போக்குகள் தொடர்பாக தெரிவிக்கையில்;

'விளம்பரத்'துறையில் ஊடகங்களின் பங்களிப்பானது முக்கியமானதாகும். பொருட்கள், சேவைகளை காட்சிப்படுத்துவதற்கு ஊடகமானது விளம்பரப்படுத்தலின் கண்ணாடியாக உள்ளது. நுகர்வோரின் ஊடகத் தெரிவின் அடிப்படையில் விளம்பரப்படுத்தலானது வேறுபடுகின்றது. இலங்கையைப் பொறுத்தவரையில், இலத்திரனியல் ஊடகமாக தொலைக் காட்சி பிரதான இடத்தில் உள்ளது.

தொழில்நுட்ப ரீதியாக மாற்றமடைந்து வரும் ஊடகத்துறையானது இன்று மொபைல், இணையத்தளம் என விரிவடைந்து வருவதுடன் எதிர்காலத்தில் நிஊணரூடிணனுஜ அடிப்ப






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டையாகக் கொண்டு அமையவுள்ளது.

விஞ்ஞான தொழில்நுட்ப அம்சங்களுக்கமைய நுகர்வோரின் ஊடகத் தெரிவும் மாற்றமடைந்து வந்துள்ளது. இன்று தொலைக்காட்சியானது Youtube, Online ஆக விரிவடைந்துள்ளதோடு, அச்சு ஊடகமான பத்திரிகையானது இன்று உகச்ணீனுணூ என மாற்றமடைந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

விளம்பரப்படுத்தலில் அச்சு ஊடகங்களின் பங்களிப்பு தொடர்பாக எட்ரியன் செல்வதுரை மேலும் தெரிவிக்கையில்; 'தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படும் விளம்பரங்களை விட அச்சு ஊடகமான பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்களில் அதிகளவான விபரங்களை நுகர்வோருக்கு வழங்க முடியும். மேலும் பத்திரிகையில் வெளிவரும் செய்திகளானது நம்பகத்தன்மை கூடியதாகவுள்ளன. இதற்கமைய பத்திரிகையில் வெளியிடப்படும் விளம்பரங்களுக்கும் அதிகளவு நம்பகத்தன்மை கிடைக்கின்றது. அத்துடன் இவற்றுக்கான ஆயுட் காலமும் தொலைக்காட்சியை விட அதிகமாக உள்ளது.

20 வருட நிறைவினைக் கொண்டாடும் தினக்குரல் தொடர்பாக அவர் தெரிவிக்கையில், இலங்கையின் தமிழ் பத்திரிகை வரலாற்றில் தினக்குரலானது 2 ஆவது இடத்தில் உள்ள போதிலும், யாழ். தினக்குரல் என்ற பதிப்பானது விளம்பரதாரர்கள் தமிழ் மக்களை முதல் நிலைப்படுத்தி விளம்பரங்களை பிரசுரிக்கும் போது தினக்குரலை முதல் நிலைப்படுத்துவதற்கு அதிக வாய்ப்புள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

அச்சு ஊடகங்களில் விளம்பரங்களை பிரசுரிப்பதற்கு செலவிடும் தொகையானது தொலைக்காட்சியை விட அதிகமாக உள்ளது. அதாவது தொலைக்காட்சியில் விளம்பரப்படுத்தும் போது நுகர்வோர் ஒருவருக்கு செலவிடும் தொகையானது குறைவாகவே உள்ளது. ஆனாலும் அச்சு ஊடகத்தில் நம்பகத்தன்மை, ஆயுட்காலம் ஆகிய காரணங்கள் பத்திரிகைகளும் விளம்பர ஊடகங்களின் முக்கிய பங்கு வகிக்கின்றது. விளம்பரப்படுத்தலில் ஏற்படும் தொழில்நுட்ப மாற்றங்களுக்கு அமைய அச்சு ஊடகமானது தமது நடைமுறைகளை மாற்றியமைத்து இளைய தலைமுறையினரைக் கவரும் வகையில் அமைவது சிறப்பானதாக அமைய வேண்டும். இதற்கமைய விளம்பரத்துறையில் அச்சு ஊடகமானது தமது இருப்பை முதனிலைப்படுத்த முடியும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முறையான முகாமைத்துவமும் தலைமைத்துவமும் நிறுவனத்தின் வளர்ச்சிக்கும் தொழிற்பாட்டிற்கும் இன்றியமையாதவை




விளம்பரம் இல்லாமல் வியாபாரம் இல்லை என்பது ஒரு பிரபலமான கூற்று ஆகும். விளம்பரம் என்பது வர்த்தகத்துறையுடன் பின்னிப் பிணைந்துள்ள அடிப்படைக் கூறாகத் திகழ்ந்து வருகிறது. ஒரு நிறுவனத்தின் உற்பத்தி அல்லது சேவையை ஊக்குவிப்பதற்கு அல்லது விற்பனை செய்வதற்கு உபயோகப்படுகின்ற சந்தைப்படுத்தல் தொடர்பாடல் வடிவமே விளம்பரப்படுத்தல் ஆகும். பத்திரிகைகள், சஞ்சிகைகள், தொலைக்காட்சி ,வானொலி, வெளிப்புற விளம்பரப்படுத்தல் அல்லது இவை போன்ற பழைமையான விளம்பரப்படுத்தல் முறைமைகளுடன் தற்போது டிஜிட்டல் என்ற புதிய ஊடகமும் இணைந்துள்ளது என்று குறூப் எம் மீடியா பிரைவேட் லிமிட்டெட்டின் பணிப்பாளரும் பிரதம தொழிற்பாட்டு அதிகாரியுமான சப்றி ஹனீஸ் தெரிவித்துள்ளார்.

அவரிடம் கேட்கப்பட்ட கேள்விகளும் அவற்றுக்கு அவர் அளித்த பதில்களும் வருமாறு;

**குறூப் எம் மீடியா பணிப்பாளரும் பிரதம நிறைவேற்றதிகாரியுமான சப்றி ஹனீஸ்**

**கேள்வி: தலைமைத்துவத்தின் முக்கியத்துவம் பற்றிக் கூறுங்கள்?**

**பதில்:** ஒரு நிறுவனத்தின் திறன்மிக்க செயற்பாட்டிற்கும் நிறுவன ரீதியான இலக்குகளை அடைந்து கொள்வதற்கும் முகாமைத்துவத்தின் முக்கியமான செயற்பாட்டிற்கும் தலைமைத்துவம் அவசியமாகும். செயற்பாடுகளுக்கு வடிவம் கொடுத்தல், ஊக்குவித்தல்,

**சிறந்த வாடிக்கையாளர் சேவையே நீண்டகால வெற்றிக்கு வழிகோலும். வாடிக்கையாளரே ஒரு நிறுவனத்தின் தொழிற்பாட்டிற்கான அத்திவாரம். வாடிக்கையாளர் சேவையைச் சிறப்பாக வழங்குவதன் மூலமாக தொடர்ந்தும் அவர்களை எமது வாடிக்கையாளர்களாகப் பேண முடியும். வாடிக்கையாளர்களுடன் சிறந்த உறவுமுறைகளைப் பேணுதல், வாடிக்கையாளர்களுக்கு திருப்திகரமான சேவைகளையோ உற்பத்திகளையோ வழங்குதல், விற்பனைக்குப் பின்னரான சேவை, அவர்களின் விருப்பு, வெறுப்புகளைச் செவிமடுத்து அதற்கு உரிய நடவடிக்கைகளை எடுத்தல் என பல்வேறு அம்சங்கள் இதனுடன் தொடர்புபட்டுள்ளன.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிகாட்டுதல், நம்பிக்கையை உருவாக்குதல், மன உறுதியைக் கட்டியெழுப்புதல், சிறப்பான பணிச் சூழலைத் தோற்றுவித்தல் மற்றும் இணைப்பாடல் ஆகியன தலைமைத்துவத்தின் பிரதான அம்சங்களாகக் காணப்படுகின்றன.

**கேள்வி: அதிக வேலைப்பளுவின் மத்தியிலும் அதனைச் சரியாக முகாமைத்துவப்படுத்திக் கொண்டு செல்ல எவ்வாறு முடிகிறது?**

**பதில்:** தலைமைத்துவப் பணி என்பது உண்மையில் மிகவும் நெருக்கடி மிக்கது. நிறுவன ரீதியாக எழுகின்ற அனைத்துச் சவால்களையும் உறுதியுடன் எதிர்கொண்டு ஊழியர்களை ஒன்றிணைத்து அவற்றை வெற்றிகரமாக முறியடிப்பதில் தலைமைத்துவம் பாரிய பங்கு வகிக்கின்றது. வேலைப் பளுவிற்கு மத்தியிலும் எவ்விதமான சலிப்புமின்றி அணியில் உள்ள அனைவரையும் உற்சாகப்படுத்தி தைரியமூட்டுவது மிகவும் முக்கியமானது. தலைமைத்துவத்தில் சறுக்கல் ஏற்படுகின்ற சந்தர்ப்பங்களில் முழு நிறுவனமுமே சரிவு காண ஆரம்பிப்பது நடைமுறை யதார்த்தமாகும். ஆகவே முறையான முகாமைத்துவமும் தலைமைத்துவமும் ஒரு நிறுவனத்தின் சீரான வளர்ச்சிக்கும் தொழிற்பாட்டிற்கும் இன்றியமையாதவை.

**கேள்வி: நவீன சந்தையில் வளர்ந்து வரும் இளைஞர்களுக்குள்ள புதிய வாய்ப்புகள் எவை?**

**பதில்:** வைத்தியர்கள், பொறியியலாளர்கள், கணக்காளர்கள் என்ற ஒரு குறுகிய வட்டத்திற்குள் நாம் எல்லோரும் சிந்தித்த ஒரு காலம் முன்பு இருந்தது. சமூக ரீதியாகவும் இது அந்தஸ்து ரீதியான கண்ணோட்டத்தில் நோக்கப்பட்டது. ஆனால், அவையெல்லாம் தற்போது மலையேறி விட்டன.இது நவீன உலகம். அனைத்துமே டிஜிட்டல் மயமாகி விட்டன. எண்ணற்ற தொழிற்துறைகள் தற்போது எம்முன்னே காணப்படுகின்றன. உதாரணத்திற்கு விளம்பரத் துறை கூட தொழில் ரீதியாக மிகச் சிறந்த ஒரு துறையாக அமைந்துள்ளது. விளம்பரப்படுத்தலின் திட்டமிடல் முறைமை முதல் அதனை அமுலாக்கம் செய்யும் நடவடிக்கை வரையும் அனைத்துமே தொழில் நுட்ப ரீதியாக முன்னேற்றம் கண்டுள்ளன. எமது நாட்டில் விளம்பரத்துறையில் பாரிய வாய்ப்புகள் காணப்படுகின்ற நிலையில் அதற்குள் காலடியெடுத்து வைக்கின்ற இளைஞர், யுவதிகளின் எண்ணிக்கை இன்னும் குறைவாகவே காணப்படுகின்றது.

**கேள்வி: வாடிக்கையாளர் சேவை பற்றி?**

**பதில்:** சிறந்த வாடிக்கையாளர் சேவையே நீண்டகால வெற்றிக்கு வழிகோலும். வாடிக்கையாளரே ஒரு நிறுவனத்தின் தொழிற்பாட்டிற்கான அத்திவாரம். வாடிக்கையாளர் சேவையைச் சிறப்பாக வழங்குவதன் மூலமாக தொடர்ந்தும் அவர்களை எமது வாடிக்கையாளர்களாகப் பேண முடியும். வாடிக்கையாளர்களுடன் சிறந்த உறவுமுறைகளைப் பேணுதல், வாடிக்கையாளர்களுக்கு திருப்திகரமான சேவைகளையோ உற்பத்திகளையோ வழங்குதல், விற்பனைக்குப் பின்னரான சேவை, அவர்களின் விருப்பு, வெறுப்புகளைச் செவிமடுத்து அதற்கு உரிய நடவடிக்கைகளை எடுத்தல் என பல்வேறு அம்சங்கள் இதனுடன் தொடர்புபட்டுள்ளன.

அடுத்து 20 ஆவது ஆண்டு தனித்துவமான பயணத்தை எட்டியுள்ள தினக்குரல் பத்திரிகைக்கு எமது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். எமது நிறுவனத்துடன் மிக நீண்ட காலமாக உறவைப் பேணி வந்துள்ள ஒரு பத்திரிகை என்ற வகையில் எமக்கும் பெறுமதி மிக்க எமது வாடிக்கையாளர்களுக்கும் இப் பத்திரிகை எப்போதும் சிறப்பான ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்கி வந்துள்ளது.

தினக்குரல் பத்திரிகை இன்னும் பல தசாப்தங்கள் தொடர்ந்தும் அனைவருக்கும் தகவல்களை வழங்கும் பயணத்தை சிறப்பாகத் தொடரட்டும் என எமது நிறுவனத்தின் சார்பில் அதன் ஆசிரியர் மற்றும் ஊழியர்களுக்கு எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

# பல்லினத்தன்மையைப் பேணும் தினக்குரலின் பயணம் தொடர பிரார்த்திப்போம்



பேராசிரியர்
**எம்.எம்.எம்.நாஜிம்,**
உபவேந்தர்,
தென்கிழக்குப்
பல்கலைக்கழகம்

ஈழத்தின் பத்திரிகை வரலாறு ஒரு நூற்றாண்டைக் கடந்து கன காலமாகி விட்டது. மிகச் சுவாரஸ்யமான பக்கங்களை அதில் புரட்டிப் பார்க்க முடியும். சுமார் இரு தசாப்த காலமாக அதன் ஒரு பாத்திரத்தினைத் தினக்குரல் ஏந்தி இருப்பது மிக்க மகிழ்ச்சி தருகிறது. தினமும் ஒரு பல்கலைக்கழகத்திற்குள் நுழைந்து வெளியேறுவதுபோல தினமும் அந்தக் குரல் நமக்குள் ஒரு தாக்கத்தை ஏற்படுத்திக் கொண்டே இருக்கிறது. திங்கள் நலந்தானா முதல் புதன் வசந்தம், சனி புதிய பண்பாடு வரை பல்துறை நோக்கினைத் தினக்குரல் வாராந்தம் நமக்கு அளிக்கின்றது. மகிழ்ச்சியான ஒரு பொழுதுபோக்கினையும் அறிவுபூர்வமான ஒரு தகவல் பரிமாற்றத்தையும் தினக்குரல் நமக்குள் ஏற்படுத்தியிருக்கிறது.

ஈழத்தின் இந்தப் பத்திரிகை வரலாற்றுத் தடத்தில் நாம் இன்று ஒரு புதிய காலத்திற்குள் நுழைந்திருக்கிறோம். பத்திரிகை வரலாற்றில் ஒரு தீர்க்கமான கட்டத்தினை அடைந்திருக்கிறோம். உலகத்தின் பல்வேறு நாடுகளில் அறிமுகப்படுத்தப்பட்ட தகவல் அறியும் சட்டமூலத்தினை நாம் அனுபவிக்கும் காலத்திற்குள் வந்திருக்கின்றோம். ஒரு நாட்டின் அரசு பல்வேறு துறை ரீதியான கட்டமைப்புக்களைக் கொண்டது. அதிலிருந்துதான் அதனது ஆட்சியின் தன்மை குறித்துப் பேசப்படுகிறது.

ஒரு நாட்டின் அரசினது அச்சாணியாகச் சட்டத்துறை, நீதித்துறை, நிர்வாகத்துறை என்பன அமைந்து விடுகின்றன. ஆனால், அதனுடைய இன்னுமொரு காலாகப் பத்திரிகைத்துறை அமையும் என்பர். அம்மூன்று துறையினதும் விவகாரங்களைப் பேசுகின்றதும் வெளியே கொண்டு வருவதுமான மிக முக்கியமான பாத்திரத்தை பத்திரிகை ஏந்தியிருக்கிறது. வலுவுள்ள ஜனநாயகம் உருவாவதற்கும் நிலைபெறுவதற்கும் பத்திரிகைத்துறை மிக அவசியமானதாகும்.

இன்று நல்லாட்சி என்ற கோசத்தோடு நமது நாட்டின் அரசியல் பாதையைச் சீரமைப்பதற்கு முனைந்திருக்கிறார்கள். இதனை முழுமையாக அனுபவிப்பதற்கு பத்திரிகைத்துறையும் துணை செய்யும். தகவல்தான் மனிதனை ஆட்டிப் படைக்கவும் அதேநேரம் நிதானத்திற்குக் கொண்டு வருவதற்கும் உதவுகிறது. உயிர் வாழ்கிற மனித ஜீவிகளின் மிக முக்கியமான ஒரு பண்பாக தகவல் அறிவது அமைந்து விடுகிறது.

1766 ஆம் ஆண்டே சுவீடன் தகவல் அறியும் சட்ட மூலத்தை அறிமுகப்படுத்திவிட்டது. ஆனால், அதிலிருந்து பல நூற்றாண்டுகளுக்குப் பின்னர்தான் நமது நாடு அது பற்றிச் சிந்தித்திருக்கிறது. நாம் நாகரிக வளர்ச்சியை அடைந்திருப்பினும் அதில் நமக்குள் பல குறைபாடுகள்



20 Anniversary

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கின்றன. நமது நாகரிகம் முழுமை பெற்றதாக இல்லை. அதனை நாம் சீர் செய்ய வேண்டியிருக் கிறது. அதற்கான சந்தர்ப்பத்தைத் தகவல் அறியும் உரிமை நமக்கு வழங்குகிறது.

தகவல் அறியும் உரிமை பத்திரிகையாளர்களுக்கு மாத்திரம் உரிய பணியல்ல. அது பொதுமக்களுக்கு உரிய மிக உயர்ந்த பணியாகும். அவர்களின் அடிப் படை உரிமையோடு சம்பந்தப்பட்ட விவகாரமாகும். இது தகவல்களைச் சட்டப்படி கேட்டுப்பெறும் உரி மையாகும். இன்று ஒரு பல்கலைக்கழகத்தின் உப வேந்தராகப் பணியாற்றுகிற நான் எதையும் வெளிப் படைத் தன்மையுடன் செயற்படுத்த வேண்டிய தேவை இருக்கிறது. மாணவர்களுக்கும் ஆசிரியர் களுக்கும் ஊழியர்களுக்கும் பதிலளிக்கத் தயாராக இருக்கின்ற அதேவேளை, பொதுமக்களுக்கும் அந் தப் பதிலினை அளிக்க வேண்டும். அது தடைப்படு கிற போதுதான் அந்த வெளிப்படைத்தன்மை இல் லாத போதுதான் முரண்பாடுகள் உருவாகின்றன, விமர்சனங்கள் உருவாகின்றன.

அவ்வாறான வெளிப்படைத் தன்மை இல்லாத போது சுயமாகவே நமக்குள் அச்சம் உருவாகிறது. அந்த அச்சம் குற்றமுள்ள சூழ்நிலையைத் தோற்று விக்கிறது. உண்மையில் வெளிப்படைத் தன்மை பகிரப்படுகிறபோது ஒரு போதும் அச்சம் உருவா காது. நாம் நிமிர்ந்து செயற்பட அது வழிவகுக்கும். ஆக உயர்ந்த கல்வி மட்டத்திலுள்ளவர்கள் சம்பந்தப் படுகின்ற இடத்திலேயே தகவல்கள் குறித்த முரண் பாடுகள் இருக்குமானால் அல்லது வெளிப்படைத் தன்மை இல்லாதிருக்குமானால் வெளியிலே அது எவ்வளவு தூரம் பாதிப்பை ஏற்படுத்தும். அந்தப் பாதிப் பிலிருந்து நாம் விலகிக் கொள்வதற்கு இந்தச் சட்ட மூலம் நல்லதொரு சந்தர்ப்பத்தினை நம் எல்லோ ருக்கும் வழங்குகிறது.

நமது பாராளுமன்ற உறுப்பினர்களும் ஏனைய மக்கள் பிரதிநிதிகளும் இந்தக் கடப்பாடு உடை யவர்களே. அவர்களும் மக்கள் கேள்விகளுக்குப் பதிலளிக்கத் தயாராக இருப்பார்களானால் சீரான ஆட்சி ஏற்படுவது தவிர்க்க முடியாதிருக்கும். இதே போன்று நிர்வாக சேவையாளர்கள், உத்தியோகத் தர்கள் அனைவரும் மக்களுக்குப் பொறுப்புக் கூற வேண்டியவர்களாக இருக்கின்றனர். இந்தியாவின் பிரபல சமூக சேவையாளரான அருணா ரோய் என்ப வர். அடிப்படை உரிமைகளைக் கேட்காது அதாவது உணவு, உடை பற்றிக் கேள்வி எழுப்பாது தகவல் களை அறியும் போராட்டத்திற்காகக் கேள்வி எழுப்பு பவர்களை பைத்தியங்கள் என எண்ணுகின்றனர் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இது ஒரு முக்கியமான விடயம். உணவு, உடை போன்றதே தகவல்களும் ஆகும். சிலவேளைகளில் உணவில் செலுத்துகிற அக்கறையை விட தக வல்களை அறிவதில் நாம் ஆர்வமாக இருப்போம். நம் தகவல்களை அறியும் ஆர்வத்திற்கு கிரிக்கெட் போட்டிக் காலமும் தேர்தல் காலங்களும் நல்ல உதா ரணங்களாகும்.

நமது சொந்த மகனிடம் கடைக்கு அனுப்பிய காசின் செலவினைப் பற்றி அறிய விரும்புகிற நாம் நமது அரசாங்கத்தின் வரவு - செலவினை அறிய ஆர்வப்படுவதில்லை. அதை ஆராய்ந்து பார்ப்பது மில்லை. பொதுவாகத் தகவல்களை அறிவதன் மூலமே நாம் நமது சமூகப் பிரச்சினைகளுக்கான தீர்வுகளைக் கூடப் பெற்றுக்கொள்ள முடியும். நமக் காகப் போடப்பட்ட பாதைகளின் செலவு யாது? நமக் காகக் கட்டப்பட்ட கட்டிடங்களின் செலவு என்ன? நமக்காக வாங்கப்பட்ட காணிகளின் விபரம் என்ன? நமது கல்வித் தகைமைகளைக் கொண்டு கொடுக் கப்படுகின்ற உத்தியோகங்களின் விபரங்கள் என் ன? இவ்வாறு அனைத்தையும் நாம் வினவ முடியும்.

இவற்றைக் கேட்பதற்கு நாம் தயாராக இல்லை யென்றால் நமக்காகப் பொறுப்புச் சாட்டப்பட்டவர் களின் அதாவது அரசியல்வாதிகள், நிருவாகிகள், உத்தியோகத்தர்களின் பொறுப்பைப் பற்றி நாம் அக் கறை செலுத்தவில்லை என்பதேயாகும். தகவல் களை அறிகின்ற உரிமை இல்லாது போகுமாயின் சட்டம், ஜனநாயகம், அரசியலமைப்பு முதலானவை அனைத்துமே கேலிக்கூத்தாகி விடும். நமது சமூகங் களுக்கான உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்கும் இந்தச் சட்டமூலம் மிகவும் அவசியமானதாகும்.

தினக்குரலின் இருபதாவது அகவை பூர்த்திக் காலத்தில் இந்தச் சட்டமூலத்தை அனுபவிக்கக் கிடைத்திருப்பதும் இன்னும் சிறப்பான எதிர்காலத்தை நோக்கி நமது பத்திரிகை உலகம் செல்ல வழிவகுக் கும். பத்திரிகைக்குரிய நடுநிலைமை தவறாது இலங் கையின் பல்லினத் தன்மையைப் பேணி தினக்குரல் என்றும்போல் இனியும் பயணிக்கப் பிரார்த்திப்போம்!


20 Anniversary

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தினக்குரல் குடும்பம்





# தினக்குரல் குடும்பம்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தினக்குரல் குடும்பம்











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்றிணைந்து வாழ்வதற்காக கற்றல் சில அவதானங்கள்



**பேராசிரியர்
மா.சின்னத்தம்பி**
முன்னாள் தலைவர்,
கல்வியியல்துறை
மற்றும்
சட்டத்துறை,
யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்

உலகம் முழுவதும் கல்வியானது மிகவும் விரிவடைந்து, பன்முகப்பட்டு, வலிமையுடன் வளர்ச்சியடைந்துள்ளது. ஏறக்குறைய இருநூறு ஆயிரம்கோடி டொலர்கள் உலகம் முழுவதும் கல்வியில் முதலீடு செய்யப்படுகின்றன. அரசாங்கங்களும் தனியார் துறையினரும் தொழிற்துறையினரும் இதில் முதலீடு செய்து வருகின்றனர். அசாதாரண நிலைமைகளும் நெருக்கடிகளும் மிகுந்த நாடுகளிலும் சமூகங்களிலும் சிதைந்துபோன கல்வி நிறுவனங்களையும் புறக்கணிக்கப்பட்ட மக்கள் தொகுதியினரையும் மையப்படுத்தி மனித வாழ்வு பற்றிய நீதியுணர்வுடன் அரச சார்பற்ற நிறுவனங்களும் கல்வியிலான இடைவெளிகளை நிரப்பவும் பலவீனங்களை அகற்றவும் முயன்று வருகின்றன.

இயற்கையின் எல்லா நிலைகளிலும் மறைநிலையில் புதைந்திருக்கும் ஆற்றல்களையும், இயலளவினையும் கண்டறிந்து பயன்படுத்துவதற்கான அறிவியல் சார்ந்த கல்வி முனைப்புக்களில் முன்னொருபோதும் இல்லாத அளவுக்கு ஆர்வமும், வேகமும் அதிகரித்து வருகின்றன. பேரின மாதிரியிலும், நுண்ணியல் மாதிரியிலும் இத்தகைய கல்வி எத்தனங்கள் பல்கிப்பெருகி வருகின்றன. புத்தாக்க முயற்சிகள் ஒன்றுடன் ஒன்று இணைந்து நவீன விஞ்ஞானக்கல்வி மற்றும் ஆராய்ச்சிகளை பொருள்சார் மயப்படுத்துவதில் அகர முயற்சிகளை போட்டிபோட்டுக்கொண்டு பல்வேறு நாடுகளும் மேற்கொள்கின்றன. இதில் ஒரு அறிவுப் பெருக்கமும் அவற்றைப் பரப்புவதில் புயல்வேகமும் காணப்படுகிறது.

இந்த வேகத்தில் மனிதத்துவம் வேகமாகத் தொலைந்து வருகிறது. மனிதனின் உள்முக நோக்கும், உணர்வும் மறைந்து வருகின்றது. உணர்வும், நேயமும் அதன் வழியாகப் பெறப்படும் மகிழ்ச்சியும் பாதுகாக்கும் உயர்ச்சியும் தேய்ந்து வருகின்றன. விஞ்ஞானப் பொறிமுறையின் பேரிரைச்சலுக்குள் மனிதத்துவம் வெளிப்படுத்தும் சமுதாயப் பண்புநிலை சார்ந்த தொனி அடங்கிப் போகின்றது.

இந்த மாற்றங்களை சர்வதேச கல்வி உலகு உணர்ந்துள்ளது. தனது பரிசீலனைக்கு எடுத்துள்ளது. மனிதர்களுடன் வாழ்வதனால் மறுக்கப்படுகின்ற சகமனிதர்களின் உணர்வுகள், அவற்றின் முக்கியத்துவம் பற்றி உலக கல்விச் சிந்தனையாளர்களின் ஆய்வரங்குகளிலும், பயிலரங்குகளிலும் நிறையவே பேசப்படுகின்றன. அவை சார்ந்த உலக அறிவு திரட்டப்படுகின்றது. அதற்கான சர்வதேச செயற்றிட்டங்கள் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

இதனடிப்படையில் மனிதர்கள் பொது மகிழ்வுடனான முன்னேற்றங்களுக்காக இணைந்து வாழ்வதற்கு வழிகாட்டி, வலுச்சேர்க்கும் கல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியின் தேவை, செயன்முறை மற்றும் விளைவுகள் பற்றி ஆராய்வதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகின்றது.

**உயர்ந்தெழும் உலகின் தொனி**

ஐக்கியநாடுகள் அமையத்தின் கல்வி, அறிவியல் மற்றும் கலாசார நிறுவனம் [யுனெஸ்கோ] தனது சிறப்பார்ந்த அறிக்கையொன்றை இருபத்தியோராம் நூற்றாண்டுக்குரிய சவால்கள் பற்றி 1996ஆம் ஆண்டில் வெளியிட்டிருந்தது. டெலோர்ஸ் ஆணைக்குழு (Delors Commission) இதனைத் தயாரித்திருந்தது. மனிதனின் உள்ளே பொதிந்திருக்கும் அரும்பெரும் பொக்கிஷங்களையும் உணர்வுகளையும் அறிவையும் நீதியையும் இனங்கண்டு வளர்ப்பதில் கல்வியின் வகிபங்கு எவ்வாறமைய வேண்டுமென அவ் ஆணைக்குழு வலியுறுத்தியது. கற்றலுக்குரிய நான்கு தாங்குதூண்களை (Four Pillars of Lear-ning) அது விபரித்திருந்தது. அதில் முக்கியமான ஒன்றுதான் இணைந்து வாழ்வதற்காக கற்றல் என்ற எண்ணக்கருவாகும். இது உலக அங்கீகாரம் பெற்ற கல்விசார் கருத்தியலாகியது.

இதன் படிநிலை வளர்ச்சியாக 2001ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 5- 8ஆம் திகதிகளில் ஜெனிவா நகரின் சர்வதேச கல்விப் பேரவையின் (International Bureau of Education IBE) ஏற்பாட்டில் 16 ஆவது சர்வதேச கல்வி மாநாடு (Internation Conference on Ed-ucation) நடைபெற்றது. இதில் ஒன்றிணைந்து வாழ்வதற்கான கல்வி பற்றிய அபிப்பிராயங்களும், அவை சார்ந்த பிரச்சினைகளும் கலந்துரையாடப்பட்டன. 127 நாடுகளைச் சேர்ந்த 600 பேராளர்கள் இதில் பங்கேற்றனர். இதில் 80 கல்வி அமைச்சர்களும், துணைக் கல்வி அமைச்சர்களும் கூட பங்கேற்றனர். இதில் அரசாங்கத்தைச் சேர்ந்தவர்களும் அரச சார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்தவர்களும் பங்கேற்றிருந்தனர்.

விண்ணியல் (Space Science), மின்னியல் (Electronics), நுண்ணியல் (Nano Science), மரபணுவியல் (Genetics), உயிர்நுட்பவியல் (Biotechn-olo-gy) போன்ற பருப்பொருள் சார்ந்த அறிவியல் முனைப்புடனான கல்வியும் தேடலும் வளர்ந்து வருவதன் முக்கியத்துவம் போலவே மனிதநாகரிகத்தின் அடித்தளமான சமூக கூட்டுணர்வுடன் ஒன்றிணைந்து வாழ்வதன் முதன்மையும் தீவிரமும் கல்வியியலாளர்களால் நன்கு உணரப்பட்டுள்ளது. இவை தொடர்பான உலகளாவிய செயற்றிட்டங்களும் தொடங்கியுள்ளன.

இலங்கை போன்ற மனித முரண்பாடுகள் கூர்மையடைந்து தேசிய முன்னேற்றங்களும் குதூகலமும் புறந்தள்ளப்பட்டு வரும் நாடுகளின் கல்விச் சீர்திருத்தங்களின் ஊடுபொருளாக, உள்ளீடாக ஒன்றிணைந்து வாழ்வதற்கான கல்வி இலக்குகளும் சேர்க்கப்பட்டுள்ளன. இலங்கையின் 1997இன் பொதுக்கல்விச் சீர்திருத்தங்களில் ஒன்றிணைந்து வாழக்கற்றல் பல நிலைகளில் பாதிப்பை ஏற்படுத்தியிருப்பதை கருத்திற்கொள்ள வேண்டும்.

**கருத்தியல் பின்னணி**

கல்வி என்பது பிள்ளைகளை சமூக மயப்படுத்துவதற்கான ஒரு செயன்முறைதான். கல்வி கற்பதன் மூலமாக பிள்ளைகள் பிறருடன் இணைந்து பழகுவதற்கும், செயற்படுவதற்கும் ஏற்றதான நடத்தைகளையும் விழுமியங்களையும், எண்ணங்களையும் படிப்படியாகக் கற்றுக்கொள்கின்றனர். இதனால்தான் சமூகத்தின் உறுப்பினராக மதிப்பளிக்கப் பெறுகின்றனர். பிறக்கும்போது எந்தவொரு தனிநபரும் பயன்மிக்க சமூக உறுப்பினராக இருப்பதில்லை. தனக்குரிய பயன்பாடுகளையும் அங்கீகாரத்தையும் பிறருடன் இணைந்து வாழும் தகைமைகளை வளர்க்கும்போதுதான் பெற்றுக்கொள்கின்றான். இதற்கு கல்விதான் துணை புரிகிறது. அலன் எட்வேட் கஸ்கின் (Allan Edward Guskin) இத்தகைய விளக்கத்தை முன்வைத்தார்.

பிறிம் (Orville G.Brain) மும் வீலரும் (Stanton Wheeler) தனிநபர் ஒருவன் தம்மை சமூகத்தின் அங்கத்தவராக்குவதற்குரிய அறிவு- திறன்கள்- பண்புகள் என்பவற்றை உருவாக்கும் செயன்முறைதான் சமூகமயப்படுத்தல் என்று விளக்கினார்.

இவ்வாறு தனிநபர்கள் வேறுபாடான குணநலன்கள், மொழி, சமயம், பண்பாடு கொண்டவர்களுடன் இணைந்து முரண்பாடுகளின்றி ஒத்த உணர்வுகளுடன் தம்மை வளர்த்துக் கொள்வதற்கு பயன்படும் நுட்பங்களுள் ஒன்று ஒழுக்கக்கல்வி என்று இனங்காணப்பட்டுள்ளது. குடும்பங்களில் வேறுபாடு குறைந்த தனிநபர்களுடன் இணைந்த வாழ்வும் உணர்வுகளையும் வளங்களையும் வசதிகளையும் பிரச்சினைகளையும் பகிர்ந்து கொள்வதற்கு தாய் மற்றும் சகோதரர்கள் மூலமான முறையில் கல்வி (Informal Education) உதவுகின்றது.

பின்பு பெருமளவு ஒத்த வயது எதிர்பார்ப்புக்கள் கொண்ட இளம் வயதினர் நியமங்களுக்கும் விதிகளுக்குமுட்பட்ட ஒழுங்கமைந்த சூழலில் பிறருடன் இணைந்து வாழ்வதற்கும், அதற்கான அறிவு, திறன், பழக்கம், நம்பிக்கை, உணர்வு என்பவற்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருத்தி செய்வதற்கும் பாடசாலைகள் உதவுகின்றன. இவை முறைசார் கல்வி (Formal Eduction) மூலமாக மேற்கொள்ளப்படுகின்றன. றோஸ் (Ross) என்பவர் பாடசாலைகள் பற்றி பின்வருமாறு விளக்கமளிக்கின்றார். 'சமூகத்தில் மிகவும் திருப்திகரமாகவும், திறமையாகவும் இளைஞர்கள் தம்மைத்தயார் செய்து கொள்வதற்கென நாகரிகமான மனிதர்களினால் வடிவமைக்கப்பட்ட நிறுவனங்கள் தான் பாடசாலைகள்'. தனிநபர்கள் தமது சுயவிருப்பம், தேவை, முயற்சி, உடைமையாக்கம், மதிப்பு, உயர்ச்சி, மேலாதிக்கம் போன்ற பல்வகைப்பட்ட எதிர்பார்ப்புகளுடன் வளர்ந்துவரும் போது புதிய நடத்தைக் கோலங்களைப் பெற்றுக் கொள்கின்றனர். இந்த மாற்றங்கள் சமூகத்திலிருந்து பார்த்தும் உணர்ந்தும் பெற்றுக்கொண்டவை தான். இவை காலக்கிரமத்தில் பிறருடன் இணைந்து செல்வதற்கான தடைக் காரணிகளாக வளர்ந்து வலிமை பெற்றுவிடுகின்றன. இவை

- பிறரிடம் குற்றம் காணுகின்ற குறைகள் தேடுகின்ற பழக்கம்
- முதல் அனுபவங்களினால் - தற்செயல் நிகழ்வுகளினால் உருவாக்கப்பட்டுவிடும் முற்சாய்வு (Prejudice) கள். இது பல சமயங்களில் பயம் அல்லது நம்பகமற்ற தகவல்களினால் உருவாக்கப்படுகிறது. உருவாக்கப்பட்டுவிடுகிறது.
- நிறம், சாதி, பால் அடிப்படைகளில் தனிநபர்களிடையில் பாரபட்சம் காட்டுதல்
- மரபு வழி அச்சங்கள்
- பழைமைவாத உணர்வுகள்

தனிநபர் நிலையில் மட்டுமன்றி குழுநிலையிலும் வேறுபாடுகள் நிறைந்த மக்கள் குழுவினர் - சமூகங்கள் இணைந்து வாழ்வதற்கு எதிரான தடைக்காரணிகள் பல வளர்ந்து வலிமை பெற்றுவிடுகின்றன.

- சாதியமும் சமூகவாதமும்
- சமய பொறையுடைமையின்மை
- பிரதேசவாதம்
- மொழிவாதம்
- சமூக - பொருளாதாரக் காரணிகள்
- எழுத்தறிவும் போதிய கல்வியுமின்மை
- பலவீனமான கல்வி முறைமை
- அரசியற் காரணிகள்
- தேசப்பற்று வலிமை பெறாமை
- இலஞ்சமும் நல்லாட்சித் திறனின்மையும்

இத்தகைய தடைக்காரணிகள் வளர்ச்சி குன்றிய நாடுகளிலும் குடியேற்றவாதத்திற்குட்பட்ட நாடுகளிலும் அதிகரித்துக் காணப்படுகின்றன. இந்தியா, பிரித்தானியா, ஆட்சியில் இருந்த காலத்தில் இந்திய தேசத்தில் மொழி, சமயம், சாதி, பிரதேசம், பொருளாதாரம், இனம் தொடர்பான பேதங்கள் வளர்க்கப்பட்டன. மக்கள் குழுக்கள் இணைந்து வாழ்வதற்கு உதவும் காரணிகள் பலவீனப்படுத்தப்பட்டன. வாழ்க்கை முறையிலும் நம்பிக்கையிலும் நடத்தைக் கோலங்களிலும் வேறுபாடுகளை அதிகரிக்கச் செய்வதில் கூடிய கவனம் செலுத்தப்பட்டிருந்தது.

நாடுகள் சுதந்திரம் பெற்றபோதும், சுதந்திரப் போராட்டங்களின் போதும், சுதந்திரத்தின் பின் அயல் நாடுகளினால் யுத்த அச்சுறுத்தல் விடுக்கப்பட்ட போதும் 'வேற்றுமையில் ஒற்றுமை' என்ற கருத்தியல் உணர்வுபூர்வமாக வளர்ந்தது. தேசியத்தைப் பாதுகாப்பதற்காக தனித்தன்மைகளில் போதுமானளவு சமரசம் செய்து கொள்ள சமூகங்கள் உடன்பட்டன. நாட்டுக்காக மனவெழுச்சி ரீதியில் விட்டுக்கொடுத்தனர். உடன்பாடுகளுடன் பின் சென்றனர். பெரிய நலன்களுக்காக சிறு இழப்புக்களை விருப்புடன் ஏற்றனர். சில வளர்ச்சிகளை கையகப்படுத்தவும், சாதனையின் உச்சிகளை எட்டிப்பிடிக்கவும் நீடித்த குதூகலத்தை நிலை நிறுத்தவும் பேதங்களைவிட இணைந்து வாழ்தலே அதிகம் உதவுவதை உணர்ந்தனர். இதனால் தனித்தன்மைகளுடன் ஆனால் தேவைகருதிய ஒற்றுமையுணர்வுடனும் இந்தியா வளர்ந்து வருகின்றது. தேசத்திற்காக இணைந்து செயற்படல் இந்தியா, ஜப்பான், சீனா போன்ற நாடுகளின் தேசிய வாழ்வு மற்றும் தேசிய வளர்ச்சியின் மையவிசையாகத் தொடர்ந்தும் தொழிற்படுகின்றது. இது தேசிய அரசியல், சமூக பண்பாடாக வளரும் போதுதான் இந்த நாடுகளின் பொருளாதாரம் வளர்ச்சி பெறும். இவ்வளர்ச்சியின் நலன்கள் கிராமங்களின் இல்லங்களில் உள்ள ஒவ்வொருவரையும் நோக்கி கீழ் நோக்கிக் கசிந்து செல்லும்.

இதற்கு எதிர்த்திசையில் முனைப்புடன் செயற்படும் நாடுகளில் எல்லாம் வறுமையும் பட்டினியும் தொழிலின்மையும் அவநம்பிக்கையும் சமூகக் குற்றங்களும் வளர்ந்து பரவி ஆழமாக வலிமை பெற்றுவிடும்.

மேற்கத்திய நாடுகளில் பொருள் நுகர்ச்சி மிகைப்படுத்தப்படும். வாழ்வு முறையும் அதீத தொழில்நுட்ப மேலாதிக்கமும் நகர் மயப்படுத்தலுடன் இணைந்த நவீனமயமாக்கமும் சுவர்மையான தனிநபர் மயப்படுத்தலும் மிகையான கல்வி வளர்ச்சியின் விளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வுகளாக உள்ளன. இதனால் குடும்ப உறுப்பினர்களி டையே கூட இணைந்துவாழும் தேவையும் உணர்வும் மறக்கப்பட்டு வருகின்றது. குடும்பங்களின் மீதான தொழில், வியாபார, பொழுதுபோக்கு நிறுவனங்களின் வலுவான மேலாதிக்கம் சிதைவை ஊக்குவிக்கின்றது. இது முனைப்புப் பெறும்போது, நவீன சமூகங்களில் இணைந்து வாழ்தல் பற்றிய கருத்தியல் அச்சுறுத்தலுக் குட்படுகின்றது.

1990களில் சர்வதேச ரீதியில் மக்கள் இடநகர்வு ஏற்பட்டது. இது பொருளாதார மனித வளமாகவும் அரசியல் அம்சம் கலந்த புகலிடம் தேடும் மக்கள் தொகுதி களாகவும் காணப்பட்டது.

இதனால் மேற்குலக நாடுகளின் நவீன நாகரிக நகரங்களில் மூன்றாம் உலக நாடுகளின் கிராமிய ஊழியர்கள் குவிந்தனர். மொழி, சமயம், தேசம், பண்பாடு, வாழ்வியல் இலக்கு தொடர்பான வேறுபாடு கொண்டவர்களின் குழந்தைகள் பாடசாலைகளின் வகுப்பறைகளில் ஒன்றாக அமர்ந்தனர். சிறப்பு அங்காடிகளில் இணைந்து பகுதி நேரப் பணிகளில் ஈடுபட்டனர். இது பன்மைக் கலாசாரம் (Multi Culturism) வளர்வதற்கு வாய்ப்பளித்தது.

பன்மைக் கலாசாரத்தை வளர்ப்பதன் மூலமாகவே இத்தகைய சூழலில் நல்லிணக்கத்தையும் அதன டிப்படையில் முன்னேற்றத்தையும் கட்டியெழுப்ப முடியும். இத்தகைய கருத்தியல் வளர்ச்சி தான் வளர்ச்சியடைந்த மேற்கு நாடுகள் ஒன்றிணைந்து வாழ்வதற்கான கல்வி பற்றிய எண்ணக்கருவை சர்வதேச மயப்படுத்த முனைந்தமைக்கு பின்னணியாகும். ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளிடையில் நாடுகள் பல இணைந்து நாட்டுக் கூட்டிணைப்புகளையும் (Confederations) பொருளாதார ஒத்துழைப்பு அமைப்புகளையும் (Economic Cooperations) உருவாக்கி வருகின்றன. இதேசமயம் மேற்குலக நகரப் பாடசாலைகளில் பள்ளிச் சிறுவர்கள் துப்பாக்கி ஏந்தி ஆசிரியர்களையும் பள்ளிச்சிறார்களையும் சுட்டுக் கொன்றொழிக்கும் நிகழ்வுகளும் அதிர்வுகளை மக்களிடையில் ஏற்படுத்தியுள்ளன.

இத்தகைய போக்குகள் சர்வதேச கல்வியாளரிடம் ஒன்றிணைந்து வாழ்வதற்கான கல்வி பற்றிய கருத்தியலை சர்வதேசப்படுத்துமாறு வலியுறுத்தி வருகின்றன.

**நவீனமயமாதலில் நலிவுறும் மனித உறவு**

தற்போதைய அறிவுசார் சமூக வளர்ச்சிப் போக்கில் தகவல் தொழில்நுட்பத்தின் மேலாண்மையின் பரவலும் பாதிப்பும் அதிகரித்து வருகின்றது. உலகம் முழுவதன் வளர்ச்சிக்குமான ஒரே ஒழுங்காக உலக மயமாதல் கடந்த ஒன்றரை தசாப்தமாக பரவி வளர்ச்சி கண்டுள்ளது. நாடுகளின் அரசியல் எல்லைகள் தேய்ந்து மூலதனமும் மனித வளமும் தொழில்நுட்பமும் உலக கல்விக்கான புத்தொழுங்குடன் உலகம் முழுவதும் அசைந்து செல்கின்றன. ஒருபுறம் நிபுணத்துவமும் வழிகாட்டலும் நிதி வளமும் கல்வி நிறுவனங்களும் வடக்குலக நாடுகளிலிருந்து தெற்குலக வளர்முக நாடுகளை நோக்கிப் பாய்ந்து செல்கின்றன. மறுபுறம் தெற்குலக வளர்முக நாடுகளின் தகைமை பெற்று கல்வி வளம்மிக்க மனிதவளம் மேற்குலக தொழிற்துறையையும் பண்பறா நிலவளங்களையும் நோக்கி நகர்கின்றன. இந்த விசைமிக்க பரபரப்பான கல்வி வளர்ச்சியில் மானுடமும் மனித உறவும் நசிபட்டு தொனி தொலைந்து நிற்கின்றன.

மனிதர்கள் சமாதானமாக ஒன்றிணைந்து வாழ்வதற்குரிய வாய்ப்புகளை மறுக்கும் காரணிகள் பல இனங்காணப்பட்டுள்ளன. மனித சமூகத்தில் பல்வேறு குரோதங்களும் குழப்பங்களும் மனித வாழ்வின் அச்சுறுத்தலாக உள்ளன. இருபதாம் நூற்றாண்டில் மாத்திரம் இவ்வாறு பதினெட்டுக் கோடி மக்கள் இருந்துள்ளனர். இவற்றைக் குறைப்பதில் பல்வேறு அரசியல், பொருளாதாரக் காரணிகளுக்கும் பங்கிருப்பினும் கல்வியினதும் கல்வியாளரினதும் பங்களிப்பு அவசியமானதும் அவசரமானதுமாகும். சமூகத்தின் மனித நடத்தையின் தவறுகள் அதன் வழியான தீமைகள் என்பனவற்றைக் குறைப்பதில் கல்வியின் வகிபங்கு முக்கியமானதாகும். மாற்று வழிகள், குறைதீர் செயற்பாடுகள் பற்றிய கவனம் செலுத்த வேண்டிய கட்டாயம் அவர்களுக்குள்ளது.

ஆரம்பக் கல்வி மற்றும் இடைநிலைக் கல்வி மட்டத்தில் கற்பிக்கும் ஆசிரியர்களும் உயர் மட்டத்தில் முடிவுகளை மேற்கொள்வோரும் இணைந்து வாழ்வதற்கான கல்வி தொடர்பான தடைகளை இனங்கண்டு அவற்றை அளவீடு செய்து மதிப்பீடு செய்து தீர்வுகளை முன்மொழிய வேண்டிய கடப்பாட்டைக் கொண்டுள்ளனர்.

**முதிர்வுறும் முரண்நிலைகள்**

இன்றைய உலகமயமாக்கல் மற்றும் அறை கூவல்களின் பின்னணியில் ஒன்றிணைந்து வாழ்தல் தொடர்பான கற்றல் சார்ந்த பல்வேறு முரண்பட்ட நிலைப்பாடுகள் காணப்படுகின்றன.

1. உலகமயமாதலில் வடக்கு - தெற்குலக நாடு



20 Anniversary

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களிடையிலான பரிமாற்றங்களும் காரணிகளின் நகர்வும் பரஸ்பர நலன்களை எல்லா நாடுகளுக்கும் வழங்கியுள்ளன. அதேசமயம் பல நாடுகளில் உலக மயமாதல் சுற்றுச் சூழல் அச்சுறுத்தலை அதிகரிக்கச் செய்துள்ளது. இலட்சோப இலட்சம் மக்களின் வாழ்க்கைத் தரத்தில் பெரியதோர் வீழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதனால் வறியவர்களுக்கும் செல்வந்தர்களுக்குமான இடைவெளி அதிகரித்துச் சென்றுள்ளது. இது ஒன்றிணைந்து வாழும் வாய்ப்பைப் பாதிக்கின்றது.

2. விஞ்ஞான, தொழில்நுட்ப அறிவின் பெருக்கமானது அவற்றைப் பிரயோகிக்கும் நாடுகளில் சமநிலையின்மையை அதிகரித்துள்ளது. நவீன மயமாக்கமும் சக்தி நுகர்வு முறையும் பாரிய மாற்றங்களை உருவாக்கி வருகின்றன. சீனாவில் ஞாயிற்றுச்சக்தி உற்பத்தியினாலும் அதன் பயன்பாடு பரவலாக்கப்படவில்லை. ஆனால் உயிர் நுட்பவியல் வளர்ச்சி மேற்குலக நாடுகளின் உணவுற்பத்தியில் அதிக தாக்கத்தை ஏற்படுத்திற்று. இவ்வாறு சக்தி தொழில்நுட்பமும் அதன் பரம்பலும் சமூகங்களுக்கிடையிலான இடைவெளியை அதிகரிக்கச் செய்தன.

3. அறிவும் புதிய உபகரணங்களும் எல்லா மனிதர்களின் வாழ்விலும் வாழ்க்கைத் தரத்திலும் மிகப் பெரிய முன்னேற்றங்களை ஏற்படுத்தின. ஆனால் அறிவின் பரம்பலும் உபகரணங்களைப் பயன்படுத்தும் பயிற்சியும் எல்லா மக்களுக்கும் சமமாக வழங்கப்படவில்லை. வாழ்க்கைத் தரம் தொடர்பாக சமத்துவம் உருவாக்கப்படவில்லை.

உலகில் 968 மில்லியன் மக்களுக்கு சிறந்த குடிநீர் கிடைப்பதில்லை; 2400 மில்லியன் மக்களுக்கு அடிப்படை நலத்துறை வசதிகள் வழங்கப்படவில்லை; சுற்றுச்சூழல் மாசுபட்டால் வருடாந்தம் 7 மில்லியன் மக்கள் இறந்து விடுகின்றனர். 34 மில்லியன் மக்கள் எச்.ஐ.வி. தொற்றுக்கு எயிட்ஸ் நோய்க்கு உட்பட்டுள்ளனர்.

இதற்கு மாறாக உலகின் மறுமுனையில் இரு வருட காலத்தில் இணையத்தைப் பயன்படுத்துவோர் எண்ணிக்கை 2.4%இலிருந்து 6.7%ற்கு அதிகரித்திருந்தது. மேற்கு நாடுகளில் இதன் அதிகரிப்பு 50%மாயுள்ள போதிலும் வளர்முக நாடுகளில் இது 10%இலும் குறைவாகும்.

இந்த ஏற்றத் தாழ்வுகள் சமத்துவத்துடன் ஒன்றிணைந்து வாழ்வதற்குரிய உணர்வை வெகுவாக பாதிக்கின்றன.

4. வரலாற்றில் மிகப்பெரிய செல்வப் பெருக்கத்துக்கு உலகமயமாதல் உதவிற்று. அதேசமயம் சமத்துவமின்மையும் முன்னொருபோதுமில்லாதவாறு அதிகரித்துச் சென்றது. 1990 இல் நாள் ஒன்றுக்கு 2 டொலரிலும் குறைந்த வருமானம் பெறும் மக்கள் 271 மில்லியனாயிருந்தனர். 1998 இல் இவர்கள் தொகை 2800 மில்லியனாகியது.

5. உலகளாவிய வறுமை இளைஞர்கள், கல்வி கற்ற மக்கள் ஆகியோரை இடம்பெயரும் படி தூண்டியது. புதிய இடங்களுக்கு தொழில் நாடி அலைந்த போதும் இடம்பெயர்ந்த போதும் புதிய பிரச்சினைகள் எழுந்தன.

இதனால் கலாசார அதிர்வுகளும் முரண்பாடுகளும் பெருகின. தமது சுய அடையாளங்களைத் தொலைத்துவிடும்படி கட்டாயப்படுத்தின. இது இணைந்து வாழும் வாய்ப்புகளை குறைக்கும்படி செய்தது.

6. பல நாடுகள் ஜனநாயக அரசியல் அரசாங்கம் மற்றும் ஆட்சிமுறையை விரும்பின. 1980 இலிருந்து 81 நாடுகள் ஜனநாயக முறைமைக்கு மாறின. 33 இராணுவ பிரதேசங்கள் குடிசார் அரசாங்கங்களாக மாற்றம் பெற்றன. அரச சார்பற்ற நிறுவனங்கள் வெளிப்படையான பங்களிப்பை வழங்கின.

இதற்கு மாறாக வேறு பல நாடுகளில் மக்கள் தமது அரசாங்கங்களுக்குள்ளேயே அகதிகளாகி நின்றனர். பட்டினியால் இறந்தனர். 1992 இலும் 1995 இலும் மாத்திரம் பொஸ்னியாவில் 200,000 பேர் இறந்தனர். ருவாண்டாவில் 500,000 பேர் இறந்தனர். இத்தகைய முரண்பாட்டு வளர்ச்சி நிலைகள் மனித வாழ்வு தொடர்பான இணக்கமின்மையை அதிகரித்தன. இதனை அகற்றும் ஆற்றல் கல்விச் செயற்பாடுகளுக்கு மாத்திரமே அதிகம் உள்ளதாக அனைவரும் நம்புகின்றனர்.

இந்த நிலையில் தான் இணைந்து வாழ்வதற்குரிய கல்வியை தாக்கமுடைய முறையில் வழங்குதல் என்பது சர்வதேசிய முன்னுரிமை பெற்றது. உள்ளூர் தேசிய மற்றும் சர்வதேசிய மட்டத்தில் இவற்றை நடைமுறைப்படுத்துவதற்குரிய ஒத்துழைப்பு வலிமை பற்றி அதிக கவனம் செலுத்துவதாகவே 46 ஆவது சர்வதேச கல்வி மாநாடு அடைந்தது என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும். கல்வி அமைச்சர்கள் தொழிற்சங்கங்கள், கல்வியியலாளர்கள் உலகமயமாதலினால் உருவாக்கப்பட்ட இணைந்து வாழ்வதற்கெதிரான அறைகூவல்களைக் குறைத்துவிட முயற்சிக்க வேண்டுமென உடன்பாடு கண்டனர்.



20 Anniversary

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இணைந்து வாழ்வதற்காகக் கற்றலும் - கற்பித்தலும்**

ஒன்றிணைந்து அமைதியாக வாழ்வதற்கு வழிவகுக்கும் கல்வியானது பின்வரும் பண்புகளைக் கொண்டிருக்க வேண்டும்

**அறிவு:** மனிதர்கள் அச்சமடையும் போது தான் மற்றவர்கள் தொடர்பாக பொறுமையின்றியும் வெறுப்புடனும் காணப்படுகின்றனர். அறிவு பெறுவதில் அநீதி வழங்கப்படும் நிலைமைகளில் தான் மனிதர் வெறுப்புக்குட்படுகின்றனர். இதனால் எல்லோருக்கும் அறிவு பெறும் வாய்ப்பு அதிகரிக்கப்படல் வேண்டும்.

**மனவெழுச்சியும் உணர்வும்:** இவை தான் விழுமியங்களையும் மனப்பாங்கினையும் ஒழுங்குபடுத்தும் அறிவின் மீது தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இதனால் மனவெழுச்சிச் சமநிலையை ஏற்படுத்துவதில் கல்வியில் அக்கறை காட்ட வேண்டும்.

**சுயமதிப்பு:** பிறர் சொல்வதை கவனமாகச் செவிமடுப்பதற்கும் கலந்துரையாடுவதற்கும் அமைதியான முறையில் முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கும் முரண்படுவதை விடவும் ஒத்துச் செல்லும் இயல்பு அவசியமாயுள்ளது. இதனால் தனிநபர் நிலையிலும் சமூக நிலையிலும் ஒவ்வொருவரும் தம்மைப் பற்றி சுயமதிப்பீடு செய்யும் இயலுமையை கல்வியினால் வளர்த்தல் வேண்டும். பிறரை மதிக்கவும் பிறரை சேர்த்துக் கொள்ளவும் உளவியலாளரும் கற்பித்தலில் நிபுணத்துவம் பெற்றவர்களும் நேர் சுயவிருப்பங்களை தனிநபரிடம் விருத்தி செய்தல் வேண்டும். மற்றவர் நிலையிலிருந்து அவர்களது நிலைமைகளைப் புரிந்து கொள்ளும் ஆற்றலை வளர்த்தல் வேண்டும்.

**மனப்பாங்கும் நடத்தையும்:** பொது நலன்களையும் சமுதாய வாழ்வையும் நேசிக்கும் மனப்பாங்கினை கல்வி மூலமாக விருத்தி செய்தல் வேண்டும். பிறரைச் சகித்து ஒத்துச் செல்லும் நடத்தைக் கோலங்களை விருத்தி செய்தல் வேண்டும். இதற்கு குடியியல் கல்வி நன்கு போதிக்கப்படல் வேண்டும்.

பாடசாலைகளில் மாத்திரம் இத்தகைய இயலுமைகளை எல்லா மக்களிடமும் விருத்தி செய்ய முடியாது. கற்றவர்கள் தான் தமது அறிவைப் பயன்படுத்தி சமய மற்றும் அரசியல் சகிப்புத்தன்மையை எல்லோரிடமும் வளர்க்க வேண்டும். ஜனநாயக சமூகத்தின் குடிமக்களுக்குரியதாக புதிய தலைமுறையினை வளர்ப்பதில் பாடசாலைகளும் சமூகமும் இணைந்து செயற்பட வேண்டும்.

ஒரு குறிப்பிட்ட சமூகத்திற்குள் மட்டுமன்றி பல சமூகங்களுக்கிடையிலும் முரண்பாடுகளற்ற சமூக வாழ்வை முன்னேற்றுவதற்கு வேறுபட்ட கலாசாரம் கொண்ட மக்களிடையில் புரிந்துணர்வை வளர்க்க வேண்டும். இதற்கு பெரிதும் உதவக்கூடிய கருவி கல்விதான். முரண்பாடுகளினால் பாதிக்கப்படுகின்ற நாடுகள் இதில் கூடிய கவனம் செலுத்த வேண்டும். 1990 ஆம் ஆண்டிலிருந்து உலகம் முழுவதும் 42 நாடுகளில் முரண்பாடுகளினால் – கல்வி முறைமை பாதிக்கப்பட்டிருப்பதாக உலகவங்கி மதிப்பிட்டுள்ளது. 2003 ஆம் ஆண்டு ஜூலை 7–15 திகதிகளில் பாரிஸில் நடைபெற்ற முரண்பாடுகளுக்கு பிற்பட்ட பிரதேசங்களில் கல்வி மற்றும் புனரமைப்பு மகாநாடு இணைந்து வாழ்வதற்கும் முரண்பாடுகளைக் களைவதற்குமான கற்றல்– கற்பித்தல் வழிமுறைகள் பற்றி மிக விரிவாக ஆராய்ந்து முன்மொழிவுகளையும் முன்வைத்துள்ளது. கலைத்திட்டம், ஆசிரிய முகாமைத்துவம் என்பன தொடர்பாகவும் கவனம் செலுத்த வேண்டிய அம்சங்கள் பற்றித் தெளிவாக விவக்கியுள்ளனர். ஊடகங்களின் வழியாக சமுதாயக் கல்வியை (Social Education) விரிவுபடுத்துவதன் மூலமாகவும் வேறுபாடுகளைக் குறைக்கவும் இணைந்து வாழ்வதை ஊக்குவிக்கவும் முடியும்.

இன்று தொலைதூர நாடுகளிலிருந்து குடிபெயர்ந்து வந்து வாழ்வோரின் தொகையும் அதிகரித்துள்ளது. 2000ஆம் ஆண்டில் 15 கோடிமக்கள் இவ்வாறு குடிபெயர்ந்து வாழ்ந்தனர். இவர்களிடையிலும் பண்பாடு மற்றும் பொருளாதார வேறுபாடுகள் அதிகம் காணப்படுகின்றன. இவர்களிடையிலும் இணக்கப்பாட்டிற்கான கற்றல் ஊக்குவிக்கப்படுதல் வேண்டும்.

தனிநபர்கள், சமூகங்கள், தேசங்கள் என்போருக்கு பொதுவான அடிப்படை விழுமியங்களை இனங்கண்டு அவற்றை மேம்படுத்த வேண்டும். மொழி, இனம், சமயம், சமூகம் தொடர்பான வேறுபாடுகளை ஏற்றுக் கொண்டு அங்கீகரித்து ஒத்துச் செல்லும் மனிதாபிமானம் கற்பிக்கப்படுதல் அவசியம்.

பிறரது எண்ணங்கள், நம்பிக்கைகள், நடத்தைகள் என்பவற்றை மதிக்கவும் ஏற்றுக் கொள்ளவும் கூடிய மனிதப் பண்புகளை கற்பித்தலும் எல்லோரையும் கற்றுக் கொள்ளச் செய்தலும் அவசியம். இவை கலைத்திட்டத்தின் இன்றியமையாத உள்ளடக்கமாக அமைதல் வேண்டும். கல்வியிலும் சமூகத்திலும் தவிர்க்கப்பட்டுள்ள சமூகத்தின் மீது கூடிய கவனம் செலுத்துவதும் அவசியமாகின்றது. அவர்களுக்கு சமவாய்ப்பை வழங்குவதும் இன்றியமையாததாகின்றது.



20 Anniversary

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான கல்வி பின்வரும் உள்ளடக்கத்தில் கவனம் செலுத்த வேண்டும் என உலக கல்வியாளர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

குடியுரிமைக் கல்வி
சமூக இணக்கப்பாட்டிற்கான கல்வி
கல்வி, சுகாதாரப் பல்வகைமை
மொழி கற்பதற்கான உபாயங்கள்
விஞ்ஞானம் கற்றல்
தகவல் தொடர்பாடல் நுட்பக்கல்வி

இவை தொடர்பான விபரமான நிகழ்ச்சித் திட்டங்களையும் உலக கல்வியாளர் தயாரித்து வெளியிட்டுள்ளனர்.

திருப்திகரமாகவும் விளைத்திறன் மிக்கதாகவும் இவற்றைக் கற்பிப்பதற்கு பின்வருவனவற்றில் கவனம் செலுத்த வேண்டும்.

★ பாடசாலைகளின் உள்ளார்ந்த முடிவுகளிலும் மாணவர் மன்றங்களிலும் மாணவர்கள் பங்கு கொள்ளுமாறு ஊக்குவித்தல்.

★ கலந்துரையாடுதல் , ஒத்துழைத்தல், ஜனநாயக அடிப்படையிலான தொடர்புகள், குடும்பங்களுடனும் சமூகங்களுடனும் இணைந்த தொடர்புகள் என்பன சார்ந்த நிறுவன பண்பாட்டை உருவாக்குதல்.

★ பாடசாலைகளில் முழுமையான சமாதானக் கல்வி, குடியுரிமைக் கல்வி அணுகுமுறையை முன்னேற்றுதல், விழுமியங்களைக் கைமாற்றுதல் மாத்திரம் போதுமானதன்று. பதிலாக ஜனநாயக நடைமுறைகளில் நேரடியான அறிவை விருத்தி செய்தலும் அனுபவங்களைப் பெற உதவுதலும் அவசியம்.

இவற்றை வினைத்திறனுடனும் விளைத்திறனுடனும் மேற்கொள்வதற்கு பாடசாலைகளினதும் பிற கல்வி நிறுவனங்களினதும் கலைத்திட்டங்களை அடிக்கடி புதுப்பித்தலும் பொருத்தமான பாடநூல்களையும் கற்றல் – கற்பித்தல் சாதனங்களையும் உருவாக்கி, விநியோகித்தலும் வேண்டும். அவை உரிய முறையில் பயன்படுத்தப்படுவதை உறுதிப்படுத்திக் கொள்வதும் அவசியம். கல்வி முகாமைத்துவப் பணித்துறையினர் பூரண ஒத்துழைப்பு வழங்கி இவற்றை நடைமுறைப்படுத்த வேண்டும்.

**முடிவுரை**

தனிமனிதன், சிறு குழுமம், சமூகம், நாடு பிராந்தியம், சர்வதேசம் என்ற பல நிலைகளிலும் இணைந்து வாழும் கல்வியின் தேவையும் முக்கியத்துவமும் பற்றிய விழிப்புணர்வு பரவ வேண்டும். உலக கல்வி நிறுவனங்களும் அபிவிருத்தி முகவர்களும் இணைந்து இதில் ஈடுபட வேண்டும்.

உலக கல்வியாளரும் ஆய்வாளரும் இப்புதிய கல்வித்துறை மேம்பாட்டிற்காக தொடர்ந்து ஈடுபாடு காட்டி பணியாற்ற வேண்டும். தனித்தும் கூட்டிணைந்தும் இவற்றில் ஈடுபடுவது அவசியம்.

நாடுகளின் கல்வியமைச்சர்கள், கல்வித் திட்டமிடலாளர்கள், கல்வி நிர்வாகிகள், கல்வி முகாமைத்துவ அணியினர் ஒன்றிணைந்து அகல்விரிவான இணைந்து வாழும் கல்விக்குரிய திட்டங்களையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் செயற்றிட்டங்களையும் தயாரித்து நடைமுறைப்படுத்த வேண்டும்.

ஊடகங்களும் சமுதாய நிறுவனங்களும் மாணவ, ஆசிரிய சங்கங்களும் இணைந்து வாழ்வதற்கு இசைவான எண்ணங்களையும் நம்பிக்கைகளையும் விருப்பங்களையும் தொடர்ந்து வளர்க்க வேண்டும். நன்கு பரப்ப வேண்டும்.

கலைஞர்களும் சமுதாயப் பணியாளரும் கூடஇணைந்து வாழ்தல், இணைந்து வாழ்வதற்கான கல்வி பற்றிய பரப்புரைகளில் ஈடுபாடு காட்ட வேண்டும்.

இத்தகைய எல்லா நிலைகளிலும் எல்லா அணியினரும் இணைந்து பணியாற்ற வேண்டும். உலகளாவிய சிந்தனைகள் ஒவ்வொரு குக்கிராமத்தின் கதவுகளைத் தட்டி, குடும்பங்களை, அங்கத்தவர்களை அறிவுபூர்வமாகவும் உணர்வுபூர்வமாகவும் இணங்கி வாழச் செய்ய வேண்டும். அப்போது உலகம் அமைதிப் பூங்காவாகும்.

தமிழ் மொழி மூலமான அச்சு ஊடகங்களில் 'தினக்குரல்' தனித்தன்மை மிக்கது. இலங்கைத் தமிழர்களின் வாழ்வியல் நாட்டம் கல்விசார் முதலீடுகளில் மிக அதிக கவனம் செலுத்துவதை ஊக்குவிக்கின்றது.

இதனைப் புரிந்து கொண்டு கல்வி தொடர்பான மேம்பாட்டுக்கு அதிக முன்னுரிமையை 'தினக்குரல்' காட்டி வருகிறது.

கற்றல், கற்பித்தல், பரீட்சை வழிகாட்டல் தொடர்பான பல்வேறு நேர்மறைச் செயற்பாடுகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருவது பெருமைப்படத்தக்கது.

தினக்குரல் நாளிதழின் வளர்ச்சிக்கு இந்நிறுவனத்தில் பணியாற்றும் ஊழியர்களின் உண்மை ஈடுபாடு, கடின உழைப்பு, ஒத்துச்செல்லும் குழு உணர்வு போன்றன காரணங்களாயுள்ளன. அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவிப்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தினக்குரல் குடும்பம்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தினக்குரல் குடும்பம்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தினக்குரல் குடும்பம்











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரபுக் கலைகள் பேணலும் – மீளுருவாக்கமும்



பேராசிரியர்
சி.மௌனகுரு

நமது பாரம்பரியக் கலைகளையும் பண்பாட்டையும் பேணுதலும் அவற்றில் தள்ளுவதைத் தள்ளி கொள்ளுவன கொண்டு சமூகத் தேவைகளுக்கு ஏற்ப அவற்றை மீளுருவாக்கி நம் வயமாக்குதலும் நமது கடைமையாகும். அதிலும் நுண்ணுணர்வு மிக்க கலைஞர்களது கடமையாகும்.

டைனசோரஸ் என்ற பெரிய விலங்கொன்று மிகப் புராதன காலத்தில் இருந்தது. அதன் எலும்புத் துண்டுகளை வைத்து அது இப்படித்தான் இருந்திருக்க வேண்டும் என ஊகித்து ஓர் பெரு உருவைப் படைத்தனர். நாம் இன்று படங்களிலும், சினிமாக்களிலும் காணுகின்ற பெரும் உருவங்கள் முன்னாளில் ஒரு காலத்தில் வாழ்ந்து மறைந்தவற்றை மாந்தர் கற்பனையில் படைத்த டைனசோரஸ் உருவங்களே. டைனசோரஸ் மட்டுமா? இன்னும் பல்வேறு உயிரினங்கள் இவ்வாறே மறைந்து விட்டன.

வரலாற்றிலே மறைந்து போதல் என்பது உயிரினங்களுக்கு மட்டுமல்ல கலைகளுக்கும் பொருந்தும், பண்பாட்டிற்கும் பொருந்தும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சவணிக்கை

தமிழ் மக்கள் தம் கலைகளிலும், பண்பாட்டிலும் பலவற்றைத் தொலைத்துவிட்டனர். மட்டக்களப்பிலே முன்னாளில் சவணிக்கை என்றொரு வாத்தியம் இருந்தது. ஒரு வகையில் இது பாதி உடுக்காகும். மரத்தாலான நீண்டதொரு குழாயிலே ஒரு பக்கம் தோலிட்டு அத்தோலுக்கூடாக உரு நாடாவை இழுத்து அந்நாடாவில் விரலால் தட்டி உறும் உறும் என்று ஒலி எழுப்பும் கருவி இது. அதன் ஒலி, நாடி நரம்புகளில் முறுக்கேற்றும். இவ்வாத்தியம் அன்று கோயில்களில் சடங்குப் பாடல்கள் பாடும் போது உடுக்கோடு இணைத்து வாசிக்கப்பட்டது. இன்று அது வழக்கிலேயில்லை. கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறை அதனை மீளுருவாக்கி 10 சவணிக்கை வைத்துள்ளது. மாணவர் அதில் பயிற்சியும் பெற்றுள்ளனர்.

இது ஒருவகையான பாரம்பரிய இசைக் கருவியினை மீள் கண்டு பிடித்ததற்கும், மீளுருவாக்கம் செய்ததற்கும் ஒப்பாகும்.

### இன்னிய அணி

வெள்ளைக்காரன் நம் நாட்டிற்கு வருவதற்கு முன்னர் அரச ஊர்வலங்களிலும், கோயில் தெய்வ ஊர்வலங்களிலும் நாம் என்ன வாத்தியங்களை இசைத்துக் கொண்டு ஊர்வலமாகச் சென்றோம்?

நிச்சயமாக பேண்ட் அடித்துக் கொண்டு சென்றிருக்க மாட்டோம். மேளம், நாதஸ்வரம் கொண்டு சென்றிருக்கலாம். மட்டக்களப்பிலே அன்றோ இன்றோ ஊர்வலத்திற்கு கிராமப்புறங்களில் நாதஸ்வரம், மேளம் கொண்டு செல்லும் வழக்கமில்லை. அப்படியானால் என்ன கொண்டு சென்றிருப்பர்? ஆம்! பறையும் ஊது குழலும்தான் நாம் கொண்டு சென்ற வாத்தியங்கள்.



கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறை பறை, உடுக்கு, சவணிக்கை, எக்காளம், மேளம், மத்தளம் ஆகியன கலந்த ஓர் கலாசார இன்னிய அணியை உருவாக்கியுள்ளது. 1915 இல் கிடைத்த ஒரு போட்டோவில் கிடைத்த ஒரு போடியாரினதும் அவர் மனைவியினதும் உடுப்பு, ஆடை ஆபரணங்களை ஒட்டி உடுப்புகள் ஆபரணமணிந்து மேற்சொன்ன வாத்தியங்களை இசைத்தபடி மாணவர் வருவர். அதற்கு நாம் இன்னிய அணி என்று பெயரிட்டோம். இன்று அவ்வின்னிய அணி பட்டமளிப்பு விழாவுக்குப் பயன்படுத்தப்படுகின்றது.

அந்த அணியில் வருபவர்கள் மட்டக்களப்பின் தென்மோடி – வடமோடி ஆட்டங்கள் சிலவற்றை ஆடியபடி வருவர். கொடி, ஆலவட்டம், எக்காளம் என அமர்க்களமாக அவ்வணி வரும். இது இன்னொரு வகை மீளுருவாக்கமாகும்.



இதனைப் பார்த்த சிலர் இது சிங்களச் சாயல் உடையது போல இருக்கிறதே என்றனர். உடுக்கும் பறையும் சிங்களமா? தென்மோடி – வடமோடி ஆட்டங்கள் சிங்களமா? உமது பாட்டனார் – பாட்டியர் போட்ட உடுப்பு சிங்களமா? என்று நான் அவர்களிடம் கேட்டேன்

மரபைத் தெரியாதோர் இவர்கள்.

### கண்ணகி குளுர்த்தி

கண்ணகி குளுர்த்தி மட்டக்களப்பிலே மிகவும் பிரசித்தி பெற்ற விழா. வைகாசி மாதம் உடுக்கடித்துச் சிலம்பு அம்மனைக்காய் குலுக்கப்படும். கண்ணகி குளுத்திப் பாடல்கள் இனிமையும் எளிமையும் நிறைந்தவை, பக்தியூட்டுபவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இவற்றை நாம் எடுத்து உடுக்கு, மத்தளம், வயலின் இசையுடன் கண்ணகி குளுர்த்திப் பாடலாக மீளுருவாக்கம் செய்தோம்.



அதற்கு எதிர்ப்புக்கள் இல்லாமல் இல்லை. பெண்களைக் கொண்டு குளுத்திப் பாடல்களைப் பாடுகின்றார்கள். வயலின், மத்தளத்தை இணைத்து விட்டார்கள், இப்படி குற்றச்சாட்டுக்கள் பல. ஆனால், அந்நிகழ்வு ரூபவாஹினியில் மேடை நிகழ்வாக வந்து இலங்கை பூராகவும் ஒளிபரப்பப்பட்ட போது அதனைக் கண்டு மட்டக்களப்பிற்கு அப்பால் வாழ்ந்த பலரும் மட்டக்களப்பு மக்களும் ஆச்சரியமும் இன்பமும் அடைந்தனர்.

இது இன்னொரு மீள் உருவாக்கம்.

## கிழக்கிசை

மட்டக்களப்புக்கென சில இசை வடிவங்கள் இருக்கின்றன. கோயில் சார்ந்த சடங்கு இசை [மாரிஅம்மன் பாடல், காவியம், சிந்து, கண்ணகிக் குளுர்த்தி, காவடிப்பாடல்கள்] தொழிற்பாடல், விளையாட்டுப் பாடல், பொழுதுபோக்குப் பாடல், கூத்துப் பாடல் என அவை பல வகைப்படும். இப்பாடல்கள் மக்கள் மத்தியில் பிரபல்யமானவை. மண்சார்ந்தவை, மண்ணோடிசைந்தவை. இவற்றை நாம் மண்சார் பாடல் எனலாம்.

கிழக்கு மண்ணிலே வாழும் இஸ்லாமியர், கிறிஸ்தவர், பறங்கியரிடையேயும் சில இசை வடிவங்கள் உள்ளன. முறையே அவற்றை நாம் கவி, பக்கீர்பைத் பாடல், வியாகுலப்பிரசங்கப் பாடல் என அழைக்கின்றோம். இவற்றை விட கிழக்கு மண்ணிலே கரகம், காவடி, வசந்தனாட்டம், பறைமேளம், கூத்து, கழிகம்பு, மகுடி முதலான ஆட்ட வடிவங்களும் உள்ளன. இவற்றையெல்லாம் நாம் நமது மாணவர்களுக்குப் பயிற்றி இரண்டு நிகழ்வுகள் செய்தோம். ஒன்று கிழக்கிசை, இன்னொன்று லயம். கிழக்கிசை ரூபவாஹினியில் ஒளிபரப்பானது. லயம் இறுவட்டு வடிவில் வந்துள்ளது.

இவை நாம் செய்த இன்னொரு வகை மீளுருவாக்கம்.

## கூத்து

டைனசோரஸ் என்ற பிரமாண்டமான விலங்கு மனித சமுதாயத்திலிருந்து மறைந்தே விட்டது. உயிருடன் இன்று எங்கும் நடமாடவில்லை. டைனசோரஸ் போல மட்டக்களப்பில் பிரமாண்டமாக வாழ்ந்த ஒரு கலை வடிவம்தான் கூத்து [தென்மோடியும், வடமோடியும்] நம் அதிஷ்டம். இது இன்னும் டைனசோரஸ் போல முற்றாக அழிந்து விடவில்லை. படுவான் கரையிலுள்ள கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றீஸ்வரன் கோயில் இறுதித் திருவிழா நாட்களில் சில கூத்துக்கள் விடிய விடிய இன்றும் நடைபெறுகின்றன. இதிலே பழைய வீரியத்தையும், ஆழத்தையும், செழுமையையும் காண முடியவில்லையாயினும், இவற்றைப் பாதுகாத்து வைத்திருக்கும் கூத்தண்ணாவிமார்களும் கலைஞர்களும் இதனை ஆடக் கோயிலில் இடம் கொடுக்கும் கோயில் நிர்வாகமும் வண்ணக்குமார்களும் முக்கியமாக விடிய விடிய இதனைப் பார்த்து ஆதரவு தரும் கிராமிய மக்களும் நமது பெரும் மதிப்பிற்குரியவர்கள். அந்நியர்கள் ஆதிக்கத்தினால் அழிந்து வரும் பண்பாட்டை அழியாது ஓரளவிற்காவது தக்க வைக்கும் போர்க்குணம் மிக்கவர்கள் இக் கிராம வறிய மக்கள்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வித்தியானந்தன் பணி

இக்கூத்துக்களை 1960களில் மீளுருவாக்கம் செய்து செழுமை செய்து இலங்கை எங்கணும் அறிமுகம் செய்தார். அவர் கர்ணன் போர், நொண்டி நாடகம், இராவணேசன், வாலி வதை, தென்மோடி – வடமோடி கூத்துக்களை மீளுருவாக்கம் செய்தார். பேரா. சு. வித்தியானந்தன் அவர்கள் பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்களைக் கொண்டு கூத்துக் கலைகளைச் சுருக்கி மேடையிட்டார். அவர் ஆற்றிய பணியினால் கூத்துக்கலை மட்டக்களப்பின் பாடசாலைகளில் எல்லாம் பரவத் தொடங்கியது. முக்கியமாக பெண்கள் பாடசாலைகள் முன்னணியில் நின்றன.

### பாட நெறியாக கூத்து

கிழக்குப் பல்கலைக்கழகம் அதனை 2000 ஆம் ஆண்டில் பாடநெறிக்குள் புகுத்தியது. நாடகமும் அரங்கியலும் பாடமாக எடுக்கும் மாணவர்கள் வடமோடி, தென்மோடி கூத்துக்களில் [ஆடல், பாடல், மத்தளம், ஆற்றுகை] பயிற்சி பெறுவதும் ஒரு பாடமாயிற்று.

### இராவணேசன்



அதன் விளைவாக உருவானதே பேரா. வித்தியானந்தனின் இராவணேசனை இன்னுமொரு தளத்திற்கு வளர்த்தெடுத்த கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத் துறையினரின் இராவணேசன் வடமோடி நாடகம். நவீன உத்திகள், நவீன கோட்பாடுகளுக்கமைய இது தயாரிக்கப்பட்டது. இதுவும் கூத்தின் ஒரு மீளுருவாக்கம்தான். இதுவும் இறுவட்டு வடிவில் உண்டு.

இன்று விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தில் நாடகமும் அரங்கியலும் ஒரு பாடநெறியாக உள்ளது. ஏறத்தாள 100 மாணவர்கள் 4 வருட நெறியாக அதில் சிறப்புத் தேர்ச்சி பெறுகிறார்கள். அவர்களுக்கு 2ம் செமஸ்டரில் 90 மணித்தியாலத்திற்கு செயன்முறை ரீதியாக கூத்து பயிற்றுவிக்கப்படுகின்றது. அதற்கென பாடத் திட்டமும் உண்டு.

இது கூத்து உயர் பட்டப் படிப்பிற்கு ஒரு செயன்முறைக் கல்வியானமைக்கு உதாரணமாகும். எப்படி பரதம், கர்நாடக இசை ஒரு ஒழுங்கு முறைக்கு உட்படுத்தப்பட்டுக் கற்பிக்கப்படுகின்றதோ, அவ்வண்ணம் கூத்தும் இன்று கற்பிக்கப்படுகின்றது.

எமது நுண்கலைத்துறை விரிவுரையாளர்களான பாலசுகுமார், ஜெய்சங்கர் [இருவரும் இராவணேசனில் நடித்தவர்கள்] இருவரும் இம் மீளுருவாக்கத்தில் தொடர்ந்தும் ஈடுபடுகின்றனர். குறிப்பாக ஜெய்சங்கர் மக்களோடு இணைந்த வகையில் கூத்தை மீளுருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டார். நுண்கலைத்துறை மாணவர்கள் சிலரும் இம் முயற்சியிலீடுபடுகின்றார்கள். இவை யாவும் மரபுவழிக் கலைகளை மீளுருவாக்குகின்ற முயற்சிகளாகும்.

கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறை நிறைய இவ்வகையில் தொடர்ச்சியாக 16 வருடங்கள் பணியாற்றியுள்ளன. அவர்களின் செயற்பாடுகள் யாவும் 100 இறுவட்டுக்களாக ஆவணமாக இப்போதும் இத் துறையில் உள்ளது.

நாம் உலகமயமாக்க யுகத்திலே வாழுகின்றோம். அடையாளங்கள் அழிந்து போகிற, அழிக்கப்படுகின்ற காலம் இது. மாபெரும் அலையாக தொலைக் காட்சியும் அது தரும் வெகுஜனக் கலாசாரமும் களிப்பூட்டும் கோமாளித்தனமான நிகழ்ச்சிகளும் பல்கிப் பெருகி நம் சிறாரின் அற்புதமான செயலூக்கம் பொருந்திய மூளைகளைக் குழப்பியும், கலக்கியும், சிதைத்து விடுகின்ற காலகட்டத்தில் வாழுகின்றோம்.

அடையாளம் கலைத்து உலக அடையாளமாக மாற வேண்டும் என்று இதற்கு உயரிய தத்துவ நோக்கினைப் பலர் அழித்தாலும் அடையாளம் இழத்தல் என்பது தற்கொலைக்கு ஒப்பான முயற்சியாகும். அடையாளம் நிறுவுதல் மூலமாகவே அடையாளமின்மை என்ற உயரிய நோக்கை நோக்கிச் செல்ல முடியும்.

இந்நிலையில் நமது பாரம்பரியக் கலைகளையும் பண்பாட்டையும் பேணுதலும் அவற்றில் தள்ளுவதைத் தள்ளி கொள்ளுவன கொண்டு சமூகத் தேவைகளுக்கு ஏற்ப அவற்றை மீளுருவாக்கி நம் வயமாக்குதலும் நமது கடைமையாகும். அதிலும் நுண்ணுணர்வு மிக்க கலைஞர்களது கடமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைகள் போற்றி வளர்க்கப்பட வேண்டியவை



கலாசூரி திவ்யா
சுஜேன்
இயக்குநர்,
அபிநயக்ஷேத்திரா
நடனப் பள்ளி

ஆதிதேவனின் அளப்பெருங் கருணையால் அண்டிய அற்புத ஆனந்தம் அருங்கலைகள் இறைவனின் படைப்புக்களுள் ஆறறிவு வாய்ந்த மானிடர்க்கே உரித்தான உன்னத மார்க்கம் கலைகள். அழிந்து போகும் ஆக்கையிலிருந்து அழியாத ஆன்மாவை வகுத்துப் பார்க்கும் தன்மையான ஆறாம் அறிவிற்கு எட்டிடச் செய்த நால்வேத சாரமாய் ஐந்தாம் வேதமாய் திகழும் ஏக கலை நாட்டியம்.

நம் உணர்வுகளின் கொந்தளிப்பை மொழி பெயர்க்க எத்தனிக்கும் வாய் மொழிக்குப் பூட்டுப் போடும் நடனக் கலை, மௌனத்தேனா றோட மனவெளி திறக்கும் சாவியாகிறது. லௌகிக வாழ்வியலின் வசந்தத்திற்குப் புற உடலை பட்டை தீட்டி வசீகர வலிமை தரவல்ல அதேவேளை, ஆன்ம ஈடேற்ற அடிப்படைக்கு அகத்துவாரத்துள் அத்திவாரம் இடவல்லது நடனம். இக் கலையினுள் பொதிக்கப்படாத விடயமே இல்லையெனும் அளவிற்கு பேரறின் தளத்திற்கு உயர்த்தவல்ல பொது நூலகம் போன்றது.

ஆயினும் நம் நாட்டில் தற்காலத்தில் கலைகளின் பரவலாக்கம் விஸ்தரிக்கப்படினும் அதில் ஆழம் தேடும் அளவு ஆர்வம் இன்றி இருப்பது துயரமேயாகும். மொழி மீது பழி போடச் சிலரும் இழிவென்று இன்னும் இனமறியாது ஐயப்படும் சிலரும் காலக் கடிகாரத்தைக் காரணம் காட்டும் சிலரும் இன்பம் ஈதல்லவென இயந்திரக் காற்றுக்குள் இயற்கையைத் தொலைத்த சிலரும் மனமுண்டு, பணமில்லையெனப் பல

**நம் நாட்டில் தற்காலத்தில் கலைகளின் பரவலாக்கம் விஸ்தரிக்கப்படினும் அதில் ஆழம் தேடும் அளவு ஆர்வம் இன்றி இருப்பது துயரமேயாகும். மொழி மீது பழி போடச்சிலரும் இழிவென்று இன்னும் இனமறியாது ஐயபடும் சிலரும் காலக் கடிகாரத்தைக் காரணம் காட்டும் சிலரும் இன்பம் ஈதல்லவென இயந்திரக் காற்றுக்குள் இயற்கையைத் தொலைத்த சிலரும் மனமுண்டு, பணமில்லையெனப் பலரும் உபயோகமுண்டோ என்று வாதிடும் சாதாரணமானவர்களும் அலையும் நிலையில் சதா ரணமாய் மெல்ல சாகுது நம் அசாதாரண அருங்கலைகள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ரும் உபயோகமுண்டோ என்று வாதிடும் சாதாரண மானவர்களும் அலையும் நிலையில் சதா ரணமாய் மெல்ல சாகுது நம் அசாதாரண அருங்கலைகள்.

கலையும் கல்வியும் இரு கண்கள் போன்றவை. காதலாகி எண்ணங்களில் வானவில் வண்ணம் வீசட்டும். கல்வியும் கலையும் அன்பின் பல்லக்கில் ஆன்மாவை ஈடேற்றும் அற்புத கற்பக தரு நம் கலை. கல்வித்துறையோடு ஒருங்கே கலைத்துறையை இடைநிறுத்தாது தொடர பாடசாலையின் நான்கு தூண்களாகத் திகழும் அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர் சங்கம், அபிவிருத்திச் சங்கம், ஆகியோர் வழிவிட வேண்டும்.

கடின உழைப்பின் பயனை மேடையில் வெளிக்கொணர்ந்து பாராட்டி நல்ல கலைஞர் பலரை உருவாக்கி அடுத்த தளத்திற்கு உயர்த்த கலை வளர்க்கும் சபைகள் உருவாக வேண்டும். ஏலவே உள்ள சேவை நோக்க சபைகள் கலை வளர்க்கும் முயற்சியில் செயலளவில் இறங்க வேண்டும். நம் நாட்டின் கலைஞர் சிறப்பை உலகக் களத்தில் தடம் பதிக்கப் பேருதவியாய் ஊடகங்களின் தரம் சிறக்க வேண்டும்.

நல்ல குருவடியில் தேடிச் சரணடைந்து விதைக்க வேண்டும். குருமொழி அறிந்தோர்க்கு எம் மொழியும் வீண்.கடும் உழைப்பில் விளைந்த கலைப் பயிருக்கு சுற்றத்தார் உரமாக வேண்டும். பெருமழையென இறையருள் வேண்டும். நல்ல குரு அமைய பெற்றோர் துணை வேண்டும். நல்ல கலைஞன் மிளிர சமுதாயம் கைதர வேண்டும். நாடு சிறக்க நல்ல கலைஞன் வேண்டும்.

பன்னெடுங் காலமாய் போற்றிப் பேணிய கலையை சட்டைப் பையில் நிரப்பும் செப்படி வித்தை கற்ற நட்சத்திரர் வெற்றி சற்று சாயுமேல், சென்னி மேல் வைத்து சிவ சிவயெனவாடும் சில கோள்கள் வெளிவரும். கண்களை மூடிக் கொண்ட யாவரும் கௌதமர் அல்ல. விழிப்புணர்விற்கு விருந்து வைப்போம்.

மெய்யுணர்ந்து மேம்பட்ட நம் நாட்டு மூத்த கலைஞர்களின் அன்பும் ஆசியும் வரமாய் அமைய இனியாயினும் புது விதி செய்ய ஆடல் வல்லான் அனுக்கிரகம் நாடித் தொழுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தினக்குரல் தமிழ் மக்களின் இதயக்குரல்"



தமிழருவி
த.சிவகுமாரன்

தினக்குரல்' இருபதாவது ஆண்டில் வெற்றிநடை போடுகிறது பெருமைக்குரியது. 'தமிழில் வெளிவரும் சுதந்திரமான நாட்குரல்' என குறிப்பிடக்கூடிய மகுடவாசகத்தோடு பல சோதனைகள், வேதனைகளைத் தாண்டி தமிழ் மக்களை வழிநடத்தும் தேசிய பத்திரிகையாக தினக்குரல் வெளிவந்து கொண்டிருக்கிறது. தினக்குரலுக்கென்று தனியான வாசகர் வட்டம் உண்டு. தங்கள் செய்திகள், படங்கள் தினக்குரலில் வெளிவரவேண்டும் என வரும் பல்லாயிரக்கணக்கானவர்கள் இலங்கை பூராகவும் இருக்கிறார்கள்.

பத்திரிகை என்ற சொல்லை தூய தமிழில் 'நாளிதழ், தினசரி, வாராந்தரி' என அழைப்பர். ஒரு தேசத்தையே நெறிப்படுத்தும், வழிப்படுத்தும் சக்தி தினசரிக்கு உண்டு. அது போல ஒரு அரசாங்கத்தை மாற்றிவிட வல்ல வண்மையும் பத்திரிகைக்கு உண்டு. 'தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் வகுக்கும் கொள்கைகளை நிறைவேற்றும் பொறுப்பு அரச நிர்வாகத்திற்கும் இதில் குறைகள் இருந்தால் சுட்டிக் காட்டும் பொறுப்பு பத்திரிகைகளுக்கும் தவறுகள் நேர்ந்தால் தண்டிப்

பத்திரிகை என்ற சொல்லை தூய தமிழில்
'நாளிதழ், தினசரி, வாராந்தரி' என அழைப்பர்.
ஒரு தேசத்தையே நெறிப்படுத்தும், வழிப்படுத்தும்
சக்தி தினசரிக்கு உண்டு. அது போல
ஒரு அரசாங்கத்தை மாற்றிவிட வல்ல வண்மையும்
பத்திரிகைக்கு உண்டு. 'தேர்ந்தெடுக்கப்பட்ட
பிரதிநிதிகள் வகுக்கும் கொள்கைகளை
நிறைவேற்றும் பொறுப்பு அரச நிர்வாகத்திற்கும்
இதில் குறைகள் இருந்தால் சுட்டிக்காட்டும் பொறுப்பு
பத்திரிகைகளுக்கும் தவறுகள் நேர்ந்தால்
தண்டிப்பது நீதித்துறைக்கும் உரியது' என
அரசியல் சாசனம் நெறிமுறை வகுத்திருக்கிறது.
அந்தளவுக்கு பத்திரிகைகள் உயர்ந்த இடத்தில்
வைத்துப்போற்றப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பது நீதித்துறைக்கும் உரியது' என அரசியல் சாசனம் நெறிமுறை வகுத்திருக்கிறது. அந்தளவுக்கு பத்திரி கைகள் உயர்ந்த இடத்தில் வைத்துப் போற்றப்படுகின் றன. 'அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்' என்பது இன்று பத்திரிகைகளுக்கே பொருத்தமானது 'அறம்' என்றால் 'பத்திரிகை' என்ற அளவிற்கு தர் மத்தோடு செயற்பட வேண்டியவை இவை.

பாரெங்குமுள்ள மக்களுக்கு தகவல்களை கொண்டுபோய்ச் சேர்க்கும் வல்லமை கொண்ட பத்தி ரிகை சாதாரண வாசகனை அறத்தோடு வளர்க்கும் பொறுப்புடையது. பரபரப்பிற்காக, வியாபார நோக் கிற்காக இல்லாததை இட்டுக்கட்டியும் உள்ளதை மறைத்தும் எழுதும் பத்திரிகைகள் பலவற்றிற்கு மத்தி யில் சாதாரண மக்கள் உண்மையை அறிய முடியாது திணறுவதையும், தவறுவதையும் பார்க்கிறோம்.

தினக்குரல் பத்திரிகை தனக்கென வகுத்துக் கொண்ட கொள்கையோடு இருபது வருடங்களாக பீடுநடை போடுகிறது. யார், என்ன, எங்கே, எப் போது, ஏன், எப்படி என்ற கேள்விகளுக்கு ஒரே செய்தியில் விடைதரக்கூடியனவாக தினக்குரலின் செய்திகள் அன்றுமுதல் இன்றுவரை அமைந்திருக் கின்றன. இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் இத யக்குரலாக தினக்குரல் ஒலித்துக்கொண்டிருக்கிறது.

நேர்மையும் நடுநிலையும் கொண்ட ஆசிரியர் தலையங்கம் உள்ளதை, ஆர்வத்தைத் தூண்டி அறி யவைக்கும் முன்பக்கச் செய்தித் தலைப்புக்கள், அன்றைய சூழ்நிலையில் தேசத்தலைவர்களின் மனநிலையைக் கருத்தோடு பிரதிபலிக்கும் முன்பக்க புகைப்படங்கள், நல்ல வடிவமைப்பு, கண்ணை விட்டு மறையாத செய்திப் படங்கள் இவையெல் லாம் தினக்குரலின் தனி ஆளுமைகள் என்றால் மிகையில்லை.

மாணவர்களுக்கான குரல், மகளிருக்கான தக வல் களஞ்சியங்கள், உலக உள்ளூர் விளையாட்டுச் செய்திகளை ஒரே பக்கத்தில் தரும் சிறப்பு என்பன தினக்குரலின் முத்திரை பதித்தவை. அரசியல் கட் டுரைகள், ஆய்வாளர்களின் சிறப்புக் கருத்துக்கள் தினக்குரலிற்கு தனிப்பெருமை சேர்க்கின்றன. தினக்குரலில் வரும் அரசியல் விமர்சனங்களை தேடிப்படிப்போர் பலரை நானறிவேன். நலந்தானா வின் மருத்துவ குறிப்புகள், சமூகக் கட்டுரைகள், கல்விக்குரல், கவிதைகள், ஆன்மீகத் துணுக்குகள், புதன் வசந்தம், ஜூனியர் ஸ்ரார் என்பவை என்ன நோக்கம் கருதி வெளிவருகின்றனவோ, அதனை திறம்பட நிறைவேற்றுகின்றன.

உலகத்தில் நடைபெறும் சுவையான விடயங் களை தகுந்த புகைப்படங்களோடு வெளியிடும் பாங் கு, தினக்குரலின் வார இறுதி அரசியல் இணைப் பிதழ் 'புதிய பண்பாடு' அதன் கட்டுரைகள் என தினக்குரலின் தனித்துவம் வியக்க வைக்கிறது.

ஞாயிறு தினக்குரலில் வெளியாகும் ஆசிரியர் தலையங்கம், பக்க வடிவமைப்புகள், அரசியல் களரி அதில் வரும் கட்டுரைகள், வணிகக்குரல் விளம்பரங் கள், சமூகப் பார்வை, நிகழ்வுகளின் புகைப்படங்கள், சாளரம் பகுதியில் வெளியாகும் அழகிய கருத்தாளம் மிக்க சிறுசிறு கட்டுரைகள், மஞ்சரி, காற்றுவெளி, சினிக்குரல், சிறுவர் கைவண்ணம் ஞாயிறுதோறும் எண்ணற்ற வாசகர்களை தன்னை நோக்கி இழுக்கச் செய்கின்றன.

தினக்குரல் பத்திரிகையின் தனித்துவம் என்று நோக்கின்

1. அதன் உள்ளடக்கங்களை மக்கள் ஏற்கும் தன்மை

2. ஒரு குறித்த கால இடைவேளைகளில் வரும் செய்தித் தொடர்ச்சி

3. உள்ளடக்கப்பட்ட தகவல்களின் புதுப்பிக்கப் பட்ட நிலை

4. பல்வேறு தலைப்புகளை உள்ளடக்கி வெளி வருகின்றமை எனலாம்.

ஆகவே இத்தகைய தனிச் சிறப்புக்களுடன் வெளிவரும் தினக்குரல் இன்னும் பல ஆண்டு கள் தொடர்ந்தும் தமிழ்த் தேசியத்திற்கு அரிய பணி செய்ய வாழ்த்துகிறேன். அச்சுத் தெளிவில், குறிப் பாக புகைப்படப் பதிவுகளில் இன்னும் தெளிவு அதி கமிருப்பின் தினக்குரல் இன்னும் மெருகு பெறும் என்ற குறிப்புடன் 'தினக்குரலை' மனமார வாழ்த்து கின்றேன்.



20 Anniversary

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலை தம்பலகாமம் கள்ளிமேட்டு நடுகல்



டாக்டர் த.ஜீவராஜ்,

திருகோணமலை

பாரம்பரியம் மிக்க தமிழ்ச் சமூகத்தின் தொல்மரபுகள் பல அறுபடாத நீட்சியுடன் பன்னெடுங்காலமாகப் பேணப்பட்டுவரும் கிராமம் தம்பலகாமம். கிழக்கிலங்கையின் திருகோணமலை மாவட்டத்தில் அமைந்திருக்கும் வரலாற்று முக்கியத்துவம் கொண்ட கிராமங்களில் இதுவுமொன்று. இலங்கையில் ஐரோப்பியரின் மேலாதிக்கம் ஏற்படுவதற்கு முன்னர் இன்றைய தம்பலகாமம், கிண்ணியா, கந்தளாய்ப் பிரதேச செயலாளர் பிரிவுகள் மூன்றையும் உள்ளடக்கிய பிரதேசம் தம்பலகாமப் பற்று எனும் சுயாட்சி அதிகாரமுள்ள வன்னிச் சிற்றரசாக இருந்தது. வயலும், வயல் சார்ந்த மருதநிலப் பிரதேசம்தான் தம்பலகா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மப்பற்றின் சிறப்படையாளம் என்றாலும் அதற்குச் சற்றும் குறைவில்லாத அளவில் கடல், மலை, காடு, குளம் போன்ற அனைத்து இயற்கை வளங்களையும் தன்னகத்தே நிறைவாகக்கொண்ட பூமியாக அது இருந்தது. போர்த்துக்கேயரின் வருகையின் போது நெல்லுற்பத்தியில் தன்னிறைவு கொண்டிருந்த இப்பிரதேசத்தில் இருபோக விதைப்புக்காக தம்பல காமத்திலும், கந்தளாயிலும் 10,000 அவணம் நெல் பயன்படுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

**தம்பலகாமப்பற்று என்னும் சுயாட்சியுடன் கூடிய வன்னிச்சிற்றரசு பெயர் பெறுவதற்குக் காரணமான தாய்க்கிராமம் தம்பலகாமம் என்ற அதே பெயருடன் 14 சிற்றூர்களை இரு கிராமசேவையாளர் பிரிவுகளுக்குள் உள்ளடக்கியதாக இன்றுவரை நிலைத்திருக்கின்றது.**

தொடர்ந்து வந்த காலங்களில் ஆட்சி, அதிகார, குடிப்பரம்பல் என்பனவற்றில் ஏற்பட்ட மாற்றங்களின் பின்னர் கந்தளாய், கிண்ணியா என்பன தனித் தனியான பிரதேச செயலகப் பிரிவுகளாகப் பிரிந்தன. அதனைத் தொடர்ந்து 48 கிராமங்களை உள்ளடக்கிய 12 கிராம சேவையாளர் பிரிவுகளைக் கொண்ட பிரதேசச் செயலகப் பிரிவாக தம்பலகாமம் அடையாளப்படுத்தப்பட்டது. மிக நீண்டகாலம் இடம்பெற்று வந்த யுத்த அனர்த்தம், திட்டமிட்ட குடியேற்றங்கள், பாரிய உள்நாட்டு, வெளிநாட்டு இடப்பெயர்வுகள், இயற்கை அழிவுகள், படுகொலைகள், வன்செயல்கள் என்று பல்வேறு காரணிகளால் மிகவும் அதிகளவில் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் இதுவுமொன்று.

2014ஆம் ஆண்டிற்கான புள்ளி விபரங்களின் படி இங்கு 17153 முஸ்லிம்களும், 7785 சிங்களவர்களும், 6232 தமிழர்களுமாக 31170 பேர் வாழ்கின்றார்கள். 75 % தமிழ் பேசும் மக்கள் வாழும் இப்பிரதேசத்தின் பெயர் சுமார் இரு தசாப்தங்களுக்கு முன்னர் 'தம்பலகமுவ' என அரசினால் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இன்று இங்கு வாழும் தமிழ்பேசும் மக்களால் இப்பிரதேசம் தம்பலகாமம் பிரதேச செயலாளர் பிரிவு என அழைக்கப்பட்டாலும், அரச ஆவணங்களிலும், நிர்வாகச் செயற்பாடுகளிலும் 'தம்பலகமுவ' என்ற பெயரே பயன்படுத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

தம்பலகாமப்பற்று என்னும் சுயாட்சியுடன் கூடிய வன்னிச்சிற்றரசு பெயர் பெறுவதற்குக் காரணமான தாய்க்கிராமம் தம்பலகாமம் என்ற அதே பெயருடன் 14 சிற்றூர்களை இரு கிராமசேவையாளர் பிரிவுகளுக்குள் உள்ளடக்கியதாக இன்றுவரை நிலைத்திருக்கின்றது. 'தம்பலகாமம் கள்ளிமேட்டில் ஒரு கல்வெட்டு இருப்பதாக தகவல் கிடைத்தது. உடனே வா' என்ற அப்பாவின் பரபரப்பான அழைப்பு திருகோணமலை நகரில் இருந்து என்னை அவசரமாக பயணிக்க வைத்தது.

திருகோணமலை நகரில் இருந்து கண்டி நோக்கிய A6 நெடுஞ்சாலையில் கிழக்காகப் பிரிந்து செல்லும் தம்பலகாமம் கிண்ணியா வீதியில் 3.5 Km தூரத்தில் அமைந்திருக்கின்றது தம்பலகாமம். பல சிற்றூர்கள் ஒரு சங்கிலித் தொடர் போல் பசுமையான வயல் வெளிகளுக்கு நடுவில் அமைந்திருப்பதே ஒரு தனியழகு. ஊருக்குள் நுழையும் போதே தென்னஞ்சோலைகளுக்கு மேலாகத் தெரியும் ஆதி கோணேநாயகர் ஆலயக்கோபுரம் மனதிற்குப் பரவசமூட்டுவதாக இருக்கும். இங்கு 665 குடும்பங்களைச் சேர்ந்த 2240 தமிழ்மக்கள் [2014] வாழ்கின்றார்கள்.

எனது தந்தை கலாபூசணம்.வே.தங்கராசா, அவருக்கு கல்வெட்டுப் பற்றிய தகவல் தந்திருந்த வயலூப் புலவன் எனும் புனைப்பெயருடைய கவிஞர் திரு.மா.புவேந்திரராசா ஆகியோருடன் கள்ளிமேடு நோக்கிப் பயணித்தேன். கள்ளிமேடு ஒரு சிற்றூர். யுத்த அனர்த்தங்கள் ஏற்படுத்திய இடப்பெயர்வின் பின் இன்று 272 [2014] மக்கள் வாழும் ஒரு இடமாக இது காணப்படுகிறது. தம்பலகாமத்தின் புகழ்பூத்த பல கலைஞர்களும், அண்ணாவிமார்களும், சுதேச வைத்தியர்களும் கள்ளிமேட்டினைப் பிறப்பிடமாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டவர்கள். இதனால் பின்வந்த காலங்களில் கள்ளி மேட்டினைப் பலர் கல்வி மேடு என அழைக் கத் தலைப்பட்டனர். பண்டைய நாட்களில் கள்ளி மேட்டிலுள்ள வேள்வி வளாகத்தில் வருடந்தோறும் கண்ணகியம்மன் விழா மிகச்சிறப்பாக நடைபெற் றிருக்கிறது. கண்ணகி கோவலன் விழாவாக நடை பெறும் இவ்வேள்வி தம்பலகாமம் ஆதிகோணநாயகர் வெளிச்சுற்று வழிபாடுகளில் முக்கியம் பெற்ற ஒன் றாகவும் இருந்தது.

நாங்கள் தேடிச் சென்ற கல்வெட்டு கள்ளிமேட்டு வேள்வி வளாகத்திலிருந்து சிறிது தூரத்திலுள்ள வீட் டின் வளவொன்றில் காணக்கிடைத்தது. வீட்டின் தற்போதைய உரிமையாளரான பெண்மணி அதனை 'ஐயனார் சுவாமி கல்' என அடையாளப்படுத்தினார். அவர் கூறியது போல் கல்லின் அடிப்பாகத்தில் சில எழுத்துகள் தென்பட்டாலும் கல்லின் ஏனைய பகுதி களனைத்தும் சேற்றுமண் நிறைந்து காணப்பட்டது. கல்லினை நன்றாக நீரூற்றி தென்னந்தும்பினால் தேய்த்துக் கழுவியபோது எழுத்துகள் துல்லியமாகத் தெரியத் தொடங்கின. அருகில் இருந்த கடையில் கோதுமைமா வாங்கி கல்லின் மேல் பூசிய பின்னர் எளிதில் யாவரும் வாசிக்கும் வண்ணம் எழுத்துகள் வெளிப்பட்டன.

கல்லின் மேற்பகுதி பரவளைவானது. கல் 50 செ.மீ உயரமும், 40 செ.மீ அகலமும் உடையது. கல் லின் நிலத்தில் நிறுத்தப்பட்ட அடிப்பகுதி நிலத்திற்கு மேல் 20 செ.மீ உயரமுடையது. அது ஒரு நடுகல். அதில் எழுதப்பட்டிருந்த வாசகங்கள் வருமாறு:

1. நள வருடம் தை.மீ.உ.(V) – [பரவளைவாக எழுதப்பட்டது]
2. காரள குல
3. கந்தப்பர் மகன்
4. கணபதிப்பி[ள்ளை]
5. தேகவியோகம்
6. தம். கள்ளிமேடு
7. மகன்
8. க.ஐயாத்துரை

இக்கல் ஒரு நடுகல். அது கந்தப்பர் கணபதிப் பிள்ளை அவர்களின் இறப்பினைப் பதிவு செய்கிறது. குறித்த நபர் பற்றிய தகவல்கள் தற்போதைய குடியி ருப்பாளருக்கு தெரியாத போதும் இக்கல்லினை வீட் டின் முன்னைய உரிமையாளரான திரு.கந்தையா கிருபானந்தன் அவர்கள் வணங்கிச் செல்வதாக ஒரு முக்கிய தகவலினைத் தந்தார் அவர்.

திருகோணமலையில் தற்போது வசித்துவரும் இளைப்பாறிய கிராமசேவையாளரும், சிற்பக் கலைஞரும், நாடக நடிகருமான திரு.க. கிருபானந் தன் அவர்களைத் தொடர்பு கொண்டு இந்த நடுகல் அவரது பரம்பரைக்குச் சொந்தமானது என்பதனை உறுதிசெய்ய முடிந்தது. எனினும் மேலும் விபரங்க ளைத் தெரிந்து கொள்ள வைராவியார் குடும்பத்தைச் சேர்ந்த திரு.தெய்வேந்திரம் துரைநாயகம் அவர்களை எனது தந்தையின் உதவியுடன் அணுகினேன். அவர் தந்த தகவல்களின் அடிப்படையில் திரு.க. கிருபானந்தன் அவர்களின் தந்தையின் பெயர் கந் தையா விதானையார். கந்தையா விதானையாரின் தந்தை ஐயாத்துரை. ஐயாத்துரை அவர்களின் தந்தை கணபதிப்பிள்ளை. கணபதிப்பிள்ளை அவர்களின் தந்தை கந்தப்பர். இவ்வாறாக நடுகல்லில் குறிக்கப் பட்ட அமரர் கந்தப்பர் கணபதிப்பிள்ளை அவர்களை இனங்காண முடிந்தது.

க.கிருபானந்தன் அவர்களின் தந்தையான கந்தையா பிறந்தது 1920களில் என்பதனால் அவ ருக்கு இரண்டு தலைமுறை முந்தியவரான கண பதிப்பிள்ளை அவர்களின் காலம் கி.பி 1860 முதல் 1920 வரை இருக்கலாமென பலரது வாய்மொழித் தரவுகள் மூலம் அனுமானிக்க முடிந்தது. அதாவது இற்றைக்கு சுமார் 150 ஆண்டுகளுக்கு முன்னர் கள் ளிமேட்டில் கணபதிப்பிள்ளை அவர்கள் வாழ்ந்திருக் கின்றார். விதானையாளராகக் கடமையாற்றிய அவர் கல்வியறிவில் சிறந்து விளங்கியவராக இருந்ததை அறியமுடிகின்றது. அவரிடம் நிகண்டு முதலான பல அரிய ஓலைச்சுவடிகள் இருந்ததாகச் சொல்கின் றார்கள். அவரது மரணம் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அண்ணளவாக 1910 – 1920 காலப் பகுதியில் நிகழ்ந்திருக்கிறது. எனவே இந்நடுகல் இன்றைக்குச் சுமார் ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் நிறுவப்பட்டிருக்க வேண்டும் என்பதனை உறுதிப் படுத்த முடிகிறது.

எம்மை அழைத்துச் சென்றவர் அதனைக் 'கல் வெட்டு' என்றதற்கும், வீட்டின் தற்போதைய உரி மையாளர் அதனை 'ஐயனார் கல்' என்றதற்கும் அக்கல்வெட்டு முழுமையாக வாசிக்கப்படாமையே காரணம் என்றாலும் அவர்கள் மக்கள் குடியிருப்பின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுகல் இறந்தவர்களின் நினைவாக எடுக்கப்படும் நினைவுக்கல் ஆகும். நினைவுக்கல் உருவாக்கும் வழக்கம் ஒரு குறித்த பண்பாட்டினருக்கோ, குறித்த பிரதேசத்திற்கோ அல்லது குறிப்பிட்ட காலப்பகுதிக்கோ சொந்தமானதல்ல. மிகத்தொன்மையான காலம் முதல் இவ்வழக்கம் இருந்து வருகின்றது. கடவுள் உருவங்களின் தோற்றத்திற்கு இறந்த முன்னோர்களின் வழிபாடே அடிப்படையாக இருந்தன என்பது ஆராய்ச்சியாளர்களின் முடிவு.

நடுவில் ஒரு நடுகல்லினை எதிர்பார்க்கவில்லை என்பதும் இன்னொரு காரணமாகும். கணபதிப் பிள்ளை அமரத்துவம் அடைந்தபோது அவரது நினைவாக ஐயாத்துரை அவர்களால் உருவாக்கப்பட்ட இந்நடுகல் ஊருக்கு வெளியே இருக்கும் ஐயனார் தீவில் அவர்களுக்குச் சொந்தமான காணியில் நிறுவப்பட்டிருக்கின்றது. பின்னர் திரு.கிருபானந்தன் அவர்களின் தந்தையாரினால் மாட்டுவண்டியின் உதவியுடன் அந்நடுகல் கள்ளிமேட்டிற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

நடுகல் இறந்தவர்களின் நினைவாக எடுக்கப்படும் நினைவுக்கல் ஆகும். நினைவுக்கல் உருவாக்கும் வழக்கம் ஒரு குறித்த பண்பாட்டினருக்கோ, குறித்த பிரதேசத்திற்கோ அல்லது குறிப்பிட்ட காலப் பகுதிக்கோ சொந்தமானதல்ல. மிகத்தொன்மையான காலம் முதல் இவ்வழக்கம் இருந்து வருகின்றது. கடவுள் உருவங்களின் தோற்றத்திற்கு இறந்த முன்னோர்களின் வழிபாடே அடிப்படையாக இருந்தன என்பது ஆராய்ச்சியாளர்களின் முடிவு.

தமிழரின் வாழ்வியல் பதிவுகளை உலகிற்கு வெளிக்காட்டும் சான்றாதாரங்களுள் நடுகற்களின் பங்கு குறிப்பிடத்தக்கது. தொல்காப்பியம், திருக்குறள், அகநானூறு, புறநானூறு என்று பல பண்டைய தமிழ் இலக்கியங்களில் நடுகல் பற்றிய செய்திகள் பரவிக்கிடக்கின்றன. வீரர்களுக்கு என உருவாக்கப்பட்ட நடுகற்கள் வீரக்கற்கள் என அழைக்கப்பட்டன. நடுகல் இறந்தவர் தொடர்பான விபரங்களைத் தருவதோடு சில வரலாற்றுச் செய்திகளையும் நமக்கு அறியத்தருவதாக இருக்கிறது. இந்த அடிப்படைகளின் கீழ் தம்பலகாமம் கள்ளிமேட்டு நடுகல் சொல்லும் வரலாற்றினை சற்று விரிவாகப் பார்ப்பது அவசியமாகிறது.

நடுகல்லின் மேற்பகுதிக்கு ஏற்றவாறு முதல்வரி பரவளைவாக எழுதப்பட்டுள்ளது. அது கீழே குறிப்பிடப்பட்டிருக்கும் நபர் இறந்த தினத்தினைப் பதிவு செய்கின்றது. நளவருடம்.தை.மீ.உ[௩] என்ற முதல்வரி குறிப்பில், நளவருடம் ஆண்டைக் குறிக்கின்றது. இந்துக்களின் ஆண்டுமுறையில் 60 வருடங்கள் ஒரு வட்டமாகக் கருதப்படுகின்றது. அதில் வரும் 50வது வருடம் நளவருடமாகும். சித்திரை முதல் நாளை புதிய ஆண்டின் தொடக்கமாகக் கொண்ட இந்த ஆண்டுமுறைப்படி நளவருடம் 60 ஆண்டுகளுக்கு ஒரு முறை வரும்.

ஆங்கில வருட முறைப்படி இனி நளவருடம் [2036 - 2037] ஆம் ஆண்டில் வரும். எனவே நள வருடம் இதற்கு முன்பாக 1976-1977 1916-1917, 1856 -1857, 1796-1797 என்ற ஒழுங்கில் வந்திருக்கும். ஏலவே நாம் பார்த்திருந்தபடி இறந்தவரின் குடும்ப வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு இந்நடுகல் இன்றைக்கு ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் எழுதப்பட்டிருக்கலாம் எனக் கணித்திருந்தோம். அந்த அடிப்படையில் இங்கு குறிப்பிடப்படும் நளவருடம் 1916 - 1917 என்பதனை உறுதி செய்யலாம். அடுத்துவரும் சொற்களான தை.மீ.உ[௩] என்பது இந்துக்களின் ஆண்டு முறைப்படி எழுதப்பட்டிருந்தால் நள வருடம் தை மாதம் 23 ஆம் திகதியாக [ உ- 2,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ங–3 தமிழ் எண் முறைப்படி] இருக்கும். எனவே இறப்பு தொடர்பான ஆங்கில ஆண்டுக்குரிய திகதி 04.02.2017 என்பதாகும்.

நடுகல்லின் இரண்டாவது வரி இறந்தவரின் குலத்தினைச் சாதிரீதியாகக் குறிப்பிடுகிறது. ‘காராளர் குல’ என்ற சொற்றொடரில் காராளர் எனக் குறிக்கப்படுவது சாதீய அமைப்பில் வேளாண்மைத் தொழில் செய்து வந்தவர்களைக் குறிக்கும் பெயராகும். காராளர் என்பதன் நேர்ப்பொருள் மேகத்தை அல்லது மழையை ஆள்பவர் என்பதே. காராளர் என்பது வேளாளர்களைக் குறிக்கும் பொதுப்பெயராகப் பயன்படுத்தப்பட்டாலும் தம்மைக் கார்காத்த வேளாளர் எனக் குறிப்பிட்டுக் கொள்ளும் பகுதியினரைக் குறிப்பதற்கு சிறப்பாகப் பயன்படுத்தப்படுகின்றது.

அடுத்துவரும் மூன்றாவது, நான்காவது வாசகங்கள் இறந்தவரின் விபரத்தினைத் தருகின்றது. கந்தப்பர், மகன். கணபதிப்பி[ள்ளை] என்ற சொற்றொடர் இறந்தவர் கந்தப்பர் கணபதிப்பிள்ளை என்பதனைக் குறிக்கின்றது. இங்கு இறந்தவரான கணபதிப்பிள்ளையின் பெயரில் ‘கணபதிப்பி’ என்ற பகுதி தெளிவாகத் தெரிகிறது. கல்வெட்டுக்களை எழுதும் போது கல்வெட்டுச் செய்தியினை ஓலையில் எழுதி பின்பு அச்செய்தியினை கல்லின் மேல் ஓவியம் போல் வரைந்து அதன்மீது உளி முதலான கூரிய கருவிகளால் வெட்டுவது வழமை. கணபதிப்பிள்ளை என கல்லில் எழுத முனைந்தபோது சரியாக இடக்கணிப்பீடு செய்யவில்லை போலுள்ளது. அதனால் அவர்களால் ‘ள்ளை’ என்ற எழுத்துகளை சிரமத்துடன் பொறிக்கவேண்டி ஏற்பட்டுள்ளது.

நடுகல்லில் எழுதப்பட்டுள்ள ஐந்தாவது வாசகம் தேகவியோகம் என்பதாகும். இது அவரது இறப்புச் செய்தியினைச் சொல்கிறது. உடலில் இருந்து உயிர் நீங்கிச் செல்தல் என்பதற்குரிய வடமொழிச்சொல் இதுவாகும். அந்நாட்களில் இப்பிரதேச எழுத்து வழக்கில் வடமொழி கொண்டிருந்த செல்வாக்கினை இது உணர்த்துவதாக இருக்கிறது. பரமபதம் அடைதல், தெய்வீகமடைதல், மரணமடைதல், தேகாந்தம் என்பன இந்நடுகல் எழுதப்பட்ட சமகாலத்தில் இலங்கைச் சாசன வழக்கில் இறப்பைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்ட சொற்களாகும்.

அதனைத் தொடர்ந்து வரும் ஆறாவது வாசகமான தம்.கள்ளிமேடு இறப்பு இடம்பெற்ற இடத்தினைக் குறிக்கின்றது. தம்பலகாமத்தைச் சேர்ந்த கள்ளிமேடு என்பதனையே இது சுருக்கமாகச் சொல்கின்றது. இதன் மூலம் தம்பலகாமத்தில் இருந்த சிற்றூர்களை அடையாளப்படுத்தும் போது ‘தம்’ என்று அவற்றின் தாயூரான தம்பலகாமத்தை குறிக்கும் வழமை அக்காலத்தில் இருந்ததை இது உறுதிப்படுத்துகிறது.

இந்த நடுகல் எழுதப்பட்ட காலப்பகுதியில் எழுதப்பட்ட வீடு, வயல், காணி உறுதிகளிலும், நீதிமன்ற வழக்குகள் தொடர்பான தமிழ் ஆவணங்களிலும் ‘திரு.தம்.கந்தளாய், திரு.தம்.கிண்ணியா, திரு.தம்.ஆலங்கேணி’ போன்ற சொற்றொடர்களைக் காணலாம். அத்துடன் இன்று வழக்கொழிந்து போய்விட்ட புறோநோட்டு என்றழைக்கப்பட்ட கடன் பத்திரங்களிலும் இவ்வகையிலேயே தம்பலகாமப்பற்றின் கீழிருந்த சிற்றூர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டன.

இங்கு திரு.தம்.ஆலங்கேணி என்பது திருகோணமலையைச் சேர்ந்த தம்பலகாமத்திலுள்ள ஆலங்கேணி எனும் ஊர் எனப் பொருள்படும். ‘தம் கள்ளிமேடு’ என்ற பதம் இன்னொரு முக்கிய விடயத்தையும் சுட்டி நிற்கிறது. அதாவது இன்றைய நாட்களில் கல்வி மேடு என்று குறிக்கப்படும் பிரதேசம் சுமார் ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் ‘கள்ளி’ மேடு என்றே வழங்கப்பட்டிருக்கிறது என்பதனை இந்நடுகல் ஆவணப்படுத்துகிறது.

இறுதியாக நடுக்கல்லினைப் பொறிக்கச் செய்தவர் பற்றிய தகவல் ஏழாம், எட்டாம் வரிகளில் இடம் பெற்றுள்ளது. அவர் இறந்தவரின் மகன். அவரது பெயர் க.ஐயாத்துரை என்பதாகும். தமிழ் இலக்கியத்தில் மிகுந்த ஆர்வம் கொண்டவராக அறியப்படும் ஐயாத்துரை அவர்களுக்குச் சொந்தமான திருமுருகாற்றுப்படை முதலான ஓலைச்சுவடிகளை இன்றும் காணக்கூடியதாக இருக்கிறது. ஐயாத்துரை அவர்களுக்கு தன் தந்தைக்கு நடுக்கல் நாட்ட வேண்டும் என்ற எண்ணம் ஏற்படுவதற்கு அவரது பரந்த இலக்கிய அறிவு காரணமாக இருந்தது என ஊகிக்கலாம். அவர் தன் தந்தைக்கு எடுத்த இந்நடுகல் மூலம் சுமார் நூறுவருடங்களுக்கு முந்திய சில வரலாற்றுப் பதிவுகளை நமக்காக விட்டுச்சென்றுள்ளார்.




# The Valampuri
A small luxurious Hotel









Conference and Banquet Facilities
Restaurants and Bar
Swimming Pool
In House Laundry Service
Event Planning Management
Outdoor Catering
Vehicle For Hire
Tour arrangements with guide
Ample Parking





140/10, Station Road, Jaffna.
T.P:- +94 222 0111, +94 222 3444
Email:- info@valampurihotel.com
Website :- www.valampurihotel.com

Green Grass
valampuri
hotel



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org